# கடலில் கலந்த நதி

முத்துலட்சுமி ராகவன்

# கடலில் கலந்த நதி

## 1

"கோகுலத்துப் பசுக்கள் எல்லாம்
கோபாலன் குழலைக் கேட்டு
நாலுபடி பால் கறக்குது ராமாரி...
அந்த மோகனின் பெயரைச் சொல்லி
மூடிவைத்த பாத்திரத்தில்
மூன்றுபடி நெய்யிருக்குது கிருஷ்ணாரி...
ராமாரே ஹரே ஹரே கிருஷ்ணாரே..."

சி.டி. பிளேயரில் பாடிக் கொண்டிருந்த பாடலை ரசித்துக் கேட்டதுடன் இல்லாமல் தானும் சேர்ந்து பாடியபடி... ஊஞ்சலில் அமர்ந்து மல்லிகைப் பூக்களைத் தொடுத்துக் கொண்டிருந்தாள் கௌசல்யா.

லேசாய் ஊஞ்சலை கால்களால் விந்தி மெதுவாக ஆடிய வண்ணம் பூத்தொடுத்துக் கொண்டிருந்த மனைவியை ரசனையாய் பார்த்தபடி வீட்டுக்குள் வந்தார் ஜெயராமன்.

மஞ்சள் கலந்த பொன்னிறம்.. மஞ்சள் பூசிய முகம்.. அதில் ஒளிரும் சிவப்புச் சாந்து.. காதுகளில் ஒளிர்விடும் கல் கம்மல்.. கழுத்தில் கெட்டியான தாலிச் சரடு. லேசாக சரிகையிட்ட காட்டன் புடவை. தலையில் சூடியிருக்கும் மல்லிகைச் சரம்.. மிக நீண்ட பின்னல்..

எளிமையான அலங்காரத்தில் தேவதை போல் மிளிரும் கௌசல்யாவை திருமண வயதில் இருக்கும் இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான நாற்பத்தி இரண்டு வயதுப் பெண்மணி என்று யாராலும் சொல்ல முடியுமா?

என்றும் போல் இன்றும்.. மனைவியின் குன்றாத இளமையை ரசித்து வியந்தபடி.. கையில் இருந்த பையை சப்தம் எழுப்பாமல் மேஜை மேல் வைத்தார் ஜெயராமன்.

தன்னை மறந்து பாடலுடன் ஒன்றியிருந்த கௌசல்யா யதேச்சையாய் நிமிர்ந்து பார்த்தாள்.. கணவனைக் கண்டதும்.. கையிலிருந்த மல்லிகைச் சரத்தை பூத்தட்டில் வைத்துவிட்டு.. அவசரமாக எழுந்தாள்.

''வந்து விட்டீங்களா..''

''அதுதான் வந்து விட்டேனே.. எதற்கு அவசரமாய் இறங்குகிறாய்? மெதுவாகத்தான் வாயேன். பாட்டெல்லாம் பிரமாதமாய் பாடிக்கொண்டு இருந்தாயே.. நான் வந்து டிஸ்டர்ப் பண்ணி விட்டேனா..''



''பாட்டுத்தான் முடிந்து விட்டதே.''

கௌசல்யா சி.டி. பிளேயரை அணைத்துவிட்டு சமையலறைக்குள் சென்றாள்.. பேன்ட் சர்ட்டிலிருந்து.. கைலி பனியனுக்கு மாறிய ஜெயராமன் குளியலறைக்குள் புகுந்தார். அவர் முகம், கைகால் கழுவி துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்தபோது கௌசல்யா காபி பலகாரத்துடன் ரெடியாக இருந்தாள்.

முகத்தைத் துண்டால் அழுந்தத் துடைத்தபடி வந்த ஜெயராமன்... டைனிங் டேபிளில் அமர்ந்து பலகாரத்தைச் சாப்பிட்டபடி,

''ஹரிதா வந்து விட்டாளா..?'' என்று வினவினார்.

''சரிதா வந்து விட்டாள்..'' கௌசல்யா தண்ணீர் ஜக்கிலிருந்து தண்ணீரைத் தம்ளரில் ஊற்றியபடி பதில் சொன்னாள்.

''பெரியவள் வந்து விட்டாளான்னு கேட்டால்... நீ சின்னவள் வந்து விட்டாள்ன்னு சொல்கிறாயே.. கெட்டிக்காரிதான். ஹரிதா இன்னும் வரவில்லை.. அப்படித் தானே...''

''அவள் ஏதாவது பிரண்ட் வீட்டிற்குப் போயிருப்பாள்.''

''பெண்கள் சங்கத்திற்கு போயிருப்பாள்ன்னு சொல்லு.''

''அது ஒன்றும் தப்பான விசயமில்லையே. நம் பெண் தேவையில்லாமல் ஊரைச் சுற்றினால் நாம் பயந்து கண்டிக்க வேண்டியதுதான். இவள் ஒரு கொள்கைப் பிடிப்போடு இருக்கிறாள். அதைப்பற்றி நாம் கவலைப்பட என்ன இருக்கிறது?''

''எவ்வளவோ இருக்கிறது கௌசி.. உனக்கு ஏன் இது புரியவில்லை. ஹரிதாவிற்கு நல்லநல்ல இடங்களில் இருந்தெல்லாம் வரன் வந்து கொண்டிருக்கிறது. காலா காலத்தில் இவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்தால்தானே நாம் அடுத்தவளுக்கும் மாப்பிள்ளை தேட முடியும்? எனக்கு வயது ஐம்பது ஆகிவிட்டது கௌசி. நான் ரிட்டயர் ஆவதற்குள் இரண்டு பெண்களையும்... கல்யாணம் பண்ணிக் கொடுத்து.. நான் செய்ய வேண்டிய கடமைகளைக் குறையாமல் செய்துவிட வேண்டும்ன்னு கவலையாய் இருக்கிறதுடி...''

கௌசல்யா பதில் கூறாமல் கணவன் சாப்பிட்டு முடித்து வைத்த பாத்திரங்களை எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் சென்றாள்... ஜெயராமன் எழுந்து அவள் பின்னாலேயே சென்றார்.

குழாயைத் திறந்து விட்டு.. அவள் பாத்திரங்களைக் கழுவுவது போல் குனிந்து கொண்டாள். அவள் பேச்சிலிருந்து தப்பிக்க முனைவது ஜெயராமனுக்கு நன்கு தெரிந்தது. அதற்காக பேச்சை அப்படியே விட்டுவிட அவரால் முடியவில்லை.

எப்படி விடுவது? அவர்களுடைய மூத்த பெண் ஹரிதா அழகில் அப்படியே கௌசல்யாவின் பிரதி பிம்பமாய் இருந்தாள். படிப்பிலும் கெட்டி.. மற்ற பழக்க வழக்கங்களிலும் மிகவும் சுட்டி.

சிறு வயதில் இருந்தே பள்ளியில் நடக்கும் அனைத்துப் போட்டிகளிலும் அவள் பங்கெடுத்துக் கொள்வாள்... பாட்டு.. நடனம்.. பேச்சு.. என்று எதையும் விட்டு வைத்ததில்லை.. கலந்து கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் அவள்தான் முதல் பரிசை வெல்வாள். மெல்ல மெல்ல.. அவளது எல்லைகள் விரிவடைந்தன.



பள்ளிகளில் மேடைகளில் முழக்கமிட்டவள்.. கல்லூரியிலும் அதைத் தொடர்ந்தாள். பேச்சை மேடையிலேயே விடாதபடி.. அவளைப் பாராட்டுரைகள் சூழ்ந்து கொள்ள.. அவள் பேசிய பேச்சுக்களுக்கு உதாரணமாக வாழ ஆர்வம் கொண்டாள்.

பெண்களின் பிரச்னைகளைத் தட்டிக் கேட்க ஆரம்பித்தாள்.. பெண்ணுரிமைகளைப் பற்றி அசைக்க முடியாத கருத்துக்களை மனதில் கொண்டாள். அவளைத் தேடி பிரச்னைகள் வந்தபோது அஞ்சாமல் அவள் எதிர் கொண்ட விதம் பெண்கள் சங்கத்தின் கவனத்தை ஈர்க்க அவள் அதில் ஓர் அங்கமானாள்.

பட்டப் படிப்பை முடித்தவுடன்... வேலை ஒன்றைத் தேடிக் கொண்டாள். மாலை நேரக் கல்லூரியில் முதுநிலைப் பட்டப்படிப்பிற்கு சேர்ந்து கொண்டாள்.

அதிலெல்லாம் ஜெயராமனுக்கு மூத்த மகள் மேல் அளவு கடந்த பெருமை உண்டு. பட்டப்படிப்பு படிக்கும் போதே.. மாலை நேரங்களில் அவள் கம்ப்யூட்டர் கோர்ஸிலிருந்து செக்ரட்டரி கோர்ஸ் வரை அனைத்துக் கூடுதல் கல்வித் தகுதிகளையும் கற்று வைத்திருந்தாள். அதனால்தான் அவள் பட்டப் படிப்பை முடித்தவுடனே.. வேலை அவளைத் தேடி வந்தது.

ஆனால் இதிலெல்லாம் புத்திசாலித்தனமாய் இருப்பவள் திருமணம் என்று வந்தபோது மட்டும் முழு முட்டாளாய் ஆகி விட்டாள் என்பது ஜெயராமனின் அபிப்ராயம்.

பெண்களின் பிரச்னைகளைப் பற்றி மேடைகளில் பேசிப் பேசி அந்தக் கருத்துக்களை மனதில் ஆழப் பதித்துக் கொண்டு விட்டாள் ஹரிதா. போதாத குறைக்கு...

மாதர் சங்கத்திற்கு வரும் பெண்கள் சொல்லும் கண்ணீர் கதைகள் அவள் மனதைப் பிழிந்து எடுத்தன. அவர்களுக் காக அவள் போராடச் செல்லும்போது சந்தித்த ஆண் வர்க்கம் எல்லாம் அசுர வர்க்கமாக இருந்தன.

விளைவு.. திருமணமே வேண்டாம் என்ற முடிவிற்கு வந்து விட்டாள் ஹரிதா.

வாழ்நாளெல்லாம்.. அடி மட்டத்திலிருக்கும் பெண் களை மேலே கொண்டு வருவதுதான் தன் வாழ்க்கை லட்சியம்... பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு போராடுவதே தன் வாழ்க்கையின் தலையாய வேலை என்று இயங்கிக் கொண்டிருந்தாள்.

இப்படி இருப்பவளிடம் போய் எப்படித் திருமணப் பேச்சை எடுப்பது என்று தெரியாமல் விழி பிதுங்கினார் ஜெயராமன்... மகளை அருகில் அழைத்து அமர வைத்து தன்மையாகப் பேசியும் பார்த்தார்.

''ஹரிதா... எதையும் ஆற அமர யோசித்துச் செயல்பட வேண்டும்மா.''

''எப்போதுப்பா.. அப்படிச் செய்ய வேண்டும்? கண் முன் குடிசைகள் தீப்பற்றி எரியும்போது.. நான் ஆற அமர யோசித்துக் கொண்டிருந்தால்... எரிந்து கொண்டிருக்கும் குடிசைகளை அணைப்பது எப்படி..? அப்புறம் சாம்பல் ஆறட்டும் என்று காத்திருக்க வேண்டியதுதான்.''

'எதைச் சொன்னால் இவள் எதைச் சொல்கிறாள் பார்..' என்று மனதில் அலுத்துக் கொண்ட ஜெயராமனுக்கு... மகள் இவ்வளவு புத்திசாலியாக இருந்து தொலைத் திருக்க வேண்டாம் என்று முதன் முறையாகத் தோன் றியது.



''ஏம்மா.. குடிசைகள் எரிந்தால்.. பயர் என்ஜின் வந்து அணைத்து விட்டுப் போகிறது.. நீயேன் வேண்டாத கவலைகளை தூக்கி உன் தலையில் போட்டுக் கொள் கிறாய்..? ஊர் பிரச்னை உனக்கு எதற்கம்மா? முதலில் நீ உன் பிரச்னையைப் பார்...''

ஹரிதாவிற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.. கையில் மைக் இல்லாமலேயே மேடையில் பேசும் தோரணையில் பேசித் தள்ளி விட்டாள்.

தகப்பனார் சுயநலத்தின் மறு உருவமாய் இருக்கிறார். இப்படி அவர் இருப்பாரென்று ஹரிதா கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. இவரைப் போலத்தான் இன்றைக்கு உலகில் இருக்கும் மொத்தக் குடிமகன்களும் இருக்கிறார் கள்.

'அது என்ன இவள் எதற்கெடுத்தாலும் குடிமகன் களையே சாடுகிறாள். குடிமகள்கள் யாரும் இவள் கண் களுக்கு தென்படுவதில்லையா...?' என்ற சந்தேகம் வந்து விட்டதால்.. அதை ஜெயராமன் மகளிடம் கேட்டு வைத்து அதற்கும் சேர்த்து வாங்கிக் கட்டிக் கொண்டார்.

குடிமகன்கள் எல்லாம் ஆண்கள் தானாம்.. குடிமகள் கள் என்று பெண்களில் யாரும் இல்லையாம். கள்ளச் சாராயம் குடித்துவிட்டு செத்து ஒழிவது ஆண் வர்க்கமா.. இல்லை பெண் வர்க்கமா என்று சண்டைக்கு வந்தாள்.

''ஐயோ.. நான் அப்படி அர்த்தத்தில் சொல்லவில்லை ஹரிதா. நான் சொன்ன குடிமகளே வேறு.. இந்தியன் சிட்டிசன்.''

''எங்களுக்கு அந்த உரிமையைக்கூட கொடுத்திருக் கிறீர்களா?''

''எங்களுக்கு என்று நீயும் ஏன் கூட்டுச் சேர்கிறாய்? உனக்கு என்ன உரிமை இல்லாமல் போய் விட்டது?''

''இப்போது திருமணத்தை மறுக்கும் உரிமையை எனக்கு நீங்கள் கொடுக்க மறுக்கிறீர்களே அப்பா...''

''ஏம்மா.. ஒரு தகப்பனாக என் கடமையை நான் செய்ய வேண்டாமா?''

''ஒரு சமூகநல வாதியாக.. பெண்களின் பிரதிநிதியாக நான் செய்ய வேண்டிய கடமைகள் ஏராளமாய் இருக்கிறது அப்பா...''

''அதைக் கல்யாணத்தைச் செய்து கொண்டும் நீ செய்யலாமே அப்பா.''

திருமணத்தை முடித்து.. ஒருவன் கையில் அவளை ஒப்படைத்து விட்டால் அப்புறம் அவன் பாடு.. அவள் பாடு என்ற எண்ணம் அவருக்கு.

திருமணம் பண்ணிக் கொள்கிறவன்.. குடும்பம் நடத்தினாலும் சரி.. இல்லை சந்நியாசம் வாங்கிக் கொண்டு காவியைக் கட்டிக் கொண்டு ஓடினாலும் சரி.. என்ற அவரது சுயநலமான எண்ணத்திற்கு உடனே ஹரிதாவிடம் இருந்து பதிலடி கிடைத்தது.

''எதற்குப்பா... என் சிறகுகளை பிய்த்துப் போட பார்க்கிறீர்கள்.''

இது என்ன இவள் இப்படிச் சொல்கிறாள்.. இவளுக்கு ஏது சிறகு? இவளென்ன.. பறவையா? மனிதப் பிறவியாயிற்றே.. என்று நொந்து கொண்டார் ஜெயராமன்.

''ஏம்மா.. மனுஷியாய் இருக்கக் கற்றுக் கொள்ளம்மா. நீயேன் பறவையாய் இருக்க ஆசைப்படுகிறாய்?''



''ம்ஹூம்.. கவிதையை புரிந்து கொள்ளாத உங்களைப் போல் தானே மற்ற ஆண்களும் இருப்பார்கள்..? என்னைப் பெற்று வளர்த்த தகப்பனாகிய உங்களாலேயே.. நான் கவிதை சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் தேடிக் கொண்டு வரும் மாப்பிள்ளை மட்டும் புரிந்து கொள்ளப் போகிறாரா என்ன..? வேண்டாம்பா.. இந்த வீண் வேலை.''

''இங்கே பார்.. சிறகடிப்பது.. பறந்து செல்வதுன்னு பேசினால் எனக்கு என்ன புரியும்? நான் கணக்கு வழக்குகளை கட்டிக் கொண்டு வாழ்பவன்.. புரியும்படி பேசாமல்.. அவசர முடிவிற்கு வராதே..''

''அப்பா.. விட்டுச் சிறகடிப்பாய்.. அந்தச் சிட்டுக் குருவியைப் போல்ன்னு பாரதியார் பாடியிருப்பது தெரியுமா.. தெரியாதா?''

''அது எனக்குத் தெரியா விட்டால் போகிறது. பாரதியார் ஒரு ஆண் என்பது உனக்குத் தெரியுமில்லை.. எனக்கு அது போதும்.''

''நீங்கள் எங்கே வருகிறீர்கள்.''

ஹரிதா சந்தேகமாய் தகப்பனைப் பார்க்க.. முதல் முறையாய் ஹரிதாவை யோசிக்க வைக்கும் பதில் ஒன்றைச் சொன்னார் ஜெயராமன்.

''பாரதியாரைப் போல் பெண்களின் பிரச்னைகளையும் அவர்களின் மனதையும் புரிந்து கொண்ட ஆண் ஒருவன் உனக்குக் கணவனாக வந்து வாய்த்தால் நீ வேண்டாமென்று சொல்லி விடுவாயா?''

''அவர் கோடியில் ஒருவர் அப்பா...''

''அம்மா.. அவர் காலத்தில் இருந்த மக்கள் தொகை வெறும் முப்பது கோடி. அது இப்போது எவ்வளவு டெவலப் ஆகியிருக்கிறது என்று பார்.''

''அதை டெவலப் பண்ணுவதை மட்டும்தானே நாம் உருப்படியாகச் செய்து கொண்டிருக்கிறோம்? இதில் நான் ஒருத்தியாவது.. அதைச் செய்யாமல் தப்பிக்கலாம் என்று பார்த்தால்.. நீங்கள் அதற்கும் விட மாட்டேன் என்கிறீர்களே. ஏன்ப்பா.. இந்தக் கல்யாணம் காட்சியை எல்லாம் நீங்கள் நம் சரிதாவிற்கு செய்து அழகு பார்க்க வேண்டியதுதானே. என்னை விட்டு விடலாமே.''

''ஏம்மா.. நான் ஒன்றைச் சொன்னால்.. நீ வேறு ஒன்றைச் சொல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் இருக்கிறாயா..?''

''நீங்கள் என்னத்தை புதிதாய் சொல்லி விடப் போகிறீர்கள்.''

''பாரதியார் வாழ்ந்த காலத்தில் முப்பது ஆண்கள்தான் உன் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற மாதிரி இருப்பார்கள். இப்போது.. முப்பது கோடி.. பல மடங்கு பெருகி விட்டதே.. இப்போது எத்தனை ஆண்கள் உன் பாரதியாரைப் போல இருப்பார்கள்ன்னு நினைத்துப் பார் ஹரிதா.. நீ அவர்களில் ஒருவரை செலக்ட் பண்ணலாமே.''

''ம்ம்.. நீங்கள் அப்படியா சொல்கிறீர்கள்?''

அவள் நெற்றியில் ஒரு விரலால் தட்டியபடி யோசிக்க ஆரம்பித்தாள். முதல் முறையாக தனது பேச்சைக் கேட்டு ஹரிதா யோசிக்க ஆரம்பித்ததில் ஜெயராமனுக்கு மகா சந்தோசம்.

''பார்த்தாயா கௌசி.. பெற்ற தாய்... உன்னால் முடியாததை நான் சாதித்து விட்டேன். ஹரிதாவை யோசிக்க வைத்து விட்டேன்..'' என்று மனைவியிடம் பெருமையடித்துக் கொண்டார்.



''இப்போதுதானே யோசிக்க ஆரம்பித்திருக்கிறாள். அவள் ஒரு நல்ல பதிலைச் சொல்லட்டும். அப்புறம் பார்க்கலாம்'' நம்பிக்கையில்லாமல் பதில் சொன்னாள் கௌசல்யா.

''ஏண்டி இப்படிச் சொல்கிற. நான் எவ்வளவு சந்தோசமாக வந்து உன்னிடம் இதைச் சொல்கிறேன். நீயானால் அத்தைக்கு மீசை முளைக்கட்டும் அப்புறம் பார்க்கலாம் என்கிற ரீதியில் ஒரு பதிலைச் சொல்கிற.. ஏண்டி.. ஏண்டி.. தாயும்.. மகளும் இப்படி மாறி மாறிப் பேசி.. என் தலைமுடியை பிய்க்க வைக்கறீங்க..'' தன் நம்பிக்கை தோற்றுப் போய் விடுமோ என்ற பயத்துடன் ஜெயராமன் அங்கலாய்த்தார்.

''ஏங்க.. நான் என்ன வேணும்னா உங்களை மூட் அவுட் பண்ணுவது போல் பேசுகிறேன். உங்க அருமந்த புத்திரியின் குணம் அப்படி.. நீங்க பாட்டுக்கு அவள் ஓகே சொல்லி விடுவாள்ன்னு நம்பிக்கையாய் இருக்க.. அவள் வந்து மாட்டேன்னு உங்க தலையில் குண்டைத் தூக்கிப் போட்டால் நீங்க தாங்குவீர்களா? தலை தப்புவது முக்கியமா.. இல்லை... தலைமுடி தப்புவது முக்கியமான்னு நீங்களே யோசித்துப் பாருங்க..'' கௌசல்யா.. தன் மகளின் குணத்தை அறிந்தவளாதலால் கணவனின் மேல் அக்கறையோடு பதில் சொன்னாள்.

அத்தைக்கு மீசை முளைத்ததோ இல்லையோ.. கௌசல்யாவின் கவலை பொய்யாகிப் போனது.

இரண்டு பெண்களைப் பெற்ற அப்பிராணியான தன் தந்தை பிழைத்துப் போகட்டும் என்று கருணை

கொண்ட ஹரிதா... தன் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தாள்.

''பட் ஒன் கண்டிசன் அப்பா.. பாரதியைப் போல் கோபமும்.. வேகமும்... கம்பீரமும்.. பெண்களின் மேல் கருணையும்.. நேர்மையும்.. ஆண்மையும் கொண்ட ஒருவன் என்னைப் பெண் கேட்டு வந்தால் மட்டுமே நான் அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்.. அதை விட்டு விட்டு வேறு யாராவது வந்து நின்றால்.. நான் நானாக இருக்க மாட்டேன்.''

ஜெயராமன் மீண்டும் அடி வயிறு கலங்கினார்.

## 2

ஜெயராமன் என்னவோ மகளைச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்ற வேகத்தில் பாரதியைப் பற்றிப் பேசி விட்டார்.

இப்போது பாரதியைப் போல் ஒரு மாப்பிள்ளையைக் கொண்டு வா என்றால் அவர் எங்கு போய் தேடுவார்?

மீண்டும் மதி கலங்கிப் போய்.. மனைவியிடம் யோசனை கேட்டார்.. கணவனின் நிலைமை கண்டு பரிதாபப்பட்ட கௌசல்யா தைரியம் கூறினாள்.

''ஏங்க... இப்ப என்னவாகிப் போச்சுன்னு இந்தப் பயம் பயப்படுகிறீங்க.. உங்க பெண்தான் கம்ப்யூட்டர் காலத்தில்... கவிதை எழுதின மாப்பிள்ளையைத் தேடு



கிறாள்ன்னா.. உங்களுக்கு எங்கே போச்சு புத்தி.. சொல்வதுதான் சொன்னீங்க... ஏதாவது ஒரு சினிமா நடிகர் பெயரைச் சொல்லித் தொலைத்தீங்களா... பாரதியாரின் பெயரைச் சொல்லி வைத்திருக்கீங்க.. உங்களை என்னதான் செய்வது..?''

''ஏண்டி.. பாரதியார் என்ன எனக்குப் பக்கத்து வீட்டுக்காரனா? எனக்கு என்னடி பாரதியாரைப் பற்றித் தெரியும்? உன் மகள்தான் பாரதி.. பாரதி..ன்னு சொன்னாள். அவனும் ஒரு ஆண்தானேம்மா. ஆண் வர்க்கத்தையே நீ வெறுக்கலாமா..? அவனைப் போல ஆண்களும் இருக்கிறார்கள்ன்னு.. ஒரு பேச்சுக்கு சொல்லி வைத்தேண்டி.. அவள் இதையே உடும்புப் பிடியாய் பிடித்துக் கொள்வான்னு கனவா கண்டேன்?''

''உங்கள் பெரிய பெண்ணிடம் வெறும் பேச்சுக்குன்னு எதையும் சொல்ல முடியாதுன்னு உங்களுக்குத் தெரிய வேண்டாமா? எனக்குன்னு தகப்பனும்.. மகளும் வந்து வாய்த்திருக்கீங்களே. உங்க இரண்டு பேரிடமும் மல்லுக்கட்டி.. எனக்கு உயிர் போய் விடுகிறது..''

''என்னடி கௌசல்யா.. நீயே இப்படிச் சொல்கிற? எனக்கு ஒரு வழியைச் சொல்லுடி...''

''சரி.. சரி.. விடுங்க.. இப்ப என்ன.. ஹரிதாவைப் பெண் கேட்டு உங்களிடம் யாராவது பேசினார்களா?''

''ம்ம்.. என் சுப்பிரியர் ஆபிஸரோட பையன்.. நம் வீட்டு கிரஹப்பிரவேசத்தில் நம்ம ஹரிதாவைப் பார்த்திருக்கிறான். கட்டினால் இவளைத் தான் கட்டுவேன்னு ஒற்றைக் காலில் நிற்கிறானாம்.''

''நம் வீட்டு கிரஹப்பிரவேசம் முடிந்து ஆறு வருசமாகிறதே...''

''அப்போதே.. ஆசைப்பட்டு விட்டானாம்.. என்னிடம் இரண்டு வருசத்திற்கு முன்னாலேயே பெண் கேட்டு விட்டாங்க. நான்தான் இவளிடம் பேச பயந்து கொண்டு தள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.''

''நல்ல அப்பா.. நல்ல பெண்...''

''ஏண்டி.. நீ சந்தடி சாக்கில் பொறுப்பில் இருந்து கழண்டு கொள்ளப் பார்க்கிற.. நல்ல அப்பா.. நல்ல அம்மா.. நல்ல பெண்ணுன்னு சொல்லு.''

''நழுவப் பார்த்தாலும் விட்டு விடுகிற ஆள்தான் நீங்கள். அது சரி.. ஆறு வருசமா.. நம்ம பெண்ணைக் கட்டுவேன்னு ஒற்றைக் காலில் நிற்கிற மாப்பிள்ளைக்கு கால் வலிக்காதா?''

''ஆமாண்டி.. சான்ஸ் கிடைத்ததுன்னு.. நீ சந்துக்குள் நுழைந்து சிந்து பாடு.. உன்னைப் போல்தான் உன் பெண்ணும் இருப்பாள்? வாயைத் திறந்து ஒரு வார்த்தை.. ஒரு மனுசன் பேசிவிடக் கூடாதே. வரிந்து கட்டிக் கொண்டு.. என் வார்த்தையாலேயே என்னைக் கட்டிப் போட்டு விடுவீர்களே.''

''என்ன ஆச்சு.. கோபமாக்கும்.. என்னிடமும் ஒரு வரன் இருக்கிறது.''

''யாருடி அது..''

''நம்ம பக்கத்து வீட்டு கோகிலாவோட அக்காள் மகன் ஒருத்தன் அமெரிக்காவில் இருக்கிறான்.. அவன் சித்தியைப் பார்க்க வருகிறேன்னு வந்த இடத்தில் நம்ம பெண்ணைப் பார்த்து விட்டான். அதற்குப் பிறகு.. நம் பெண்ணைப் பார்ப்பதற்காகவே.. அவனுடைய சித்தியின் வீட்டிற்கு வந்து விட்டுப் போகிறானாம்.''



''என்கிட்ட நீ இதைச் சொல்லவே இல்லையே.''

''சொல்லி என்ன செய்ய? உங்கள் கதைதான் என் கதையும். உங்க பெண் வழிக்கு வருவாளோ.. மாட்டாளோன்னு மனதுக்குள் வைத்து மறுகிக்கிட்டு இருக்கேன். ம்ஹூம்.. நாம் வாங்கி வந்த வரம் இதுதான் போல.. என்ன ஒன்று.. மற்றவங்களைப் போல் இல்லாமல் ஹரிதா ஓர் கொள்கையோடு இருக்கிறாள். அவள் வெளியே போய் விட்டு வர லேட்டானால் நாம் சந்தேகப்பட வேண்டிய அவசியமே இல்லை. அவ்வளவு நல்ல பெண்.''

''ஆனால் எங்கே போய்.. எந்தப் போராட்டத்தில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறாளோன்னு பக்கு.. பக்குன்னு கிடக்கணும். அதைச் சொல்லாமல் விட்டு விட்டாயே...''

கணவன் சொல்வது உண்மை என்பதால்.. அதை மறுத்துப் பேசாமல் கௌசல்யா மௌனத்தில் ஆழ்ந்தாள்.

''இது ஒன்று உன்கிட்ட.. பதில் பேசாமல் தப்பித்துக் கொள்வதில் நீ கெட்டிக்காரி கௌசி.''

''பாராட்டுகிறீர்களா.. இல்லை பொறாமைப்படுகிறீர்களா.''

''இரண்டும் இல்லை. ஒரு பேச்சிற்கு சொன்னேன்.''

''பேச்சுக்கு சொல்லிவிட்டு மாட்டிக் கொண்டு விழிப்பது போதாதா?''

''எல்லாம் நீ வழி சொல்வாய் என்ற தைரியத்தில்தான்.''

கணவனை செல்லக் கோபத்துடன் கௌசல்யா முறைத்துக் கொண்டிருந்தபோது..

''அப்பாவுக்கு.. அப்படி எந்த விசயத்தில் தைரியம் கொடுத்துக் கொண்டிருக்கீங்கம்மா?'' என்று வினவியபடி சரிதா அங்கு வந்து நின்றாள்.

சரிதா மஞ்சள் கலந்த பொன்னிறத்தில் தாயைக் கொண்டிருந்தாள். கௌசல்யாவைப் போலவே நீண்ட கூந்தல்.. ஒல்லியான உடல் வாகு. கொடியிடை. ஆனால் கௌசல்யாவின் அழகான பெரிய கண்கள் ஹரிதாவுக்கு மட்டுமே வாய்த்திருந்தது. சரிதாவின் கண்கள் ஜெயராமனின் கண்கள் போல்.. சிறியவை.

மற்றபடி சரிதாவும் அழகிதான்.. ஹரிதா ஒரு வகையில் அழகென்றால் சரிதா இன்னொரு வகையில் அழகானவள்.. அக்காவைப் போலவே தங்கையும் புத்திசாலி.. ஆனால் ஹரிதா கொட்டும் அருவியென்றால் சரிதா.. ஆர்ப்பாட்டமில்லாமல் ஓடும் அழகிய நதி...

பெரியவளிடம் குடிகொண்டிருக்கும் கலகலப்பு சிறியவளிடம் இருக்காது. சரிதா சிரிக்கக் கூலி கேட்பாள். அதேபோல் ஹரிதாவிடம் இருக்கும் கோபமும் சரிதாவிடம் கிடையாது. சரிதாவை கோபப்படுத்துவது மிகவும் கடினம். சாந்தமான குணம் உடையவள். ஹரிதா தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் பண்ணத் தயங்காதவள். சரிதாவோ.. வாசலில் சிறு சத்தம் கேட்டாலும்.. கதவை அடைத்துக் கொண்டு வீட்டுக்குள் அமர்ந்து கொள்வாள். மொத்தத்தில் இருவரும் நேர் எதிரான குணங்களைக் கொண்டவர்கள்.

புயல் போன்ற தமக்கைக்கு.. தென்றல் போன்ற தங்கை வந்து வாய்த்தது எப்படி..? காலம் செய்யும் விசித்திரங்களில் இதுவும் ஒன்று.

பூமி அதிருமோ என்று மென்மையாய். அலுங்காமல்.. குலுங்காமல் நடந்து வந்து அருகில் நின்ற சின்ன மகளை வாத்சல்யத்துடன் பார்த்தார் ஜெயராமன்.



''என்னப்பா... அம்மாவிடம் நான் கேள்வி கேட்டால்.. நீங்கள் என்னையே பார்த்துக் கொண்டிருக்கீங்க..?'' சரிதாவின் உதடுகள் லேசாக வளைந்தன.

சிரிக்கிறாளாம். சின்ன மகளின் மேல் இன்னும் பாசம் அதிகமாக ஜெயராமன் புன்னகைத்தார்.

''நம்ம வீட்டில் வேறு என்ன ராமாயணத்தைப் பத்திப் பேசப் போகிறோம்மா. எல்லாம்.. உன் அக்காவின் கல்யாணத்தைப் பத்தித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். நீ டயர்டா வந்திருப்பாயே.. காபி குடிக்கிறியா கொண்டு வரட்டுமா...'' என்று வினவியபடி உள்ளே போகத் திரும்பினாள் கௌசல்யா.

''ஓ... அதுதான் அப்பாவிற்கு தைரியம் சொல்லிக் கொண்டிருந்தீங்களா... அம்மா... எனக்கு காபி வேண்டுமென்றால்.. நான் கலந்து குடித்துக் கொள்வேன் நீங்க இங்கே வாங்க.. நான் ஒரு முக்கியமான விசயம் ஒன்றைச் சொல்ல வேண்டும்'' என்று சமையலறைக்குப் போகப் போன கௌசல்யாவை தடுத்து நிறுத்தினாள் சரிதா.

''என்னம்மா.. என்ன விசயம்?''

''அம்மா.. என் பிரண்ட் மீனா இருக்கிறாளில்லையா..?''

''ஆமாம்.. அவளுக்கு என்ன?''

''அவளுக்கு ஒன்றுமில்லையம்மா.. அவளுடைய அண்ணனுக்கு நம் ஹரிதாவைப் பெண் கேட்கலாமென்று அவர்கள் வீட்டில் ஒரு நினைவு இருக்கிறதாம்.''

தன் தோழியின் அண்ணனுக்கு.. தன்னை விட்டுவிட்டு.. தன் அக்காளைப் பெண் கேட்க நினைக்கிறார்கள் என்ற வருத்தம் துளிக்கூட முகத்தில் இல்லாமல் பேசிய இளைய பெண்ணைப் பார்க்கும்போது கௌசல்யாவிற்கு மிகவும் பெருமையாக இருந்தது.

'பொறாமை என்பது இல்லாத பூவைப் போன்றவள் இவள்..' கனிவுடன் மகளைப் பார்த்துப் புன்னகைத்தாள் அவள்.

''ஏம்மா.. மீனாவின் வீடு ரொம்ப வசதியானதாச்சே.''

''ஆமாம்பா. ஆனால்.. அவளுடைய அண்ணனுக்கு நம் ஹரிதாவைத் தான் பிடித்திருக்கிறதாமே...''

ஜெயராமனும்.. கௌசல்யாவும்.. தங்கள் தலைவிதியை நொந்து கொண்டு அமர்ந்து கூடிப் பேசினார்கள்.

ஜெயராமனின் மேலதிகாரி மிகவும் வசதியானவர். அவரின் மகன் கஸ்டம்ஸில் ஆபிஸராக இருக்கிறான். அவர்களது வசதிக்கு ஜெயராமனின் வசதி மிக.. மிகக் குறைவு.

பக்கத்து வீட்டு கோகிலாவின் அண்ணன் மகனோ.. அமெரிக்க குடியுரிமை பெற்றவன்.. சாப்ட்வேர் இன்ஜினியர்.. அவர்களும் ஹரிதாவை பெண் கேட்பது ஹரிதாவின் அதிர்ஷ்டம்தான்.

சரிதாவின் தோழியான மீனாவின் குடும்பம பரம்பரையாய் வசதி படைத்த குடும்பம்.. அவர்களின் சம்பந்தம் கிடைப்பது மிகவும் அரிதான விசயம்...

இப்படிப்பட்ட மூன்று இடங்களில் இருந்தும்.. மாப்பிள்ளைகள் ஹரிதாவை மணக்க போட்டி போடுவதை நினைத்துப் பெருமைப்பட முடியாமல்... தொண்டையில் சிக்கிய முள்ளாக.. ஹரிதா தன் திருமணத்திற்கென்று சில நிபந்தனைகளை போட்டு வைத்து இருப்பதுதான் ஜெயராமனது தூக்கத்தைத் துரத்திக் கொண்டிருந்தது.

''என்னடி கௌசி.. இந்த மூன்றில் எது முடிந்தாலும்.. ஹரிதாவின் வாழ்க்கை வளமாக இருக்கும்.. ஆனால்



முடியுமா என்பதுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது..'' என்று நடுராத்திரியில் அருகில் படுத்துக் கொண்டிருந்த மனைவியை எழுப்பிப் புலம்பினார் அவர்.

காலையில் எழுந்ததில் இருந்து இரவு எல்லோரும் தூங்கப் போகும் வரை... ஓடி.. ஆடி வேல செய்தவளை தூங்க விடாமல் எழுப்பி உட்கார வைக்கும் கணவனின் மென்னியைப் பிடித்தால் என்ன என்று ஒரு கணம் ஆத்திரப்பட்டு விட்டு.. பின் தன்னையே கடிந்து கொண்டு.. தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் கௌசல்யா.

''ஏண்டி.. நான் என்ன கேட்கிறேன்.. நீ என்ன செய்கிறாய்.. பதிபக்தி இருக்க வேண்டியதுதான். இவ்வளவு அதிகமாக இருக்கக் கூடாது..'' என்று கூறிய ஜெயராமனை பார்த்து முறைத்தாள் கௌசல்யா.

''ஒரு மனுஷி.. நாள் பூராவும் உழைத்துக் கொட்டினால்.. அவளை நிம்மதியாய் உறங்கக்கூட விடாமல் தொந்தரவு பண்ணுகிறீர்களே. உங்களுக்கு மனச்சாட்சி என்பதே இல்லையா.''

''என்னடி கௌசி.. நீயும் இப்படி கோபித்துக் கொண்டால் நான் என்ன செய்வேன்..?''

''நீங்கள் வேறு.. என் கோபத்தைக் கிளராதீங்க.. மூன்றில் ஒன்று முடியுதோ.. இல்லையோ.. அது வேறு விசயம்.. இந்த மூன்று இடங்களிலும் நாம் விரோதி ஆகாமல் இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்.''

ஜெயராமனுக்கு கொஞ்ச நஞ்சம் இருந்த தூக்கமும் பறந்து விட்டது. திருடனுக்கு தேள் கொட்டியது போல் ஓர் விழி விழித்தார்.

''ஆமாம்டி. இதை ஏன் நான் யோசிக்காமல் போனேன். வெளி இடங்களில் இருந்து வந்து பெண் பார்த்து.. நம் ஹரிதா ரிஜக்ட் பண்ணினால் பிரச்னை இல்லை. இந்த மூன்று இடங்களிலும்.. நம் பெண் ஏடாகூடமாய் பேசி வைத்தால் என்னடி செய்வது?''

''அதைத்தான் நானும் யோசித்துக் கொண்டு இருக் கிறேன்.''

''ஹரிதாவின் கல்யாணத்தை முடித்து விட்டால்... மலையைப் பெயர்த்து எடுத்தது போல்.. தெம்பு வந்து விடும். சரிதாவின் கல்யாணம் ஒரு மேட்டரே இல்லை...''

''ம்ம்... இளையவளை நம்பி.. நாம் எந்த முயற்சி யிலும் இறங்கலாம். மூத்தவள்தான் இப்படி முட்டுக் கட்டையாய் நிற்கிறாளே.''

''இதிலே ஒன்றைக் கவனித்தாயா கௌசி.. மூத்த வளைப் பெண் கேட்டுத்தான் மாப்பிள்ளைகள் கூட்டம் மொய்க்கிறது. புற அழகிற்கு கொடுக்கும் முக்கியத் துவத்தை அக அழகிற்குக் கொடுப்பதில்லை. விளக்கைப் பார்த்துத்தானே விட்டில் பூச்சிகள் விழும்?''

''நீங்களும் உங்கள் தத்துவமும்.. ஹரிதாவின் அக அழகிற்கு என்ன குறைச்சல்? சரிதா அடக்க ஒடுக்கமாக இருப்பதால் ஹரிதா மட்டம் என்று எண்ணி விடுவதா? ஒரு போதும் அப்படி நினைக்காதீர்கள்..''

''இப்போது நான் என்ன சொல்லி விட்டேனென்று நீ இவ்வளவு கோபப்படுகிறாய்?''

''கோபப்படாமல் வேறு என்ன செய்வது? பெத்தவங் களே நம்ம பெண்ணைப் புரிந்து கொள்ளலைன்னா.. மத்தவங்க எப்படிப் புரிந்து கொள்வாங்க? பெண்களுக்



கான கொடுமைகள் அதிகமாய் நம் நாட்டில் நடக்குது... வீட்டிலும்.. வெளியிலும்.. அதிகமான வன்முறைகளுக்கு பெண்கள் ஆளாகிறார்கள். அதைத் தட்டிக் கேட்பதில் நம்ம பெண்ணும் பங்கெடுத்துக் கொள்கிறாள். இது ஒரு பெரிய குறையில்லை.''

''ஊரார் வாழ்வையே பார்த்துக் கொண்டிருந்தால்.. இவள் வாழ்வை யார் பார்ப்பது?''

''அதைச் சொல்லுங்கள்.. கேட்டுக் கொள்கிறேன். எது எப்படியோ.. நாம் ஹரிதாவின் கல்யாண ஏற்பாடுகளில் இறங்குவோம். மூன்று மாப்பிள்ளைகளையும்.. ஒவ் வொரு நாளில் வந்து பார்த்து விட்டுப் போகச் சொல்ல லாம்.. கடைசியில் ஹரிதாவின் விருப்பத்தைக் கேட்க லாம்.. என்ன.. நான் சொல்வது சரிதானே.''

''அவர்களிடம் ஹரிதா ஏடாகூடமாய் பேசிவிட்டால்?''

''அதற்கு நான் ஒரு வழி பண்ணுகிறேன்.''

கௌசல்யா உறுதி அளித்ததின் பெயரில் ஜெயராமன் படுத்து நிம்மதியாகத் தூங்க முயன்றார். கணவருக்கு அளித்த உறுதி மொழியின்படி கௌசல்யா.. மறுநாள் தன் மூத்த மகளை அழைத்துப் பேசினாள்.

''இதோ பார் ஹரிதா.. உன் கல்யாண விசயத்தில் நீ சில கண்டிசன்கள் வைத்திருக்கிறாய்.. நாங்கள் அதை மறுக்கப் போவதில்லை. நமக்கு மிகவும் வேண்டிய மூன்று இடங்களில் இருந்து.. உன்னைப் பெண் கேட்கிறார்கள். அவர்களை.. தனித்தனியாய் உன்னைப் பார்க்க வரச் சொல்கிறோம்.''

''நான் என்ன கண்காட்சியா.. அவர்கள் வந்து என்னைப் பார்த்து விட்டுப் போக..? நான் உயிருள்ள மனுஷிம்மா.''

"நான் இல்லையென்றா சொன்னேன்? நீ ஏன் அவர்கள் உன்னைப் பார்க்க வருவதாக நினைத்துக் கொள்கிறாய்? நீ அவர்களைப் பார்ப்பதற்காக வருகிறார்கள் என்று நினைத்துக் கொள்ளக் கூடாதா.. உண்மையும் அதுதானே ஹரிதா.. பைனல் டிசிசன் உன்னுடையது தான். மூன்று பேரையும் பார்.. பிடித்த மாப்பிள்ளை யாரென்று எங்களிடம் சொல்லு. நாங்கள் பேசி முடிக்கிறோம். ஆனால் ஒன்று. அவர்கள் வந்து போகிறவரை உன் மனதிற்கு அவர்கள் பேசுவது பிடித்திருந்தாலும்.. பிடிக்கா விட்டாலும் நீ அதை வெளிப்படுத்தக் கூடாது. அமைதியாய் இருக்க வேண்டும். இந்த அம்மாவிற்காக அதைச் செய்வாயா மாட்டாயா?"

## 3

ஹரிதா ஒன்றும் முரட்டுத்தனமான பெண் அல்ல. தன் கொள்கையில் தீவிரமான பிடிப்பு உடையவள். அவ்வளவுதான். எனவே.. கௌசல்யா கூறிய ஏற்பாட்டிற்கு மறுப்புச் சொல்லாமல் ஒப்புக் கொண்டாள் ஹரிதா. தவிரவும்... பெண் பார்க்க வருவது அவர்கள் அல்ல. மாப்பிள்ளைப் பார்க்க அமர்ந்திருப்பது தான்தான் என்ற ஏற்பாடு அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது... முடிவு எடுக்கும் அதிகாரம் தன் கையில் என்பதும் அவளது மனதிற்கு மகிழ்வைத் தந்தது.

ஒருவாறாய் நிலைமையை சமாளித்த தன் மனைவிக்கு பூப்போட்டு மரியாதை செய்யும் அளவிற்கு போய் விட்டார் ஜெயராமன்.



கௌசல்யாதான் ஒரு வழியாய் தன் கணவரின் நன்றி உணர்வைக் குறைத்து.. நடக்க வேண்டியதைப் பார்க்கும்படி அவருக்கு அறிவுறுத்தினாள்.

அதன்படி.. முதலில் ஒரு பொன் மாலைப் பொழுதில்.. ஹரிதாவை... முதன் முதலாய் பெண் பார்க்க வரும் பெருமையைத் தட்டிக் கொண்டு வந்து நின்றது ஜெயராமனின் மேலதிகாரியின் குடும்பம்.

அன்று காலையில் இருந்தே ஜெயராமன் வீட்டில் தடபுடல் பண்ணிக் கொண்டிருக்க.. ஹரிதா வெளியே கிளம்பத் தயாராகி வந்து அவர் முன் நின்றாள். ஜன்னல்களுக்கு புதுத் திரைச்சீலைகளைப் போட்டுக் கொண்டிருந்த ஜெயராமன்.. மகளைப் பார்த்துப் புருவம் உயர்த்தினார்.

"ஏன்ம்மா.. உன்னை இன்றைக்கு லீவ் போடச் சொன்னேனா.. இல்லையா?"

"லீவ் போட்டிருக்கிறேனே அப்பா..."

"அப்புறம்... இப்போது எங்கேயம்மா கிளம்புகிறாய்..?"

"ஒரு முக்கியமான போராட்டம் அப்பா... ஈவினிங் ஆறு மணிக்கெல்லாம் முடிந்து விடும். நான் அதன் பின்னால் வீட்டுக்கு வந்து விடுவேன் அப்பா.. அப்பா.. என்னப்பா.. ஏன் நெஞ்சைப் பிடித்துக் கொள்ளுகிறீர்கள்? உங்களுக்கு என்ன செய்கிறது. அம்மா.. அம்மா..."

ஹரிதாவின் பேச்சைக் கேட்டு... நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழிகள் நிலைகுத்த.. சோபாவில் சரிந்து அமர்ந்தார் ஜெயராமன்.

ஹரிதா போட்ட சத்தத்தில் கௌசல்யா பதறி ஓடி வந்தாள். "ஏம்மா என்ன ஆச்சு..?"

விவரம் கேட்டவள்.. விவரம் அறிந்தவுடன்... சிரிப்பதா.. இல்லை அழுவதா என்ற யோசனையுடன் மகளைப் பார்த்துக் கூறினாள்.

''பாரு ஹரிதா.. நாளை என்பது வராமல் போகப் போவது இல்லை.. நம் நாட்டில் இருக்கிற பெண்களின் பிரச்னைகளும் இன்றைக்கே தீர்ந்து விடப் போவதும் இல்லை. நீ இன்றைக்கு ஒரு நாள் மட்டும் எங்களுக்குச் சொந்தமானவளாக இரு.. நாளைக்குப் போராட்டம் நடக்காமலா போய் விடப் போகிறது. அதை அப்போது பார்த்துக் கொள். இனிமேல் அப்பாவிடம் இப்படி குண்டைத் தூக்கிப் போடுவதற்கு முன் என் காதில் கொஞ்சம் விசயத்தைப் போட்டு வைம்மா. என் தாலியைக் காப்பாற்று தாயே.. உன்னை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.''

ஹரிதா தன் கைப்பையை விட்டெறிந்து விட்டு படுக்கையில் படுத்துத் தூங்க ஆரம்பித்து விட்டாள்.

ஒரு வழியாய் தண்ணீரைக் குடித்து தந்நிலைக்கு வந்த ஜெயராமன் மீண்டும் மகளைப் பார்த்து சஞ்சலமானார்.

''இப்ப என்னத்துக்கு இந்த முழி முழிக்கிறீங்க.''

''இவள் ஏண்டி.. இப்போது போய் படுத்துத் தூங்குகிறாள்?''

''சாயங்காலம் தானே பெண் பார்க்க வருகிறாங்க?''

''ஆமாம்.''

''அதுவரை வீட்டில் இவள் அடங்கியிருக்கிறாளேன்னு சந்தோசப்படுங்கள். விழித்து உட்கார்ந்தால்.. ஒன்று நியூஸ் பேப்பரைப் படிப்பாள்.. இல்லைன்னா.. நியூஸ்



சேனலைப் பார்ப்பாள். அவைகளைப் பார்த்துவிட்டு.. திரும்பவும் போராடக் கிளம்பி விட்டால் நீங்க என்ன செயவீங்க...?''

''அதுவும் சரிதான்.. தூங்கட்டும்.. தூங்கட்டும்.''

மகளையும்.. கணவரையும் சரிக்கட்டி விட்டு.. தலைவலியுடன் சமையல் அறைக்குள் நுழைந்த தாய்க்கு.. காபி கொடுத்தாள் சரிதா.

''குடிங்கம்மா.. தலைவலி ஓடியே போய் விடும்.''

''எனக்குத் தலைவலிக்குதுன்னு உனக்கு எப்படித் தெரியும்.''

''ஹாலில் நடந்த கூத்தை நான் பார்த்துக் கொண்டு தானே இருந்தேன்.''

இளைய மகளின் பேச்சைக் கேட்டுச் சிரித்து விட்டாள் கௌசல்யா.

''எப்படித்தான் இந்தச் சூழ்நிலையிலும் நீங்க சிரிக்கறீங்களோ...''

''துன்பம் வரும்போது சிரிக்கச் சொல்லி வள்ளுவர் சொல்லியிருக்கிறாரே அதற்காகவாவது சிரிக்க வேண்டாமா?''

சரிதாவின் உதவியுடன் சிற்றுண்டியை தயார் பண்ணிய கௌசல்யா.. பால் பாத்திரத்தை அடுப்பில் வைத்தவாறு.. சரிதாவிடம் இறைஞ்சும் குரலில் கூறினாள்.

''சரிதா.. எப்படியாவது அவளை எழுப்பி ரெடி பண்ணி விடும்மா. உனக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்.''

சரிதா தமக்கையைத் தேடிச் சென்றாள். நிச்சிந்தையாய் தூங்கிக் கொண்டிருந்தவளைத் தட்டி எழுப்பினாள்.

"ஏண்டி.. என்னை எழுப்புற.. அவர்கள் வந்து விட்டார்களா?"

"வந்து விட்டால் என்ன செய்வதாய் உத்தேசம்?"

"எழுந்து வந்து அவர்கள் முன்னால் கொஞ்ச நேரம் உட்கார்ந்து இருந்து விட்டு வந்து விட வேண்டும்.. அவ்வளவுதானே."

"இப்படியேவா.."

"ஏன்.. இப்படியே வந்தால் என்ன..?" என்று கேட்ட ஹரிதா.. தன் கூந்தலை அவிழ்த்து.. விரிய விட்டிருந்தாள். முகத்தின் ஸ்டிக்கர் பொட்டு தலையணையில் ஒட்டியிருந்ததை அறியாதவளாய் இருந்தாள். ஒரு கசங்கிய நைட்டியை மாட்டியிருந்தாள்.

"இந்தக் கோலத்துடன் வந்து மாப்பிள்ளை வீட்டாரை பயமுறுத்தாமல் எழுந்து போய் குளித்து விட்டு வா."

"ஸ்டுப்பிட் சரிதா... எனக்காக நான் அலங்காரம் பண்ணிக் கொள்ள வேண்டும்.. யாரோ ஒரு முகம் தெரியாத ஆளுக்காக அலங்காரம் பண்ணிக் கொள்வது என்பது எனக்குப் பிடிக்காத விஷயம். ஐ டோன்ட் லைக் இட்."

"நீ அவருக்காக அலங்காரம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று யார் சொன்னது? எப்படியும் வருகின்ற ஆள்.. உன்னை மயக்க வேண்டுமென்று பெரிய மன்மத ராஜா போல் அலங்கரித்துக் கொண்டு வருவார். நீ அவரை விடக் குறைந்தவள் இல்லை. உன்னை மயக்க அவரால் முடியாது... என்பதை அவருக்குச் சொல்லாமல் சொல்ல வேண்டாமா..? அதற்குத்தான்.. லேசாய் ஒப்பனை செய்து கொள் என்கிறேன்."



ஹரிதாவின் போக்கிலேயே போய் சரிதா தூபம் போட.. அவள் எழுந்து குளித்து விட்டு வந்தாள்.

"பட்டுச் சேலையெல்லாம் வேண்டாம் சரிதா."

"இட்ஸ் ஓகே.. இந்தப் பிரிண்டட் சில்க்கைக் கட்டிக் கொள்."

"நகையெல்லாம் வேண்டாம் சரிதா."

"கரெக்ட். இந்தக் காசு மாலை வேண்டாம். உள்ளங் கழுத்தில் இந்த நெக்லஸை போட்டு.. அதற்கு மேட்ச்சான வளையல்களையும்... தோட்டையும் போட்டுக் கொள்.. போதும்."

"எதற்குத் தலையைப் பின்னுகிறாய்..."

"விரித்து விட்டால்... உனக்குத்தான் கசகசவென்று இருக்கும்."

"இவ்வளவு பூ வேண்டாம் சரிதா."

"அதுவும் சரிதான். திரும்பி நில்.. நான் குறைவாய்.. அழகாய் வைத்து விடுகிறேன்."

"கண்ணுக்கு எதற்கு மை போடுகிறாய்..?"

"தூங்கி எழுந்திருக்கிறாய்.. கண் வீங்கித் தெரிகின்றது."

ஹரிதாவின் அத்தனை கேள்விகளுக்கும்.. மறுப்புகளுக்கும்.. சரிதாவிடம் சரியான பதிலும்.. விளக்கமும்.. உடனுக்குடன் கிடைத்தன.

பாலை அடுப்பில் வைத்துவிட்டு.. பெரிய மகளின் அறையைக் கவலையுடன் எட்டிப் பார்த்த கௌசல்யா அசந்து விட்டாள்.

அளவான நகைகளுடனும்.. மிதமான ஒப்பனையுடனும் ஹரிதா ஓர் அழகு தேவதையாய் நின்றிருந்தாள்.

'ம்ஹூம்.. இவளுக்கு இருக்கும் அழகிற்கு.. கல்யாணம் செய்து கொள்ள மாப்பிள்ளைகள்.. நீ.. நான் என்று போட்டி போட்டுக் கொண்டு வரத்தான் செய்வார்கள். இவள்தான் வேதாளமாய் இருக்கிறாளே. முருங்கை மரத்தை விட்டு இறங்கி வருவேனான்னு அடம் பிடிக்கிறாளே...'

மகளின் அழகைக் கண்டு பெருமிதமாய் சிரிக்க முடியாமல்.. கவலையுடன் பெருமூச்சு விட வேண்டிய தன் விதியை தானே நொந்து கொண்டு கௌசல்யா.. தானும் தயாராகச் சென்று விட்டாள்.

வெளியே சென்றிருந்த ஜெயராமன் வீடு திரும்பிப் பார்த்தபோது கௌசல்யா அழகான கூந்தலைக் கொண்டையிட்டு.. அதைச் சுற்றி வளைவாய் மல்லிகைச் சரத்தை வைத்து.. கழுத்தில் தாலிக் கொடியுடன் சில நகைகளைப் போட்டுக் கொண்டு.. பட்டுச் சேலை உடுத்தி.. பாங்குடன் காத்திருந்தாள்.

மனைவியின் அழகில் மயங்கிப் போன ஜெயராமன்.. மந்தகாசப் புன்முறுவல் ஒன்றை உதிர்த்துக் கொண்டே மனைவியை நெருங்கினார். கணவனின் பார்வை வித்தியாசத்தைக் கண்டு கொண்ட கௌசல்யா பின் வாங்கினாள்.

''ஹலோ.. இன்றைக்கு உங்கள் மகளைப் பெண் பார்க்க வருகிறார்கள்.. அது நினைவிருக்கிறதா.''

''அதெல்லாம் நினைவிருக்கிறது. ஆனால் எனக்கு உன்னைப் பெண் பார்க்க வந்த அந்த நாள் ஞாபகம்.. நெஞ்சிலே வந்து நிற்கிறது கௌசி.''

''கொஞ்சம் அந்த நாள் ஞாபகத்தை விரட்டி விட்டு.. இந்த நாள் ஞாபகத்திற்கு வந்து நிற்கிறீர்களா.. சுவாமி.''



''கௌசி.. ஐ லவ் யூடி.''

ஜெயராமன் மனைவியை மிருதுவாய் அணைத்து.. மென்மையாய் அவளது கன்னத்தில் முத்தமிட்டார். கௌசல்யா ஒரு கணம் நெகிழ்ந்து நின்று மறுகணம்.. தன் கணவனைப் பிடித்துத் தள்ளி விட்டாள்.

''போதும்.. யாராவது பார்த்தால் சிரிக்கப் போகிறார்கள். ஐம்பது வயதில் பெண்டாட்டியிடம் இப்படி வழியக் கூடாது...''

''அது சரி... அப்போது ஐம்பதிலும் ஆசை வரும்ன்னு பாடி வைத்த கண்ணதாசன் என்ன முட்டாளா?''

''ஐம்பதில் ஆசை வரலாம்.. மகளைப் பெண் பார்க்க வருகிறபோது வரக்கூடாது.. புரிந்ததா...''

கௌசல்யா அறையை விட்டு வெளியே வந்து.. வாசல் பக்கம் போய் எட்டிப் பார்க்கவும்.. மாப்பிள்ளை வீட்டாரின் கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

''என்னங்க...'' என்று கௌசல்யா திரும்பும் முன் ஜெயராமன் நான்கே எட்டில் வாசலுக்குப் போய் கேட்டைத் திறந்து விட்டார்.

'இது என்ன வீடா... இல்லை இவருடைய ஆபிஸா.. இவரை யார் கேட் கீப்பர் வேலையைப் பார்க்கச் சொன்னது...?'

மனதில் மூண்ட எரிச்சலை மறைத்துக் கொண்டு.. கௌசல்யா வந்தவர்களை இன்முகத்துடன்.. கரம் குவித்து வரவேற்றாள்.

''வாங்க... வாங்க...''

மாப்பிள்ளை.. மாப்பிள்ளையின் தாய்.. தந்தையர்.. மாப்பிள்ளைப் பையனின் கல்லூரிக்குச் செல்லும் தங்கை...

மற்றும் மாப்பிள்ளையின் பெரியப்பா.. பெரியம்மா.. என்று ஆறு பேர் கொண்ட சிறு குழுவாய் அவர்கள் உள்ளே நுழைந்தனர்.

பரஸ்பர பேச்சுக்கள் முடிந்து.. பெண் பார்க்கும் படலம் துவங்கியது. மாப்பிள்ளையின் தந்தை... ஜெயராமனைப் பார்த்து..

''பெண்ணைப் பார்த்து விடலாமே...'' என்று சொல்ல... ஜெயராமன் அவசரமாய் கௌசல்யாவைப் பார்த்தார்.

அவரது மனம் பதக்.. பதக்கென்று அடித்துக் கொள் வதை உணர்ந்த கௌசல்யாவிற்கு.. கணவனை நினைத் தால் பாவமாக இருந்தது. அவள் உள்ளே சென்று சரிதா விடம் கண் சமிக்ஞை செய்தாள்.

''வா.. ஹரிதா.. மாப்பிள்ளை வீட்டார் வந்து விட்டார் களாம்'' என்று தமக்கையின் கை பிடித்து அழைத்தாள்.

''அதற்காக.. அவர்கள் முன்னால் என்னை ஷோ கேஸ் பொம்மையைப் போல் போய் நிற்கச் சொல்கிறாயா..?''

''உன்னைப் போய் யாரும் அப்படிச் சொல்லிவிட முடியுமா? ஹாலில் ஒரு இரட்டை சோபாவை.. நமக் காகக் கொஞ்சம் தள்ளிப் போட்டு வைத்திருக்கிறேன். நாம் இரண்டு பேரும் போய்.. அதில் உட்கார்ந்து கொண்டு.. மாப்பிள்ளை வீட்டைப் பார்வையிடலாம்.. என்ன சொல்கிறாய்?''

தங்கையின் திட்டம் பிடித்துப் போய்விட ஹரிதாவும் உற்சாகமாய் தலையை ஆட்டிவிட்டு.. தங்கையைப் பின் தொடர்ந்து ஹாலுக்குச் சென்றாள்.

சட்டமாய் எல்லோரையும் பார்த்தபடி.. காலியாய் இருந்த சோபாவில் அமர்ந்து.. மறக்காமல்.. கால் மேல் காலைப் போட்டுக் கொண்டாள். சரிதா சங்கடத்துடன் எல்லோரையும் கை குவித்து வணங்கி விட்டு... ஹரி தாவின் பக்கத்தில் அமர்ந்து.. அவள் காதினில் கிசுகிசுத் தாள்.



''கால் மேல் கால் போடாமல் சரியாக உட்கார்...''

''ஏன்.. இது.. என்னுடைய கால்.. என் இஷ்டத்திற்கு போட்டுக் கொள்வேன்.''

''தாராளமாய் போட்டுக் கொள். இங்கே மாப்பிள்ளை மட்டும் வந்திருந்தால் பரவாயில்லை. அவனுடைய அப்பாம்மா.. பெரியப்பா.. பெரியம்மான்னு பெரியவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் முன்னால் நீ இப்படி உட் கார்ந்தால்.. நம் அம்மாவும்.. அப்பாவும் உனக்கு மரி யாதையைக் கற்றுக் கொடுத்து வளர்க்கவில்லையென்று சொல்லிவிட மாட்டார்களா..?'' எதைச் சொன்னால் ஹரிதா கேட்பாளோ.. அதைச் சொல்லும் விதத்தில் சொன்னாள் சரிதா.

ஹரிதா சட்டென்று ஒழுங்காய் உட்கார்ந்து.. மாப் பிள்ளை வீட்டாரைக் கவனித்தாள். அவள் கால் மேல் கால் போட்டு அமர்ந்ததை விரும்பாத மாப்பிள்ளை யின்.. தாய் தந்தையரும்.. பெரியப்பா.. பெரியம்மாவும் கடுமையான முகபாவனையுடன் அவளைப் பார்த்தனர். மாப்பிள்ளை, ஹரிதா கவனிப்பதைக் கண்டதும்.. தானும் தோரணையாய் கால் மேல் கால் போட முயன்று தோற் றுப் போனவனாய் ஹரிதாவைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்பை சிரித்து வைத்தான்.

'அப்படியே இஞ்சி தின்ற குரங்கு போல் இருக் கிறான்..' என்று நினைத்துக் கொண்ட ஹரிதாவிற்கு சிரிப்பு வந்து விட்டது.

''சிரிக்காதே...'' சரிதா தமக்கையின் காதோரம் கூறினாள்.

''என்னம்மா படித்திருக்கிறாய்..'' ஜெயராமனின் மேலதிகாரி தன் மூக்குக் கண்ணாடியை சரி செய்தவாறு கேட்டார்.

''அப்பா சொல்லியிருப்பாரே அங்கிள்...'' ஹரிதா பதவிசாய் பதில் கூறினாள்.

''ஏன்.. உன் வாயைத் திறந்து நீ அதைச் சொல்ல மாட்டாயா..'' இப்போதே மாமியாராகி விட்டது போன்ற மமதையுடன் மாப்பிள்ளையின் அன்னை வினவினாள்.

''அப்பா பேச்சை.. அப்படியே பின்பற்றித்தான் எனக்குப் பழக்கம் ஆன்ட்டி...'' என்று அதற்கும் ஒரு பதிலைச் சொன்னாள் ஹரிதா.

''பாடுவாயாம்மா..'' என்று மாப்பிள்ளையின் பெரியம்மா கேட்டு வைக்க சரிதாவிற்கு 'திக்'கென்று ஆகிப் போனது.

'இவர்கள் வேறு... இருக்கும் இருப்பு தெரியாமல் ஏடாகூடமாய் கேட்டு வைத்துக் கொண்டு இருக்கிறார்களே. இவள் பாட்டுக்கு ஒரு விளம்பரத்தில் வருவது போல. 'அரைத்த மாவை அரைப்போமா'ன்னு பாடித் தொலைக்கப் போகிறாள். மாப்பிள்ளைப் பார்த்தால் கூட ஆட ரெடியாக இருப்பவன் போலத்தான் தெரிகிறது.'

சரிதாவின் பயத்தை மெய்ப்பிப்பது போல ஹரிதா. அவளின் காதோடு ''என்ன பாட்டுப் பாட சரிதா. இந்த 'அட்ரா.. அட்ரா நாக்கு மூக்க..' பாடவா.. இல்லை.. 'கண்ணு ரெண்டும் ரங்க ராட்டினம்' பாடவா.. இல்லை இது இரண்டையும் விட்டுவிட்டு.. 'நான் முத்தம்



தின்பவள்.. ஒரு முரட்டுப் பூ இவள்'ன்னு மையா.. மையான்னு பாடி வைக்கவா.. எதைப் பாடினால் இந்தக் கூட்டம் ஓடும்'' என்று கேட்டு வைத்தாள்.

நிலைமை கட்டுக்கு மீறுவதை உணர்ந்த சரிதா.. சட்டென்று மாப்பிள்ளை வீட்டாருடன் அவளே பேச ஆரம்பித்தாள். அதன் பின் விளைவு வேறு விதமாய் அமைந்து போனது.

## 4

சரிதா என்னவோ நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர நினைத்துத்தான் செயல்பட்டாள். மாப்பிள்ளை வீட்டாரை ஹரிதாவுடன் பேசவிட்டால் நடக்கப் போகும் பின் விளைவுகளை கருத்தில் கொண்டு பேச்சின் திசையைத் திருப்ப விரும்பி.. மாப்பிள்ளையின் தங்கையைப் பார்த்து இனிமையாகப் புன்முறுவல் செய்தாள்.

அவள் சிரித்த பாங்கு.. சிரிக்கும்போது அவளுடைய கண்களும் சேர்ந்து சிரித்த விதம்.. இவை மாப்பிள்ளையின் கருத்தைக் கவர்ந்தது.

''நீ என்ன படிக்கிறாய்..'' என்று சரிதா மாப்பிள்ளையின் தங்கையைப் பார்த்து வினவினாள்.

''பி.ஸி.ஏ. பர்ஸ்ட் இயர்..''

''ஓ.. கம்ப்யூட்டர் என்றால் உனக்குப் பிடித்தமா?''

''யெஸ்.. யெஸ்..''

''வேறு என்னவெல்லாம் பிடிக்கும்?''

மாப்பிள்ளையின் தங்கை சுவாரஸ்யமாய் சரிதாவுடன் பேச ஆரம்பித்து விட்டாள்... பெரியவர்களின் பார்வை ஹரிதாவை விட்டு விட்டு சரிதாவின் மேல் படிந்து விட்டது.

அதைக் கவனித்த ஜெயராமன் சங்கடத்திற்கு உள்ளானார். மூத்தவள் வாயைத் திறந்தால் விபரீதம் விளைந்து விடும். அதைத் தடுக்க இளையவள் பேச முனைந்தால் இங்கே கதையே மாறிவிடும் போலத் தோன்ற அவசரமாய் குறுக்கிட்டார்.

''காபி.. டிபன் சாப்பிட்டு விடலாமே.''

''ஓ... சாப்பிட்டு விடலாமே...''

வந்த வேலை சீக்கிரம் முடிந்து விட்டால் தேவலை என்ற உணர்வில் அவர்கள் தலையாட்ட உள்ளே திரும்பி.

''கௌசல்யா..'' என்று குரல் கொடுத்தார் ஜெயராமன்.

''என்ன ஒரு ஆணாதிக்கம் பாரேன்.. இவர் வக்கனையாய் விருந்தினருடன் உட்கார்ந்து பேசிக் கொண்டு எஜமானன் போல் உள்ளே திரும்பி.. 'கௌசல்யா'ன்னு குரல் கொடுப்பாராம்.. உடனே அம்மா அடிமை போல டிபன் தட்டைத் தூக்கிக் கொண்டு.. 'இதோ வந்து விட்டேங்க' என்று ஓடி வருவாங்களாம்.. ஆண்டாண்டு காலமாய் நம் இந்திய மண்ணில்தான்டி இந்தக் கொடுமை நடந்து வருகிறது. பெண்ணை அடிமை செய்யும் ஆணாதிக்க மனப்பான்மையை இந்த வீட்டில் என்னால் ஒழிக்க முடியவில்லை. நான் எப்படி நாட்டில் ஒழிக்கப் போகிறேன்..'' என்று ஹரிதா சரிதாவின் காதை மைக்காக நினைத்துப் பேச ஆரம்பிக்க...



''ஐயோ.. ஹரிதா... இது மேடையில்லை. வீடு.. அடக்கி வாசி'' என்று தமக்கையை அடக்கினாள் சரிதா.

அப்போது கௌசல்யா.. டிபன் தட்டுக்கள் அடங்கிய டிரேயோடு அங்கே வர.. அவசரமாய் எழுந்த சரிதா... அதை வாங்கி விருந்தினர்க்கு கொடுக்க ஆரம்பித்தாள்.

அதைப் பார்த்த மாப்பிள்ளையின் பெரியம்மாவும்.. அம்மாவும் தங்களுக்குள் கிசுகிசுவென்று பேச ஆரம்பித்து விட்டனர்.

''நீ என்னம்மா படிக்கிறாய்..'' என்று காபிக் கோப்பையை வாங்கிக் கொண்டே மாப்பிள்ளையின் பெரியப்பா கேட்டார்.

''பி.எஸ்ஸி தேர்ட் இயர்.''

''ஓ.. இப்ப ஃபைனல் எக்ஸாம் நடக்கிறதா.''

''ஆமாம் மாமா.''

'ஆஹா.. அங்கிள் என்ற வார்த்தையை விட்டு விட்டு எவ்வளவு அழகாய் 'மாமா' என்கிறாள். நம் தமிழ் பண்பாட்டைக் கட்டிக் காக்கும் இவளல்லவோ அழகிய தமிழ் மகள்' என்று அந்தப் பெரியவருக்கு தோன்றி விட்டது...

மாப்பிள்ளை வீட்டார் விடைபெற்றுக் கொண்டு போகும்போது மறக்காமல் சரிதாவிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றனர்.

ஜெயராமன் தேர்வு முடிவை எதிர்பார்க்கும் மாணவன் போல் மூத்த மகளின் முகத்தை ஆர்வமாய் பார்த்தார்.

''இது தேறாத கேஸ் அப்பா..'' என்றாள் அவள் ஈவு.. இரக்கமில்லாமல்.

''என்னம்மா இப்படிச் சொல்கிறாய்?''

''பின்னே வேறு என்னப்பா சொல்லச் சொல்கிறீர்கள்? பாரதி என்ன சொன்னார்...?''

''என்ன சொன்னார்?''

''மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார் - அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி...ன்னு சொன்னார்...''

''ஏண்டி... இதற்கு என்ன அர்த்தம்?'' என்று கவலையுடன் மனைவியைப் பார்த்துக் கேட்டார் ஜெயராமன்.

கௌசல்யா கணவனை ஓர் முறை முறைத்தாள். அந்த முறைப்பிற்கு 'நல்லா... வந்திரும்.. என் வாயில்...' என்று அர்த்தம் என்பதைப் புரிந்து கொண்ட ஜெயராமன் அடங்கிப் போய் மூத்த மகளைப் பார்த்தார்.

''இப்ப என்னதாம்மா நீ சொல்ல வருகிறாய்?''

''அப்பா.. மாட்டைப் பிடிக்க வந்தது போல் என்னையும் அவர்கள் நினைத்து விட்டார்கள். அந்தப் பையனின் பெரியம்மா என்னவென்றால் என்னைப் பார்த்துப் பாடத் தெரியுமான்னு கேட்கிறாங்க. அந்தப் பையனின் அம்மா அடுத்து ஆடத் தெரியுமான்னு கேட்டிருப்பாங்க போல. இவங்க மனதில் பெரிய இதுன்னு நினைப்பா. பையனைப் பெற்று விட்டால் இவங்க தலையில் என்ன கொம்பா முளைத்திருக்கிறது...?''

''ஏம்மா.. பையன்.. பையன் என்கிறாயே.. யாரும்மா அந்தப் பையன்? மாப்பிள்ளை வீட்டாரோடு சின்னப் பையன் யாரும் வரவில்லையே'' மீண்டும் ஜெயராமன் சந்தேகம் கேட்டு வைக்க...

''அப்பா..'' என்று முறைத்தாள் ஹரிதா...



''ஏம்மா.. நான் தெரியாமல்தானே கேட்கிறேன்...?''

''அதுதான்.. நீங்கள் கொண்டு வந்த மாப்பிள்ளை...''

''மாப்பிள்ளையையா.. நீ சின்னப் பையன் என்று சொன்னாய்?''

''வேறு எப்படிச் சொல்வது? இஞ்சி தின்ற குரங்கு என்று வேண்டுமானால் சொல்லலாம்.. அந்த ஆளும்.. அதன் மூஞ்சியும்.. பாரதியின் நிழலின் கிட்டக்கூட இவன் நிற்க முடியாது.. அவன் முகத்தைப் பார்த்தால் எனக்குக் குரங்கின் நினைவுதான் வருகிறது அப்பா.. சிரிப்பு.. சிரிப்பாய் வந்தது. இந்த சரிதாதான் என்னை அதட்டி வைத்து விட்டாள்.''

இளைய மகளை நன்றிப் பெருக்குடன் பார்த்தார் ஜெயராமன்.

'இவளல்லவோ.. என்னைக் காப்பாற்றி இருக்கிறாள். ஹரிதா பாட்டுக்குச் சிரித்து வைத்திருந்தால்... நாளைக்கு.. என் சுப்பீரியரின் முகத்தில் எப்படி நான் விழித்திருக்க முடியும்..?'

''இப்போது முடிவாய் என்னதாம்மா சொல்கிறாய்?''

''இந்தப் பையனை சுத்தமாய் எனக்குப் பிடிக்கவில்லை அப்பா... இனிமேல் இப்படிப்பட்ட அபத்தங்களை வீட்டுக்குக் கூப்பிடாதீர்கள்.''

ஹரிதா அங்கிருந்து அகன்று விட்டாள். ஜெயராமன் தலையில் கை வைத்து உட்கார்ந்து கொள்ள.. கௌசல்யா அவர் அருகே அமர்ந்து ஆறுதல் சொல்ல ஆரம்பித்தாள்.

மறுநாள் அலுவலகம் சென்றவரை அவரது மேலதிகாரி அழைக்க சங்கடத்துடன் சென்று அவர் எதிரே அமர்ந்தார் ஜெயராமன்.

'எப்படி இவரிடம் மறுப்பைச் சொல்வது...' என்று அவர் யோசித்துக் கொண்டிருக்கையில் மேலதிகாரி பேச ஆரம்பித்தார்.

''ஜெயராமன்.. உங்கள் பெண்ணை எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது... ஆனால் அதை எப்படிச் சொல்வதுன்னுதான் சங்கடமாக இருக்கிறது...''

'உங்களுக்கு என்ன சங்கடம்? எனக்குத்தானே சங்கடம்.'

''என் அண்ணனும்.. அண்ணியும் தான் இதை முடிவு பண்ணினார்கள்.''

'என் மகளின் முடிவு வேறு மாதிரி இருக்கிறதே...'

''ஆக்சுவலி.. ஹரிதா ரொம்ப நல்ல பெண்தான்.''

'யார் இல்லை என்றார்கள்..?'

''அழகான பெண்ணும் கூட.. அவளைப் பார்த்தவுடன் யாருக்கும் பிடித்து விடும்தான்.''

'அது அவளுக்குத் தெரிய மாட்டேன் என்கிறதே...'

''நல்ல படிப்பு.. நல்ல வேலை.. எதிலும் குறைவில்லை தான்.''

'அதிகப் புத்திசாலி.. அதுதான் குறைவு...'

''ஆனால்.. எங்கள் குடும்பத்திற்கு.. ஹரிதாவை விட.. சரிதாவை மிகவும் பிடித்து விட்டது...''

மேலதிகாரியின் முகத்தில் மெல்லிய சங்கடம் நிலவ ஜெயராமன் விழித்தார்.

'என்னடா இது.. கிணறு வெட்டப் போனால்.. பூதம் கிளம்புகிறது..'



''நீங்க என்ன சார் சொல்கிறீங்க.. நீங்க ஹரிதாவைத் தானே உங்கள் மகன் விரும்புகிறான்னு சொன்னீங்க.. என் மகளைத்தான் கட்டிக் கொள்வேன்னு ஒற்றைக் காலில் நின்றான்னு வேறு சொன்னீங்க. இப்ப இப்படிச் சொன்னால் எப்படி சார்?''

''ஜெயராமன்.. விருப்பம் என்பது வேறு.. வாழ்க்கை என்பது வேறு... ஹரிதாவை விட.. சரிதாவின்.. அடக்கம்.. அமைதி.. குடும்பப் பாங்கு இவையெல்லாம் எங்களுக்கு மிகவும் பிடித்து விட்டது..''

''அதற்காக...?''

''கோபம் வேண்டாம் ஜெயராமன்.. நீங்கள் உங்கள் மூத்த மகளுக்கு மாப்பிள்ளை தேடி திருமணம் பண்ணி வைக்கும் வரை நாங்கள் வெயிட் பண்ணுகிறோம். எங்களுக்கு உங்களின் இளைய மகளைத்தான் மருமகளாக்கிக் கொள்ள விருப்பம்.. என்ன சொல்கிறீங்க.''

''யோசித்துச் சொல்கிறேன் சார்.. இதில் என் இளைய மகளின் விருப்பம்தான் எனக்கு மிகவும் முக்கியம்.''

ஹரிதா இல்லாத நேரத்தில் சரிதாவிடம் இந்த விசயம் போனபோது,

''முடியாது அப்பா. எனக்குச் சம்மதமில்லைன்னு சொல்லி விடுங்க..'' என்று நிர்தாட்சண்யமாய் மறுத்தாள் அவள்.

''இது நல்ல இடம் சரிதா.''

''இருக்கலாம் அப்பா.. ஆனால் ஹரிதாவைப் பார்க்க வந்தவர்கள் என்னைப் பெண் கேட்பது அநாகரிகம்... ஹரிதா சொல்வது போல் இது என்ன பெண் பார்க்கும் படலமா? இல்லை மாடு பிடிக்கும் சந்தையா? ஒன்றை

விட மற்றொன்று பெட்டர் என்று.. ஒன்றை முடிவு செய்து வருபவர்கள் நினைக்கக் கூடாது அப்பா... எதன் பக்கத்திலும் இன்னொன்று வைத்துப் பார்த்தால் அது பெட்டராகத்தான் தெரியும். இப்போது.. ஹரிதா என்னை விட அழகி.. நாளைக்கு என்னைப் பெண் பார்க்க வருகிறவன் உன்னைவிட உன் அக்கா அழகு.. அவளையே நான் கல்யாணம் பண்ணிக் கொள்வதாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று பேச்சுக்கு சொன்னால் கூட... நான் தாங்கிக் கொள்ள மாட்டேன். ஸோ.. நீங்கள் மாப்பிள்ளை வீட்டாரிடம் என் மறுப்பைச் சொல்லி விடுங்கள்.''

வேறு வழியின்றி ஜெயராமன் சரிதாவின் சம்மதமின்மையை தன் மேலதிகாரியிடம் வருத்தத்துடன் தெரிவித்தார்.

மேலதிகாரியின் முகத்தில் ஏமாற்றம் நிலவினாலும்.. தன்னைச் சமாளித்துக் கொண்டு,

''அதனால் என்ன ஜெயராமன்.. நாம் ஒன்று நினைத்தோம். நம் பிள்ளைகள் வேறு ஒன்றை நினைக்கிறார்கள். நமக்குள் சம்பந்தியாகும் குடுப்பினை இல்லை போல.. பரவாயில்லை..'' என்று சொல்லி விட்டார்.

இதைப் பற்றி வீட்டில் வந்து கௌசல்யாவிடம் பேசியபோது..

''இப்ப இதுக்குப் போய் ஏன் வருத்தப்படுகிறீங்க. ஒரு பெண்ணைப் பார்க்க வந்து விட்டு இன்னொரு பெண்ணைக் கேட்கும் வழக்கமிருக்கிறவங்க வீட்டிற்கு என் இரண்டு பெண்களில் எந்தப் பெண் போனாலும்.. எனக்குக் கஷ்டம்தான். நல்ல வேளையாக அவர்கள் சரிதாவை பிடித்துப் போயிருக்கிறது என்று சொன்



னார்கள். இல்லா விட்டால் நாம் சரிதாவின் மறுப்பிற்கு பதில் ஹரிதாவின் மறுப்பையல்லவா சொல்ல வேண்டியதிருக்கும். அப்போது நம் நிலைமை சங்கடத்தில் இருக்கும். இப்போது அவர்கள் முறை தவறிப் பெண் கேட்டார்கள். நாம் மறுத்து விட்டோம்ன்னு.. பழி அவங்க மேல் வந்து விட்டது. கடவுள் காப்பாற்றினார்..'' என்று அவள் கூறினாள்.

இப்படியாக.. ஹரிதாவின் முதல் பெண் பார்க்கும் படலம் நடந்து முடிந்து விட்டது.

இரண்டாவதாய்.. பக்கத்து வீட்டு கோகிலாவின் அக்காள் மகன் பெண் பார்க்க வந்தான்.

அன்றும் ஹரிதாவை வீட்டிற்குள் ஒரு வழியாய் பிடித்து வைத்தார்கள். இந்த முறை ஹரிதா கொஞ்சம் முரண்டு பிடித்தாள்.

''ஏம்மா.. முன்னே.. பின்னே தெரியாதவர்களாக இருந்தால் பரவாயில்லை. பக்கத்து வீட்டு ஆன்ட்டியின் அக்காள் மகன் என்கிறீர்கள். இதற்கும் நான் நாள் பூராவும் வீட்டில் இருக்க வேண்டுமா?''

''மத்தவங்களாவது சாயங்காலம் தான் வருவாங்க. நீ வெளியே போய் விட்டு வந்தாலும்.. யாருக்கும் தெரியாது.. இவங்க பக்கத்து வீட்டிலேயே இருக்கிறாங்க. நீ வெளியே போவது தெரிந்தால் ஏதாவது சொல்வாங்கம்மா.. புரிந்து கொள் ஹரிதா...''

''என்னைப் பற்றி கமென்ட் பண்ண அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது.. திஸ் இஸ் டூ மச்...''

கௌசல்யா சரிதாவை விழிகளால் உதவிக்கு அழைக்க அவள் உடனே தாயின் உதவிக்கு வந்தாள்.

''ஹரிதா. அம்மா சொல்வதன் அர்த்தமே வேறு.. வருகிறவங்க அடுத்தவங்களாய் இருந்தால் பிரச்னை இல்லை... அவர்கள் யார் நம்மை கமெண்ட் பண்ணன்னு முறைத்துவிட்டுப் போய்விடலாம். இவங்க நம்ம வீட்டுக்கு.. அடுத்த வீட்டுக்காரங்க.. இவர்களை தேவையில்லாமல் பகைத்துக் கொள்ள வேண்டுமான்னு அம்மா நினைக்கிறாங்க.. அதில் தவறும் இல்லை ஹரிதா.. அக்கம் பக்கத்து வீட்டுக்காரங்களை நாம் கொஞ்சம் அனுசரித்துக் கொள்ள வேண்டுமில்லையா.''

ஹரிதா அன்று கொஞ்சம் குணமாய் கேட்டுக் கொள்ளும் தன்மையுடன் இருந்ததால்.. அதிகம் எதிர்ப்புக் காட்டாமல் அடங்கிக் கொண்டாள். ஆனால் அவள் தூங்கப் போவதை சரிதா தடுத்தபோது எரிந்து விழுந்தாள்.

''என்னடி இது ஓவராய் இருக்கு. அவர்கள் சாயந்திர டிபனுக்குத்தானே வருவார்கள். அதுவரை நான் தூங்கக் கூடாதா..?''

''பக்கத்து வீட்டில் அவர்கள் வந்து காலையிலேயே இறங்கி விட்டார்கள். பெரிய கும்பலே வந்து மையம் கொண்டிருக்கு. ஒவ்வொருவராய் ஏதாவது சாக்கைச் சொல்லிக் கொண்டு.. நம் வீட்டிற்கு வந்துபோக இருக்கிறார்கள். அவர்கள் முன்னால் நீ பளிச்சென்று இருக்க வேண்டாமா?''

''இது கொஞ்சம் ஓவர் சரிதா.''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் என்ன செய்வது? பக்கத்து வீட்டுக்காரங்களாய் போய் விட்டார்களே. சொந்த பந்தமாய் பழகி விட்டோம். திடீரென்று விரோதித்துக் கொள்வது சரியான்னு நீயே



சொல்லு. ஈவினிங் ரெடியாவதை.. கொஞ்சம் முன்னாலேயே ரெடி ஆகிக்கோன்னுதானே நான் சொல்கிறேன்.''

இந்த முறை சேலை கட்டிக் கொள்ள ஹரிதா மறுத்து விட்டாள்.

''பாரு சரிதா.. போன தடவை.. அவங்களுக்காக நான் அரைமணி நேரம்தான் சேலை கட்டிக் கொள்ள வேண்டி இருந்தது. இப்போது நாள் பூராவும் அதைக் கட்டிக் கொண்டு தடுக்கி விழுந்து விடாமல் இருக்க என்னால் முடியாது.. நீ சுடிதாரை எடு.''

சரிதா யோசித்து.. உடைத்த பாசிப் பருப்பின் கலரில்.. தங்க நிறத்தில் ஜரிகை புள்ளிகளும்.. வேலைப்பாடுகளும் கொண்ட சுடிதாரை எடுத்துக் கொடுத்தாள்.

''போன தடவைப் போல்.. இந்த வளையல்.. ஸ்டட்.. கழுத்தில் அட்டிகைன்னு மட்டும் போட்டுக்க.. வருகிறவர்கள்.. நம் அப்பா அம்மா நமக்காக நகை சேர்த்து வைக்கவில்லைன்னு நினைத்து விடக் கூடாது பாரு.. அதற்காகத்தான் சொல்கிறேன்.''

இந்த முறை பின்னலைத் தவிர்த்த ஹரிதா.. தானே இரு பக்கமும் சிறு கற்றை முடிகளை எடுத்துச் சிறியதாய் கிளிப் போட்டுக் கொண்டு முடியை விரிய விட்டுக் கொண்டு போய் விட்டாள்.

அவளைப் பின்னாலேயே துரத்திக் கொண்டு போய்.. அவள் நெற்றியில் கல் பதித்த ஸ்டிக்கர் பொட்டை வைத்துவிட்டு.. கண்களில் சிறிதளவு மை தீட்டி விட்டு திரும்பினாள் சரிதா.

இரண்டாவது பெண் பார்க்கும் படலமும் ஆரம்பித்தது.

## 5

கோகிலாவின் அக்கா.. தன் பளபளக்கும் வைர அட்டிகையை பெருமையுடன் தன் பட்டுச் சேலையின் முந்தானையில் அடிக்கடி துடைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.. கோகிலாவின்.. அம்மா.. அப்பா.. அக்கா.. அக்காவின் கணவர்.. அவர்களின் மூன்று பெண்கள்.. அவர்களின் கணவன்மார்கள்.. குழந்தைகள். இது போக மாப்பிள்ளை என்று ஒரு பெரிய பட்டாளமே வந்து அமர்ந்திருந்தது.

பெண்ணை அழைத்து வாங்கன்னு சொல்ல அவசியமில்லாமல் ஹரிதா முன்கூட்டியே வந்து அமர்ந்து விட்டாள். இல்லா விட்டால் சோபாவில் இடம் கிடைக்காமல் தரையில் விரித்திருக்கும் புது ஜமுக்காளத்தில் உட்கார வேண்டியிருக்குமே என்ற பயம் அவளுக்கு.

மாப்பிள்ளை படு அலட்டலாய் வந்து அமர்ந்திருந்தான். ஹரிதாவையே விழுங்குவது போல் பார்த்துக் கொண்டு நுனி நாக்கில் ஆங்கிலம் பேசிக் கொண்டிருந்தான்.

இந்த முறை பெற்றவர்கள் சொல்லாமல் தானாகவே.. தன் அறைக்குள் சென்று விட்டாள் சரிதா.

ஹரிதா விரட்டி விட்டு மாப்பிள்ளை வீட்டார் ஓடினாலும் பரவாயில்லை.. அக்காவைப் பெண் பார்க்க வந்திருப்பவர்கள்... தன்னைப் பெண் கேட்டுத் தொலைத்து விடக்கூடாது என்ற பயம் அவளுக்கு.



ஹரிதா.. சரிதாவை அழைக்கத்தான் செய்தாள். ஆனால் காலையில் இருந்து வேலை பார்த்ததால் தனக்கு ஜுரம் வந்துவிட்டது என்று சொல்லி நாசுக்காய் கழன்று கொண்டாள் சரிதா.

ஹரிதாவிற்குத்தான்.. முதன் முறையாக பெண் பார்க்க வந்தவர்கள் தன்னை விட்டு விட்டு சரிதாவைப் பிடித்திருக்கிறது என்று சொல்லிய விவரம் தெரியாதே.. அது தெரிந்தால்.. மொத்தத்தில் பெண் பார்க்கும் படலத்தையே வெறுத்து.. திருமணத்தை தவிர்த்து.. கடைசி வரை கொள்கைப் போராட்டம் என்று வாழ்ந்து விடுகிறேன் என்று சொல்லி விடுவாள் என்று பயந்து கொண்டு அந்த விவரத்தையே அவளிடம் சொல்லாமல் மறைத்து விட்டார்கள்.

ஹரிதா.. தான்தான் அவர்கள் பார்க்க வந்திருக்கும் பெண் என்பதை மறந்து போனவளாய்.. அவர்கள் அடித்த கூத்தை வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

''எங்க கோகிலாவைப் பார்க்க வருகிறேன்னு சொல்லிக்கிட்டு என் மகன் அடிக்கடி இங்கே வந்தான்... விழுந்து விட்டான்..'' என்று மாப்பிள்ளையின் அம்மா கூறவும்..

''அடி.. கிடி.. படவில்லையே'' என்று ஹரிதா பட்டென்று கேட்டு விட்டாள்.

மாப்பிள்ளை அவளுடைய நகைச்சுவையை ரசித்து.

''குட் ஜோக்..'' என்று சொல்லிவிட்டுச் சிரிக்க.. மாப்பிள்ளையின் அம்மாவின் முகம் அஷ்டகோணலாகி விட்டது.

அதன்பின் அவள் ஹரிதாவை முறைத்துக் கொண்டே அமர்ந்திருந்தாள்.

''பையன் அமெரிக்காவுக்கு வந்து விடச் சொல்லி வற்புறுத்துகிறான். எனக்கு பிஸினெஸ்ஸை விட்டு விட்டுப் போக முடியவில்லை. லட்சம்.. லட்சமாய் அவன் சம்பாதிப்பதை கிட்ட உட்கார்ந்து அனுபவிக்க எங்களால் முடியவில்லை. எல்லாம் அவனுடைய மனைவிதான் அனுபவிக்கப் போகிறாள். ம்ம்.. எங்கள் பையனின் வேலைக்கும்.. சம்பாத்தியத்திற்கும்.. அவனுக்கு பெண் கொடுக்க.. நான் நீன்னு போட்டி போட்டுக் கொண்டு நிற்கிறாங்க...என் பையனுக்குத்தான் கிறுக்குப் பிடித்து விட்டது..'' மாப்பிள்ளையின் தந்தை அளந்துவிட...

''அடடா.. ஏன் சார்.. உங்களுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? ச்ச்ச்.. கோகிலா ஆன்ட்டி இதைச் சொல்லவே இல்லையே.. எங்கே ட்ரீட்மென்ட் எடுத்துக் கொள்கிறீர்கள்..? பைத்தியத்திற்கு எப்படி அமெரிக்காவில் வேலை கொடுத்திருக்கிறார்கள்'' என்று அக்கறையாய் விசாரிக்க ஆரம்பித்து விட்டாள் ஹரிதா.

இந்த முறை மாப்பிள்ளை அவளுடைய நகைச்சுவையை ரசிக்கவில்லை. அவனது முகம் கருத்து விட்டது.

கோகிலா அவசரமாய் பேச்சை மாற்றினாள். எல்லோரும் டிபன் காபியை காலி பண்ணினர். கிளம்பி விடுவார்கள் என்று பார்த்தால்.. மாப்பிள்ளையைப் பெற்றவர்கள் அதன் பின்னால்தான் பேச்சையே ஆரம்பித்தனர்.

''கோகில உங்கள் குடும்பம் நல்ல குடும்பம்ன்னு சொன்னாள்.. பெண்ணும் கண்ணுக்கு அழகாய்.. லட்சணமாய்த்தான் இருக்கு.. ம்.. பெண்ணை என் மகனுக்குப் பிடித்திருக்கும்.''



'அதனால் எங்களுக்கும் பிடித்திருக்கிறது..' என்று சொல்லாமல் சொன்னாள் மாப்பிள்ளையின் அம்மா.

''ஒகே மிஸ்டர் ஜெயராமன்.. நாம் மற்ற விவரங்களைப் பேசி விடலாமா..?'' என்று பேரம் பேசத் தயாரானார் மாப்பிள்ளையின் அப்பா.

ஹரிதாவின் பார்வை ஜெயராமனைச் சுட்டது.. தன் சம்மதத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல் மாப்பிள்ளையைப் பெற்றவர்கள் பேசிய விதம் அவளைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தது.

ஜெயராமன் கைகளைப் பிசைந்தபடி கௌசல்யாவைப் பார்க்க அவள் கோகிலாவைப் பார்த்தாள்.

பக்கத்து வீட்டைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணம் கொண்ட கோகிலா.. தன் அக்காள் குடும்பத்தைக் கிளப்ப முயன்றாள்.

''எல்லாம்.. அப்புறம் பேசிக் கொள்ளலாமே அக்கா.. உனக்கு என்ன வேண்டுமென்று சொல்லு. நான் இவர்களிடம் சொல்கிறேன். இவர்களால் என்ன செய்ய முடியும்ன்னு என்னிடம் சொல்வார்கள். அதை நான் உன்னிடம் சொல்கிறேன். இப்போது கிளம்பலாமே.''

ஹரிதாவின் முகம் சிவந்தது. எப்படிப் பேசுகிறார்கள். இது என்ன மாப்பிள்ளையை விற்கும் வியாபாரமா? அவளுக்கு அங்கே அமர்ந்திருக்கவே பிடிக்கவில்லை. மாப்பிள்ளையின் முகத்தைப் பார்த்தாள். அவன் நடைபெறும் பேச்சிற்கும்.. தனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதுபோல் முகத்தில் சலனமில்லாமல் அமர்ந்திருந்தான்.

''அது எப்படி சித்தி..'' என்று கோகிலாவின் பேச்சை மறுத்துப் பேசினாள் மாப்பிள்ளையின் தமக்கைகளில் ஒருத்தி.

"இந்த இடம் சரிப்பட்டு வரவில்லைன்னா.. நாங்க வேறு இடம் பார்க்க வேண்டாமா? இவங்களால் நாம் கேட்பதைச் செய்ய முடிந்தால் நாம் அடுத்துப் பேசலாம். இல்லையென்றால் வேறு பெண்ணைப் பார்க்கலாம். என் சின்ன மாமனாரின் மகளுக்கு இருநூறு பவுன் நகை போட்டு கையில் லட்சக் கணக்கில் பணமும் கொடுத்து.. சென்னையில் ஒரு பங்களாவையும் வாங்கிக் கொடுக்கிறேன்னு சொல்லிக் காலில் விழுகிறாங்க. இவன்தான் பொண்ணு அழகாயிருக்கிறாள்ன்னு தலைகீழாய் நின்னான். அழகா சோறு போடப் போகுது?"

ஹரிதாவின் பொறுமை வெடித்துச் சிதறியது.

"அழகு சோறு போடாதுங்க... நீங்க பொண்ணு வீட்டுக்காரங்க கிட்ட வாங்கும் காரும்... பங்களாவும் தான் சோறு போடும்." என்று அவள் சொல்லிவிட.. அங்கு கலவரம் வெடித்து விட்டது.

"மிஸ்டர் ஜெயராமன்.. நீங்கள் படித்த பண்புள்ள மனிதர்ன்னு நினைத்துத்தான் உங்களிடம் பெண் கேட்டு வந்தோம். இப்படி உங்கள் பெண்ணை பண்பில்லாமல் பேசச் சொல்லி வளர்த்து வைத்து இருப்பீர்கள்ன்னு தெரிந்திருந்தால் உங்கள் வீட்டு வாசல்படியை மிதித்தே இருக்க மாட்டோம். அப்போதே என் வொய்ப் சொன்னாள். நம் ஸ்டேடஸ்ஸிற்கு ஈக்குவலான வீட்டில்தான் பெண் எடுக்க வேண்டுமென்று... நாங்கள் கேட்கவில்லை... இல்லாதவர்களாக இருந்தாலும் பரவாயில்லைன்னு உங்கள் வீட்டிற்கெல்லாம் பெண் பார்க்க வந்தோமில்லையா. எங்களுக்கு இதுவும் வேண்டும்.. இன்னமும் வேண்டும்.. பெண்ணையா வளர்த்து வைத்திருக்கிறீர்கள்? நானும் மூன்று பெண்களைப் பெற்றவன்தான்.. என் பெண்களில் யாரும் இப்படிப் பேச மாட்டார்கள்."



ஹரிதா மீண்டும் வாய் திறக்க ஆரம்பிக்க... கௌசல்யா மகளை அடக்க முயன்றாள்.

"நீங்க சும்மா இருங்கம்மா.. விட்டால் இவர் பாட்டுக்கு பேசிக் கொண்டே போகிறாரே. ஏன் சார்.. இப்போது. பேரம் படியவில்லையென்றால்.. இந்த இடத்தை விட்டு விட்டு.. வேறு இடம் பார்ப்போம்ன்னு பேசியது யார்..? உங்கள் பெண்தானே..? அழகா சோறு போடப் போகுதுன்னு அவங்க கேட்டதற்குத்தானே நான் பதில் சொன்னேன். அதனால் பெண்ணைச் சரியில்லாமல் வளர்த்து வைத்திருப்பது நீங்கள்தான். என் அப்பா இல்லை."

"பார்த்துப் பேசும்மா.. என் பெண்ணைப் பற்றிப் பேசினால் நான் சும்மா இருக்க மாட்டேன். பொல்லாதவன் ஆகிவிடுவேன்."

"இப்போது மட்டும் நல்லவராக இருப்பதாக உங்களுக்கு எண்ணமா? நீங்கள் மட்டும் என்னைப் பற்றிப் பேசலாம்.. நான் உங்கள் வீட்டுப் பெண்ணைப் பற்றிப் பேசக்கூடாதா.. நானும் என் அப்பாவிற்கு பெண்தான்."

"உன்னைப் பெண் பார்க்கத்தான் நாங்கள் வந்திருக்கிறோம். அந்த நினைப்பு கொஞ்சமாவது உனக்கு இருக்கிறதா?"

"பெண் பார்க்க வந்து விட்டால்.. என்ன வேண்டுமானாலும் பேசி விடுவீர்களா? அந்த உரிமையை உங்களுக்கு யார் கொடுத்தது..?"

"யார் கொடுக்கணும்? காலம் காலமாய் இருந்து வரும் பழக்கம்தானே அது? அதைத்தானே நாங்கள் பேசினோம்..."

"அந்தப் பழக்கத்தை மாற்றத்தான் நான் போராடிக் கொண்டிருக்கிறேன்."

''என்னது போராடிக் கொண்டிருக்கிறாயா?''

''ஆமாம் சார்.. அடுப்பூதும் பெண்களுக்கு படிப் பெதற்கு என்று எங்களைப் பூட்டி வைத்ததெல்லாம் அந்தக் காலம்.. இப்போது நாங்களும் படித்திருக்கிறோம். வேலைக்குப் போய் கை நிறைய சம்பாதிக்கிறோம். இன்னும் எங்களை அடிமைப்படுத்த நினைக்காமல் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு திரும்பிப் போங்க.''

''ஏண்டா.. பெண்ணைப் பார்க்க வான்னு கூப்பிட்டுக் கொண்டு வந்து பேயைக் காட்டுகிறாயே.. இது உனக்கே நல்லா இருக்கா?''

''ஹலோ.. பேய்.. கீய்ன்னால் நடக்கிறதே வேற.. என்ன அமெரிக்க மாப்பிள்ளை சார்.. வெளிநாட்டில் போய் வேலை பார்க்கிறீங்களே. அங்கேயே ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டு செட்டில் ஆகிவிட வேண்டியதுதானே. அதைச் செய்ய மாட்டீர்களே. உங்களுக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள இந்தியப் பெண்தான் வேண்டும். ஏனென்றால் இங்கேதானே பேரம் பேசலாம். அங்கே இதைப் பற்றி வாயைத் திறக்க முடியாதே.''

கொஞ்ச நேரம் அந்த இடம் கலவர பூமி போல் காட்சி அளித்தது. யார் யாரோடு சண்டை போடுகிறார்கள் என்று இல்லாமல் சகட்டு மேனிக்கு ஒருவரிடம் ஒருவர் பாய்ந்து முடித்து விட்டு இடத்தைக் காலி பண்ணினார் கள் அவர்கள்.

தலையில் கை வைத்து ஜெயராமன் அமர்ந்து விட்டார். அவரைத் தன் தலைவலியைக் கொண்டாட விடு வேனா என்று கங்கணம் கட்டிக் கொண்டவள் போல்



ஹரிதா அவர் முன்னால் வந்து இடுப்பில் கை வைத்துச் சீறினாள்.

''அப்பா...''

''என்னம்மா...''

''இது உங்களுக்கே நல்லா இருக்கா?''

தான் கேட்க வேண்டிய கேள்வியை.. தன்னைப் பார்த்து மகள் கேட்கிறாளே என்று நொந்து கொண்டார் ஜெயராமன்.

''நல்லா இல்லைன்னு நான் சொன்னால் நீ கேட்கவா போகிறாய்?''

''என்னது. என் மேலேயே குற்றப் பத்திரிகை வாசிக் கிறீங்களா?''

''பின்னே இல்லையா..? ஏம்மா.. எனக்கிருப்பது இரண்டே பெண்கள். அவர்களுக்குச் செய்யாமல் நான் வேறு யாருக்குச் செய்யப் போகிறேன்..? மாப்பிள்ளையை பிடித்திருக்கிறதா என்பதை மட்டும் சொல்லுன்னுதானே உன்னிடம் நான் சொன்னேன்? நீ ஏன் தேவையில்லாமல் மற்ற பேச்சுக்களைப் பேசினாய்?''

''என்னது. வரதட்சணை கொடுப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?''

''அட என்னம்மா.. நீ புரியாத பெண்ணாக இருக் கிறாயே. இதில் வரதட்சணைங்கிற பிரச்னை எங்கே யிருந்து வந்தது? என் பெண்ணைக் கட்டின துணியுடன் நான் அனுப்ப முடியுமா? அது என் மரியாதைக்கு இழுக் கும்மா..''

''அப்பா.. சும்மா.. இதை நியாயப்படுத்தாதீர்கள்.''

''ஏம்மா.. வரதட்சணை கொடுக்க மாட்டேன்னு சொல்கிறாயே... என்னிடம் ஒரு வேலை வெட்டி.. அட்ரஸ்.. எதுவும் இல்லாத ஒருவன் வந்து உங்கள் பெண்ணை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுங்கன்னு கேட்டால்.. பண்ணிக் கொடுத்து விடுவேனா.. நானும் அந்தஸ்தைப் பார்ப்பேன். மாப்பிள்ளை படித்திருக்கிறானா... எவ்வளவு சம்பாதிக்கிறான். சொத்து எவ்வளவு தேறும். வேறு பொறுப்புக்கள் இருக்கிறதா. பிக்கல் பிடுங்கல் இல்லாத இடமா.. என்று இத்தனையையும் அலசி.. ஆராய்ந்துதானே ஒரு முடிவுக்கு வருவேன்? பெண்ணைக் கொடுக்கிறவங்க இவ்வளவு எதிர்பார்க்கும்போது.. மாப்பிள்ளை வீட்டாரும் அதேபோல் எதிர்பார்க்க மாட்டார்களா? பெண் வீட்டில் செய்தால் தவறில்லை. அதே எதிர்பார்ப்பை மாப்பிள்ளை வீட்டார் வெளிப்படுத்தினால் அது தவறா?''

''தவறுதான்.. பாரதி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?''

''அதையும் நீயே சொல்லு. ஏன் மிச்சம் வைக்கிறாய்?''

''பட்டங்கள் ஆள்வதும்...
சட்டங்கள் செய்வதும்...
பாரினிலே பெண்கள்
நடத்த வந்தோம்...
எட்டும் அறிவினில்
ஆணுக்கிங்கே பெண்...
இளைப்பில்லை காணென்று
கும்மியடி...

அப்படின்னு பாடியிருக்கிறார் அப்பா.''



''அதுக்கென்னம்மா இப்ப?''

''அப்பா.. அதைப்போல் நானும் படித்திருக்கிறேன். நல்ல வேலையில் இருக்கிறேன். எனக்கென்ன குறைன்னு சொல்லுங்க.''

''உனக்கென்னம்மா குறை? ஒரு குறையும் இல்லை.''

''பின்னே ஏன்ப்பா.. என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவங்க பேரம் பேசணும்? அவங்க பேசுவதை இந்த அமெரிக்க மாப்பிள்ளை வேடிக்கை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறானே.. இவனெல்லாம் பாரதியார் ஆகிவிட முடியுமா?''

'ஆரம்பித்து விட்டாளா.. ம்ஹூம்.. பாரதியார் உயிரோடு இருந்திருந்தால் வயதாகி இருந்தாலும் பரவாயில்லைன்னு.. அவருக்கே இவளைக் கட்டிக் கொடுத்திருக்கலாம். அவரும் போய் விட்டார். இங்கே என் பாடுதான் திண்டாட்டம் ஆகி விட்டது.'

ஜெயராமன் தேறி எழ இரண்டு நாட்களாகி விட்டன. அதன்பின் ஹரிதாவின் திருமணப் பேச்சை எடுக்க அவருக்கு தைரியம் இல்லை... ஆனால் சரிதா.. அன்று வரும்போதே கோபமாக வந்தாள்.

வழக்கமில்லாத வழக்கமாக கோபப்படும் இளைய மகளை வியப்புடன் பார்த்து.. ''என்னம்மா..?'' என்று வினவினார் ஜெயராமன்.

''அப்பா.. என் பிரண்ட் மீனாவின் அண்ணனுக்கு நம் ஹரிதாவைக் கேட்கிறாங்கன்னு நான் சொன்னேனே இல்லையா?''

''ஆமாம் சொன்னாய்...''

"அதைப் பற்றிய பேச்சையே எடுக்காமல் அமைதியாய் இருந்தால் எப்படிப்பா.. மீனாவின் அண்ணன்.. மீனாவிடம் தூண்டித் துருவி விசாரிக்கிறாராம்..."

ஜெயராமன் பரிதாபமாய் தன் இளைய மகளைப் பார்த்தார். ஏன் தன் தந்தை இப்படி ஒரு போஸ் கொடுக்கிறார் என்று சரிதா யோசனையுடன் தந்தையைப் பார்த்தாள்.

## 6

"ஏம்மா சரிதா.. நீ நல்லா யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறாயா?"

"ஏன்ப்பா.. இப்படி ஒரு கேள்வியைக் கேட்கறீங்க."

"பாரும்மா.. உன் அம்மாவும்.. பக்கத்து வீட்டு கோகிலாவும் உயிருக்குயிரான சிநேகிதிகள். இப்போ இரண்டு பேருக்கும் பேச்சு வார்த்தையே அறுந்து போய் விட்டது. அந்த நிலைமை உனக்கும்.. உன் பிரண்ட் மீனாவிற்கும் வர வேண்டுமா?"

"சும்மாயிருங்கப்பா.. நீங்க வேறு தேவையில்லாமல் கவலைப்பட்டுக்கிட்டு இருக்கீங்க.. அப்படி ஒரு நிலைமை எனக்கும் என் பிரண்டிற்கும் இடையே ஒரு போதும் வராது."

"ஹரிதா விசயத்தில் வீண் நம்பிக்கை வைக்காதேம்மா.. மீனாவும்.. நீயும் ரொம்ப நாள் பிரண்டாக இருக்க வேண்டும்.. இது வீண் முயற்சி.. விட்டு விடு."



"என்னப்பா இது.. நீங்களே இப்படிப் பேசினால் எப்படி?"

"வேறு என்னம்மா செய்யச் சொல்கிறாய்? நானும் நல்லபடியாக முடியும்ங்கிற நம்பிக்கையோடுதான் இரண்டு இடங்களில் இருந்து ஹரிதாவை பெண் பார்க்க வரச் சொன்னேன். இரண்டு தடவையும் எனக்கு டென்சன் ஏறி பிபி எகிறியதுதான் மிச்சம்... வேறு பிரயோசனம் இல்லை."

"அதற்காக ஹரிதாவிற்கு கல்யாண ஏற்பாடுகளே நீங்கள் பண்ணப் போவது இல்லையா? அவள் இப்படியே இருக்கட்டும் என்கிற முடிவிற்கு வந்து விட்டீர்களாப்பா?"

"அப்படி இல்லையம்மா.. அவள் கேட்பது போன்ற மாப்பிள்ளை கிடைப்பாரான்னு வெளியில் தேடிப் பார்க்கலாம். அதை விட்டு விட்டு.. இவளுடைய குணத்தைத் தெரிந்து கொண்டே.. பழகியவங்க வீட்டில் சம்பந்தம் பேசும் ரிஸ்க்கை எடுக்க வேண்டாம்.. ஒரு நேரம் போல்.. ஒரு நேரம் இருக்காதும்மா."

"என்னப்பா.. இப்படி ஒரு பயந்தாங்குளியாய் இருக்கீங்க."

"பயப்பட வேண்டிய விசயத்துக்கு பயந்துதானே ஆகவேண்டும் சரிதா? அறியாதவர்களிடம் ஹரிதாவின் குணத்தைப் பற்றிச் சொல்லி.. அவங்களை பெண் பார்க்க வரவைப்பதுதான் சரியாய் வரும். அறிந்தவங்க வந்து நம்ம பெண்ணைப் பார்த்து விட்டு 'வாய் அதிகம்.' 'போராட்டக்காரி'ன்னு ஆயிரம் பட்டங்களை சூட்டுவதைக் கேட்டுக் கொண்டிருப்பது கொடுமை சரிதா.. ஒரு தகப்பனாய் நான் படும் வேதனையை நீ அறிய மாட்டாய். என் பெண்களை நானே கடிந்து ஒரு சொல் சொன்னதில்லை... பெண் பார்க்கவென்று வந்துவிட்டு..

என் பெண்ணை.. என் முன்னாலேயே பேசுவதை கேட்டுக் கொண்டு என்னால் சும்மா இருக்க முடிய வில்லை சரிதா... அதே சமயம் தெரிந்தவர்களிடம் சண்டை போடவும் யோசனையாய் இருக்கிறது... கொஞ்ச நாள் போகட்டும்மா.. நான் வெளி இடங்களில் ஹரிதா விற்கு மாப்பிள்ளை பார்க்கிறேன். பிடித்தால் பெண்ணைக் கட்டு... பிடிக்காவிட்டால் வாயைத் திறக்காமல் நடையைக் கட்டுன்னு அவங்களிடம்தான் நாம் சொல்ல முடியும்...''

சரிதாவிற்கு ஜெயராமனின் மனம் படும் வேத னையைப் புரிந்து கொள்ள முடிந்தது. இரண்டு பெண் களையும் இரண்டு கண்களாகப் பார்க்கிறவர் அவர்... ஒரு போதும் பெண்களிடம் உயர்வு.. தாழ்வு பார்க்க மாட் டார். இருவருமே அவருக்கு சமம்தான். ஹரிதாவின் குணத்தால் அவருக்கு தொல்லைகள் வந்தாலும் மகளைத் தாங்கிப் பேசும் தன்மை கொண்டவர். இப்போது ஹரிதாவின் திருமணத்தை எப்படியாவது நடத்தி விட வேண்டும் என்ற கவலையும்... தவிப்பும் இருந்தும்.. தெரிந்தவர்களிடம் மீண்டும் மகளின் திருமணப் பேச்சை எடுக்க முடியாமல் பயம் அவரைப் பிடித்து வாட்டுகிறது.

சரிதா யோசனையுடன் வீட்டிற்குள் சென்றாள். சமைய லறை மேடையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த கௌ சல்யா அவளது காலடியோசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். எப்போதும் மலர்ந்திருக்கும் முகத்தில் ஓர் மெலிதான சோகம் தெரிந்தது.

''சாப்பிடுகிறாயா.''

''இப்போது வேண்டாம்மா. பசியில்லை. ஹரிதா எங்கே?''



''அவளுடைய ரூமில் இருப்பாள்.''

''அப்பா கவலையாக இருக்கிறார்.''

''ம்ம்.. கவலைப்பட்டு ஆகப் போவது என்ன? நடப் பது நாராயணன் செயல். எப்போது அவன் கண் திறந்து பார்க்கிறானோ.. அப்போதுதானே விடியும்?''

''மீனாவின் வீட்டில் ரொம்பவும் ஆர்வமாய் இருக் கிறார்கள் அம்மா.''

''வேண்டாம் சரிதா... உறவும்.. நட்பும் நிலைக்க வேண்டுமானால் மீண்டும் விசப் பரிட்சை செய்து பார்க்கக் கூடாது. பட்டதெல்லாம் போதும்.. அவளுக்கு வெளியே மாப்பிள்ளை பார்க்கலாம்.''

''நீங்களும் அப்பாவைப் போலவே பேசுகிறீர்கள்.''

''வேறு என்ன செய்வதும்மா.. என பெண் பெரிய இடத்தில் வாழ்க்கைப் படாவிட்டாலும் பரவாயில்லை... அவள் சுடுசொல் வாங்க வேண்டாம். அவள் மனம் பூப்போன்றது. மற்றவர்களின் கஷ்டங்களுக்காக குரல் கொடுக்கும் மனது இங்கே எத்தனை பேரிடம் இருக் கிறது..? என் பெண்ணிடம் அந்த மனம் இருக்கிறது. தவறை தவறுன்னு சொல்லும் தைரியம் என் பெண்ணிடம் இருக்கிறது. அவள் உலகோடு ஒத்துப் போகாதவளாக இருக்கலாம். ஆனால் நல்லவள். ரொம்பவும் நல்லவள். அவளை பெண் பார்க்க வருகிறேன் பேர்வழின்னு வந்து யாரும் புண்படுத்த வேண்டாம்.''

கௌசல்யா விழிகளில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டு பூஜையறைக்குச் சென்று விட்டாள். சற்று நேரம் யோசனையுடன் அங்கேயே நின்று கொண் டிருந்து விட்டு சரிதா.. ஹரிதாவைத் தேடிப் போனாள்.

தன் அறையில் வெகு தீவிரமாக யாருடனோ செல் போனில் பேசிக் கொண்டிருந்தாள் ஹரிதா.

அவள் பேசி முடிக்கும் வரை காத்திருந்த சரிதாவைப் பார்த்து,

''ஹாய்..'' என்றபடி.. வெளியே கிளம்ப ஆயத்தமானாள் ஹரிதா.

''வெளியே கிளம்பி விட்டாயா?''

''ஆமாம்.''

''எதுவும் வேலை இருக்கிறதா?''

''ம்ம்.. பாவம்.. இப்போதுதான் கல்யாணமான இளம் பெண் ஒருத்தியின் மீது மண்ணெண்ணெயை ஊற்றி எரித்து விட்டார்கள். கல்யாணமாகி ஒரு மாதம் கூட ஆக வில்லை. கேட்டால் தற்கொலைன்னு கதை விடுகிறார்கள். பெண்ணைப் பெத்தவங்க கதறி அழுவதைப் பார்த்தால் எனக்குத் தாங்கவில்லை. அது ஏன் சரிதா... இந்த மண்ணெண்ணை புது மருமகளை எரிக்க மட்டுமே பயன்படுகிறது?''

சரிதா பதில் பேசாமல் மௌனித்துப் போனாள். ஹரிதாவின் கேள்வியில் இருந்த ஆதங்கம் அவளுக்குப் புரிந்தது.

''நன்றாக யோசித்துப் பார்த்தால்... அன்று தொட்டு.. இன்று வரை பெண்களை அக்கினியில் தள்ளுவதை ஒரு வேலையாகச் செய்து வந்திருக்கிறார்கள். சீதையின் அக்கினி பிரவேசத்தில் ஆரம்பித்தது. பின்னர் உடன் கட்டை ஏற வைத்தார்கள். தூக்க மாத்திரைகளைக் கொடுத்து சாகடிக்கக் கூடாதா? கொடூரமாகத்தான் சாக டிக்க வேண்டுமா? அசுர குலம் இன்னும் அழியவில்லை



சரிதா. மனிதர்கள் பலர் இன்னும் அசுரர்களாகத்தான் இருக்கிறார்கள்.''

ஹரிதாவின் வார்த்தைகளில் துயரம்.. கோபம்.. சோகம்.. எல்லாம் கலந்திருந்தது. சரிதா யோசனையுடன் தமக்கையைப் பார்த்தாள்.

''இப்போது நீ போய் என்ன செய்யப் போகிறாய்?''

''நன்றாகக் கேட்டாய் போ.. நாங்கள் போராடிய போராட்டத்தில் அந்தப் பெண்ணின் புருசனை... அரெஸ்ட் பண்ணியிருக்கிறார்கள். இனிக் கேஸை தீவிரப் படுத்த வேண்டுமே. அதற்குத்தான் போகிறேன்.''

''சாப்பிடவில்லையா.''

''வந்து சாப்பிட்டுக் கொள்கிறேன்.. பை..''

ஹரிதா.. போய் விட்டாள். சரிதா அவளது அறையை ஒழுங்கு படுத்திவிட்டு.. அறையைப் பூட்டி விட்டுத் தனது அறைக்குச் சென்றாள். கட்டிலில் படுத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

ஹரிதாவின் கொள்கைப் பிடிப்பும். போராட்ட குண மும் அவளது வளமான வாழ்க்கைக்கு குறுக்கே நிற்பது புரிய.. சரிதாவின் மனதில் சஞ்சலம் உருவாகியது.

அவளது மனக் கண்ணில் பிரமாண்டமான போர்டி கோவும்.. நீச்சல் குளமும் கொண்ட மீனாவின் வீடு தோன் றியது. கணக்கில் அடங்காத சொத்து.. பணத்தை வாரிக் கொட்டும் கிரானைட் பிஸினெஸ்.. அவர்களது ஒரே மகன்.. இளம் தொழிலதிபர். கிரானைட் பிஸினெஸ்ஸில் வெற்றிக் கொடியை பறக்க விட்டுக் கொண்டிருப்பவன்.

அவன் ஹரிதாவை விரும்புகிறான். அவன் கை பிடித்தால் ஹரிதா... சரிதா அண்ணாந்து பார்க்கும்

உயரத்திற்கு அந்தஸ்தைப் பெற்று விடுவாள். கோடீஸ்வரியாய்.. மாளிகையில் வாழும் அதிர்ஷ்டம் அவளுக்கு அடித்திருக்கிறது. ஆனால் அவளோ.. அதை உணராமல் தெருவில் நின்று போராட ஓடிக் கொண்டிருக்கிறாள்.

ஹரிதாவின் பாதை தவறானது அல்ல. அதே சமயம்.. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த தகப்பனாரின் பெண். கொஞ்சம் குடும்ப நிலவரத்தையும் பார்க்க வேண்டாமா என்று இருந்தது சரிதாவிற்கு.

மறுநாள்.. கல்லூரியில் மதிய உணவு நேரத்தில் மீனா அவசரமாய் சரிதாவைத் தேடி வந்தாள்..

''என்னடி..''

''அண்ணன் உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்..''

''என்னையா.. என்னை ஏன் அவர் பார்க்க வந்தார்?''

''இதை அவரிடமே வந்து கேளேன்.''

கல்லூரியில் ஆண்டு இறுதித் தேர்வுகள் தொடங்க ஆரம்பித்திருந்த நேரம் அது... மதியத்திற்கு மேல் ஸ்பெஷல் கிளாஸ் இருந்ததால் கையோடு டிபன் டப்பாவைக் கொண்டு வந்திருந்த சரிதா.. அதை மூடி வைத்துவிட்டு எழுந்து... மீனாவுடன் சென்றாள்.

வெள்ளி நிறத்தில் இருந்த வெளிநாட்டுக் காரின் மீது சாய்ந்து நின்று கொண்டு இருந்த அந்த வாலிபன் திரும்பிப் பார்த்தான். சரிதா அவனுடைய கம்பீரத்தைக் கண்டு அயர்ந்து நின்று விட்டாள். இதுவரை அவள் மீனாவின் அண்ணனை நேரில் கண்டதில்லை. மீனாவின் வீட்டிற்குப் பலமுறை சென்றிருக்கிறாள். மீனாவின் பெற்றோர்களைச் சந்தித்து இருக்கிறாள். ஆனால் மீனாவின் அண்ணனைச் சந்தித்தது இல்லை.



''அண்ணன் பாரின் போயிருக்கிறார்.''

இதுதான் மீனா எப்போதும் சொல்லும் டயலாக்.. இப்போது அவனைக் கண் எதிரே கண்டபோது.. அவனுடைய உயரமும்.. களையான முகமும்.. ஆண்மை ததும்பிய தோற்றமும்.. சரிதாவை வெகுவாய்க் கவர்ந்தன.

மாநிறத்தில் இத்தனைக் கவர்ச்சியுடன் இருக்கும் ஆணை இப்போதுதான் சந்திக்கிறோமென்று நினைத்துக் கொண்ட சரிதா.. அவன் முகத்தைச் சற்று அண்ணாந்து பார்த்துக் கரம் குவித்தாள்.

''தேவலையே.. அதிரடியான அக்காவிற்கு.. இவ்வளவு அடக்க ஒடுக்கமான தங்கையா? ஆச்சரியமாய் இருக்கிறதே..'' அவன் புருவம் தூக்கி வியந்தான்.

''நீங்கள் ஹரிதாவைப் பார்த்திருக்கிறீர்களா?''

''இப்போது கூட போலீஸ் ஸ்டேஷன் முன்னால் உட்கார்ந்து மறியல் பண்ணிக் கொண்டுதானே இருக்கிறாள். பார்த்து விட்டுத்தான் வருகிறேன். பைதிவே.. என் ஆப்ளிகேஷன் என்னவாயிற்று? உன் அக்காவிற்கு என்னைப் பிடிக்கவில்லையா? என் ஆப்ளிகேஷனை ரிஜக்ட் செய்து விட்டாளா?''

அவனது தன்னம்பிக்கை சரிதாவிற்கு ஆச்சர்யத்தைக் கொடுத்தது. அதே சமயம் ஹரிதாவின் செயல்பாடுகளை இயல்பாய் அவன் கூறியதால் மனதில் தைரியமும் வந்தது.

''அப்படியெல்லாம் இல்லை... உங்களைப் பற்றி ஹரிதாவிற்குத் தெரியாது.''

''ஏன்..? நீ சொல்லவில்லையா?''

''அப்பா.. அம்மாவிடம் சொன்னேன். ஆனால் அவர்கள் பயப்படுகிறார்கள்.''

''எதற்காக.. நான் பணக்காரன் என்பதாலா?''

''அதை ஹரிதாவின் அதிர்ஷ்டம் என்று நினைக்கிறார்கள்.''

''பின்.. வேறு என்னதான் பிரச்னை?''

''அது.. வந்து.''

சரிதா கொஞ்சம் தயங்கி விட்டு.. பின் ஒரு முடிவுக்கு வந்தவளாய்.. மடமடவென்று ஹரிதாவைப் பெண் பார்க்க வந்தபோது நடந்த இரண்டு சம்பவங்களையும் விவரித்தாள்.

''ஹரிதா அழகானவள்.. படித்தவள்.. வேலையிலும் இருக்கிறாள். அவளை விட்டு விட்டு.. இன்னும் டிகிரியைக்கூட முடிக்காத என்னைப் பெண் கேட்டது அப்பா அம்மாவின் மனதை மிகவும் பாதித்து விட்டது. இரண்டாவதாய் வந்தவர்களோ.. அதற்கு ஒரு படி மேலே போய் ஹரிதாவை விமர்சிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் பெரியரகளையே வந்து.. தாயாய் பிள்ளையாய் பழகிக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரங்க.. இப்போது வெட்டவா.. குத்தவான்னு பார்க்கிறாங்க. இதற்குப் பின்னால்.. பழகியவங்க வீட்டில் சம்பந்தம் பேசினால் அது பகையில் வந்து முடியும்ன்னு அப்பாம்மா பயப்படுகிறார்கள்.''

''ஐ.. ஸீ...'' என்று ரசித்துச் சிரித்தான் அவன்.

'நான் சொல்வது இவனுக்குச் சிரிப்பாக இருக்கிறதா?' மனதிற்குள் குமைந்தபடி நின்று கொண்டிருந்தாள் சரிதா.

''மனதிற்குள் என்னைத் திட்டி முடித்தாகி விட்டதா?'' என்று கேட்டான் அவன்.



சரிதா பதில் கூறாமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''சரிதா.. எனக்கு முதலில்.. ஏன் வேறு இரண்டு பேரை உன் அப்பா ஹரிதாவை பெண் பார்க்க அனுமதித்தார்?''

''வேறு என்ன செய்வது? அவள்தான் பாரதியைப் போல் ஹஸ்பெண்ட் வேண்டும்ன்னு கண்டிசன் போட்டிருக்கிறாளே.''

''பாரதியைப் போலா..? யு மீன்.. பாரதியார்..?''

''யெஸ்.''

''அவருக்கும்.. மற்ற இரண்டு பேருக்கும் என்ன சம்பந்தம்?''

''ஏதாவது சம்மந்தம் இருந்து விடாதா என்ற ஆசையில்தான் அப்பா.. அவர்களை பெண் பார்க்க வரச் சொன்னார்.''

''ஏன்.. நான் பாரதியைப் போல் இருக்க மாட்டேனா?''

''நீங்கள் பிஸினெஸ் மேன்.. கோடீஸ்வரர்.''

''பாரதியாரை ரசிப்பவர்கள்.. ஏழைகளாக.. வேலை வெட்டி இல்லாதவர்களாகத்தான் இருக்க வேண்டுமா?''

''இதற்கு என்ன பதில் சொல்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை.''

''ஒன்றைப் புரிந்து கொள் சரிதா.''

''ஒன்றோ.. இரண்டோ.. நான் புரிந்து ஆகப் போவதென்ன..? ஹரிதா உங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமே.''

''எல்லாம் புரிந்து கொள்வாள். ஹரிதா.. வைகுந்தத்திற்குத்தான் சொந்தம்.. அதை நீ நினைவில் வைத்துக் கொள்.''

''வைகுந்தா.. யார் அது?''

''சரியாப் போச்சு போ.. என் பெயர் உனக்குத் தெரியாதா?''

''ஊஹூம்.. நான் மீனாவின் அண்ணன். அப்படின்னு தான் உங்கள் பெயரைச் சொல்லுவேன்.''

''நல்ல ஐடென்ட்டி... என் பெயர் வைகுந்த்... முழுப் பெயர் வைகுந்தநாதன்... ஷார்ட்டாய் சுருக்கி வைகுந்த் ஆகிவிட்டது. ஓகே சரிதா.. இப்போ.. நம் விசயத்திற்கு வருவோம்.''

''உங்கள் விசயம்னு சொல்லுங்க...''

சரிதா அவனைக் கிண்டல் பண்ணும் தொனியில் சொல்ல.. அவன் அதை இல்லையென்று சொன்னான். தான் சொன்னதை விளக்கவும் செய்தான்.

## 7

''என் விசயமா... இல்லை சரிதா.. இதில் உன் விசயமும் அடங்கியிருப்பதால் நான் நம் விசயம்னு சொன்னதுதான் சரி.''

''என் விசயம் அடங்கியிருக்கிறதா...? எது.. நான் ஹரிதாவின் தங்கை என்னும் விசயமா?''

''இல்லை... நான் கண்ணனின் அண்ணன் என்னும் விசயம் தான் அது.''

''கண்ணனா.. யார் அது..?''



''உன்னை மணக்கப் போகிறவன்.''

''என்னது..?''

சரிதா.. தன் காதுகளை நம்ப முடியாமல் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள்.

'இவனுக்கென்ன தான் பெரிய இவனென்று எண்ணமா? என் கல்யாணத்தை எவனோ ஒருவனுடன் முடிவு பண்ண இவன் யார்?'

''திரும்பவும் மனதிற்குள் என்னைத் திட்டி முடித்தாகி விட்டதா..?'' என்று கேட்டான் வைகுந்த்.

''நீங்கள் பேசுவது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா?''

''ஏன்.. என்னவாயிற்று? கண்ணன் என்னுடைய சித்தப்பாவின் மகன்.. சொந்தமாய் மோட்டார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்துகிறான். அவனுக்கு உன்னைப் பிடித்திருக்கிறதாம். நீ அவனை மணந்து கொள்ளும் முறைதானே. அப்புறம் என்ன?''

'எல்லாமே இவனுக்கு எளிதுதான்' என்று பல்லைக் கடித்தவள்.

''முறையா.. என்ன முறையைக் கண்டு விட்டீர்கள்?'' என்று கேட்டாள்.

''இப்போது.. நான் உன் அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்.. அப்படி வரும்போது என் தம்பிக்கு நீ கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டிய முறைதானே.''

''முறை சொல்வதெல்லாம் பிரமாதமாகத்தான் இருக்கிறது. நீங்கள் பெரிய பிஸினெஸ் மேன் என்று மீனா சொன்னாள். அது பொய்யா?''

"ஏன்.. உனக்கு அதில் என்ன சந்தேகம் வந்து விட்டது?"

"இல்லை.. கடலில் கப்பல் விடாமல் தரையில் விடும் புத்திசாலியாய் இருக்கிறீர்களே.. அதுதான் கேட்டேன்."

"சாமர்த்தியம் இருந்தால் தரையிலும் கப்பல் விட லாம்."

"நீங்கள் செய்தாலும் செய்வீர்கள். ஆனால்.. தரையில் கப்பல் விடுவது கூட சுலபமான வேலை.. என் அக் காவை கை பிடிப்பது எவ்வளவு கஷ்டமான வேலைன்னு இன்னும் நீங்கள் புரிந்து கொள்ளவில்லை."

"அதெல்லாம் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறேன்."

"என்ன புரிந்து வைத்திருக்கிறீர்கள்?"

"உங்கள் இருவரையும் பெற்றவர்களுக்கு நீங்கள் இரண்டு பேரும் இரண்டு கண்கள்.. என்பதை புரிந்து வைத்திருக்கிறேன். ஆம் ஐ கரெக்ட்?"

"யெஸ்.. யு ஆர் கரெக்ட்."

சரிதாவின் உள்ளம்.. பெற்றவர்களின் நினைவில் நெகிழ்ந்தது.

"அப்படியென்றால்.. ஒரு கண்ணில் அடிபட்டால் இன்னொரு கண்ணிற்கு வலிக்கும்தானே.. ஐ மீன்.. ஒரு கண் கலங்கி நின்றால் இன்னொரு கண்ணும் கலங் காதா?"

"புரியவில்லையே.."

"உன் அக்காவிற்கு ஒன்று என்றால் நீ துடித்துப் போக மாட்டாயா?"

"ஆமாம்."



"உனக்கு ஒன்று என்றால் உன் அக்கா தாங்கிக் கொள் வாளா..?"

"நிச்சயம் மாட்டாள்."

"அவளால் சரிப்படுத்தக் கூடிய துன்பம் ஒன்று உனக்கு வந்தால்... உன் அக்கா.. தன் உயிரையும் கொடுத்து அதைச் சரிப்படுத்துவாளா.. இல்லை மாட் டாளா?"

"இது என்ன கேள்வி.. ஹரிதா எனக்காக தன் உயி ரையும் கொடுப்பாள்."

"அப்படிப்பட்டவள்.. தன் கொள்கையை உனக்காக விட்டுக் கொடுக்க மாட்டாளா என்ன..?"

"எனக்காக அவள் கொள்கையை விட்டுக் கொடுக் கும்படி எனக்கு என்ன நேர்ந்து விட்டது...?"

"இது என்ன சரிதா.. இப்படிக் கேட்டு விட்டாய்? கண்ணனும்.. நீயும் உயிருக்குயிராய் காதலிக்கிறீர்கள்... நான் உங்கள் இருவரின் காதலுக்கும் குறுக்கே நிற் கிறேன்.. நீங்கள் இரண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றால் என் சம்மதம் தேவை.. நான் சம்மதம் கொடுக்க வேண்டுமென்றால் ஹரிதா.. எனக்குத் தேவை.. இப்போது ஹரிதா உனக்காகத் தன் கொள்கையை விட்டுக் கொடுப்பாளா மாட்டாளா...?"

சரிதாவிற்கு எதுவோ புரிந்தது போல் இருந்தது.

"ஆனால்.. முன்னே பின்னே தெரியாத ஒருவரை யெல்லாம் நான் எப்படி என் காதலராகச் சொல்வது?"

"உனக்காக உன் அக்கா உயிரையும் கொடுப்பாள் என்கிறபோது.. நீ அவளுக்காக.. முன்னே பின்னே

தெரியாத கண்ணனுடன் உன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ள மாட்டாயா?''

சரிதாவிற்கு நடுக்கமாக இருந்தது. அவள் தன் திருமணத்தைப் பற்றி நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. இதில் அவள் காதலிப்பது போல் நடிக்க வேண்டுமா?

சஞ்சலத்துடன் வைகுந்தின் முகத்தை ஏறிட்டாள். அவன் ஆதரவாய் புன்னகைத்தான்.

''எதற்கு பயம் சரிதா.. நானும்.. மீனாவும்.. உனக்கு அநியாயம் செய்து விடுவோமா? கண்ணனை உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அவனுக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறது. உனக்கு அவனைப் பிடித்திருந்தால்... உண்மையிலேயே அவனைக் காதலி... பிடிக்கா விட்டால் எனக்காக.. உன் அக்காவின் நன்மைக்காக.. காதலிப்பது போல் நடி.''

'நடிப்பதா.. நானா..' யோசனையுடன் வைகுந்தைப் பார்த்தாள் சரிதா.

''அந்தக் கண்ணன்.. என்னை எப்போது பார்த்தார்?''

''நான் ஹரிதாவைக் காதலிப்பதாய் அவனிடம் சொன்னபோது... வருங்கால அண்ணியைப் பார்க்க வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான். ஒகேன்னு.. உன் அக்கா ஷாப்பிங் வந்திருந்தபோது அவளை பாலோ பண்ணி அவனுக்குக் காட்டினேன்.. கூட நீயும் வந்திருந்தாய்.. பயல்.. உன்னைப் பார்த்ததும் விழுந்து விட்டான்..''

''எங்கே விழுந்தார்.. கடையிலா..?''

''இல்லை.. காதலில் விழுந்து விட்டான்.''

சரிதா மீண்டும் உதட்டைக் கடித்தாள்.



'இது எந்த அளவிற்கு சாத்தியம்..'

''திரும்பவும் மனதிற்குள் எனக்கு மண்டகப் படியா?''

''இல்லை.. இல்லை..''

''வேறு எதை யோசிக்கிறாய்..?''

''நீங்கள் சொல்வது எந்த அளவிற்கு உண்மை?''

''என்னை நம்பும்மா.. நான் பொய் சொல்லி அறியாதவன்.''

''இப்போது.. உங்கள் காதல் நிறைவேற என்னைப் பொய்யா நடிக்கச் சொல்லவில்லையா?''

''இல்லையே.. கண்ணன் உன் காதலன்.. அவன் காதலை நீ ஏற்றுக் கொண்டால் அங்கே பொய்யே கிடையாதே.''

''கெட்டிக்காரர்தான். என் அக்காவிற்கு ஏற்ற அத்தான் நீங்கள்தான்.''

''கண்ணனும் உனக்கு ஏற்றவன்தான்.''

''ம்ம்.. நான் இதுவரை கல்யாணத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தது இல்லை.''

''இனிமேல் நினைத்துப் பாரேன்.''

''நான் மேலே படிக்க வேண்டும்.''

''கண்ணனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு எவ்வளவு வேண்டுமானாலும் படி.''

''வேண்டாம். நான் வீண் கற்பனைகளுக்கு இடம் கொடுப்பதில்லை.''

''அப்புறம் உன் இஷ்டம்.. ஆனால் எனக்கு உதவுவாய் தானே.''

''நிச்சயமாய்.''

''அப்போ... நாளைக்கு உனக்கு எக்ஸாம் இல்லையே.. ஸ்பென்ஸர் பிளாஸாவிற்கு வருகிறாயா? கண்ணனை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.''

''நான் ஏன் அவரை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும்?''

''முன் பின் தெரியாத நபரையா.. உன் காதலன் என்று சொல்லுவாய்..?''

''ஓ மைகாட்.. அது வேறு இருக்கிறதா?''

''ஆமாம். அப்போது நாளைக்கு நீ வருகிறாய்..''

''சரி..''

''தேங்க்யூ சரிதா. மீதியை நாளை சொல்கிறேன்.''

வைகுந்த்.. காரில் ஏறிக் கிளம்பிச் சென்று விட்டான். மீனாவுடன் திரும்பும்போது.. சரிதாவின் மனதில் அந்தக் கேள்வி எழுந்தது.

'அந்தக் கண்ணன் எப்படி இருப்பான்..?'

அவன் அழகாகவே இருந்தான். ஸ்பென்ஸர் பிளாசாவில் வைகுந்த் அவளுக்கு அவனை அறிமுகப்படுத்திய போது அழகாய் கரம் குவித்தான். உயரமாய்... கம்பீரமாய்... கொஞ்சம் வைகுந்தின் சாயலில் இருந்தான். சரிதாவின் கண்களை நேராய் பார்த்து சஞ்சலமில்லாமல் பேசினான். அடிக்கடி தலை முடியைக் கோதிக் கொண்டான். சரிதாவை அவன் பார்த்த பார்வையில் அளவு கடந்த காதல் தெரிந்தது.

சரிதா அவனது பார்வையால் பாதிக்கப்பட்டாள். கிளர்ச்சியுற்றாள்... முதன் முதலாய் ஒரு ஆணின் முன்



னால் அவள் நாணம் கொண்டு நிலம் பார்த்தாள். இனம் புரியாத ஓர் பரபரப்பு அவளுள் உற்பத்தி ஆகியது. உடலில் மெலிதான நடுக்கம் வந்தது.

'ச்ச்.. என்ன இது. நான் இவனைப் பார்த்தவுடன் சலனப்படலாமா?'

தன்னைத்தானே கடிந்து கொண்டாலும்.. கண்ணனின் விழிகளை அவளால் நேராகப் பார்க்க இயலவில்லை.

அவனோ.. அவள் முகத்திலிருந்து பார்வையை அகற்றவேயில்லை. அவளது நாணத்தையும்.. தடுமாற்றத்தையும்.. நடுக்கத்தையும் உணர்ந்தவளாய்.. சிறிய புன்முறுவல் ஒன்றைச் செய்தான்.

''அண்ணா.. இந்தக் காலத்திலும்.. நாணம் கொண்டு.. தலை கவிழும் பெண்ணை இப்போதுதான் பார்க்கிறேன்'' என்றான் அவன்.

''உன் பாடு தேவலாம். என் ஆள் இருக்கிறாளே.. புதுமைப் பெண்.. கண்ணோடு கண் பார்த்துத்தான் பேசுவாள்... நேர் கொண்ட பார்வை.. நிமிர்ந்த நன்னடையென்று இருப்பாள். ஏன் சரிதா.. பேசாமல் உன் அக்காவை ஐ.பி.எஸ். ஆகிவிடச் சொல்லேன்..'' என்றான் வைகுந்த் கேலியாக.

''மாட்டாளாம்..'' சரிதா.. கண்ணனைப் பார்ப்பதை கவனமாய் தவிர்த்து.. அவனுடைய அண்ணனைப் பார்த்தே பேசினாள்.

அதைக் கவனித்த கண்ணனின் புன்னகை இன்னும் விரிந்தது.

''ஏனாம்.''

''அவள் அதிகார வர்க்கத்தில் வேலை செய்தால்.. அநியாயத்தைத் தட்டிக் கேட்க முடியாதாம். அடி பணிந்து போக வேண்டுமாம். வளைந்து கொடுக்க அவளால் ஆகாதாம்.''

''அதுதானே பார்த்தேன். கேட்டாயா கண்ணா.. எப்படி ஒரு ஜான்ஸிராணியை உனக்கு அண்ணியாக பிடித்திருக்கிறேன் என்று.''

''அதெல்லாம் சரிதான் அண்ணா. அப்படிப்பட்ட வீராங்கனையின் தங்கை. சரியான தொடை நடுங்கியாய் இருப்பாங்க போல இருக்கே.''

''யாரு.. நம்ம சரிதாவையா சொல்கிறாய்?''

வைகுந்த் ஆச்சரியமாய் வினவுவது போல் நடிக்க.. சரிதா பல்லைக் கடித்தாள்.

'நம்ம சரிதாவா..?'

கண்ணன் அவளது முகமாற்றத்தைக் கவனித்துக் கொண்டே தமையனுக்கு பதில் கூறினாள்.

''நம்ம்ம்ம... சரிதாதான்.''

''சேச்சே.. என்னப்பா நீ இப்படிச் சொல்கிறாய்? அப்படிப்பட்ட அக்காவிற்கு போய் பயந்தாங்குளி தங்கை இருக்க முடியுமா?''

''பயந்தாங்குளிதான் அண்ணா.. சரியான பயந்தாங்குளி.''

சரிதாவிற்கு அவர்கள் இருவரும் கூட்டுச் சேர்ந்து கொண்டு தன்னைக் கேலி செய்வது போல் தோன்றியது. அவளுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. சண்டைக் கோழி போல் அவர்களை முறைத்துப் பார்த்தவாறு,



''ஹலோ.. அத்தான்..'' என்று வைகுந்தை பார்த்து அவள் அழைத்தாள்.

''யாரைச் சொல்கிறீர்கள். என்னையா..'' என்று அவசரமாய் கேட்டான் கண்ணன்.

''உங்களைச் சொல்லவில்லை சார்.. உங்கள் அண்ணனைச் சொன்னேன்.''

''அண்ணனைச் சொன்ன வாயால்.. இந்தக் கண்ணனைச் சொல்ல மாட்டீர்களா..? நான் என்ன உங்கள் விரோதியா?''

''இல்லை...''

''என் மேல் பகையுணர்வு ஏதேனும் இருக்கிறதா?''

''இல்லை..''

''என்னைப் பற்றித் தவறான தகவல் எதுவும் கேள்விப் பட்டீர்களா?''

''இல்லை சார்.''

''சாரா..? இத்தனை கேள்விகளுக்கும் இல்லையென்று பதில் சொல்லிவிட்டு.. கட்டக் கடைசியில் என்னைப் பார்த்து சார் போடுகிறீர்களே... இது நியாயமா?''

''அவர் என் அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவர்.''

''நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன்.''

கண்ணன் பட்டென்று பதில் சொல்லவும்.. சரிதாவின் வாயடைத்துப் போனது... அவள் அவனது நேரிடையான இந்தப் பேச்சை எதிர்பார்க்கவில்லை. அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாதவளாய் திகைத்துப் போனாள்.

''என்ன பேச்சையே காணோம்.''

''இப்படிப் பேசினால் எப்படிப் பதில் சொல்வது?''

''ஏன் பதில் சொல்ல அவ்வளவு கஷ்டமான வார்த்தைகளையா நான் பேசிவிட்டேன்?''

''இதற்கெல்லாம் நான் பதில் சொல்ல முடியாது.''

''அதுதான் ஏன்?''

சரிதா அவனைத் தவிப்போடு பார்த்தாள். ஒரு விநாடிக்கு மேல் பார்க்க இயலாதவளாய் பார்வையை விலக்கிக் கொண்டு.. வைகுந்தைப் பார்த்தாள். அவளது விழிகள் 'எனக்கு உதவி செய்..' என்பது போல் வைகுந்தைப் பார்த்து யாசித்தன... அவனோ தீவிரமாய் யோசிப்பவன் போல் பாவனை செய்து கொண்டு வேறு திக்கில் பார்த்தான். சரிதாவின் கை விரல்கள் தந்தியடிக்க ஆரம்பித்தன.

## 8

கண்ணன் சரிதாவின் தவிப்பான பார்வையைக் கண்டு இரக்கமுற்றான். தன்மையாய் அவளிடம் பேச ஆரம்பித்தான்.

''ஏன் நெர்வஸ் ஆகிறீர்கள் சரிதா.. இப்போது நான் ஒரு கேள்வி கேட்கலாமா?''

''ம்ம்... என்ன கேட்கப் போகிறீர்கள்?''

''கேட்பதற்கு முன்னரே இவ்வளவு அவசரமான விசாரணையா?''



''சரி... கேளுங்கள்.''

''நீங்கள் ஒன்றும் உங்கள் அக்காவைப் போல... கல்யாணமே வேண்டாம் என்று முடிவெடுத்து விடவில்லையே...''

''ஹரிதா ஒன்றும் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவளுக்கென்று சில எதிர்பார்ப்புகள்... கொள்கைகள் இருக்கின்றன.. அதன் பிரகாரம் அவளுக்கு மாப்பிள்ளை அமையவில்லை... அவ்வளவு தான்.''

''ஓகே... ஓகே... உங்களுக்கு என்று எதிர்பார்ப்புகளும்.. கொள்கைகளும் உண்டு தானே.. அவற்றில் பாதியாவது நான் வருகிறேனா..?''

''நான் இப்போதுதான் படித்துக் கொண்டிருக்கிறேன்...''

''ஃபைனல் இயர் எக்ஸாம் எழுதி விட்டீர்களே...''

''என் கல்யாணத்திற்கு இப்போது என்ன அவசரம்.''

''எனக்கும் அவசரமில்லை. நாம் நிதானமாக.. ஆற அமரக் காதல் செய்துவிட்டு.. அப்புறமாய் கல்யாணம் செய்து கொள்ளலாமே.''

''நாம் காதல் செய்வதா..? விளையாடுகிறீர்களா.''

''விளையாடத்தான் ஆசை. எங்கே.. நீங்கள்தான் ஒரு முடிவிற்கு இன்னும் வர மாட்டேன் என்கிறீர்களே...''

''நான் முடிவு பண்ண இதில் என்ன இருக்கிறது? ஹரிதாதான் முடிவு செய்ய வேண்டும்...''

''அது அண்ணனின் வாழ்க்கைப் பிரச்னை.. நீங்கள் என் பிரச்னையைக் கொஞ்சம் கவனியுங்கள்.''

சரிதா சங்கடமுற்றாள். 'என்ன சொன்னாலும்.. இவன் பிடித்த பிடியை விட மாட்டேன் என்கிறானே.. என்ன செய்வது' என்ற குழப்பத்தில் ஆழ்ந்தாள்.

இவ்வளவு பேசியும்.. அவளால் அவனது முகத்தைப் பார்த்து இன்னும் பேச முடியவில்லை என்பதை சரிதா உணர்ந்து கொண்டாள்.

ஆண்மை ததும்பும் அவனது முகத்தைப் பார்க்க அச்சம் தனக்கு எதற்காக வருகிறது என்று அவளுக்குப் புரியாமல் இல்லை.

அவனது கண்ணோடு கண் நோக்க முடியாமல்.. நிலம் நோக்கும் நிலைமையில்.. அவனோடு ஏன் வாதாட வேண்டும் என்ற கேள்வி ஒன்றும் அவளது நெஞ்சத்தில் எழாமல் இல்லை.

ஆனாலும்.. இயல்பான பெண்மையின் தயக்கம் அவளைக் கட்டிப் போட்டது... இரண்டு நாட்களுக்கு முன்னால் அவன் யாரென்று கூட அவளுக்குத் தெரியாது... இன்று.. நான் தான் உனக்கு எல்லாமும்.. என்று அவன் வந்து விட்டால்.. உடனே அவனது காதலையும்.. உறவையும் ஏற்றுக் கொள்வதா?.. அது எப்படி சாத்தியமாகும்.. என்பதுதான் அவளுக்கு.

அவள் தன் விரல் நகங்களை ஆராய்ந்தபடி கண்ணனிடம் கூறினாள்.

''நேற்று வைகுந்த் அத்தான் வந்து உங்களைப் பற்றிச் சொல்லும் வரை எனக்கு நீங்கள் யாரென்று கூடத் தெரியாது.''

''இப்போது தெரிந்து கொண்டாயில்லையா?''



''காதலுக்கும்.. கல்யாணத்திற்கும் இந்த.. இரண்டு நாள் அறிமுகம் போதுமா? போதாது என்று தான் நான் நினைக்கிறேன்.''

''நான் அப்படி நினைக்கவில்லையே... அதுதான் என் வருங்கால மனைவின்னு அண்ணன் உன் அக்காவைக் காட்டினார். நான் அவங்களைப் பார்க்கும்போது.. அருகில் நின்ற உன்னையும் பார்த்தேன்... அந்த நொடியில் ஏழேழு ஜென்மங்களாய்.. நமக்குள் பந்தம் இருக்கிறாற் போல்தானே நான் உணர்ந்தேன்?''

''நான் உணரவில்லையே...''

''அது ஒரு நாள் நிகழும்.. சரிதா.. உன்னை.. வாங்க.. போங்கன்னு கூப்பிடுவது என்னால் முடியாது.. வா.. போன்னுதான் கூப்பிட முடியும்... என்று உன்னைப் பார்த்தேனோ.. அன்றே.. நீதான் என் மனைவின்னு நான் முடிவெடுத்து விட்டேன்.''

சரிதா தவித்துப் போனாள். கம்பீரமான ஆண் மகன் ஒருவன் காதல் சொல்வதைக் கேட்கும்போது அவளுக்குள் ஏதோ ஓர் உணர்வு பொங்கி எழுந்தது.

''நான்.. நான்..'' அவள் தடுமாறினாள்.

''ஏன் தடுமாறுகிறாய் சரிதா..? என்னிடம் பயம் வேண்டாம். நான் கேட்பதெல்லாம் இதுதான்.. நீ என்றாவது ஓர் நாள் கல்யாணம் செய்து கொண்டு தானே ஆக வேண்டும்?... அன்று யாராவது ஒரு மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டுவதை விட.. எனக்கு கழுத்தை நீட்டலாமே... நான் தாலியோடு தயாராய் நிற்கிறேனே...''

''என் கல்யாணத்திற்கு இப்போது அவசரமில்லை என்றேனே...''

''நானும்... என்றாவது ஓர் நாள்... என்றுதானே சொன்னேன்? இன்றோ.. நாளையோ.. என்று சொல்லவில்லையே...''

சரிதா லேசாய் அவனது முகம் பார்த்தாள். அவன் அவளது பார்வையைக் கண்டு லேசாய் புருவம் உயர்த்தியபடி.. தன் முடியைக் கோதிக் கொண்டான்.

'இவனுக்கு நான் இணையா?' அவளுள் தாழ்வு மனப்பான்மை பொங்கி எழுந்தது. அதை வாய் விட்டுச் சொல்லவும் செய்தாள்...

கண்ணனின் முகத்தில் ஆச்சர்யம் தெரிந்தது...

''ஏன்.. எந்த வகையில் நீ எனக்கு இணையாக மாட்டாய் என்று நீ நினைக்கிறாய்?''

''முதலில்.. நான் மிடில் கிளாஸ் குடும்பத்தில் பிறந்தவள்..''

''அதனால் என்ன..? அது ஒரு குறையா?''

''பின்னே இல்லையா?''

''இல்லையே.. காதல்... அந்தஸ்து வித்தியாசம் பார்க்காது.. அத்தோடு என் மனைவி.. என்னில் சரி பாதி.. என்னுடையதென்று இருக்கும் அனைத்தும் அவளுக்கும் சொந்தம்.. அப்படியிருக்கையில் நீயாய் ஏன் குழம்பிக் கொள்கிறாய்?''

''வந்து.. வந்து...''

''அதுதான் வந்து விட்டாயே...''

''அது வந்து.. நீங்கள்... நிறையப் படித்தவர். பாரின் போய் படித்து விட்டு வந்திருக்கிறீர்கள்.. நான் வெறும் டிகிரிதான்.''



கண்ணன் இப்போது வாய் விட்டுச் சிரித்தான்.

''பைத்தியம்.. நான் ஊரையே ஆளும் ராஜாவாய் இருந்தாலும் உன் கைப்பிடியில்தானே இருக்க விரும்புகிறேன். என் படிப்பு.. என் தொழிலுக்காக.. உன்னை விட நான் மேல் என்று நிலை நிறுத்துவதற்காக இல்லை.. இனிமேல் இப்படிப் பேசாதே...''

''அது மட்டும் இல்லை...''

''இன்னும் என்ன? எதுவாக இருந்தாலும் மனம் விட்டுப் பேசி விடு சரிதா... மனதில் போட்டு உழப்பிக் கொள்ளாதே...''

''நீங்கள்... நீங்கள்...''

''நான்.. நான்..?''

''நீங்கள்... மிகவும் அழகாக இருக்கிறீர்கள்...''

சரிதாவின் முகம் குங்குமமாய்.. சிவந்து விட்டது. கண்ணனின் முகத்தில் மத்தாப்பூ ஒளிர்ந்தது.

தான் விரும்பும் பெண்.. தன்னை அழகனென்று கூறி விட்ட சந்தோசம் அவன் முகத்தில் பொங்கி வழிந்தது.

''ஏய்.. என்ன சொல்கிறாய்? உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா?''

''நான் அப்படிச் சொல்லவில்லையே...''

''அப்போ.. என்னைப் பிடிக்கவில்லை.. அப்படித் தானே...''

''நான் அப்படியா சொன்னேன்?''

கண்ணன் முகத்தில் மெலிதான கோபம் வந்தது. அவன் திரும்பி வைகுந்தைப் பார்த்தான்.

''அண்ணா.. நாங்கள் பேசி.. ஓர் முடிவிற்கு வந்த பின்னால் சொல்கிறேன். இப்போது நீ கிளம்பேன்.''

''பாருடா... இவளுக்கு உன்னை அறிமுகம் செய்து வைக்கும் வரை நான் உனக்கு தேவைப்பட்டேன். இப் போது காரியம் முடிந்ததும்.. கழட்டி விடப் பார்க்கிறாய்.''

''உன்னை கூட வைத்துக் கொண்டு.. எப்படி நான் காதல் செய்வது?''

கண்ணன் போட்டுத் தாக்க.. வைகுந்த கடகடவென்று சிரித்தான். சரிதா பதறிப் போய் எழப் போனாள்...

''நீயேன் எழுந்திருக்கிறாய்.. உட்கார்.''

''இல்லை.. அவர் போக வேண்டாம்.''

''ஏன்.. தனியாக என்னிடம் பேச உனக்கு என்ன பயம்? நான் உன்னை விழுங்கி விடுவேனா?''

''ப்ளீஸ்... அத்தான்.. போய் விடாதீர்கள்.''

''ஸாரி சரிதா. கண்ணனும் நீயும் பேசி.. ஓர் முடிவிற்கு வாங்க.. ஆனால் சீக்கிரமாய் ஓர் முடிவிற்கு வந்து விடுங்கள். மாதக் கணக்காய் நான் காத்திருக்கிறேன். என் காதலுக்கும் ஓர் வழி பண்ணுங்க.''

வைகுந்த் எழுந்து சென்று விட்டான். சரிதாவின் கை விரல்கள் இப்போது நன்றாக நடுங்க ஆரம்பித்து விட்டன.

''ஏன் இப்படி நடுங்குகிறாய்..?''

''ஒன்றும் இல்லை.''

அவளுக்கு நா வறண்டது. அதை உணர்ந்து கொண் டவனாய் தண்ணீர் தம்ளரை அவள் முன் நகர்த்தினான் கண்ணன். அவள் மடக்.. மடக்கென்று ஒரே மூச்சில் அதைக் காலி செய்தாள்.



''போதுமா?''

''ம்ம்...''

''இதோ பார் சரிதா.. ஏன் இப்படிப் பயப்படுகிறாய்..?''

''நான் இப்படியெல்லாம் யாரோடும் தனியாக உட் கார்ந்து பேசியதில்லை...''

கண்ணனின் முகம் கனிந்தது.. அவளது மென்மை யான சுபாவத்தைக் கண்டு அவன் இன்னும் அவள் மீது அதிகமான மையல் கொண்டான்.

''தேங்க்ஸ்... இதைவிட எனக்கு வேறென்ன வேண் டும்?''

''புரியவில்லையே...''

''உனக்கு இது புரியாது. நான் விரும்பும் பெண்ணிற்கு. முதன் முதலாய் நான் மட்டும்தான் அறிமுகமாகியிருக் கிறேன் என்பதில் எனக்கு மிகவும் சந்தோசம்.''

சரிதாவிற்கு ஏதோ புரிவது போல் இருந்தது. அவள் தன் முன் இருந்த நூடுல்ஸ் பிளேட்டில் முள் கரண்டி யால் அலைந்தபடி பேசாமல் இருந்தாள்.

''சரிதா...''

''ம்ம்..''

''என்னைக் கொஞ்சம் நிமிர்ந்து பாரேன்.''

கண்ணனின் குரல் மயிலிறகாய் அவளது மனம் வருடிச் சென்றது...

'நான் எப்படி இவன் முகத்தை நிமிர்ந்து பார்ப்பது...' அவள் முகச் சிவப்புடன்.. மேஜை மேலிருந்த பார்வையை உயர்த்தாமல்,

''சொல்லுங்கள்..'' என்று சொன்னாள்.

''ஏன்.. என்னைப் பார்க்க மாட்டாயா? என்னைப் பார்க்க உனக்குப் பிடிக்கவில்லையா?''

''நான் அப்படிச் சொன்னேனா.. உங்களைப் பார்க்க யாருக்குத்தான் பிடிக்காது? நீங்கள் அழகானவர்.''

''ஊருக்கே என்னைப் பிடித்தாலும்.. உனக்கு என்னைப் பிடித்திருக்க வேண்டாமா? எனக்கு அதுதானே வேண்டும்.''

சரிதாவின் கண்கள் லேசாகக் கலங்கின. அவள் குரல் தழுதழுத்தது.

''நான்.. நான்.. நான் ஒன்றும் அழகியில்லை.''

''ஏய்.. என்ன சொல்கிறாய்..? நீயா அழகு இல்லை..? பைத்தியம்.. கண்ணாடியில் உன்னை நீ பார்த்துக் கொண்டதே இல்லையா? யு ஆர் கிளாஸிக் பியூட்டி.''

''இல்லை.. நீங்கள் எனக்காக சொல்கிறீர்கள்.''

''ஏய்... இது உனக்குப் புரிந்து விட்டதா? நான் உனக்காகத்தான் சொல்கிறேன். நீ எனக்கு வேண்டும். அதற்காகத்தான் சொல்கிறேன்.''

''ஏதோ ஒரு காரணத்தால் என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் உங்கள் அழகுக்கு முன்னால்.. என் அழகு நிற்க முடியாது.''

''அடி வாங்கப் போகிறாய் சரிதா. ஐ லைக் யு ஸோ மச்.''

''அதுதான் எப்படியென்று எனக்கு விளங்கவில்லை.''

''என்ன சரிதா.. இப்படிக் குழந்தைத்தனமாக இருக்கிறாய்? எப்படி.. இப்படி ஓர் நினைவு உனக்குள் வந்தது?''



''உங்கள் அழகைப் பார்த்த பின்னால்தான்.''

''லுக் சரிதா.. நீ என்னை அழகனென்று சொன்னதில் எனக்கு ரொம்பவும் சந்தோசம்... ஆனால் எனக்கு நீ இணையில்லையென்று நினைக்கிறாய் பார்... அதுதான் முட்டாள்தனம். நீ அழகு சரிதா.. உன்னைப் பார்த்த மறு நொடியே.. உன் அழகு என்னை வசீகரித்து விட்டது. அது ஏன் உனக்குப் புரியவில்லை.''

''உண்மையாகவா சொல்கிறீர்கள்?''

''நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்?''

''என் பக்கத்தில் ஹரிதாவும் இருந்திருப்பாளே.''

''ஆமாம். அண்ணியும் இருந்தாங்க...''

''அவளைப் பார்த்த பின்னுமா என்னை அழகு என்று சொல்கிறீர்கள்? எங்கள் இருவரில் அவள்தான் அழகி.''

''அப்படி யார் சொன்னது?''

''எல்லோரும் தான்.''

கண்ணன் சரிதாவையே.. இமைக்காமல் பார்த்தான். அவளது விழிகளில் தெரிந்த தவிப்பு அவனை இளக்கியது.

''உன்னிடம் நான் ஓர் உண்மையைச் சொல்லவா?''

''என்ன உண்மை?''

''அண்ணன் இதுதான் உன் அண்ணின்னு காட்டும் போது.. பொதுவாகத்தான் காட்டினார்... உங்கள் இருவரில் யார் அண்ணியென்று எனக்குத் தெரியாது. ஆனால் உங்கள் இருவரையும் பார்த்தபோது... நீ உடனே என் மனதில் பதிந்து விட்டாய்... உன்னை என் அண்ணியென்று அண்ணன் சொல்லிவிடக் கூடாதே என்று நான் தவித்துப் போனேன் தெரியுமா?''

''நிஜமாகவா சொல்கிறீர்கள்?''

''ம்ம்.. உன் அக்காவை அவர் காட்டியதும்.. நான் நிம்மதியாய் மூச்சு விட்டேன். உடனே.. நான் என் மனைவியைக் காட்டவான்னு அண்ணனிடம் கேட்டேன். அவர் ஆச்சரியமாய் 'யாருடா அது'ன்னு கேட்டார். நான் உன்னைக் காட்டினேன்.''

ஒரு கோடி மலர்கள்.. கூடை கூடையாய் தன் தலைமேல் பூமாரியாய் பொழிவதைப் போல் உணர்ந்தாள் சரிதா. அவள் மனதில் சாரல் அடித்தது.

## 9

சரிதாவின்.. அழகிய நீள்வடிவக் கண்கள் அகன்று விரிந்தன. இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று நம்ப முடியாத திகைப்புடன் அவள் அமர்ந்திருந்தாள்.

''ஹரிதாதானே எங்கள் வீட்டிலேயே அழகு..?''

''எனக்கு நீதான் அழகு.''

சரிதா உதட்டைக் கடித்துக் கொண்டு.. லேசாக விழி உயர்த்தி கண்ணனைப் பார்த்தாள். அவன் முடி கோதிச் சிரித்தான்.

'இந்த அழகன் என்னைக் காதலிக்கிறானா..' அவளால் இன்னும் நம்ப முடியவில்லை.

''யு ஆர் ஸோ ஹேன்ட்சம்..'' என்றாள் அவள்.

அவனது இதழ்கள் பெருமையுடன் வளைந்தன... அவளது முகத்தை ஊன்றிப் பார்த்தான்.



''உனக்கு ஒன்று தெரியுமா சரிதா..?''

''என்ன..?''

''நான் என் தொழிலில் எவ்வளவோ வெற்றிகளைப் பெற்றிருக்கிறேன். அவை தந்த சந்தோசத்தைவிட அதிகமான சந்தோசத்தை உனது இந்த வார்த்தைகள் எனக்குத் தருகின்றன.''

''நான் உண்மையைத் தானே சொன்னேன்.''

''அது உண்மையாய் இருப்பதற்கு உனக்கு என் நன்றி.''

''என்னைக் கேலி செய்கிறீர்களா?''

''இல்லைடா... என் காதலியின் வாயால் என்னை ஹேன்ட்சம் என்று சொல்லி விட்டாளே என்ற நிறைவில் இதைச் சொல்கிறேன்...''

சரிதா இப்போது விழி உயர்த்தி கண்ணனை நேருக்கு நேர் பார்த்தாள். அவளது கண்களில் இப்போது காதல் உதயமாகி இருந்தது.

''உங்களுக்கு உண்மையிலேயே என்னைப் பிடித்திருக்கிறதா?''

''எத்தனை முறைதான் இதைக் கேட்பாய்?''

''ஏன்.. நான் கேட்டால் பதில் சொல்ல மாட்டீர்களா?''

''உனக்குச் சொல்லாமல் யாருக்குச் சொல்லப் போகிறேன்? உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.''

''கண்ணன்...''

சரிதா முதன் முதலாய் அவனைப் பெயர் சொல்லி அழைத்தாள்...

''என் பெயர் இவ்வளவு அழகானதா?''

''கண்ணன் என்ற பெயர் ஆளை வசீகரிக்கும் அழகுடையது ஆயிற்றே. இது என்ன நீங்கள் இப்படிக் கேட்கிறீர்கள்..''

''நீ என் பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போதுதான்.. அதன் அழகே எனக்குத் தெரிகிறது.. முன் எப்போதையும் விட என் பெயர்.. இப்போது ரொம்பவும் அழகாக இருப்பது போல் தோன்றுகிறது.''

கண்ணன் தன் கரம் நீட்டி சரிதாவின் கையைப் பற்றிக் கொண்டான். சரிதாவின் கை விரல்கள் நடுங்கின... இருந்தாலும் அவள் தன் கையை உருவிக் கொள்ளவில்லை...

அவளது மெல்லிய விரல்களின் நடுக்கத்தை உணர்ந்த கண்ணன்... அவள் தன் கரத்தை விலக்கிக் கொள்ளாமல் இருப்பதை கவனிக்கவே செய்தான். அவன் மனதில் காதலின் ஜ்வாலை பற்றிக் கொண்டது.

அவளது தளிர் விரல்களின் நடுக்கம் போக்க.. தன் விரல்களால் மென்மையாக அழுத்தினான். சரிதா சிலிர்த்துப் போனாள்.

முதன் முதலாய் ஓர் ஆணின் ஸ்பரிசம் உணர்ந்தவளின் உடலில் ஓர் ரசாயன மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது.. அவள் பேச்சிழக்க.. கண்ணனோ.. அவளது பேச்சைத் தூண்டினான்.

''எதையோ சொல்ல நினைத்தது போல் இருந்ததே...''

''சொல்ல வந்ததை.. நீங்கள்தான் சொல்ல விடாமல் செய்கிறீர்களே.''



''நான் என்ன செய்தேன்?''

அவன் அறியாப் பிள்ளை போல் வினவினான். அவள் பதில் சொல்லத் திணறினாள்.

'இவனுக்கு கண்ணன் என்று பொருத்தமாகத்தான் பெயர் வைத்திருக்கிறார்கள். இவன் காதல் செய்வதில் மன்னன்... கையைப் பிடித்து விரல்களில் விளையாடியபடி.. நான் என்ன செய்தேன் என்று கேட்கிறானே...'

அவனது விழிகளில் சிரிப்பு இருந்தது. அவன் பேச்சை இன்னும் ஊக்கினான்.

''சொல்லேன்.. ஏன் பதில் சொல்லாமல் இருக்கிறாய்?''

''கண்ணன்.. ப்ளீஸ்...''

''ஏன்... நான் என்ன செய்தேன்.''

''ப்ளீஸ்...''

''ஓகே.. ஓகே.. நீ சொல்ல வந்ததைச் சொல்...''

''கண்ணன்.. நீங்கள் பெரிய பணக்காரர்.''

''அதனால் என்ன?''

''அதிகம் படித்தவர்.. பெரிய தொழிலதிபர்.''

''இருக்கட்டுமே...''

''இதனால் எல்லாம் நான் உங்களிடம் மயங்கவில்லை...''

கண்ணனின் முகம் தீவிரமானது...

''சொல்...''

''கண்ணன்.. நான் உங்களை... உங்களுக்காகவே நேசிக்கிறேன். இந்த உலகில் உள்ள பெண்கள் அனைவரிலும்.. நீதான் எனக்கு அழகியாகத் தெரிகின்றாய் என்று நீங்கள் சொன்னதை உண்மையாகச் சொன்னீர்கள். அந்த ஒரு

வார்த்தை... என்னை உங்களிடம் அடிமைப்படுத்தி இருக்கிறது. நான் உங்களைக் காதலிக்கிறேன் கண்ணன்.. யெஸ்.. ஐ லவ் யூ.''

கண்ணன் அவளது கரம் பற்றி.. அதில் தன் இதழ் ஒற்றி எடுத்தான். சரிதா மெய் சிலிர்த்துப் போனாள்.

அவர்கள் பேசினார்கள். ஒருவரின் குடும்பம் பற்றி மற்றவருக்கு சொல்லிக் கொண்டார்கள்.

''என் பெரியப்பாவும்.. அப்பாவும் ராமன்.. லட்சுமணன் போல அவ்வளவு ஒற்றுமையானவர்கள்.. பெரியப்பாவிற்கு அண்ணனும்.. மீனாவும் என்று அளவாய் இரண்டு குழந்தைகள்.''

''உங்கள் வீட்டில்..?''

''நான்... என் தம்பி மோகன்... தங்கை வித்யா...''

''ஓ... தம்பியும் தங்கையும் என்ன செய்கிறாங்க..?''

''தம்பி மேலே படிக்க என்னைப் போல் பாரின் போயிருக்கிறான். தங்கை சின்னப் பெண். இப்போது தான் பிளஸ் டூ வந்திருக்கிறாள்.''

''எங்கள் வீட்டில் நானும் ஹரிதாவும் தான். ஹரிதாவைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. உங்களுக்குத் தெரியும்.''

''உன்னைப் பற்றியும் நீ சொல்ல வேண்டியதில்லை. எனக்குத் தெரியும்.''

சரிதா பேசாமல் கண்ணனையே பார்த்தாள். சற்று முன் வரை அறிமுகம் இல்லாத ஒருவர். சற்று நேரத்திற்குள்.. சகலமும் ஆகிப் போன விந்தையை நினைத்து வியந்து போனாள்.



'யார் இவன்.. எங்கிருந்து வந்தான். எனக்கென்று பிறந்து என்னைத் தேடி வந்திருக்கிறானே... இவனை என்னுடையவனாக அடைய நான் என்ன தவம் செய்தேன்?'

தனியாக அங்கு வந்தவள்.. அவன் துணையுடன் திரும்பிச் சென்றாள்.

## 10

கண்ணனும்.. சரிதாவும் தினமும் சந்தித்துக் கொண்டனர். எவ்வளவு நேரம் பேசினாலும் அவர்களுக்கு போதாமல் போக.. நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தனர். இரவு நேரங்களில்.. சரிதாவின் போன் அணைக்கப்படாமல் உயிர்த்து இருந்தது. விடியும்போது உறங்கி.. அவள்.. அரக்கப் பரக்க எழுந்து அலுவல்களைப் பார்க்க ஆரம்பித்தாள்.

தாமதமாக எழுந்து கொள்ளும் இளைய மகளை வியப்புடன் பார்த்தாலும் கௌசல்யா கடிந்து கொள்ளவில்லை.

'பாவம்.. பரிட்சைக்கு விழுந்து.. விழுந்து படித்த களைப்பு.. பரிட்சை தான் முடிந்து விட்டதே.. இனி காலேஜ் போகும் வேலை இல்லை. மேலே படித்தாலும்.. வேலையைத் தேடினாலும்.. கொஞ்ச காலம் கழித்துத் தானே செய்ய வேண்டும்? அதுவரை ரெஸ்ட் எடுத்துக் கொள்ளட்டுமே.'

ஆனால் கௌசல்யா சரிதாவைக் கண்டு கொள்ளாமல் விட்டது போல் வைகுந்த் விடவில்லை.

கண்ணனும்.. சரிதாவும் கடற்கரையில் அமர்ந்து.. கடலை சாப்பிட்டவாறு கடலை வெறித்துக் கொண்டு.. கதை பேசிக் கொண்டிருக்கையில் கரடியாய் அவர் களுக்கு நடுவே புகுந்தான்.

''நல்லாயிருக்கும்மா உன் நியாயம்..? உன்னைவிடப் பெரியவள் உன் அக்கா. அவளை என்னோடு சேர்த்து வைன்னு நான் கேட்டால் நீ என் தம்பியோடு உன்னைச் சேர்த்துக்கிட்டு ஊரை வலம் வருகிறாய்.. இதுதான் எனக்கு நீ உதவும் லட்சணமா?''

''இல்லை அத்தான்.. அது வந்து.''

''என்ன வந்து போயின்னு இழுக்கிற? ம்ம்...''

''அண்ணா.. அவளை ஏன் தேவையில்லாமல் திட்டு கிறீர்கள்? பாவம்.. அவள் முகமே வாடிவிட்டது. அவள் என்ன செய்தாள்?''

''வாடா என் அருமைத் தம்பி.. தங்கக் கம்பி.. ஏண்டா.. உன்னை உன் காதலியோடு சேர்த்து வைத்த எனக்கு நீ செய்யும் நன்றிக் கடன் இதுதானா..?''

''அண்ணா... சும்மா... சும்மா எங்களையே திட்டாதீர் கள். நாங்கள் உங்கள் விசயமாய் பேசுவதற்காகத்தான் தினமும் சந்திக்கிறோம். இல்லையா சரிதா?''

''ஆமாம்.. ஆமாம்.''

''நல்லா ஆமாம் போடுகிறாயம்மா.. ஆமாம்டா. தெரியாமல் தான் நான் கேட்கிறேன்... நேற்று முட்டுக் காட்டில் முழு நாளையும் செலவழித்தீர்களே.. அதில்.. ஒரு வினாடியாவது என்னைப் பற்றியும் என் ஹரி தாவைப் பற்றியும் பேசியிருப்பீர்களா?''



''அது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''நான்தான் உன்னை நிழல் போலத் தொடர்ந்து வந் தேனே.''

''என்னது...''

சரிதா வெட்கிப் போனாள். யாரும் தங்களைக் கவ னிக்கவில்லையென்ற நினைவில்.. கண்ணனின் தோள் மீது சாய்ந்த தருணங்களும்.. அவனது கை கோர்த்து நடந்த நேரங்களும் நினைவில் வந்தன. இடையில் ஒரு தரம் கண்ணன் அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டதும் கூடவே நினைவுக்கு வர அவள் தலை குனிந்தாள்.

'எல்லாவற்றையும் இவன் பார்த்து விட்டானா..?'

சரிதாவின் சங்கடத்தைக் கண்ட கண்ணன்.. சினத் துடன் வைகுந்தைப் பார்த்தான்.

''அண்ணா இது அநியாயம்...''

''என்ன அநியாயத்தை நீ கண்டு விட்டாய்?''

''எங்களுக்கென்று பிரைவஸியே கிடையாதா?''

''கிடையாது.''

''அராஜகமாய் பேசுகிறீர்கள்.''

''அப்படித்தான் பேசுவேன். ஏண்டா.. நீங்கள் இருவரும் சேர்வதற்குக் காரணமாக இருந்தவனே நான்தான்... எனக்கே அல்வா கொடுக்கப் பார்க்கிறீர்களா?''

''இப்போது நாங்கள் என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

கண்ணன் சமாதானத்திற்கு வரவும்.. வைகுந்த் வேகம் தணிந்தான்.

''அப்படிக் கேள்.. சொல்கிறேன். நம் திட்டப்படி சரிதா.. அவளது அக்காவிடம் நடிக்கட்டும்.''

''அவள் எதற்கு நடிக்க வேண்டும்?''

''நீ அடி வாங்கப் போகிறாய்.''

''அவசரப் படாதீர்கள் அண்ணா. நான் சொல்ல வந்ததே வேறு.''

''என்ன சொல்ல வந்தாய்..?''

''என்னைக் காதலிப்பது போல் அவள் ஏன் நடிக்க வேண்டும்? நாங்கள்தான் உண்மையிலேயே ஒருவருக் கொருவர் காதலித்துக் கொண்டு தானே இருக்கிறோம். அதைத்தான் சொன்னேன்.''

''உங்கள் காதலுக்கு நான் குறுக்கே நிற்பது போல் நடிக்க வேண்டுமே.''

''அதுவும் உண்மைதானே.. எங்கள் காதலுக்கு குறுக்கே நிற்பது நீங்கள்தானே...''

கண்ணன் பெருமூச்சோடு.. அவனுக்கும்.. சரிதாவுக் கும் நடுவில் வந்து அமர்ந்திருந்த வைகுந்தைப் பார்த்துக் கொண்டே இதைக் கூறினான்.

வைகுந்த் அதைக் கண்டு கொள்ளவே இல்லை. முகத் தில் ஓர் கறார் தன்மையோடு அவன் பேசிக் கொண்டிருந் தான்.

''இப்ப இது உண்மையா.. இல்லை நடிப்பா என்பது முக்கியமில்லை. உங்களுக்காக ஹரிதா வந்து என்னுடன் பேச வேண்டும். அதுதான் எனக்கு முக்கியம்.''

''பேச வைக்கிறேன் அத்தான். நீங்கள் கவலையே படாதீர்கள்.''



சரிதா இதமாக அவனுக்குப் பதில் கூறினாள்.

''என்னவோம்மா.. என் வாழ்க்கையே உன் நடிப்பில் தான் அடங்கியிருக்கு.''

''என் வாழ்க்கையும்தானே அதில் அடங்கியிருக் கிறது?''

''இதைத்தானே அன்றைக்கு நான் சொன்னேன். நீ முறைத்தாய்.. முன் பின் தெரியாதவனைக் காதலிப்பதாக எப்படிச் சொல்வதுன்னு நியாயம் கேட்டாய்.. ம்ஹூம்.. இன்றைக்கு என்னடான்னா.. கடற்கரையில் கண்ண னோடு உட்கார்ந்து கடலை போட்டுக் கொண்டிருக்கிறாய்.''

''சும்மா கண் வைக்காதீர்கள் அண்ணா.''

''ஆமாம்டா. இந்தப் பெயர் எனக்குத் தேவைதான். உன் காதல் நிறைவேற வழி சொன்னேன் பாரு. அதற்கு நீ காட்டும் நன்றி இதுதானா?''

''ஐயோ அத்தான்.. இப்ப எதற்கு நீங்கள் இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்?''

''அது எதற்கென்று உனக்குத் தெரியாதாம்மா?''

''அத்தான்.. உங்களுக்கும் ஹரிதாவுக்கும் சீக்கிரம் கல் யாணம் ஆக வேண்டுமென்றுதான் நானும் விரும்புகிறேன்.''

''அடடா... எங்கள் மேல் எத்தனை பாசம் உனக்கு.''

''என்னத்தான் செய்வது..? நீங்கள் இருவரும் எங் களுக்கு மூத்தவர்களாகப் போய் விட்டீர்களே..''

''அதனால்...?''

''உங்கள் கல்யாணம் நடந்தால்தானே.. எங்களுக்கும் லைன் கிளியராகும். நாங்களும் காலா காலத்தில் கண வன் மனைவி ஆவோம்?''

"எப்படி ஒரு மாஸ்டர் பிளான்? ம்ம்... நீதானா.. நான் கல்யாணத்தையே நினைத்துப் பார்க்கவில்லையென்று சொன்னது?"

"அது அப்போ..."

"இப்போ...?"

"நான் கண்ணனின் காதலி..."

சரிதா வெட்கத்துடன் முகம் சிவக்க இதைக் கூறியதும்... கண்ணன் எழுந்து.. வைகுந்தைச் சுற்றிச் சென்று சரிதாவின் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

# 11

ஹரிதா அன்று கோபத்துடன் வீட்டிற்குத் திரும்பியிருந்தாள். முதல் மனைவி உயிரோடு இருக்கும்போதே.. திருமணத்தை மறைத்து இரண்டாவது திருமணம் செய்து கொண்ட ஒருவனை போலீஸில் பிடித்துக் கொடுத்துவிட்டு அப்போதுதான் வந்திருந்தாள்.

வாசலில் வண்டியை வேகமாய் கொண்டு வந்து நிறுத்திய மகளைக் கண்டதும்... வாசலில் இருந்த செடிகளுக்கு.. பைப் மூலம் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்த ஜெயராமன்..

"வாம்மா.." என்றார்..

"அதுதான் வந்து விட்டேனில்ல..? அப்புறமும் என்ன வாம்மான்னு வரவேற்க வேண்டியிருக்கு?" ஹரிதா எரிந்து விழுந்தாள்.



"ஏம்மா.. நான் இப்ப என்ன தப்பாகச் சொல்லி விட்டேன்?"

"ஆண்களுக்கு எதுவுமே தப்பில்லைதான்."

அவள் ஏதோ பிரச்னையுடன் வீட்டுக்கு வந்திருப்பது புரிய.. ஜெயராமன்,

"பொதுவாகப் பேசுவதை வீட்டுக்குள் வந்து பேசினால் எப்படிம்மா?" என்று வினவினார்.

"வீட்டுக்குள் வந்தால்.. வேறு பிரச்னைகளைப் பேசக் கூடாதா?"

"பேசும்மா.. பேசு.. தாராளமாய் பேசு.. இப்ப என்னதான் பிரச்னை?"

"உங்களைப் போன்ற ஆண்களால்தான் பிரச்னை."

"என்னைப் போல் ஒருவனா? யார் அவன்?"

"ஜோக்கா..? தெரியாமல்தான் கேட்கிறேன். உங்களுக்கெல்லாம் ஒரு பெண்டாட்டி பத்தாதா?"

ஜெயராமனின் கையில் இருந்த பைப் நழுவியது. அவர் அவசரமாய் அக்கம் பக்கத்தில் இருந்த வீடுகளைக் கவனித்தார்.

'நல்லவேளை... யாரும் கவனிக்கவில்லை..' என்ற நிம்மதியுடன் விடுவிடென்று வீட்டுக்குள் போனார்.

ஹாலில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்து தன் வழக்கம் போல பூத்தொடுத்துக் கொண்டிருந்த கௌசல்யா.

"செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி விட்டீர்களா?" என்று கேட்டாள்.

"பைப்பை போட்டிருக்கிறேன். தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது."

''பாதியிலேயே விட்டு விட்டு வந்து விட்டீர்களாக்கும். ஒரு வேலையைக்கூட ஒழுங்காக முடிக்கக் கூடாது என்ற சபதத்துடன் இருக்கிறீர்களா?''

''ஏண்டி நீ வேற.. கௌசி.. நான் உன்னைத் தவிர வேறு ஒருத்தியை என் மனதால் கூட நினைத்துப் பார்த்திருப்பேனாடி?''

''இது என்ன.. இப்போது போய் இப்படி ஒரு கேள்வி கேட்கறீங்க?''

''பதில் சொல்லுடி.''

''நீங்கள்தான் பெயருக்கு ஏற்றாற்போல் ஏகபத்தினி விரதனாச்சே.''

''என்னைப் பார்த்து உன் பெண் என்ன சொல்கிறாள் தெரியுமா?''

''என் பெண்ணா.. இது என்ன புதிதாய் பேசுகிறீர்கள்?''

''எல்லாமே புதிதாகத்தானே இருக்கிறது?''

''அப்படி அவள் என்ன கேட்டு விட்டாள்..?''

''உங்களுக்கெல்லாம் ஒரு பெண்டாட்டி போதாதான்னு கேட்கிறாள்.''

''என்னது..''

வீட்டுக்குள் வந்த ஹரிதாவைப் பார்த்து முறைத்தாள் கௌசல்யா.

''ஏய்.. இங்கே வாடி.''

''என்னம்மா..''

''அப்பாவைப் பார்த்து என்ன கேட்டாய்?''

''என்ன கேட்டேன்?''



''அதை நான் வேறு என் வாயால் சொல்லவேண்டுமா? ஏண்டி உனக்கு புத்தி இப்படிப் போகிறது? அப்பா.. என்ன ஆறு கல்யாணமா பண்ணிக் கொண்டிருக்கிறார்? பெண்டாட்டி பிள்ளைகள்தான் அவருக்கு உலகம்டி.. அந்த மனுசன்கிட்டப் போய் என்ன கேள்வி கேட்டிருக்கிற?''

''ஓ.. அதுவா.. நான் அப்பாவைச் சொல்லவில்லைம்மா.. ஆண் குலத்தைச் சொன்னேன். இவர்களுக்கெல்லாம் மனச்சாட்சியே கிடையாதும்மா. நித்திய கல்யாண புருசர்கள்.. எப்படித்தான் ஊருக்கு ஒரு கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்களோ.. ஏன் இவர்கள் முகரைக்கு ஒரு கல்யாணம் பத்தாதா? இவர்களை நம்பி ஒரு பெண்ணைக் கொடுத்ததே பெரிய விசயம்... ஒருத்திக்கு சோறு போட்டு ஒழுங்காய் குடித்தனம் பண்ணக் கூட வக்கில்லாத ஜென்மங்கள் ஊருக்கு ஒரு கல்யாணம் பண்ணிக் கொள்கிறதுகள்.''

மனைவியுடன் மகள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜெயராமன் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்திருக்கலாம்... அதை விட்டு விட்டு மகள் ஒட்டு மொத்த ஆண் குலத்தையும் திட்டுகிறாளே என்ற ஆதங்கத்தில் ஊடே வாயை விட்டு விட்டார்.

''அப்படியெல்லாம் எடுத்தேன்... கவிழ்த்தேன்னு பேசக்கூடாது ஹரிதா...''

''வேறு எப்படிப் பேச வேண்டும்ப்பா.''

''ஒரு கூடை பழத்தில் ஒரு பழம் அழுகலாக இருந்தால் அதை தூக்கி எறிந்து விட்டு.. மற்ற பழங்களைப் பார்க்க வேண்டும். எல்லாப் பழங்களுமேவா அழுகலாக இருந்து விடும்.''

இதைச் சொல்லிவிட்டு ஜெயராமன் மனைவியை பெருமையாக 'பார்.. நான் எப்படி இவளை மடக்கிவிட்டேன்' என்பது போல பார்த்துக் கொள்ள வேறு செய்தார்.

கௌசல்யா மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டாள். 'அவளே இப்போதுதான் புத்திமாறி ஒழுங்காகப் பேசுகிறாள்.

இந்த நேரத்தில் போய் இவர்.. ஆண் குலத்திற்காக வாதாடுவாரா? வேறு நேரமே இவருக்குக் கிடைக்கவில்லையா? இவர் வாயாலேயே.. இவர் வாங்கிக் கட்டிக் கொள்ளனும்னு வரம் வாங்கி வந்திருக்கிறாரா?'

கௌசல்யா பயந்தது தான் நிகழ்ந்தது. ஹரிதா ஜெயராமனை விரோதமாய் பார்த்தாள். ஜெயராமன் துணுக்குற்றார்.

'என்னடா இது.. இவள் இப்படியொரு பார்வை பார்க்கிறாள்.'

''அப்பா.. உங்களுக்கெல்லாம் கூடைப் பழம் உவமை ஒத்து வராதுப்பா.''

''என்னம்மா சொல்கிற... எனக்கா ஒத்து வராது..''

''உங்களுக்குன்னா.. உங்களுடைய ஆண் குலத்திற்கு...''

''அதைச் சரியாச் சொல்லும்மா...''

ஜெயராமன் கூறியதை ஹரிதா காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. அவள் பாட்டுக்குப் பேச ஆரம்பித்து விட்டாள்.

''இப்ப அதுவா முக்கியம்..? நான் சொல்வதைக் கேளுங்கப்பா.. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்ங்கிறதுதான் உங்களுக்கெல்லாம் பொருந்தும்.. உங்களுக்கெல்லாம் மனச்சாட்சியே கிடையாதுப்பா.''



''யாருக்கு எனக்கா கிடையாது.''

''நீங்கள் எல்லோரும் ஆண் குலமில்லை... அசுர குலம்.''

''அம்மாடி.. போதும்மா.. இதற்கு மேல் தாங்காது.''

''எப்படிப்பா.. எப்படி.. சிட்டுக் குருவிபோல் சுற்றிக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் ஓர் தாலியைக் கட்டி.. அவளுடைய கனவுகளை எல்லாம் கலைத்து மூலையில் போட்டுவிட்டு.. அடுத்த நாளே வேறொரு பெண்ணிற்கு புது மாப்பிள்ளையாய் போய் உட்கார உங்களுக்கெல்லாம் மனம் வருகிறது... பிடிபட்டுக் கொண்டவுடனே அந்த ராட்சஸன் சொல்லுகிறான். நான் அந்தப் பெண்ணிடம் வாங்கிய நகை.. பணம் எல்லாவற்றையும் தந்து விடுகிறேன் என்று.. அவளுடைய கன்னித் தன்மையை அவனால் திருப்பிக் கொடுக்க முடியுமா? கலைந்து விட்ட கனவுகளையும்.. கற்பனைகளையும்.. மீண்டும் நனவாக்க அவனால் முடியுமா? அவன் மேல் கொண்டிருந்த காதலும்.. வாழ்க்கையின் மீதான நம்பிக்கையும்.. ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடும் சிதைந்து போனதால் அந்தப் பெண்ணிற்கு மனச் சிதைவு ஏற்பட்டு இப்பொழுது பைத்தியக்காரி என்ற முத்திரை குத்தப்பட்டு ஹாஸ்பிடலில் அடைந்து கிடக்கிறாளே.. இனி அவளது வாழ்க்கை என்ன ஆகுமோ? ஒரு பூவைக் கசக்கி எறிந்து விட்டான் அந்த அயோக்கியன்... அவனைப் போன்ற ஆண்களுக்கா நீங்கள் சப்போர்ட் பண்ணுகிறீர்கள்..? ஷேம்.. ஷேம்..''

ஹரிதா கோபத்துடன் தன் அறைக்கு போய் விட்டாள். பேஸ்தடித்துப் போய் அமர்ந்திருந்த ஜெயராமன் பரிதாபமாய் தன் மனைவியைப் பார்த்தார்.

# 12

ஹரிதா கோபத்துடன் மாடிப்படிகளில் ஏறினாள்... மாடி ஹாலில் இருந்த இரு அறைகளில் ஒன்றைத் திறந்து கொண்டு உள்ளே போனவள்.. தன் ஹேண்ட் பேக்கை கட்டிலில் விசிறியடித்துவிட்டு... ஒரு டவலையும்.. நைட்டியையும் எடுத்துக் கொண்டு... குளியலறைக்குள் புகுந்தாள்.

அவள் குளித்து நைட்டிக்கு மாறி அறைக்குள் வருகையில் சரிதா கட்டிலில் அவளுக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தாள். முழங்கால்களைக் கட்டி.. அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தவளின் முதுகு குலுங்கிக் கொண்டிருந்தது.

சரிதா அமர்ந்திருந்த கோலம் இயல்பானதாக இல்லை என்பதைக் கண்ட ஹரிதாவிற்கு வேறு ஒன்றும் உறைத்தது. அறைக்கதவு தாழிடப்பட்டு இருந்தது. சரிதாதான் அறைக் கதவை தாழிட்டிருக்க வேண்டும் என்பதை யூகித்துக் கொண்ட ஹரிதா... தங்கையின் அருகே அமர்ந்தாள்.. மெதுவாய் அவள் பெயர் சொல்லி அழைத்தாள்.

''சரிதா... சரிதா..''

''ம்ம்...''

''என்னடி...''

''ம்ம்...''



''ஏய்.. நீ அழுவது போல் தெரிகிறதே... என்னடி விசயம்..''

''ம்ம்...''

''என்னவென்று நீ சொன்னால்தானே எனக்குத் தெரியும்...''

''ஹரிதா...''

''சொல்லேண்டி...''

''நான் மோசம் போய்விட்டேன் ஹரிதா...''

ஹரிதாவிற்கு 'பகீர்' என்றது.

'அடிப்பாவி... என்னிடம் பாதிக்கப்பட்ட பெண்கள் பேசும் யூசுவல் டயலாக் ஆச்சே இது.. இவள் எதில் மாட்டிக் கொண்டாள்?'

அவசரமாய் தங்கையின் அருகே அமர்ந்து அவளது முகத்தைத் தூக்கிப் பார்த்தாள்... சரிதாவின் கண்களில் இருந்து வந்த கண்ணீர் அவளது முகத்தைப் பூராவும் நனைத்து... முழங்கால்களில் அவள் முகத்தைப் புதைத்திருந்ததால்... அவளது உடையையும் சேர்த்து நனைத்திருந்தது.

''எதுக்குடி இப்படிக் குடம் குடமாய் கண்ணீர் வடிக்கிறாய்?''

'பின்னே.. அளவு தெரியாமல் கிளிசரினை கண்ணுக்குள் விட்டுக் கொண்டால் இப்படித்தானே ஆகும்...' சரிதா மனதிற்குள் அலுத்துக் கொண்டாள்.

''என்னடி பதிலே பேசமாட்டேன் என்கிறாய்?''

''எப்படிப் பேசுவது ஹரிதா... நான் எப்படிப் பேசுவது...?''

'இதையொன்றை எல்லோரும் சொல்லித் தொலைத்து விடுகிறார்கள்.. ஏன், வாயால்தான் பேச வேண்டும் என்பது இந்த மண்டூஸ்களுக்குத் தெரியாதா?'

ஹரிதா எரிச்சலுடன் சூள் கொட்டப் போனாள். ஆனால் அழுவது அவளுடைய உயிருக்குயிரான தங்கை ஆயிற்றே... அதனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சரிதாவை தேற்றினாள்.

''இப்படி அழுதால் முகம்தான் வீங்கும்... என்ன பிரச்சனை என்று நீ சொன்னால் தானே அதற்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க முடியும்?''

''ஹரிதா... நான் உன் தங்கையாக இருப்பதற்கே லாயிக்கில்லாதவள்...''

''அதை நீயாய் முடிவு செய்தால் எப்படி? விசயத்தைச் சொல்...''

''நீ எப்படி... யாரிடமும் மனதை விட்டு விடாமல்... ஒரு பெண் சிங்கம் போல் இருக்கிறாய்... உன்னைப் பார்த்தாவது நான் கற்றுக் கொண்டிருக்க வேண்டாமா?''

''நீ யாரிடம் உன் மனதை விட்டு விட்டாய்...?''

''கண்ணனிடம்...''

''கண்ணனா.... யார் அது?''

''பெரிய பிஸினெஸ் மேன்... சொந்தமாய் மோட்டார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நடத்துகிறார்...''

''அவனை உனக்கு எப்படித் தெரியும்?''

''அவன் என்று சொல்லாதே ஹரிதா...''



''ஆமாண்டி... இப்படி பதிபக்தி வைத்துத்தான் உன்னைப் போல் பெண்கள் எல்லோரும் கெட்டுப் போகிறீர்கள்.. உன்னைப் போல்தான் ஒருத்தி... எல்லாமே என் நாயகன்தான்னு ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டினாள்... அவன் என்னடாவென்றால்.. மறுநாளே இவளுடைய பணம்... நகைகளை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான்... போனவன் சும்மாயிருக்காமல் வேறு ஊரில் பெண் தேடி இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போனான். இந்தப் பெண் துணிந்து போலீஸ் ஸ்டேசன் போய் புகார் கொடுத்திருந்ததால் எல்லா ஸ்டேசன்களுக்கும் இவனைப் பற்றிய தகவல் போயிருந்தது... இவன் மாட்டிக் கொண்டான்...''

''இப்போது ஊரார் கதை உனக்கு எதற்கு ஹரிதா.. உன் சொந்தத் தங்கை.. என்னுடைய கதையைப் பாரேன்..''

''சரிடி... சொல்லு.. உன்னுடைய 'அவரை' உனக்கு எப்படித் தெரியும்?''

''என் பிரண்ட் மீனாவின் சித்தப்பா மகன்... அவளுடைய ஒன்று விட்ட அண்ணன் இவர்.. மீனாவின் வீட்டிற்குப் போனபோது இவரை சந்தித்தேன்.. அவர் என்னிடம் காதல் சொன்னார்.. எனக்கும் அவர் மேல் காதல் வந்துவிட்டது... ஓ.கே. சொல்லிவிட்டேன்...''

ஓரளவு உண்மை சொல்கிறோம் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு கதையைச் சொன்னாள் சரிதா.

''அப்புறம் என்ன ஆனது..?''

''இருவரும் ஈருடல்.. ஒருயிர்... ஆனோம்.. காதல் பறவைகளாய் இந்த சென்னை மாநகரைச் சுற்றிச் சிறகடித்துப் பறந்தோம்...''

"ஏண்டி... இவ்வளவு நேரமும் நல்லாத்தானே பேசிக் கொண்டிருந்தாய்.. இப்போது என்னடி... இந்த செந்தமிழில் சிந்து பாடுகிறாய்? அப்படியே சரோஜாதேவி வசனம் பேசுவதுபோல் இருக்கிறது... ஒழுங்காகப் பேசித் தொலை... நான் ஏற்கனவே கடுப்பில் இருக்கிறேன்..."

'நீ எப்போதுதான் ஒழுங்கான மூடில் இருந்தாய்? ஊர் பிரச்சனைகளை எல்லாம்.. உன் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டு அலைவதையே உன் பிழைப்பாக வைத்துக் கொண்டு.. கடுகடுவென்று தானே இருப்பாய்..' சரிதா மனதிற்குள் எரிச்சல் பட்டாள்.

"என்னடி பேசாமல் இருக்கிறாய்.."

"நீதான் கோபப்படுகிறாயே.."

"ஸாரி.. ஸாரி.. இப்போது சொல்..."

"அவரும் நானும் பழகினோம்... அவர் இல்லாமல் நானில்லையென்று ஆகிவிட்டேன்... இப்போது என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாது என்று குண்டைத் தூக்கிப் போடுகிறார்..."

"என்னது... காதலித்து விட்டுக் கை கழுவுகிறானா..? உன்னை யார் என்று நினைத்தான் அவன்.. இந்த ஹரிதாவின் தங்கையை ஒருவன் ஏமாற்றுவதா? அவனை உண்டு இல்லையென்று பண்ணி விடுகிறேன் பார்... இப்போதே மகளிர் போலீஸ் ஸ்டேசனுக்குப் போகிறேன்..."

"அப்படி நீ போனால்.. நான் விசத்தைக் குடித்துச் செத்துவிடுவேன்..."

"ஐயைய்யோ..."



ஹரிதா வேகம் அடங்கினாள்... சரிதாவின் முகத்தை தன்னோடு அணைத்துக் கொண்டாள். அவளது மனமும் உடலும் நடுங்கியது.

தமக்கை தன் மேல் வைத்திருந்த பாசத்தை உணர்ந்த சரிதாவிற்கு பெருமையாக இருந்தது.

'இவள் என் உடன் பிறந்தவள்...'

ஹரிதா தங்கையின் தலையை பாசத்துடன் வருடிக் கொடுத்தாள்... சரிதாவின் அருகே அமர்ந்து கண் கலங்க அவள் முகம் பார்த்தாள்... அவளது வார்த்தைகள் தழுதழுப்புடன் வெளியே வந்தன.

"என்ன வார்த்தை சொல்லி விட்டாய்... நான் ஒருத்தி உயிரோடு இருக்கும்போது உன்னை சாகவிட்டு விடுவேனா... என் உயிரைக் கொடுத்தாவது உன் வாழ்வை நான் சரி செய்வேன்..." ஹரிதா உறுதி கொடுத்தாள்.

வைகுந்தின் கணிப்பு மிகச் சரியாய் செயல்பட ஆரம்பித்தது.

## 13

ஹரிதா மிகத் துடிப்பானவள்... வேகமானவள்... கோபக்காரி... ஆனால் பெற்றவர்களின் மீதும்.. தங்கையின் மீதும் மட்டற்ற பாசம் கொண்டவள். அதுவும் சரிதாவிற்கு ஒன்றென்றால் அவள் துடித்துப் போய்

விடுவாள்.. தாங்க மாட்டாள்... எதை வேண்டுமானாலும் சரிதாவிற்காக விட்டுக் கொடுப்பாள்.

அவளுடைய இந்தக் குணத்திற்கு சரிதா மட்டும் ஏமாற்றும் வித்தை தெரிந்தவளாக... பசப்புக்காரியாக இருந்திருந்தால்.. ஹரிதாவின் நிலை மோசமானதாக அமைந்திருக்கும்.

ஆனால் சரிதா... ஹரிதாவுக்கேற்ற தங்கையாக.. பண்புள்ளவளாக இருந்தாள்.. இதுவரை அவள் தான் ஹரிதாவுக்கு பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறாள்.. மறந்தும் ஹரிதா சரிதாவுக்கு எதையும் செய்ய வேண்டிய தேவை வந்ததில்லை.

முதன் முறையாக சரிதா.. பெற்றவர்களிடம் கூடச் சொல்லாமல் தமக்கையிடம் தன் பிரச்சனையைக் கூறிக் கண்ணீர் வடித்தாள்.. ஹரிதா எப்பாடுபட்டாகிலும் தன் தங்கையை வாழ வைத்து விட வேண்டுமென்ற துடிப்புக் கொண்டாள்.

''இங்கே பார் சரிதா.. முதலில் அழுகையை நிறுத்து.. விசயத்தை முழுவதும் சொல்.. அந்தக் கண்ணன்... இப்போது ஏன் உன்னைக் கை கழுவப் பார்க்கிறான்? உன்னை மிடில் கிளாஸ் பெண்ணென்று நினைக்கிறானா? தெரிந்து தானே காதல் பண்ணினான்?''

''அவர் அப்படிப்பட்டவர் இல்லை ஹரிதா... அந்தஸ்து வித்தியாசம் எல்லாம் அவர் பார்க்க மாட்டார்...''

''உன் 'அவரை' நீ தான் மெச்சிக் கொள்ள வேண்டும். காதலித்தவளை கண்ணீர் விட வைத்திருக்கிறான்... நீ என்னவோ அவனுக்கு வக்காலத்து வாங்குகிறாய்... வேறு என்ன பிரச்சனை?''



''அவருடைய அண்ணன் கல்யாணத்திற்கு சம்மதிக்கவில்லையாம்...''

''என்னடி இது புதுக் கதையாய் இருக்கிறது... இந்த ஆளுக்கு தகப்பன் கிடையாதா? அண்ணன்தான் இவனை வளர்த்தானா?''

''ஐயோ அக்கா.. வாயைக் கழுவு... அதெல்லாம் கண்ணனின் தாய்... தகப்பனார் ஆரோக்கியமாய்... உயிரோடு இருக்கிறார்கள்.. இன்னும் நூறு வருடங்கள் தீர்க்காயுளாய் இருப்பார்கள்...''

''இதைப் பாருடா... இவளுக்கு வரும் ரோசத்தை.. ஏண்டி அவனே உன்னை வேண்டாம்னு சொல்லி விட்டான் என்கிறாய்... இதில் அவனுடைய தாய்.. தகப்பனுக்காக இப்படி உருகுகிறாயே...''

''ஆயிரம்தான் இருந்தாலும்... அவர்கள்... என் கண்ணனைப் பெற்றவர்கள்.. என் வருங்கால மாமனார்... மாமியார்...''

''நீ அவ்வளவு தூரத்திற்கு ஆசைப்படுகிறாய்.. அவன்தான் தேமேன்னு இருக்கிறானேடி.. இதில் உன் காதல் ஜெயித்து அவனைக் கை பிடித்துவிட்டது போல அவர்களை மாமனார்.. மாமியார் என்று உரிமை வேறு கொண்டாடுகிறாயே..''

''ஹரிதா... உன்னிடம் சொன்ன பின்னால் என் பிரச்சனை தீர்ந்தது போலத்தான்.. நீ என்னைக் கைவிட்டு விட மாட்டாய்...''

''ஊம்.. நீ என்னடி இப்படிச் சொல்கிறாய்.. சரி சொல்லு... அந்தக் கண்ணனுக்கு அண்ணன்... என்ன

செய்கிறான்.. ஏன் உங்களின் கல்யாணத்தை தடுக்கிறான்?''

''அவர் கண்ணனின் பெரியப்பா மகன்...''

''பெரியப்பா மகனா? பெரியப்பா மகனுக்கா இந்த அளவு இடம் கொடுத்து இருக்கிறான் உன் காதலன்...?''

''ஹரிதா.. அவரை அவன்... இவனென்று பேசாதேன்னு சொல்லியிருக்கிறேனா இல்லையா? அவரை மரியாதையுடன் பேசு...''

''இதோ பார்... முதலில் உன் 'அவர்' உன் கழுத்தில் தாலியைக் கட்டட்டும்... அதற்குப் பிறகு நான் அவர்.. இவர் போடுகிறேன்... அதுவரையில் இப்படித்தான் பேசுவேன்...''

சரிதா உம்மென்று முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு இன்னும் அழுக ஆரம்பித்தாள்... மனம் தாங்காத ஹரிதா.. தங்கையின் கண்ணீரைத் துடைத்துவிட்டு சமாதானப்படுத்தினாள்.

''இப்ப எதுக்கு கண்ணீர் விடுகிறாய்..? பெரியப்பா மகனெல்லாம் கன்ட்ரோல் பண்ணுமளவிற்கு இருக்கும் காதலனை காதலித்து வைத்திருக்கிறாயே என்ற ஆதங்கத்தில் சொல்லிவிட்டேன்...''

''அவர்கள் வீட்டில்... அவருடைய பெரியப்பாவும்.. அப்பாவும் ராமர் லட்சுமணர் போல் அவ்வளவு ஒற்றுமையானவர்களாம்... அவருடைய தொழில் வளர்ச்சிக்கு.. அவருடைய பெரியப்பா மகனின் வழிகாட்டுதல் தான் முக்கியமான காரணமாம்... அவரின் பேச்சை மீறி கண்ணன் எதுவும் செய்ய மாட்டாராம்...''



''சரிடி.. அவருடைய பெரியப்பா மகன் ஏன் உங்கள் காதலை எதிர்க்கிறார்..? அவருக்கு காதல் என்றால் பிடிக்காதா?''

''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையாம் ஹரிதா...''

''வேறு என்னடி..?''

''அதை என்னிடம் சொல்ல மாட்டேன் என்கிறாரே...''

''இப்படி வழிக்கு வராத காதலனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்? தூக்கி எறிய வேண்டியதுதானே.''

''அப்படிச் சொல்லாதே ஹரிதா... அவர் கை விட்டு விட்டால்... எனக்கு வாழ்க்கையே இல்லை...''

''ஏண்டி இப்படிப் பிதற்றுகிறாய்? அவன் என்ன உன்னை கை விடுவது? நீயென்ன பாப்பாவா? அவன் கை பிடித்துத்தான் நீ நடப்பாயா? உனக்குத் தனியாக நடக்கத் தெரியாதா? சரிதா.. நான் கேட்கிறேன் என்று என்னைத் தவறாக நினைத்து விடாதே.. நீ எல்லை மீறி ஒன்றும் உன் காதலனோடு பழகி விடவில்லையே...''

''நான் உன் தங்கை ஹரிதா.. அப்படியெல்லாம் பழகி விட மாட்டேன்... ஆனால்... தள்ளி நின்றும் பழகவில்லை.. எல்லை மீறவில்லை என்பதற்காக.. அவரைத் தொட்டுப் பழகியதை எப்படி மறக்க?''

''காலுக்கு உதவாததை கழட்டி விட வேண்டும் தானே...''

''காதல் நீ சொல்வது போல் கழட்டி விடும் பொருள் அல்ல.. என் உயிர்... நான் விட வேண்டுமானால்.. என் உயிரைத்தான் விட வேண்டும்...''

சரிதா மீண்டும் குழுங்கி அழ ஆரம்பிக்க.. ஹரிதா யோசனையுடன் அறையினுள் முன்னும்.. பின்னும் நடந்தாள்.. பின் நடையை நிறுத்தி விட்டு தங்கையின் முகம் பார்த்தாள்.

''இந்த விசயம் அம்மா.. அப்பாவுக்குத் தெரியுமா?''

''தெரியாது.. நான் சொல்லவில்லை...''

''ஏன்...?''

''ஜெயித்தால் சொல்லலாம்... அவர்கள் அனுமதி என் கல்யாணத்திற்கு தேவை.. அவர்கள்தானே கண்ணனின் வீட்டில் சம்பந்தம் பேச வேண்டும்? இது தோற்றுப் போகும் போல் இருக்கிறதே... இதை எப்படிச் சொல்வேன்..''

''அழாதே.. அந்தக் கண்ணனின் அட்ரஸைச் சொல்லு... நான் போய் பேசிப் பார்க்கிறேன்...''

'அப்பாடா.. ஒரு வழியாய் அட்ரஸை கேட்டுவிட்டாள்... இந்தக் கிளிஸரின் வேறு... கண்ணை எரிச்சல் பட வைக்கிறது.. எப்போதடா முகத்தைக் கழுவி விட்டு.. கொஞ்சம் படுத்து எழுந்து கொள்ளலாம் என்றிருக்கிறது...'

சரிதா நிம்மதியுடன் கண்ணனின் போன் நம்பர்.. அட்ரஸ் என அனைத்தையும் சொன்னாள்.

''சரி.. நீ போ... நான் நாளைக் காலையில் முதல் வேலையாய் அந்தக் கண்ணனைப் போய் பார்க்கிறேன்... என்ன சொல்கிறான் என்று பார்க்கலாம். அதை விட்டுவிட்டு.. அழுது அழுது உன் உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே..''



அக்கறையுடன் தங்கையை அனுப்பி விட்டு படுக்கையில் சரிந்த ஹரிதா.. அந்தக் கண்ணனிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதை யோசித்தவாறு கண் மூடிக் கொண்டாள்.

தன் அறைக்குப் போன சரிதா.. தன் செல்போனை எடுத்து செய்தியொன்றை கண்ணனுக்கு அனுப்பினாள்.

'உங்கள் அண்ணன் தேடும் பறவை.. நாளைக் காலையில் உங்களைச் சந்திக்க வருகிறது.. அதை உங்கள் அண்ணனின் வீட்டுப் பறவையாக்கிக் கொள்வது இனி உங்கள் கையில்தான் இருக்கிறது... எனது வேலை முடிந்து விட்டது...'

# 14

'பீப்.. பீப்...' என்ற ஒலியைக் கேட்ட கண்ணன் தன் செல்போனை எடுத்து செய்தியைப் படித்தான்.. அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.. உடனே வைகுந்தை செல்போனில் அழைத்தான்.

''சொல்லுடா...'' என்றான் வைகுந்த்... மறுமுனையில்.

''அண்ணி... நாளைக்குக் காலையில் வருகிறார்களாம்... சரிதா செய்தி அனுப்பியிருக்கிறாள்...''

''ஓ.. சரிதா பாஸ்டாகத்தான் வேலை செய்கிறாள்...''

''வேறு வழி..? நீங்கள்தான் எங்களைத் தனியே சந்திக்க விடாமல் நாங்கள் போகுமிடமெல்லாம்... பின்னால் வருகிறீர்களே...''

''அப்படி நான் வந்ததால்தான்.. ஹரிதாவை என்னைத் தேடி வர வைக்க முடிந்தது...''

''ஓ.கேண்ணா... நாளைக்கு அநேகமாய் அண்ணி உங்களைப் பார்த்துப் பேச வந்தாலும் வரலாம்...''

''வரட்டும்... நான் அவளுக்காகத்தானே காத்திருக் கிறேன்...''

மறுநாள் காலையில் வேலை... வேலையாக இருந் தாலும் கண்ணனின் மனம் ஹரிதாவின் வரவையே எதிர்நோக்கியிருந்தது.

ஹரிதாவும் வந்தாள்.. அவனைச் சந்திக்க அனுமதி கேட்டு விட்டு ரிசப்ஷனில் காத்திருந்தாள்.. கண்ணன் அவளை வரச் சொன்னான்.

''ஐ ஆம் ஹரிதா... சரிதாவுடைய சிஸ்டர்...''

''ப்ளீஸ்.. டேக் யுவர் சீட்.. சரிதா உங்களைப் பற்றி சொல்லியிருக்கிறாள்..''

''ஸோ... நாம் அதிகம் சுற்றி வளைத்துப் பேச வேண்டிய தேவையிருக்காது என்று நினைக்கிறேன்.. ஏன் சரிதாவை கல்யாணம் செய்து கொள்ள மறுக்கிறீர் கள்?''

''சரிதா சொல்லியிருப்பாளே...''

''அதை உங்கள் வாயாலும் சொல்லுங்கள்...''

''என் அண்ணன் சம்மதிக்க மறுக்கிறார்...''

''உங்கள் அண்ணனைக் கேட்டுக் கொண்டா அவளைக் காதலித்தீர்கள்?''

''இல்லைதான்.. ஆனால் அவரைக் கேட்காமல் கல் யாணம் செய்து கொள்ள முடியாதே...''



''இந்தக் கம்பெனி யாருடையது...?''

''ஏன் என்னுடையது தான்...''

''இவ்வளவு பெரிய தொழிற்சாலையையும்.. கம் பெனியையும் நிர்வாகம் பண்ணுகிறீர்கள்.. உங்கள் கல்யாணத்தில் உங்களுக்கு சுயமான முடிவு எடுக்க முடியவில்லையா?''

''பாருங்கள் மேடம்... தொழில் என்பது வேறு.. வாழ்க்கை என்பது வேறு..''

''ஆனால் பாருங்கள் மிஸ்டர் கண்ணன்.. தொழிலில் கூட மற்றவர் தலையிடலாம்.. வாழ்க்கையில் பிறர் தலையீடு இருக்கக் கூடாது...''

ஹரிதாவின் புத்திசாலித்தனத்தை மனதிற்குள் வியந்து கொண்டான் கண்ணன்.

'சரிதா... ஹரிதாவின் புத்திசாலித்தனத்தை புகழ்ந்த தில் அதிகப்படி எதுவுமில்லை.'

ஆனாலும். . அந்தப் புத்திசாலியை தன் அண்ணி யாக்கிக் கொள்ள வேண்டுமே... அதற்காக அவன் ஏற்றுக் கொண்டிருந்த பாத்திரத்தை திறம்பட நடிக்க ஆரம்பித் தான் அவன்.

''என் அண்ணன்தான் எனக்குத் தொழிலைக் கற்றுக் கொடுத்த குரு... நல்லது எது.. கெட்டது எது என்று அவருக்குத் தெரியும்.. அவர் கிழித்த கோட்டை நான் இது வரை தாண்டியதே இல்லை...''

''ஏங்க... நீங்க என்ன பெண் பிள்ளையா.. சீதை லட்சுமணன் கிழித்த கோட்டைத் தாண்டியது போல் நான் தாண்டமாட்டேன் என்று சொல்வதற்கு.. ஆண்

பிள்ளைங்க.. அவள் உங்களை நம்பிக் காதலித்தவள்... அவள் மனதை உடைத்துக் கொண்டு இருக்கிறீர்களே.. இவ்வளவுதான் உங்கள் வீரமா...?''

ஹரிதா தன் ஆண்பிள்ளை ரோசத்தை தூண்டி விட முனைவது கண்ணனுக்கு மிக நன்றாகவே புரிந்தது... அவன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

''ஆண்களுக்கும் சில கோடுகள் உண்டு மேடம்... அதன்படிதான் என்னால் நடக்க முடியும்... நான் என் அண்ணனின் பேச்சை மீறமாட்டேன்...''

''உங்களைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள்.. அவர்களிடம் பேசினேன் கேட்கவில்லையென்று நீங்கள் சொன்னால் கூட அதில் அர்த்தம் இருக்கிறது. பெரியப்பா மகனின் அனுமதி கிடைக்கவில்லையென்று உங்கள் காதலியை கண்ணீர் விட வைக்கிறீர்களே... அதை என்னவென்று நான் சொல்வது? எல்லாம் இந்த சரிதாவைச் சொல்ல வேண்டும். இந்தக் காதல்... கத்தரிக்காய் எல்லாம் பெண்களை அடிமைப்படுத்தும் விசயங்கள்... விட்டு விடுன்னு சொன்னால் கேட்கிறாளா..?''

ஹரிதா அலுத்துக் கொள்ளவும்... கண்ணனுக்கு சிரிப்பு வந்து விட்டது.... அடக்கிக் கொண்டு.. முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

''இப்போ என்னதான் சொல்கிறீங்க...''

''என் கல்யாணத்திற்கு என் அண்ணனின் அனுமதி தேவைங்க...''

''இந்த சரிதா என் கையைக் கட்டிப் போட்டுவிட்டாள்... இல்லையென்றால் நீங்கள் பண்ணிக் கொண்



டிருக்கும் இந்த நம்பிக்கைத் துரோகத்திற்கு.. நான் டீல் பண்ணும் விதமே வேறு...''

என்ன செய்திருப்பாள் என்ற விளக்கமே கண்ணனுக்கு தேவை இல்லையே.. அதுதான் சரிதா... தினமும் கதை.. கதையாய் ஹரிதாவைப் பற்றி சொல்லியிருக்கிறாளே...

எனவே கண்ணன் மெல்லச் சிரித்தான்.

''என்னிடம் கோபப்பட்டு என்ன ஆகப்போகிறது மேடம்...''

''உங்களுக்காக தன் வாழ்க்கையே பணயம் வைத்துக் கொண்டு ஒருத்தி காத்திருக்கிறாளே.. அவளின் துன்பம் உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா?''

''அவள் மட்டுமா வாழ்க்கையை பணயம் வைத்திருக்கிறாள்? நானும்தான் என் வாழ்வை பணயம் வைத்திருக்கிறேன்... என்ன செய்வது? அண்ணனின் ஆணையை என்னால் மீற முடியவில்லையே...''

''என்ன சொல்கிறீர்கள்?''

''நானும் அவளைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் மேடம்.. அவள் இல்லையென்றால் எனக்குக் கல்யாண வாழ்வே இல்லை...''

ஹரிதா திகைத்தாள்.

'என்னடா.. இது.. இவனும் வில்லன் இல்லையா? நல்லவனா? அப்படியானால் சரிதாவின் காதல் கதையின் வில்லன் யார்..? வேறு யார்.. சந்தேகமில்லாமல் கண்ணனின் அண்ணன் தான் அந்த வில்லன்...'

ஹரிதா ஓர் முடிவோடு கண்ணனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உங்கள் அண்ணனின் அட்ரஸ் சொல்லுங்க...''

''உங்களுக்கு அது எதுக்குங்க...''

''நான் போய் பேசிப் பார்க்கிறேன்...''

''வேணாம்ங்க.. அவர் கோபக்காரர்...''

''நான் அவரை விட கோபக்காரி...''

''அவர் அவருடைய முடிவில் இருந்து மாறமாட்டார்...''

''நான் என் தங்கையின் காதலை ஜெயிக்க வைக்காமல் விடமாட்டேன்.''

''அவருக்கு பெண்களைக் கண்டாலே பிடிக்காதுங்க...''

''இது என்ன புதுக்கதையாய் இருக்கிறது? பெண்கள் அவரை என்ன பண்ணினார்களாம்..?''

''அது என்னவோ... பாரதியாரின் புதுமை பெண்ணைப் போல் ஒரு பெண் கூட இப்போது இல்லையாம்... நேர் கொண்ட பார்வையும்... நிமிர்ந்த நன்னடையும்.. பாரதியின் ரௌத்ரமும்.. தவறைக் கண்டால் தட்டிக் கேட்கும் குணமும் கொண்ட பெண் ஒருத்தியாவது இருக்கிறாளா என்று திட்டுவார்.. இவ்வளவு ஏங்க.. உங்கள் தங்கை பயப்படுகிறவளாய்... குனிந்த தலையுடன்.. அவரை நேரே பார்க்காமல் நடுங்கிக் கொண்டே அவர் முன்னால் நின்றதினால் உங்கள் தங்கையையே வேண்டாம் என்று என்னிடம் சொல்லிவிட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்...''

ஹரிதா விழி விரிய அவன் சொல்வதை ஆச்சர்யத்துடன் கேட்டாள்.



# 15

'பாரதியாரின் புதுமைப் பெண்ணைத் தேடும் ஒருவன் இந்த உலகில் இருக்கிறானா? அவன்தான் என் தங்கையின் காதலுக்கு வில்லனா..?'

அவனை அறிந்து கொள்ளும் ஆவல் ஹரிதாவிற்குள் உற்பத்தியானது.

''மிஸ்டர் கண்ணன்.. நான் இன்றைக்கே உங்கள் அண்ணனைப் போய் சந்திக்கிறேன்...''

''நான் சொன்னால் நீங்கள் கேட்கவா போகிறீர்கள்... போய்விட்டு வாங்க.. என் காதல் பிழைத்த செய்தியுடன் நீங்கள் வந்தால் நான் சந்தோசப்படுவேன்..''

வெளியில் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு மனதிற்குள் குதூகலப்பட்டுக் கொண்டு கண்ணன் கூறினான்.

ஹரிதா புயல் போல் வெளியேறினாள். கண்ணனின் செல்போனிலிருந்து செய்தியும் கண நேரத்தில் வைகுந்தை சென்று அடைந்தது.

'அண்ணி வந்து கொண்டிருக்கிறார்கள்...'

'வரட்டும்..' புன்னகைத்துக் கொண்டான் வைகுந்த்.

ஹரிதா வந்த போது வேண்டுமென்றே அவளை ஆறு நிமிடங்கள் காக்க வைத்தான்... அவள் பல்லைக் கடித்துக்

கொண்டு காத்திருந்தாள். கடைசியில் அவளை வரச் சொன்னான்.

ஹரிதா அறைக்குள் வந்ததும்... சுழல் நாற்காலியில் சுழன்றபடி அவளைத் துளைத்து விடுவது போல் பார்த்தான்.

முதல் பார்வையிலேயே அவனது கம்பீரமான தோற்றம் ஹரிதாவின் கவனத்தில் பட்டது... அவள் அவனது பார்வையை அஞ்சாமல் எதிர்கொண்டாள்.

''ஹூ ஆர் யூ..''

''ஐ ஆம் ஹரிதா..''

''ஹரிதா..? ஆர் யு எ பிரைம் மினிஸ்டர்..?''

''ஏன்... பிரைம் மினிஸ்டர்தான் உங்களைப் பார்க்க வர வேண்டுமா? நான் பிரைம் மினிஸ்டரில்லை... சாதாரண பிரஜை...''

''பின் ஏன் வெறும் பெயரைச் சொல்லுகிறீர்கள்..? உங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு என்ன? ஹரிதா என்றால் தெரிந்து கொள்ளும் அளவிற்கு நீங்கள் என்ன பிரபலமான ஆளா?''

''அறிமுகப்படுத்திக் கொண்டால்தான் உட்காரச் சொல்வீர்களா...?''

''ஓ... நன்றாகப் பேசுகிறீர்கள்.. உட்காருங்கள்..''

ஹரிதா அமர்ந்ததும் அவனைத் தோரணையுடன் பார்த்தாள்... அவன் அதை விடத் தோரணையுடன் அவளைப் பார்த்தான்.

''என்ன வேண்டும்..? வேலையா..?''



அவனுடைய குரலில் தெரிந்த அலட்சியம் ஹரிதாவை கோபப்படுத்தியது.

''உங்களிடம் வேலை கேட்டு வருமளவிற்கு எனக்கு துர்பாக்கியம் வந்து விடவில்லை.. நான் வேறு விசயமாய் உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்...''

வைகுந்தின் கண்கள் அவளது வார்த்தையாடலைக் கேட்டு மின்னின.

''ஓ.. அப்படியா விசயம்.. அப்போ.. என்னிடம் வேலை பார்க்கும் பெண்கள் எல்லோரும் துர்பாக்கியசாலிகளா...''

''ஐ டோன்ட் நோ...''

''உங்களுக்குத் தெரியாததைப் பற்றி நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்?''

''நான் வந்தது எதற்காக என்று தெரியாமல் நீங்கள் ஏன் ஆணவமாய் யூகம் பண்ணுகிறீர்கள்?''

''யார்... நான் ஆணவக்காரனா? சரிதான்.''

''பின் இல்லையா..?''

''இதைச் சொல்லிப் போகத்தான் வந்தீர்களா?''

''இல்லை... நான் என் தங்கையைப் பற்றிப் பேசிப் போக வந்தேன்...''

''யார் உங்கள் தங்கை.. அவங்க என்ன சீப் மினிஸ்டரா..?''

''என்னைப் போல் ஓர் இந்திய பிரஜை...''

''ஓ.. என்ன வேண்டுமாம் அவங்களுக்கு..?''

''நிச்சயமாய் நீங்கள் கொடுக்கும் வேலை வேண்டாம்...''

ஹரிதாவின் குத்தலை ரசித்த வைகுந்த்... அவளை மானசீகமாய் முத்தமிட்டான்... மனம் கவர்ந்தவளின்

'வெடுக்' மொழிகள் அவனை உல்லாசத்தில் ஆழ்த்தின... மேலும் அவளுடன் வாயாட ஆரம்பித்தான்.

''வேறு என்ன வேண்டும்?''

''அவளுடைய காதலனுடன் வாழ வேண்டிய வாழ்க்கை...''

''அதற்கு நானா குறுக்கே நிற்கிறேன்?''

''ஆமாம்...''

''என்னம்மா இது... புதிர் போடுகிறீர்கள்...''

வைகுந்த் புரியாதவன் போல் வினவினான்... கதை.. திரைக்கதை... வசனமும் எழுதி.. இயக்கிக் கொண்டிருக்கும் சூத்திரதாரியிடம் பேசுவதை அறியாமல் ஹரிதா கொந்தளித்தாள்.

''புதிரா... உங்களுக்குப் புதிராகத்தான் தோன்றும்... புரியாத புதிராய் என் தங்கையின் வாழ்வை ஆக்கி வைத்துவிடத் திட்டம் போட்டு செயலாற்றிக் கொண்டிருக்கும் நல்லவர் ஆயிற்றே... அப்படித்தான் கேட்பீர்கள்...''

''புரியும்படி பேசக் கூடாது என்று முடிவோடு இருக்கிறீர்களா?''

''ஓ.கே சார்.. நான் புரியும்படியே சொல்கிறேன்.. நான் உங்கள் தம்பி கண்ணனின் காதலி சரிதாவின் அக்கா...''

''ஓ.. அந்தப் பயந்தாங்குளியின் அக்காவா நீங்கள்.. நம்பவே முடியவில்லையே.. நீங்கள் இவ்வளவு தைரியசாலியாய் இருக்கிறீர்கள்.. உங்கள் தங்கை என்னவென்றால் கிடுகிடுவென நடுங்குது...''



''ஏன்.. அவள் நடுங்கினால் உங்களுக்கென்ன...?''

''என்னம்மா இப்படிக் கேட்டு விட்டீங்க... இந்த உலகம் பொல்லாதது.. அதில் பெண்களுக்கான இன்னல்கள் அதிகம்.. அதை எதிர்த்துப் போராட ஒரு பெண் தைரியமாய் இருக்க வேண்டாமா?''

அவன் ஹரிதாவின் விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தபடி இதைக் கேட்கவும் ஹரிதாவிற்குள் உற்சாக ஊற்று வந்தது.

'இதோ.. பாரதிக்கு அடுத்து பெண்களின் இன்னல் புரிந்த ஒருவன் கண் எதிரே அமர்ந்திருக்கிறான்...'

''சரியாகச் சொன்னீர்கள்... நானும் அவளிடம் சொல்லிப் பார்த்து விட்டேன்.. அவள் கேட்டால்தானே... அவள் பிறந்ததில் இருந்தே இப்படித்தான்.. எதற்கும் பயந்து சாவாள்...''

வைகுந்திற்கு சிரிப்பு வந்தது.. அடக்கிக் கொண்டான்.. பரவசத்துடன் தன்னிடம் இணக்கமாய் பேசும்.. தன் காதலியை தழுவிக் கொள்ள அவனுக்குள் தவிப்பு எழுந்தது.

'பொறு மனமே பொறு... கிணற்றுநீரை ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விடாது.. ஒத்த சிந்தனையென்று அவளே உருகிக் கொண்டு வருகிறாள்... இளகாத இரும்பு இளக ஆரம்பித்து இருக்கிறது... அதை வளைத்து.. சரிப்படுத்து... அதன் பின் உன் கை பிடித்து அவளே உன் பின்னால் வருவாள்...'

''அப்படியெல்லாம் இருக்கக் கூடாதும்மா என்று அவளுக்கு நான் அட்வைஸ் பண்ணினால் உடனே அழுது விட்டாள்.. எனக்குப் பெண்கள் கண்ணீர் விட்டால் தாங்காது...''

''ஏன்..?''

''அவர்கள்தான் இந்த பூமித்தாயின் அவதாரம்... அவர்கள் கண்ணீர் விட்டால் பூமி தாங்காது.. அவர்கள் கண்ணீர் விடலாமா?''

'ஆஹா... இவனுக்குத்தான் பெண்கள் மேல் எவ்வளவு கருணை இருக்கிறது.. இப்படியொருவன் இந்த உலகில் இருக்கிறானா?'

ஹரிதா புத்திசாலிதான்... ஆனால் யானைக்கே அடி சறுக்கும் போது ஹரிதாவிற்கு சறுக்காதா... அவள் சறுக்கினாள்.

## 16

ஆண்டாண்டு காலமாய் அவள் காண விரும்பிய ஆண் மகன் ஒருவன் கண் எதிரே அமர்ந்திருப்பதைக் கண்ட உற்சாகத்தில் ஹரிதாவிற்கு தான் வந்த வேலையே மறந்து விட்டது.

தன் முன் அமர்ந்திருப்பவன்... தன் தங்கையின் வாழ்விற்கு வில்லன் என்பதை அவள் மறந்து விட்டாள்.

அவளுக்கு நினைவிலிருந்தது எல்லாம்... அவன் பெண் விடுதலை பேசுபவன்.. பெண்களின் பிரச்சனைகளைப் புரிந்தவன்.. பெண்களின் போர் குணத்தை ஆதரிப்பவன்... என்பது மட்டும்தான்.



அவள் விழிகள் மின்ன அவனுடன் உரையாட ஆரம்பித்து விட்டாள்.

''ஆமாம்.. ஆமாம்... பெண்கள் கண்ணீர் சிந்தினால் எனக்கும் பிடிக்காது. ஆனால் இந்த சரிதா.. தொட்டதற்கெல்லாம் கண் கலங்கி விடுவாள்...''

''அப்படி இருக்கலாமா? எது வந்த போதும் எதிர்த்து நிற்க வேண்டாமா?''

''சரியாக சொன்னீர்கள்.. போராட யோசிக்கவே கூடாது..''

''ஆமாம்.. பெண்கள் போராடினால்தான் தீர்வு கிடைக்கும்...''

''இவ்வளவு நல்லவராக இருக்கிறீர்கள்.. பெண்களின் மேல் கருணை காட்டுகிறீர்கள்.. அப்புறம் ஏன் சரிதாவின் வாழ்க்கையை பாழடிக்க நினைக்கிறீர்கள்?''

''நான் அப்படி நினைக்கவில்லையே.. கண்ணனின் மனைவி தைரியசாலியாய் இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன்.. அது தவறா?''

''தவறில்லை.. ஆனால்.. இனிமேல் எப்படி சரிதா தைரியசாலி ஆவாள்.. கண்ணன் தானே அவளை மணந்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய் தைரியசாலி ஆக்க வேண்டும்?''

''ஆனாலும் அவள் ரொம்பவும் பயந்தாங்குளியாயிற்றே...''

''என்ன செய்யலாம்... கண்ணனும் அவளும் ஒருவரை ஒருவர் காதலித்து விட்டார்கள்.. இருவருமே.. ஒருவர் கிடைக்காவிட்டால் மற்றவருக்கு வாழ்க்கையில்லை என்கிறார்கள்.. அவர்கள் கடைசி வரை கல்யாணம்

ஆகாமலே இருந்து விடுவது சரியாகுமா? நீங்களே சொல்லுங்கள்...''

''ஓ.. இதில் இப்படி ஒன்று இருக்கிறதா? இதை என் நான் யோசிக்காமல் போனேன்..?''

''இனிமேல் யோசிக்கலாமே..''

''ம்ஹூம்... நீங்கள் அப்படியா சொல்கிறீர்கள்?''

''ஆமாம்... ப்ளீஸ்... அவர்கள் இருவரின் வாழ்க்கையும் உங்களின் கையில்தான் இருக்கிறது...''

வைகுந்த் யோசிப்பது போல் நெற்றியில் ஒரு விரலை தட்டிக் கொண்டு... கண்களை மூடிக் கொண்டான்.. ஒரு நிமிடம் கழித்து கண் திறந்து ஹரிதாவைப் பார்த்து...

''எனக்கு யோசிக்க கொஞ்சம் டைம் கொடுங்களேன்...'' என்றான்.

''இதில் யோசிக்க என்ன இருக்கிறது...''

''அப்படி இல்லை மிஸ் ஹரிதா... கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்... அதை அவசரமாய் முடிவு பண்ணக் கூடாது..''

''அப்போ... நான் நாளைக்கு வந்து உங்களைப் பார்க்கலாமா?''

''ஓ.. யெஸ்...'' என்றான் அவன் வெகு உற்சாகமாய்.

ஹரிதா விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குப் போனாள்... சரிதா வாசலிலேயே அவளுக்காக காத்திருந்தாள்.

''என்ன ஹரிதா ஆச்சு...'' என்றாள் படபடப்பாக.



''ஏன் பதறுகிறாய்...?''

''நீ அவரைப் பார்த்தாயா?''

''எவரைக் கேட்கிறாய்?''

''இது என்ன ஹரிதா... இப்படிக் கேட்கிறாய்? கண்ணனைத்தான் கேட்கிறேன்.''

''ஓ... உன்னவரைச் சொல்கிறாயா?''

''பின் எவரை நான் சொல்வேனென்று நீ நினைத்தாய்?''

''அவருடைய அண்ணனைச் சொல்கிறாயோன்னு நினைத்தேன்.''

''என்னது... அவருடைய அண்ணனைச் சந்தித்து விட்டாயா?''

சரிதா மிக ஆர்வத்துடன் வினவினாள்... ஹரிதாவின் முகம் ஒளிர் விட்டது... 'ஆமாம்' என்ற பாவனையில் அவள் தலை அசைத்தாள். சரிதா 'அப்பாடி...' என்ற நினைவுடன் நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

'இனி வைகுந்த் அத்தான் பாடு... இவள் பாடு...'

''என்னடி.. அவருடைய அண்ணனைச் சொன்னதும் அமைதியாகி விட்டாய்.. என்ன என்னவென்று பறந்தாயே...''

''அவர்தானே வில்லன்.. அவரைப் பார்த்ததில் எனக்கு என்ன சந்தோசம் இருக்கப் போகிறது.. அவரை நினைத்தாலே எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது.. சரியான ராட்சஸன்...''

''சரிதா... யாரையும் தெரியாமல் திட்டாதே.. அவர் ராட்சஸன் என்று நீ கண்டாயா? தேவையில்லாமல் பேசாதே.. ஹி இஸ் எ பக்கா ஜென்டில் மேன்..''

ஹரிதா கோபித்துக் கொள்ளவும் சரிதாவின் மனதில் தென்றல் அடித்தது.

'இவ்வளவு தூரத்திற்கு வந்தாகிவிட்டதா... வெல்டன் வைகுந்த் அத்தான்!'

''அவருக்குப் போய் நீ பரிந்து கொண்டு வருகிறாயே...''

''நீ அவரைப் பார்த்து பயந்து நின்றாயா?''

''ஆமாம்...''

''ஏன்.. அவர் என்ன சிங்கமா.. புலியா.. கரடியா..?''

''புதியவர்.. என் கண்ணனின் அண்ணன் என்பது வேறு... அதனால் பயம் வராதா?''

''அதனால்தான் அவருக்கு உன் மேல் பிடித்தமில்லை... 'கோழை' என்கிறார்.''

''ஏன்.. நான் முறத்தால் புலியை விரட்ட வேண்டிய அவசியம் என்ன?''

''தற்காத்துக் கொள்ளத் தெரியாதவளை.. தம்பிக்கு எப்படிக் கல்யாணம் பண்ணி வைப்பது என்ற யோசனைதான் அவருக்கு... வேறு ஒன்றுமில்லை... மற்றபடி அவர் தங்கமான மனிதர்...''

''நீதான் அவரை மெச்சிக் கொள்ள வேண்டும்... என்னைக் காப்பாற்ற கண்ணன் இருக்கும்போது... எனக்கென்ன கவலை...''

''இதுதாண்டி எனக்கும் பிடிக்கவில்லை... வைகுந்திற்கும் பிடிக்கவில்லை.. அது என்ன.. ஒரு பெண் தன்னைத் தானே காத்துக் கொள்ளக் கூட திரானி அற்றவளா? ஒரு ஆண்தான் எப்போதும் அவளைக் காக்க வேண்டுமா? ஆணைச் சார்ந்திருப்பதை.. பெண் எப்போது நிறுத்தப் போகிறாள்...''



''ஆரம்பித்து விட்டாயா? அது என்ன 'வைகுந்த்' என்று யாரையோ உன்னுடன் கூட்டுச் சேர்க்கிறாய்?''

''அவர்தான் உன் கண்ணனின் அண்ணன்.''

''ஓ... அவர் பெயர்தான் வைகுந்த்தா... எனக்கு மறந்து விட்டது.. அதுசரி.. ஒரே நாளில் என்ன அவரின் புகழை இவ்வளவு தூரம் பாடுகிறாய்?''

''அவர் பேசுவது எல்லாமே எனக்குப் பிடித்திருக்கிறது சரிதா.. பெண் விடுதலையைப் பேசும் ஆண்கள் இந்த உலகத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள்ன்னு சொல்லு.. யாருக்குமே பெண் விடுதலையைப் பற்றிப் பேசக் கூடப் பிடிக்காது.. இவர்.. பெண்கள் பற்றியே பேசுகிறார்..''

சரிதாவின் மனதில் நிம்மதி சூழ்ந்தது.. யாராலும் அசைக்க முடியாத ஹரிதாவின் இயத்தை ஒரே நாளில் வைகுந்த் அசைத்து விட்டது அவளுக்குப் புரிந்தது.

பெற்றவர்களுக்கும்.. தனக்கும்.. ஹரிதாவைப் பற்றி இருந்த கவலையைப் போக்கிய வைகுந்தின் மேல் சரிதாவிற்குள் நன்றியுணர்வு சுரந்தது.

ஹரிதாவின் வாழ்வு சிக்கலாகி விடுமோ... என்ற கவலை நீங்கியவளாய் சரிதா வீட்டிற்குள் சென்றாள்.

## 17

மறுநாள் ஹரிதா விழித்து எழுந்ததுமே... அவளுள் எழுந்த முதல் நினைவு... 'இன்று வைகுந்தைப் பார்க்கப் போக வேண்டும்' என்பதுதான்.

அவள் அவசரமாய் குளித்து.. உடை மாற்றினாள்... கண்ணாடியில் தன்னைத் தானே ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

இளஞ்சிவப்பு வண்ண சுடிதார்... நெற்றியில் சிகப்பு நிற ஸ்டிக்கர்.. கண்களில் சிறிதளவு மை.. விரிய விட்டிருந்த கூந்தலின்... இரு பக்கமும் லேசாக எடுத்து சொருகப்பட்டிருந்த கிளிப்... காதுகளிலும்.. கழுத்திலும்.. கைகளிலும் பொருத்தமான சிகப்புக் கலரில் நகைகள்.

'நன்றாகத்தான் இருக்கிறேன்...' என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.

ஒரு ஆண் மகனைக் கவர அலங்காரம் பண்ணிக் கொள்ள வேண்டி வரும் என்று நேற்று வரை ஹரிதா நினைத்தும் பார்த்ததில்லை.

இன்றோ.. தன் தோற்றம் அவனுக்குப் பிடித்திருக்குமா என்ற மெல்லிய கவலை அவளுள் ஓடியதை உணர்ந் தாள்.

அலுவலகத்திற்கு போனில் லீவ் சொல்லி விட்டு அறையை விட்டு வெளியே வந்த போது சரிதா எதிரே வந்தாள்.

ஹரிதாவின் ஒப்பனை அவளது கவனத்தில் பட்டது... தனக்குள் சிரித்துக் கொண்டாள்... இந்த உணர்வை அவளும் அனுபவித்தவள்தானே... கண்ணனுக்காக அலங்காரம் செய்து கொண்டதை அவளால் மறக்க முடியுமா?

இன்று ஹரிதாவும் பளிச்சென்று கிளம்ப... சரிதா அவளுக்கு கையாட்டி விடை கொடுத்தாள்.



வைகுந்தின் அலுவலகத்திற்குள் ஹரிதா நுழைந்த போது.. அவன் எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தான்.

இவளைப் பார்த்ததும்... அப்போதுதான் நினைவு வந்தவன் போல...

''ஓ.. நீங்களா...'' என்றான்.

ஹரிதாவிற்குள் ஏமாற்றம் துளிர்விட்டது.

'இவளது நினைவே அவனது நெஞ்சில் இல்லையா...'

''நீங்கள் சொன்னதை யோசித்தேன்.. பட்.. எனக்கு சில சந்தேகங்கள் இருக்கின்றன.. அதைப் பற்றி உங்களிடம் பேசலாமென்றால்.. எனக்கு அவசர வேலை வந்துவிட்டது...'' என்றான் வைகுந்த்.

''ஓ... நான் போய்விட்டு நாளை வரவா...''

''ம்ம்.. வேண்டாம்.. உங்களுக்கு அப்ஜெக்சன் இல்லையென்றால் என்னுடன் காரில் வருகிறீர்களா.. நாம் போய் கொண்டே பேசலாம்...''

''ஆனால்.. என் ஸ்கூட்டி...''

''அது இங்கேயே இருக்கட்டும்.. நாம் போய் விட்டு வந்து விடலாம்...''

''எங்கே போக வேண்டும்...?''

''என் கிரானைட் தொழிற்சாலைக்கு...''

''அவ்வளவுதானே.. வேறு எங்கும் இல்லையே...''

ஹரிதா நிம்மதிப் பெருமூச்சுடன்.. அவனைத் தொடர்ந் தாள்.

''வேறு இடத்திற்கு உங்களைக் கூப்பிடுவேனா?''

அவன் அவளுக்காக கார் கதவைத் திறந்து விட்டுக் கொண்டே கூறினான்... அவனது செய்கை கண்ட அவளது மனம் சிலிர்த்தது.

'இவ்வளவு பெரிய தொழிற்சாலைக்கு சொந்தக்காரன்.. அவளுக்காக கார் கதவைத் திறந்து விடுகிறான்.. இவனல்லவோ பெண்மையை மதிப்பவன்...'

அவள் முன்பக்கம் ஏறி அமர்ந்ததும்.. அவனும் ஏறி காரைக் கிளப்பினான்... காரை ஓட்டிக் கொண்டே அவளிடம் பேசினான்.

''கிரானைட் பிஸினெஸ் எனக்கு விருப்பமான ஒன்று...''

''எதனால் அப்படி...''

''இப்போது ரசனையில்லாத.. உணர்ச்சியில்லாத ஒருவனைப் பார்த்தால் நாம்.. அவனை வெறும் 'கல்' என்று திட்டுவோம் இல்லையா?''

''அட.. ஆமாம்...''

''அதே கல்லை எடுத்து.. பாலிஷ் போட்டு.. அழகாக்கி.. வீட்டில் பதிக்கும்போது.. அது உணர்த்தும் ரசனையும்.. ஆயிரம் உணர்வுகளையும் நினைத்துப் பாருங்கள்.. கல்லிற்கு உயிர் கொடுக்கும் வேலையில்லையா இது...''

ஹரிதாவிற்கு புல்லரித்துப் போனது.

'இவன் கவிஞன் போல் பேசுகிறானே...'

''அப்பா... தொழிற்சாலை நடத்துகிறார்... அதைத்தான் என்னை நடத்தச் சொன்னார்.. ஆனால்... தகப்பனின் நிழலில் வளர்வது என் தனித்தன்மையை எப்படி நிரூபிக்கும்.. நானும் சாதிக்க வேண்டும் இல்லையா? அதனால் நான் என்னை நிரூபிக்க இந்தத் தொழிலில் இறங்கினேன்.. பெரிதாய் நிரூபித்தும் விட்டேன்.. ஐ டிசர்வ் இட்...''



'ஓ... இவன் சாதித்து இருக்கும் சாதனையாளன்... தன் சுயத்தை விரும்பும் ஆண்மை கொண்டவன்...'

அப்போது வைகுந்த்தின் செல்போன் ஒலித்தது... எடுத்துப் பேசினான்.

''என்னது... கல் உடைந்து இருக்கிறதா...? வெளியில் தெரியாமல் சரிப்படுத்தி விடலாமா... நோ... நோ... நஷ்டம் வந்தாலும் சரி.. நாம் நேர்மை தவறக் கூடாது.. கஸ்டமர் நமக்கு என்ன கள்ள நோட்டையா தந்தார்? நல்ல நோட்டைத்தானே தந்தார்.. அதனால் நாமும் நல்லதையே கொடுக்க வேண்டும்.. அண்டர்ஸ்டாண்ட்...''

கேட்டுக் கொண்டிருந்த ஹரிதா புல்லரித்துப் போனாள்.

'நான் தேடிய நேர்மையாளன் இதோ இருக்கிறானே...'

அவர்களது கார்.. கிரானைட் பாக்டரியில் நுழைந்து நின்றது. அங்கே கூட்டமாக சிலர் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.. வைகுந்த் காரை விட்டு இறங்கினான்.. வைகுந்தைப் பார்த்ததும்.. அவர்களில் ஒருவன்... வைகுந்தின் அருகே ஓடி வந்தான்.

''என்ன குமார்...''

''திடீரென்று ஸ்ட்ரைக் பண்ணுவோம் என்கிறார்கள்...''

''எதற்காம்..''

''அவர்களை நான் அவமதித்து விட்டேனாம்...''

''நீ என்ன செய்தாய்?''

''வேலை நேரத்தில் வெட்டியாய் பேசிக் கொண்டிருந்தார்கள்.. கண்டித்தேன்...''

''தப்பு செய்து விட்டாய்... தட்டிக் கொடுத்துத்தான் வேலை வாங்க வேண்டும்.. வேலை நேரத்தில்

பேசக்கூடாதா என்ன? வேலை நிற்காமல் நடந்ததா.. இல்லையா..? அதைப் பார்த்தால் போதுமே..''

''ஸாரி சார்...''

''லீவ்.. இட்...''

வைகுந்த் அவர்களின் அருகே செல்ல.. நடப்பதை அறியும் ஆவலில் ஹரிதாவும் பின் தொடர்ந்தாள்.

கூட்டத்தின் தலைவன் போல் இருந்தவனிடம் வைகுந்த் பேசினான்.

''இப்போது எதற்காக ஸ்டிரைக் பண்ண வேண்டும் என்கிறீர்கள்...''

''நிர்வாகம் எங்களை அடிமை போல் நடத்துகிறது..''

''எப்படி..? தினமும் எட்டு மணி நேரம் தான் வேலை... மதிய உணவு இடைவேளை உண்டு.. இலவசமாய் மதிய உணவு... காலை... மாலை இரண்டு நேரமும் டீ.. வார இறுதியில் லீவ்... இதுவா அடிமைத்தனம்?''

வைகுந்தின் கேள்வியைக் கேட்டவனின் முகம் மாறியது.

## 18

வைகுந்தின் நிதானமான அணுகுமுறையைக் கவனித்தபடி அசையாமல் நின்றான் அந்த தொழிலாளி.. அவன் முகத்தில் கோபம் இருந்தது.



''நாங்கள் மாடு போல் உழைக்கிறோம்.. உங்களுக்கு கொள்ளை.. கொள்ளையாய் லாபம் வருகிறது.. அதனால் எங்களுக்கு ஏதோ செய்கிறீர்கள்.. அதைச் செய்ய வேண்டியது உங்கள் கடமை.. அதைப் பெரிதாக பீற்றிக் கொள்ளாதீர்கள்...''

''நான் பீற்றிக் கொள்ளவில்லை தாஸ்... நிர்வாகம் உங்களை நல்ல முறையில் தான் நடத்துகிறது என்பதை நினைவுபடுத்தினேன்.. அவ்வளவுதான்...''

''வாயைத் திறந்து பேசினால் கூடக் குற்றமா?''

''அதைச் சொன்னது.. குமாரின் தவறுதான்.. கண்டித்திருக்கிறேன்...''

''கண்டித்தால் போதுமா?''

''வேறு என்ன செய்ய வேண்டும்?''

''கையைக் காலை உடைக்க வேண்டும்...''

தாஸ் மின்னல் வேகத்தில் குமாரின் மீது பாய.. இமைப் பொழுதில் குமாரை விலக்கி.. வைகுந்த் ஊடே புகுந்தான்.. அவனது ஒரு சிறு கை வீச்சில் தாஸ் சுருண்டு விழுந்தான்.

வைகுந்த் கோபாவேசமாய் நின்றிருந்தான்.

''நான் பொறுமையாய் போனேன்.... எதற்காக..? உங்களிடம் பயந்து கொண்டா..? என் தொழிலாளர்கள் நீங்கள் என்பதற்காக... உங்கள் குறைகளை என்னிடம் சொல்லுங்கள்.. தீர்வு கிடைக்கவில்லையென்றால் கேளுங்கள்.. அதை விட்டுவிட்டு... பேச்சு.. பேச்சாக இருக்கும்போது கை நீட்டினால் என்ன அர்த்தம்? ஒருவர் என்ன.. நூறு பேர் கூட வாங்க.. நான் சண்டைக்கு தயார்.. என்ன வருகிறீர்களா..?''

அவர்கள் தயங்கிப் பின் வாங்கினார்கள்... வைகுந்த்.. தாஸின் அருகே சென்றான்... சுருண்டு கிடந்தவனைத் தூக்கி நிறுத்தினான். அவனது உடைகளில் இருந்த தூசியைத் தட்டிவிட்டான்.

"போ.. போய் வேலையைப் பார்..."

அவன் பேசாமல் சென்றுவிட்டான்... வைகுந்த் குமாரை கண்டித்து விட்டு காரை எடுத்தான்.

அவனது வேகத்தையும்... வீரத்தையும் பார்த்த ஹரிதாவிற்கு கை தட்டி ஆர்ப்பரிக்க வேண்டும் போல் இருந்தது.

அவள் மனதில் வைகுந்த் ஒரு ஹீரோவாய் பதிந்து விட்டான்.

காரைத் திருப்பிக் கொண்டிருந்த... வைகுந்த் கைக் கடிகாரத்தை பார்த்தான்.. மதிய நேரம் ஆகியிருந்தது.

"எனக்குப் பசிக்கிறதே... லன்ச் சாப்பிட்டுக் கொண்டே பேசலாமா" என்று வினவினான்.

ஹரிதா தயக்கமே இல்லாமல் தலையை ஆட்டினாள்... கார் ஒரு ஸ்டார் ஹோட்டலின் முன்னால் போய் நின்றது.

இயல்பாய் ஹரிதாவுடன் இணைந்து நடந்தவாறு பேசிக் கொண்டே வந்தான் வைகுந்த்.

ஹரிதாவிற்கு இந்த அனுபவம் புதிது... ஒரு ஆணுடன்... முதன் முதலாய் தனியே வெளியே வந்திருக்கிறாள்.

ஹரிதா உட்கார வசதியாய் அவளது சேரை இழுத்துப் போட்டு அவள் உட்கார்ந்தவுடன் அருகே அமர்ந்தான் வைகுந்த்.

மெனுகார்டை அவளுக்கு அருகில் நகர்த்தினான்.



"என்ன பிடிக்கும்..?"

'ஆஹா... இவன் பெண்களின் விருப்பத்தை மதிக்கிறான்...'

ஹரிதா அவளுக்குப் பிடித்ததைச் சொன்னாள்.. வைகுந்த் வியப்புடன் புருவம் உயர்த்தினான்.

"என்ன விசயம்..?"

"எனக்கும் இவைதான் பிடிக்கும்.."

சர்வரிடம் ஹரிதா சொன்னவற்றிலேயே இரண்டு செட் கொண்டு வரச் சொல்லிவிட்டு அவள் பக்கம் திரும்பியவன் புன்னகைத்தான்,

"நம் இரண்டு பேரும் நிறைய விசயங்களில் ஒத்துப் போகிறோம் என்று எனக்குத் தோன்றுகிறது.. நீங்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.."

"நானும் அதையேதான் நினைக்கிறேன்..."

"அப்படியா.. நினைவிலும் நாம் ஒன்று போல் நினைக்கிறோமா?"

அவனது விழிகள் அவளை ஆழமாய் பார்க்க.. முதல் முறையாய் ஹரிதாவின் முகத்தில் வெட்கச் சிரிப்பு வந்து... அவள் நாணத்துடன் விழிகளை தாழ்த்தினாள்.

வைகுந்தின் முகத்தில் பெருமிதம் வந்தது...

'என்னிடம் மயங்கி விட்டாள்..' அவனது ஆண்மை கர்வம் கொண்டது.

ஹரிதாவின் அகன்ற பெரிய விழிகளில் எதையோ தேடுபவன் போல் அவன் பார்க்க.. அவளோ பார்வையை தாழ்த்திக் கொண்டிருந்தாள்.

"சினிமா பார்க்கும் வழக்கமுண்டா..?"

''ம்ம்..''

''எந்த நடிகரைப் பிடிக்கும்?''

''நடிகரையெல்லாம் நான் பார்க்க மாட்டேன்... கதை... டைரக்டர்... இவைகளைத்தான் பார்ப்பேன்...''

''ஈஸிட்... எந்த டைரக்டரைப் பிடிக்கும்..?''

''அது நிறைய இருக்கிறது... மணிரத்னம்... ஹரி... விஜய்... லேட்டஸ்டாக நாகா...''

''ராவணன் பார்த்தீர்களா...?''

''ம்ம்... நிறைய எதிர்பார்த்தேன்.. நான் எதிர்பார்த்த அளவு இல்லை... அதே சமயம்.. 'ஆனந்தபுரத்து வீடு' என்ற சினிமா... தூள் தெரியுமா.. இறந்த பின்னாலும் பிள்ளைக்காக அந்த பெற்றவர்கள் ஏங்கும் ஏக்கம் என்னை மிகவும் பாதித்தது...''

'இவள் மனதுதான் எவ்வளவு மென்மையானது... இவளுடைய மென் மனம் வருந்தும் விசயங்களுக்காக இவள் போராடுகிறாள்.. ஆக்சுவலாக இவள் போர் குணம் கொண்டவள் இல்லை...'

''என்ன யோசிக்கிறீர்கள்...''

''ஒன்றுமில்லை... கதை படிக்கும் வழக்கமுண்டா...''

''என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்.. அந்த நாள் புதுமைப்பித்தன் முதல் இந்த நாள் எழுத்தாளர்கள் வரை எல்லோரின் எழுத்தையும் படிப்பதுதானே என் வேலை...''

அவர்கள் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.. சாப்பிட்டு முடிந்து.. அவன் காரிலேயே அவனது கம்பெனிக்கு சென்று தன் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு வீடு திரும்பிய ஹரிதாவின் மனம் இறகைப் போல்



லேசாக இருந்தது. மெல்லிய பாடல் ஒன்றை 'ஹம்' பண்ணிக் கொண்டே வீட்டுப் படி ஏறினவள்.. வாசலில் எதிர்பட்ட ஜெயராமனிடம் சுமுகமாக சிரித்தவாறு தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

''என்னடி கௌசி.. என் மகள் என்றைக்கும் இல்லாத திருநாளாய் சிரித்த முகத்துடன் வருகிறாள்...'' ஆவென்று வாய் பிளந்தார் ஜெயராமன்.

''அதுதானே.. உங்களைப் பார்த்தாலே... அவளுக்கு ஆண் குலத்தை ஒரு பிடி பிடிக்க வேண்டுமென்ற ஆசை வருமே.. அதை மறந்து விட்டுப் போகிறாளே..'' கௌசல்யா அதிசய பார்வை பார்க்க.. மனைவியை முறைத்தார்.

மாடியில் ஹரிதாவின் அறைக் கதவை திறந்து கொண்டு சரிதா சென்றாள்.

## 19

ஹரிதா குளியலறையில் இருந்தாள்.. சரிதா கட்டிலில் அமர்ந்து அவளுக்காக காத்துக் கொண்டிருந்தாள்... குளியலறையில் ஹரிதா பாடுவது கேட்டது. அவளது உல்லாசமான மனநிலையை அவளது பாடல் சத்தம் விளக்க.. சரிதா ஆச்சரியமாய் குளியலறையைப் பார்த்துக் கொண்டாள்.

'ஹரிதா பாடுகிறாளா..?'

குளியலறைக் கதவு திறந்தது.. நைட்டிக்கு மாறியிருந்த ஹரிதா..

'உன்னை நான் சந்தித்தேன் - நீ

ஆயிரத்தில் ஒருவன்....

என்னை நான் கொடுத்தேன் - என்

ஆலயத்தின் இறைவன்...'

என்று பாடிய வண்ணம் வெளியே வந்தாள்.

''என்ன ஹரிதா.. பாட்டெல்லாம் பறக்குது.. என்ன விசயம்?'' என்று கேட்ட சரிதா அங்கு இல்லாதது போல்... தன்னிச்சையாய் பாடலைத் தொடர்ந்தாள் ஹரிதா.. இப்போது வேறு பாடல் வெளிவந்தது.

''அனுபவம் புதுமை..

அவனிடம் கண்டேன்...

அந்நாளில் இல்லாத பொல்லாத எண்ணங்களே....

ஆஹா.. பொன்னான கை பட்டு

புண்ணான கன்னங்களே...

லாலா... லலலா... லா...''

''என்னடி.. கண்ணனின் அண்ணன் எங்கள் கல் யாணத்திற்கு சம்மதம் சொல்லி விட்டாரா..?''

ஸ்விட்ச் போட்டாற் போல் ஹரிதாவின் பாடல் நின்றது.. அவள் மலங்க மலங்க விழித்தவாறு சரிதாவைப் பார்த் தாள்.

''என்.. என்... என்னடி கேட்டாய்...''

அவளின் தடுமாற்றத்தை விந்தையாய் நோக்கினாள் சரிதா.



'ஹரிதாவா தடுமாறுவது?'

இன்றைக்கு என்ன இவள் ஆச்சரியத்திற்கு மேல் ஆச் சரியத்தை அள்ளித் தருகிறாள் என்ற யோசனையுடன் தமக்கையைப் பார்த்தாள்.

''என்ன ஹரிதா.. நான் சொல்வது விளங்கவில்லையா? நீ கண்ணனின் அண்ணனை இன்று பார்த்தாயா... இல்லையா...''

''பார்த்தேன்...''

''அப்புறம் என்ன... எங்கள் கல்யாணத்தைப் பற்றிப் பேசவில்லையா?''

ஹரிதாவின் பாடல் காற்றோடு போனது. அவள் நாக்கைக் கடித்துக் கொண்டு.. தங்கைக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்தாள்.

'நான் எதற்காக வைகுந்தை சந்திக்கப் போனேன் என் பதையே மறந்து விட்டு.. எதை எதையோ பேசிவிட்டு வந்து சேர்ந்திருக்கிறேனே... இப்போது இவளுக்கு என்ன சொல்வது?'

''என்ன ஹரிதா.. ஏன் இப்படி விழிக்கிறாய்..? கண் ணனின் அண்ணனைப் பார்த்தாயா.. இல்லையா..?''

''அதுதான் பார்த்தேன் என்று சொன்னேனே...''

''அப்புறம் ஏன் பதில் சொல்லாமல் நிற்கிறாய்..''

''அது வந்து.. அவருக்கு திடீர்ன்னு வேலை வந்து விட்டதாம் சரிதா... நாளைக்கு பேசிக் கொள்ளலாம்ன்னு சொன்னார்...''

''போன வேலை முடியவில்லை.. நீயோ சந்தோசத் தில் துள்ளிக் குதித்துக் கொண்டு வருகிறாய்.. நான்

உன்னை என்னவோன்னு நினைத்தேன்... கடைசியில் இவ்வளவுதானா நீ...?''

''எவ்வளவுதானான்னு கேட்கிறாய்?''

''உனக்கு என் மேலிருக்கிற பாசம் இவ்வளவுதானா?''

''அதற்கெல்லாம் ஒரு குறைவும் இல்லை.. வைகுந்த் இன்றைக்கு நல்ல மூடில்தான் இருந்தார். உன் கல்யாணத்தைப் பற்றிப் பாஸிடிவ் முடிவு சொல்வதாகத்தான் இருந்திருப்பார் போல.. ஆனால் வேலை வந்து கெடுத்து விட்டது.. கட்டாயம் நாளைக்கு உனக்கு நல்ல செய்தி சொல்கிறேன் பாரேன்...''

ஹரிதா.. வைகுந்தை 'அவர்' என்று குறிப்பிடுவதை கவனத்தில் எடுத்துக் கொண்ட சரிதா.. ஹரிதாவை கூர்ந்து பார்த்தாள்.. ஹரிதா அவளது பார்வையை தவிர்த்தாள்.

சரிதாவிற்கு புரிந்து விட்டது.

'ஆஹா.. பட்சி வலையில் சிக்கி விட்டது போல... வைகுந்த் அத்தான் கெட்டிக்காரர்தான்.. வணங்கா முடியையே வளைத்து விட்டாரே...'

''என்னடி அப்படிப் பார்க்கிறாய்?''

''எப்படிப் பார்க்கிறேன்...''

''புதிதாய் பார்ப்பது போல் பார்க்கிறாயே..''

''நீ இன்று புதிதாகத் தெரிகிறாயே..''

''நான் புதிது ஒன்றும் இல்லை.. பழைய ஹரிதா தான்.. போ.. போய்.. வேலையைப் பார்..''

சரிதா நகர்ந்ததும் அவசரமாய் கதவைத் தாழிட்டாள் ஹரிதா.... தன் செல்போனை எடுத்து.. கண்ணன் கொடுத்திருந்த வைகுந்தின் செல்போன் நம்பருக்கு கால் செய்தாள்.. மறுமுனையில் வைகுந்தின் குரல் கேட்டது.



''ஹலோ.. நான் வைகுந்த்...''

''நான் ஹரிதா..''

''ஹரிதா? வாட் எ சர்ப்ரைஸ்.. இப்போது தானே வீட்டிற்கு போனீங்க.. அதற்குள் போனா? என்ன விசயம்?''

''ஒன்றுமில்லை...''

''ஒன்றுமில்லாததற்கு போன் போடுவார்களா?''

''இல்லை... நான் சரிதாவின் விசயமாகத்தான் உங்களைப் பார்க்க வந்தேன்...''

''நான் இல்லையென்று சொன்னேனா?''

''ஆனால்... நாம் சரிதாவின் கல்யாணத்தைப் பற்றிப் பேசவே இல்லையே..''

''நீங்கள் கேட்கவில்லை.. நானும் சொல்லவில்லை...''

''எத்தனையோ விசயம் பேசினோம்.. இதை மறந்து விட்டோமே..''

''மறக்கவில்லை.. அதில் ஒரு சிக்கல் இருக்கிறது.. அதனால் நான் முடிவைச் சொல்வதைத் தள்ளிப் போட்டேன்...''

''இது தள்ளிப் போடும் விசயமில்லையே..''

''ம்ம்... நீங்கள் நாளைக்கு நேரில் வாங்க.. பேசிக் கொள்ளலாம்.''

''நாளைக்குமா..?''

ஆனந்தமாய் கேட்டாள் ஹரிதா.. மறுநாளும் அவனைச் சந்திக்கப் போகும் படபடப்பில் மனம் தவித்தது.

''ஏன் நாளைக்கு வருவதில் ஏதும் சிரமம் இருக்கிறதா?''

''இல்லையில்லை.. நான் வருகிறேன்..''

''ம்ம்.. நாளை சந்திக்கலாம்...''

அவன் செல்போனை அணைத்துவிட்டான்.. ஹரிதா குதூகலமாய் அறையை விட்டு வெளியே வந்தாள்.. பால்கனி பக்கம் சென்று தொங்கும் மர ஊஞ்சலில் அமர்ந்து ஆட ஆரம்பித்தாள்.

''நாளை இந்த வேளை பார்த்து
ஓடி வா நிலா...
இன்று எந்தன் தலைவன் இல்லை
சென்று வா நிலா...
தென்றலே என் தனிமை கண்டு
நின்று போய் விடு...''

மொட்டை மாடியில் காய வைத்திருந்த துணிகளை எடுத்துக் கொண்டு இறங்கி வந்த கௌசல்யா... பெரிய மகளின் பாட்டைக் கேட்டு அயர்ந்து போய் நின்றாள்.

## 20

மாடிப் படிக்கட்டின் அருகே மோவாயில் கை வைத்து நின்று கொண்டிருந்த கௌசல்யாவின் அருகே வந்த சரிதா அவளது தோள் தொட்டு,



''என்னம்மா...'' என்று வினவினாள்.

''உஷ்...'' என்று வாயின் மீது விரலை வைத்து எச்சரித்த கௌசல்யா பால்கனியின் பக்கம் கை காட்டினாள்.

ஹரிதா பாடிக் கொண்டிருந்த பாடலின் வரிகள் காற்றில் கலந்து அவர்களின் காதுகளில் வந்து நுழைந்தன.

''வண்ண வெளியில் வாசலில்
என் தேவன் தோன்றினான்...
எண்ணமென்னும் மேடையில்
பொன்மாலை சூடினான்...
கன்னியழகைக் காணவே
அவன் கலைஞனாகிறான்...
பெண்மையே... உன் மென்மை கண்டு
கவிஞனாகிறான்... கவிஞனாகிறான்...''

மனைவியிடம் எதையோ கேட்பதற்காக மாடியேறி வந்த ஜெயராமன் மாடிப்படிக்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்த மனைவியையும்.. இளைய மகளையும் பார்த்தார்.

அவர்கள் இருவரின் பார்வையும் பால்கனியின் பக்கம் பதிந்திருப்பதைக் கண்டவர்.. அந்தப் பக்கம் தனது பார்வையையும் ஓட விட்டார்.

'இவங்க இரண்டு பேரும் என்ன அதிசயத்தை பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்?'

அவர் காதினில் விழுந்த பாட்டுச் சத்தம்.. அதிசயம் என்ன என்பதை அவருக்கு உணர்த்தியது.

"சொல்ல நினைத்த ஆசைகள்

சொல்லாமல் போனதேன்...

சொல்ல வந்த வேளையில்

பொல்லாத நாணம் ஏன்...

மன்னன் நடந்த பாதையில்

என் கால்கள் செல்வதேன்...

மங்கையே.. உன் கண்கள் இன்று

மயக்கம் கொள்வதேன்...

மயக்கம் கொள்வதேன்..."

"என்னடி கௌசல்யா இது அதிசயமா இருக்கு.. நம்ம ஹரிதாவா இப்படி பி.சுசிலாவின் பாட்டைப் பாடிக் கொண்டிருக்கிறாள்...?"

"ஆமாம்..."

"எப்படிடீ.."

"எனக்கு மட்டும் என்ன ஜோஸியமா தெரியும்?"

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருக்கும் போது சரிதா மர்மப் புன்முறுவலுடன் ஊடே பேசினாள்.

"எனக்குத் தெரியும்..."

தாய்... தந்தை இருவரும் அவளை ஆவலுடன் பார்த்தார்கள்.

"என்னடி விசயம்?"

"அம்மா.. அப்பாவின் கவலை தீரப் போகிறது.. கூடிய சீக்கிரம் நம் வீட்டில் கெட்டி மேளச் சத்தம் கேட்கப் போகிறது.. நம் ஹரிதா அவளுடைய கல்யாணச் செய்தியை உங்களிடம் சொல்லப் போகிறாள்.."



ஆனந்த அதிர்ச்சியுடன் ஜெயராமன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு படிக்கட்டிலேயே அமர்ந்து விட்டார்.

"இவர் ஒருத்தர்.. பெரிய மகளை செல்லம் கொடுத்து வளர்க்க வேண்டியது... அப்புறம்.. அவள் விசயம் எதுவென்றாலும் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட வேண்டியது.. இதுவே.. இவருக்கு தொழிலாய் போய் விட்டது... சரிதா.. போய் கொஞ்சம் தண்ணி கொண்டு வாடி.."

ஒரு வழியாய் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மூச்சுவிட்ட ஜெயராமன் சின்ன மகளை நன்றியுடன் நோக்கினார்.

"நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறாய் அம்மா... ஆனால் இது நடக்கிற காரியமா?"

"எல்லாம் நடக்கும் அப்பா.. நம்பிக்கை வையுங்கள்.."

"அவள் என்னவோ பாரதியைப் போல் ஒரு மாப்பிள்ளை தான் வேண்டும் என்று ஒன்றைக் காலில் நின்றாளே..."

"அப்படி ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டாள்... அதனால் ஒற்றைக் காலை இறக்கி வைத்து... இப்போது இரண்டு காலிலும் நிற்கிறாள்.."

"நிஜமாகவா சொல்கிறாய்... யார் அந்த மாப்பிள்ளை.."

"எல்லாம் நான் சொன்ன மாப்பிள்ளைதான்.."

"யார்.. உன் பிரண்ட் மீனாவின் அண்ணனா?"

"அவரேதான்."

"எப்படிம்மா... இவள் மனதை அவர் மாற்றினார்..."

"எப்படியோ மாற்றி விட்டார்... அதைப் பற்றி நமக்கென்ன..." என்று சரிதா கூறிக் கொண்டிருக்கும் போதே...

"மாறியது நெஞ்சம்...

மாற்றியவர் யாரோ...

காரிகையின் உள்ளம்...

காண வருவாரோ.." என்ற பாடல் சத்தம் பால்கனியில் இருந்து ஒலித்தது.

"இவளோ புதுமைப் பெண்.. ஆனால் வாயைத் திறந்தால் பழைய பாடலாய் பாடித் தள்ளுகிறாளே.. இது எப்படி கௌசல்யா..."

"அதுதாங்க எனக்கும் ஒன்றும் விளங்கவில்லை... உனக்காவது விளங்குகிறதா சரிதா..."

"நான் இவள் பாடியே கேட்டதில்லை... பாடிக் கேட்டிருந்தால் தானே இவள் பழைய பாடலைப் பாடுகிறாளா.. இல்லை புதிய பாடலைப் பாடுகிறாளான்னு தெரியும்? அவள்தான் வாயைத் திறந்தால்...மைக் இல்லாமலே பொதுக் கூட்டத்தில் பேசித் தள்ளுவது போல் பேசித் தள்ளுவாளே.. ஸ்கூல்.. காலேஜ்களில் பழைய பாடல்களைப் பாடி முதல் பரிசை தட்டிக் கொண்டிருக்கிறாளே... அந்தப் பாடல்கள் மறக்காமல் இருக்கிறது போல.."

"ஆமாமாம்.. அப்படித்தான் இருக்கும்..."

இவர்களது பேச்சுப் பேச்சாக இருக்க... அவர்களின் காதுகளோ ஹரிதாவின் பாடலை உள்வாங்கிக் கொண்டிருந்தன.

"நேற்று பார்த்த விழி

நேற்று கேட்ட மொழி

நேற்று கண்ட விழியாவும்...



காற்றில் ஆடி வரும்

ஆற்று வெள்ளமென

மாற்றி மாற்றி அலைமோதும்....

அம்மம்மா... அம்மா...

இந்த நேரம்... அந்த நெஞ்சில்...

என்ன நினைவோ...?"

கௌசல்யா... அந்தக் குரலின் இனிமையில் கரைந்தாள்... ஹரிதா இப்படி ஓர் பாடலை இதய பூர்வமாய் பாடுவாள் என்றோ.. அதை மனம் குளிர.. தானும்.. தன் கணவனும் கேட்டு நிற்போம் என்றோ... கனவிலும் நினையாதவள்... மெய் சிலிர்த்துப் போனாள்.. அவளது கண்கள் பனித்தன.. அவளது நெஞ்சம்.. இறைவனுக்கு நன்றி கூறியது.

## 21

ஹரிதா இரவு உணவுக்கு கீழே வந்த போது.. அவள் முகத்தில் மந்தஹாச சிரிப்பு படர்ந்திருந்தது... தமக்கையின் முகத்தைக் கண்டதும்... சோகமாய் முகத்தை வைத்துக் கொண்ட தங்கையின் காதில்,

"கவலைப்படாதே.." என்று முணுமுணுத்தாள் ஹரிதா.

"கவலைப்படாமல் எப்படி இருப்பது?"

"உன் அவருடன்.. உன்னைச் சேர்த்து வைக்க நானாயிற்று..."

"எப்படி... அந்த வைகுந்த்.. ஒரு பிடிவாதக்காரர் ஆயிற்றே.."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன்..."

"நீ என்ன செய்வாய்..."

"ஏய்... இதைச் செய்யுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டால் செய்யாமல் அவர் எங்கே ஓடி விடப் போகிறார்?"

'ஓ.. அவ்வளவு தன்னம்பிக்கையா உனக்கு?' மனதிற்குள் சிரித்துக் கொண்ட சரிதா.. வெளியே அப்பாவி வேடம் தரித்தவளாய்....

"நீ சொல்வதை நம்பித்தான்.. நானிருக்கிறேன்.." என்று தலையாட்டினாள்.

"நம்பினோர் கெடுவதில்லைங்கிறது நான்கு மறை தீர்ப்பு... இந்த ஹரிதாவை நம்பு... நிம்மதியாய் தூங்கு.."

மகள்கள் இருவரும் மெதுவான குரலில் பேசிக் கொண்டிருப்பது காதில் விழாவிட்டாலும்.. பெரிய மகளையே ஆதுரத்துடன் பார்த்தவாறு சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜெயராமனைப் பார்த்து ஹரிதா புருவம் உயர்த்தினாள்.

"என்னப்பா..."

"இன்றைக்கு நீ ஆபீஸ் போகவில்லையா..?"

ஹரிதா உதட்டைக் கடித்துக் கொண்டு தங்கையைப் பார்த்தாள்.

"போகவில்லை அப்பா..."

"ஏம்மா... லீவு போட்டு விட்டு போராட்டம் பண்ண வேண்டுமா?"



"நான் போராடப் போனேன்தான்.. ஆனால்... அது போராட்டமாக இல்லாமல் வேறு விதமாய் மாறிவிட்டது."

"புரியவில்லையே..."

"உங்களுக்குப் புரியாது அப்பா.."

"பெண்களுக்குப் பிரச்சனைகளை உண்டாக்கும் ஆண் குலத்தை இன்றைக்கு என்னவோ விட்டு வைத்திருக்கிறாயே... திட்டவில்லையா?"

"இல்லைப்பா... பெண்களின் பிரச்சனைகளை புரிந்து கொள்ளும் பாரதி போன்ற ஆண்களும் இந்த உலகத்தில் இருக்கத்தானே செய்கிறார்கள்?"

'பாரதி' என்ற பெயரைக் கேட்டதும் ஜெயராமன் திகிலடைந்து விட்டார்.

'என்னடா.. இது... கொடுமையாய் இருக்கிறது? இன்னும் இவள் மனம் மாறவில்லையா..? மாறியது நெஞ்சம்ன்னு பாட்டுப் படித்தாளே.. அது பொய்யா?'

"என்னப்பா பேசாமல் இருக்கிறீர்கள்.."

"என்னத்தைம்மா பேசச் சொல்கிறாய்.. நீ பாரதியைப் பற்றிப் பேசினாலே எனக்கு திக்கு.. திக்குன்னு ஆகி விடுகிறது.. நீ பாட்டுக்கு பாரதியைக் கொண்டு வான்னு சொன்னால் நான் எங்கே போய் தேடுவேன்..?"

"அதெல்லாம் தேட வேண்டாம்.. பாரதியைப் போல் ஒருவர் இருக்கிறார்..."

ஜெயராமன் தன் காதுகளையே நம்ப முடியாமல் ஆச்சரியத்துடன் ஹரிதாவைப் பார்த்தார்.

"யாரும்மா அது..."

"சஸ்பென்ஸ்..."

ஹரிதா எழுந்து கை கழுவிவிட்டுப் போய் விட...

''இதில் என்ன பெரிய சஸ்பென்ஸ் வேண்டிக் கிடக்கு.. மீனாவின் அண்ணன்தான் அவர்...'' என்றாள் சரிதா.

''நிஜம்தானா சரிதா...''

''நிஜம்தான் அப்பா.. அவருக்கு இவள் மேல் காதல்...''

''இவளைப் பற்றித் தெரியாமலே காதல் பண்ணு கிறாரா... தெரிந்து விட்டால் ஓடி விடப் போகிறார் சரிதா... எனக்குப் பயமாக இருக்கிறதே..''

''நாம் பயப்படவே தேவையில்லை அப்பா.. அவர் நமக்கு தைரியம் சொல்லுவார்.. இவள் போராட்டத்தில் இருக்கும் போதுதான் முதன் முறையாய் இவளைப் பார்த்தாராம்.. இவள் ஒரு நாளைக்கு எத்தனை போராட் டம் பண்ணுவாள் என்பதெல்லாம் அவருக்கு அத்துபடி...''

கௌசல்யா கையிலிருந்த பாத்திரத்தை டேபிளின் மேல் வைத்துவிட்டு ஆர்வமாய் வைகுந்தைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்துவிட்டாள்... அவள் விவரங்கள் கேட் கக் கேட்க.. சரிதா பதில் சொல்லிக் கொண்டே வந்தாள்.

''எல்லாம் சரிதான்ம்மா.. மாப்பிள்ளை வீடு பரம்பரை கோடீஸ்வரக் குடும்பம்.. அதுதான் கொஞ்சம் இடிக்குது...''

''அவங்களே அதைப் பற்றிக் கவலைப்படவில்லை... நமக்கென்னம்மா..''

''இன்னும் ஒன்று இருக்கிறதே...''

''என்னம்மா?''

''எங்களுக்கு இருப்பது நீயும்.. ஹரிதாவும் தான்.. மூத்தவள் கோடீஸ்வரக் குடும்பத்தில் மருமகளாகப் போயிருக்கும் போது.. உன்னை மட்டும் எப்படியம்மா



அவளுக்கும் கம்மியான இடத்தில் குடுப்பது? ஒரு பெண் உயரத்தில் இருக்கும்போது.. எங்களுடைய இன்னொரு பெண்.. உயரம் குறைவான இடத்தில் வாழ்க்கைப் படுவதா? இரண்டு பெண்களுக்கு இடை யில் ஏற்றத் தாழ்வு வருவதா?''

சரிதாவின் முகம் சிவந்தது.. அவள் தன் பின்னலை முன்னால் போட்டுக் கொண்டு... அதைத் திருகி விளையாடினாள்.

''அம்மா.. அம்மா...''

''என்னடா..''

''அது வந்து..''

''சொல்லும்மா...''

''மீனாவின் சித்தப்பா மகன்ம்மா.. பெயர் கண்ணன்.. சொந்தமாய் தொழிற்சாலை வைத்திருக்கிறார்.. அவருக்கு என்னைப் பெண் கேட்கலாம் என்று அவர்கள் வீட்டில் நினைக்கிறார்களாம் அம்மா...''

கௌசல்யாவின் முகத்தில் சிந்தனை படர்ந்தது.. அவ ளறிந்த சரிதாவிடம் இந்த முகச்சிவப்பு வரச் சாத்தியம் இல்லை.. மாப்பிள்ளையைப் பற்றிப் பேசும்போது அவள் முகத்தில் தெரிந்த வெட்கம் கௌசல்யாவை யோசிக்க வைத்தது.

''உனக்கு மாப்பிள்ளையைத் தெரியுமா?''

கௌசல்யா கண்டிப்புடன் கேட்டாள். அன்னையிடம் பொய் சொல்லிப் பழக்கமில்லாத சரிதா.. பயந்தவாறு பதில் கூறினாள்.

''தெரியும் அம்மா..''

''எப்படித் தெரியும்..''

''வைகுந்த் அறிமுகப்படுத்தி வைத்தார்...''

''வைகுந்த் என்றால் யார்?''

''மீனாவின் அண்ணன்..''

''அவர் ஏன் உன்னை.. தன் தம்பிக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும்? பிடித்திருந்தால் பெண் கேட்டு வர வேண்டியது தானே..? அதை விட்டுவிட்டு.. உன்னை அவருடைய தம்பியுடன் பழக விடுவது முறையாகுமா? இது என்ன பழக்கம்? உனக்கு எங்கே போச்சு புத்தி?''

கௌசல்யா மிகக் கோபத்துடன் இளைய மகளைக் கணடித்தாள்... இதுவரையில் பெற்றவர்களிடம் தன் செயலுக்கு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் வளர்ந்திருந்த சரிதா முதன்முதலாய் தன் செயலுக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள்.

## 22

கௌசல்யாவின் முகத்தில் அனல் வீசியது... அவள் வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பித்தாள்.

அவள் இதுவரை சரிதாவைப் பற்றிக் கவலைப்பட்டதே இல்லை.. முதன் முதலாய் அவளது நம்பிக்கையை குலைத்துவிட்டாள் சரிதா.. பெற்றவர்களின் கௌரவத்தை காப்பாற்ற வேண்டியவள்.. அதைக் காற்றில் பறக்க விடுவது போல் நடந்து கொண்டிருக்கிறாள்... ஹரிதா தன் இஷ்டத்திற்கு செயல்பட்டாலும்... இந்த மாதிரியான



செயல்களை ஒரு போதும் செய்யமாட்டாள்... ஹரிதா ஆண்கள் விசயத்தில் நெருப்பு.. அதனால் அவளைப் பற்றிய கவலையே இல்லாமல் கௌசல்யா இருந்தாள்.. ஆனால் சரிதா அப்படியில்லை.. பெற்றவர்களுக்குத் தெரியாமல் கண்ணனுடன் பழகி வந்திருக்கிறாள்.. சரிதா இப்படி ஒரு காரியத்தைச் செய்வாள் என்று கௌசல்யா நினைத்துக் கூடப் பார்த்தில்லை... சரிதா இப்படிச் செய்யலாமா...?

சரிதாவிற்கு தாங்க முடியவில்லை... அவள் கௌசல்யாவின் பேச்சின் ஊடே இடைமறித்துப் பேசினாள்.

''அம்மா... ப்ளீஸ்.. நீங்கள் நினைப்பது போல் இல்லை...''

''வேறு எதற்காக நீ கண்ணனுடன் பழகினாய்?''

''எல்லாம் ஹரிதாவிற்காகத்தான் அம்மா...''

''இது என்ன புதுக்கதை?''

''கதைதான்.. வைகுந்த் தயாரித்து இயக்கிக் கொண்டிருக்கும் கதை.. ஹரிதா வைகுந்தை எதற்குப் பார்க்கப் போனாள் என்று தெரியுமா?''

''எதற்குப் போனாள்?''

''எனக்கும் கண்ணனுக்கும் காதல்.. எங்கள் கல்யாணம் நடக்க வைகுந்த் தடையாய் இருக்கிறார் என்று கதை பிணைந்தோம்... ஹரிதா நியாயம் கேட்கப் போனாள்...''

''நீயேன் அப்படிச் சொன்னாய்..?''

''அப்போதுதான் வைகுந்தையும்.. அவளையும் சந்திக்க வைக்க முடியும்?''

கௌசல்யாவிற்கு இப்போது புரிந்தது.

''ஓ.. அப்படிப் போகிறதா கதை..?''

''ஆமாம்... நான் உங்கள் பெண் அம்மா... தவறான செயல்களைச் செய்வேனா? ஹரிதாவிற்கு இப்படியே கல்யாணம் ஆகாமல் நின்று விடக்கூடாது அம்மா... கோடீஸ்வரர் ஒருவர் அவள் மேல் உயிரையே வைத்திருக்கும் போது.. என்னாலான எதையாவது செய்து அவளை அவரோடு சேர்த்து வைக்க வேண்டாமா?''

''வேண்டும்... கட்டாயம் வேண்டும்..''

கௌசல்யா சமாதானமாகி கணவனைத் தேடிப் போனாள்.. சற்று நேரத்தில் இளைய மகளைத் தேடி வந்த ஜெயராமனின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது.

''ஏம்மா.. அவர்கள் குடும்பம்.. நல்ல குடும்பம் தானே..''

''நீங்களே விசாரித்து ஒரு முடிவுக்கு வாங்கப்பா.. உங்களுக்குப் பிடித்தமில்லையென்றால் வேண்டாம்..''

இது பிள்ளைகள் பெற்றவர்களுக்கு கொடுக்கும் மிகப் பெரிய கௌரவம்... நீ சம்மதித்தால் திருமுணம் செய்து கொள்கிறேன்... உனக்கு சம்மதமில்லையென்றால் வேண்டாம்.. என்று ஒரு பெண்ணோ.. இல்லை ஆணோ.. அவர்களைப் பெற்றவர்களிடம் சொல்லும் போது.. அந்தப் பெற்றவர்களுக்கு அந்தக் காதலை அங்கீகரிக்கத்தான் தோன்றும்.. அந்தக் காதலைக் குலைக்கத் தோன்றாது.

இது காதலுக்கு பெற்றவர்கள் கொடுக்கும் மரியாதை.. அதே மரியாதையை சரிதாவின் காதலுக்கும் ஜெயராமன் கொடுத்தார்.

''ஹரிதாவின் கல்யாணம் நல்லபடி முடியட்டும்.. உன் கல்யாணத்தை ஜாம்... ஜாமென்று நடத்தி விடலாம்..''

சரிதா சந்தோசத்துடன் இந்தத் தகவலை கண்ணனிடம் செல்போனில் தெரிவித்தாள்.



அவன் எப்போது அவள் மனைவியாகி அவன் வீட்டிற்கு வருவாள் என்று கேட்டான்.

அவள்.. வைகுந்தின் மனைவியாகி ஹரிதா அவன் வீட்டிற்கு சென்றவுடன்.. கண்ணனின் மனைவியாக தான் வருவதாகக் கூறினாள்.

அவன் ஏக்கப் பெருமூச்சு விட்டான்.. அதன் ஒலி கேட்டவளின் உடலில் தாபம் உற்பத்தி ஆகியது.

அதே ஏக்கத்தை தன்னுள் கொண்டவளாக அவள் தூங்காமல் புரண்டாள்.

சரிதாவின் நிலை இப்படியென்றால் ஹரிதாவின் நிலை வேறு விதமாய் இருந்தது.

அவள் தான் தேடியது போல் ஓர் ஆண்மகன் கிடைத்து விட்ட சந்தோசத்தில் இருந்தாள்.

திரும்பத் திரும்ப.. வைகுந்தைப் பற்றி அவள் நினைத்துக் கொண்டிருந்த போது செல்போனில் அவன் அழைத்தான்... அவசரமாய் அவள் பேசினாள்.

''எப்படி என் நம்பர் தெரிந்தது..''

''என்னங்க இது..? உங்களைப் புத்திசாலியென்று நினைத்தேனே...''

''நினைப்பை மாத்திக்காதீங்க... நான் இப்போதும் புத்திசாலிதான்..''

''ஊஹூம்... அப்படியிருந்தால் இப்படி ஒரு கேள்வியை கேட்க மாட்டிங்க..''

''எதனால் இப்படிச் சொல்கிறீங்க...?''

''இப்போது தானே நீங்கள் போன் பண்ணினீங்க? அப்புறம் எப்படி என் நம்பர் உங்களுக்குத் தெரியும்ன்னு கேள்வி வேற கேட்கறீங்க?''

''ஆமாமில்லை...''

ஹரிதா உதட்டைக் கடித்துக் கொண்டாள்... இதை எப்படி அவள் மறந்தாள்..? இந்த சின்ன விசயத்தை மறந்துவிட்டு.. பெரிய புத்திசாலி போல் அவனிடம் குறுக்கு விசாரணை வேறு செய்கிறாள்.. அவன் இவளைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வான்?

''என்னங்க பேச்சையே காணோம்...''

''நான் இதை மறந்து விட்டேன்...''

''அது ஒன்றும் பெரிய குற்றமில்லை... ம்ம்.. சாப் பிட்டு விட்டீர்களா..?''

''ம்ம்.. நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா?''

''ம்ம்...''

வெகு அக்கறையாய் போன் பண்ணி.. 'சாப்பிட்டு விட்டீர் களா..' என்று இருவரும் மாறி மாறி கேட்டுக் கொண்டனர்.

இதன் அர்த்தம் ஒன்றுதான்.. என்ன பேசுவது என்று தெரியாமல்... எதையாவது பேச வேண்டுமே என்று அர்த்தமில்லாமல் வினவிக் கொள்ளும் வினாக்களில் இதுவும் ஒன்று.

அவனுக்கு அவளிடம் பேச வேண்டும் - அவளுக்கும் அவனிடம் பேச வேண்டும்... இதில் ஒருவர் குரலை மற்றொருவர் கேட்க வேண்டும் என்ற துடிப்பு மட்டுமே பிரதானம்.

பேச்சை வளர்க்கும் முயற்சிதான் இந்த 'சாப்பிட்டு விட்டீர்களா..' என்னும் கேள்வி... அதைத் தவறாமல் இருவரும் கேட்டுக் கொண்டனர்.



# 23

ஹரிதா கட்டிலில் சாய்ந்து படுத்து... ஒரு பக்கமாகத் திரும்பி போனில் பேசிக் கொண்டிருந்தாள்.

''என்ன சாப்பாடு...''

''ம்ம்.. நைட்டில் அதிகமாய் அம்மா சப்பாத்தி தான் செய்வார்கள்... நீங்கள்?''

''இட்லி.. அம்மாவுக்கு.. அதிகம் எண்ணை சேர்க்கக் கூடாது.''

''ஏன்.. உடம்பிற்கு என்ன?''

''பயப்படும்படி ஒன்றுமில்லை... பிரசர்..''

''ஓ... உங்களுக்கு அம்மா என்றால் மிகவும் பிடிக்குமா?''

''யாருக்குத்தான் அம்மாவைப் பிடிக்காது...?''

''ஆமாமில்லை.. என் அம்மா ரொம்ப ஸ்வீட்..''

அவள் அடிக்கடி 'ஆமாமில்லை' என்று லயத்துடன் சொல்வதை அவன் ரசித்தான்.

''நீங்கள் அம்மா செல்லமா?''

''ஊஹூம்.. அப்பா செல்லம்.. நீங்கள்..?''

''அம்மா செல்லம்.. நீங்கள் உங்கள் அப்பாவிடம் பிரியமாய் இருப்பீர்களா..''

''அம்மா.. அப்பா இரண்டு பேரிடமும் பிரியமாய் இருப்பேன். இவர்கள் இருவரை விட என் தங்கையின் மேல்தான் எனக்கு கொள்ளைப் பிரியம்.. வைகுந்த்..

சரிதாவின் விசயமாய் நீங்கள் என்ன முடிவு பண்ணியிருக்கிறீர்கள்?''

அவள் உரிமையுடன் தன் பெயர் சொல்லி அழைத்ததை... மிகவும் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்ட வைகுந்த்.

''அதைப் பற்றிப் பேசத்தான் நாளைக்கு நீங்கள் நேரிலேயே வருகிறீர்களே..''என்றான்.

''ஏன்... அதை இப்போது போனில் சொல்ல மாட்டீர்களா?''

''இல்லை ஹரிதா.. அது நாம் நேரில் பேசி முடிவு பண்ண வேண்டிய விசயம்...''

அவன் தன்னை இயல்பாய் 'ஹரிதா' என்று அழைத்ததில் அவள் மகிழ்ந்து போனாள்.

''ஏன் அப்படி...''

''அது அப்படித்தான்..''

''என்னிடம் சொல்ல மாட்டீர்களா?''

ஹரிதா கொஞ்சலுடன் வினவ.. மறுமுனையில் ஓர் கணம் மௌனம் நிலவியது.. பின்.. வைகுந்த் ஆழ்ந்த குரலில் கூறினான்.

''சொல்கிறேன் ஹரிதா.. கட்டாயம் சொல்கிறேன்.. உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் அதை சொல்ல முடியும்.. கட்டாயம் நாளைக்கு என் முடிவை சொல்லி விடுகிறேன்.. சரிதானே..''

அவளது பதிலுக்கு காத்திராமல் போனை அணைத்து விட்டான் அவன்.. ஹரிதா சிறு ஏமாற்றத்துடன் தூங்க முயன்றாள்.

மறுநாள் மீண்டும் லீவ் சொல்லிவிட்டு... வைகுந்தின் கம்பெனிக்கு சென்றாள்.



''மே ஐ கமின்...'' என்று ஹரிதா கேட்கவும்,

''யெஸ் கமின்..'' என்றபடி நிமிர்ந்த வைகுந்த்.. அவளின் அழகிய தோற்றத்தில் வசீகரிக்கப்பட்டான்.

உடைத்த பாசிப்பருப்பு வண்ணத்தில்.. பிரிண்டட் சேலை கட்டியிருந்தாள். சேலையிலிருந்து வெட்டித் தைக்கப்பட்ட ஜாக்கெட்.. காதுகளில் அழகான... பெரிய.. குடை வடிவ ஜிமிக்கி.. உள்ளங்கழுத்தில் ஓர் பதக்கத்துடன் கூடிய அட்டிகை.. இரு கைகளிலும் வளையல்கள்.. தலையை தளர்வாய் பின்னலிட்டு மல்லிகைப் பூவை சூடியிருந்தாள்.

'எவ்வளவு அழகாக இருக்கிறாள்.. இவள்..'

அவன் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்க... அவளோ.. அவனது அடர்ந்த சிகையிலும்... சாம்பல் வண்ண கோட் சூட்டிலும்.. அவனது ஆண்மை நிறைந்த கம்பீரமான தோற்றத்திலும் மனதை பறி கொடுத்திருந்தாள்.

'என்ன ஒரு மேன்லி லுக்..'

அவள் மனதிற்குள் அவனை வியந்தபடியே அவனது முகம் பார்த்தாள். வைகுந்த் சுதாரித்துக் கொண்டான்.

''உட்காருங்கள்..''

அவள் அவனுக்கு எதிரே அமர்ந்தாள்.. வைகுந்த் இன்டர்காமை எடுத்து.. இரண்டு குளிர்பான பாட்டில்களைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டு விட்டு...தன் சுழல் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

''அப்புறம்..?'' என்று அவளிடம் வினவினான்.

''நீங்கள்தான் சொல்ல வேண்டும்..''

''ம்ம்... சொல்கிறேன்..''

அறைக்கதவு தட்டப்பட்டு... குளிர் பானம் கொண்டு வந்து வைக்கப்பட்டது... வைகுந்த் அவள் முன்னால் ஓர் பாட்டிலை நகர்த்தினான்.

''குடியுங்கள்..''

''நான் கூல்டிரிங்க் குடிக்கவா வந்தேன்..''

''பேசும் விசயத்தை ஜில்லென்று ஆரம்பிக்கலாமே..''

அவன் சொன்ன விதத்தில் ஹரிதா சிரித்து விட்டாள்.. முல்லை பூக்களின் வரிசை போல் தெரிந்த அவளது பல்வரிசை அவனை மயக்கியது.

'பாவி... எவ்வளவு அழகாக இருந்து தொலைக்கிறாள்..'

ஹரிதா குளிர்பானத்தை மெதுவாக பருக ஆரம்பித்தாள்... நிதானமாய் ரசித்து அவள் குடித்த விதம் வைகுந்தைக் கவர்ந்தது.. குடித்து முடித்து விட்டு.. குளிர் பான பாட்டிலை தள்ளி வைத்தவள்.. வைகுந்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

''இனியாவது பேசாலமா?''

''நீங்கள் பேசுவதிலேயே குறியாய் இருக்கிறீர்களே...''

''உங்களுக்குத் தெரியாது வைகுந்த்... நேற்று சாயங்காலம் நான் வீட்டிற்கு போனவுடன் சரிதா என்னைப் பார்த்து கல்யாண தேதியை முடிவு பண்ணி விட்டீர்களான்னு கேட்டாள்.. நாம் அதைப் பற்றியே பேசவில்லையென்று அவளிடம் எப்படிச் சொல்வது? இன்றாவது அவளுக்கு நல்லதோர் பதிலைச் சொல்ல வேண்டும்..''

வைகுந்த் எதுவும் பேசாமல் அவளையே பார்த்தான். பின் தன் சுழல் நாற்காலியில் லேசாக சுழன்ற வண்ணம் கேட்டான்.



''உன் தங்கையின் மேல் உனக்கு கொள்ளைப் பிரியம்.. இல்லையா?''

''ஆமாம்.. ஏன் கேட்கிறீர்கள்..''

''என் அப்பாவும்... சித்தப்பாவும் அப்படித்தான்.. இரு குடும்பமும் ஒரே மனத்துடன் தான் இருக்கிறோம்..''

''அதற்கு என்ன...?''

''எங்கள் இரு குடும்பத்திற்கும் நான்தான் மூத்தவன்...''

''அதுதான் எனக்குத் தெரியுமே..''

''அது தெரிந்தால் மட்டும் போதுமா?''

''வேறு எது தெரிய வேண்டும்..?''

வைகுந்த்.. அவளுக்கு தெரிய வேண்டியது எது என்று சொன்னான். அதை கேட்ட ஹரிதா.. பொறியில் மாட்ட போன எலி போல் விழித்தாள். பின் எலி.. அந்தப் பொறியில் விருப்பத்துடன் சிக்கிக் கொண்டது.

## 24

வைகுந்த்.. சொல்லிய விவரம் கேட்டு... தன் முன் பொறி வைக்கப்பட்டிருப்பது போல் உணர்ந்தாள் ஹரிதா.. அது அவளது அடி மனம் விரும்பிய பொறியாய் இருக்கவும்.. விருப்பத்துடன் அப்பொறியில் அவளே சென்று சிக்கிக் கொண்டாள்.

''ஹரிதா.. உங்களுக்கு உங்கள் வீட்டில் மாப்பிள்ளை பார்த்தார்களா.''

ஹரிதாவின் முகம் சிவந்து விட்டது...

''ம்ம்.. பார்த்தார்கள்.. பார்த்தார்கள்...''

''ஏன் இவ்வளவு கோபமாய் சொல்கிறாய்...''

''எனக்கு... கல்யாணத்தில் இன்ட்ரெஸ்ட் இல்லை...''

''ஊஹூம்..? அதை அப்புறம் பார்ப்போம்.. இப்போது என் கேள்வி என்னவென்றால்.. சரிதாவிற்கு மாப்பிள்ளை பார்க்காமல் உங்களுக்கு ஏன் பார்த்தார்கள்?''

''நான்தானே மூத்தவள்..? அதனால்தான்..''

''இது.. இது.. இதைத்தான் நான் சொன்னேன்...''

''இன்னும் எனக்குப் புரியவில்லையே..''

குழந்தையாய் விழித்தவளை.. மனதிற்குள் 'மக்கு' என்று செல்லமாக திட்டிக் கொண்டான் வைகுந்த்.

''ஹரிதா.. எங்கள் குடும்பங்களுக்கு நான்தான் மூத்தவன் எனும்போது.. எனக்குத்தானே முதலில் கல்யாணம் செய்ய நினைப்பார்கள்... எனக்கு அடுத்துத்தானே கண்ணனுக்கு கல்யாணம் நடக்க வேண்டும்?''

''ஆமாமில்லை... இது எனக்குத் தோன்றவில்லையே...''

'வைகுந்திற்கு கல்யாணம்' என்று நினைக்கும்போதே அந்த நினைவு கூடப் பிடிக்கவில்லை ஹரிதாவிற்கு.

அவள் முகம் வாடி விட்டது... அதை ஜாடையாய் பார்த்தவனின் மனதில் தென்றல் அடித்தது.

''இது முக்கியமான பிரச்சனை இல்லையா..?''

''ஆமாம்...''

''அது தான் யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்...''



''ஏன்... உங்களுக்கு உங்கள் வீட்டில் பெண் தேடவில்லையா?''

இதை கேட்கும்போதே ஹரிதாவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது.

''தேடாமல் இருப்பார்களா.. தேடினார்கள்.. ஆனால் நானும் உங்களைப் போல்தான்.. எனக்குக் கல்யாணத்தில் இன்ட்ரெஸ்ட் இல்லை...''

'அப்பாடி..' என்று நினைக்கும் போதே.. அவன் கல்யாணத்தை தவிர்ப்பவன் என்பதும் நினைவுக்கு வர... ஹரிதா சோர்ந்தாள்.. ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக கேள்வி கேட்டாள்.

''ஏன் உங்களுக்கு கல்யாணத்தில் இன்ட்ரெஸ்ட் இல்லை...''

'இது.. இது.. இந்தக் கேளவிக்காகத்தாண்டி.. நான் காத்திருக்கிறேன்..' வைகுந்த் உற்சாகமானான்.

''என்னங்க செய்வது.. எனக்கு பாரதியாரின் மேல் ஈர்ப்பு அதிகம்..''

'ஆஹா..' என்று நிமிர்ந்தாள் ஹரிதா.

''அது நல்ல விசயம்தானே...''

''நல்ல விசயம்தான்.. ஆனால்.. என் மனம் பாரதியின் புதுமைப் பெண்ணைப் போல் ஒருத்தியை தேடி அலைகிறதே.. கல்யாணம் என்று செய்து கொண்டால் அப்படி ஒரு பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்.. இல்லாவிட்டால்.. காலம்-பூராவும் சந்நியாசியாய் இருந்துவிட வேண்டும்.. என்பதுதான் என் எண்ணம்.''

ஹரிதாவின் மனம் படபடத்தது.

'நானும் அப்படித்தான்..' என்று சொல்ல மனம் துடித்தது.. அடக்கிக் கொண்டாள்.

"அப்படி ஒருத்தி உங்கள் கண்ணில் படவே இல்லையா.."

"இரண்டு நாள்களுக்கு முன்னால் வரை படவில்லை..."

வைகுந்த் கூறுவதன் பொருள் புரிந்தவளாய் ஹரிதா சட்டென்று தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவன் 'ஆம்' என்ற பாவனையில் தலை அசைத்தான்.

"ஆமாம் ஹரிதா.. உங்களைப் பார்த்தவுடன் எனக்கு பாரதியின் புதுமைப் பெண்தான் நினைவுக்கு வருகிறாள்... ஸோ.. நான் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறேன்.."

அவன் நிதானமாய் கூறினான்.. ஹரிதாவிற்கு மூச்சுத் திணறியது. மெல்ல.. தன்னை... ஒரு நிலைப்படுத்திக் கொண்டு வினவினாள்.

"என்ன முடிவு..."

"அதை சொன்னால் நீங்கள் என் மீது கோபப்படக் கூடாது.."

"இல்லை.. கோபப்படமாட்டேன்... சொல்லுங்கள்.."

"ஏன் நீங்கள் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாது?"

ஹரிதாவின் மனம் ஆனந்தக் கூத்தாடியது.. அவனோ தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தான்.

"இன்னும் சொல்லப் போனால் நான் இதை ஒரு நிபந்தனையாகவே சொல்கிறேன் ஹரிதா.. கண்ணனை சரிதா கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமானால்.. நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.."

அவன் வெகு இயல்பாய்.. நிதானமாய்.. 'நீ' என்று அவளை ஒருமையில் விழித்து இதைக் கூறினான்.



ஹரிதா.. அவன் சொல்வதை நம்ப முடியாதவளாய் திகைத்தாள். தன் தங்கைக்கு கல்யாணம் பேச வந்தவள்... தன் கல்யாணத்தை முடிவு பண்ண வேண்டிய நிர்பந்தத்தில் சிக்குண்டாள்.

"இதை எப்படி உடனே முடிவு பண்ண முடியும்?"

"ஏன்.. இதில் முடிவு சொல்ல என்ன தயக்கம்?"

"எனக்கு யோசிக்க அவகாசம் வேண்டாமா..."

"நீ கேட்கும் அவகாசம் கண்ணன்... சரிதாவின் கல்யாணத்தை தள்ளிப் போடும்.. என்பதை நீ மறந்து விட்டாயே..."

"திடீரென்று கேட்டால்... நான் என்ன சொல்வது?"

"என்னைப் பிடித்திருந்தால் 'சரி'யென்று சொல்லு... பிடிக்கவில்லையென்றால் 'முடியாது' என்று சொல்லு.."

இவனைப் பிடித்திருக்கிறதே.. இவனைப் பிடிக்கவில்லையென்று எப்படி அவளால் சொல்ல முடியும்..? அவள் திணறிக் கொண்டிருந்த போது அவன் அவள் முன்னால் குனிந்து கேட்டான்.

"என்ன பதிலையே காணோம்.. என்னைப் பிடிக்கவில்லையா?"

"உங்களைப் பிடிக்காமல் போகுமா..?"

அவன் சட்டென்று அவளது கரம் தொட்டான்.. அவளது கரம் நடுங்க ஆரம்பித்தது.

'இவள் மென்மையான பெண்.... புதுமைப் பெண்ணாக இவளாக தன்னை கற்பனைப் பண்ணிக் கொள்கிறாள்..'

அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

# 25

ஹரிதாவின் விரல்கள் படபடவென்று நடுங்கின... தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமில்லாமல் அவள் பார்வையை தாழ்த்திக் கொண்டாள்.

வைகுந்த் அவளை ஊடுருவிப் பார்த்தபடி அவளது விரல்களை இறுக்கமாகப் பற்றினான்... அவளது மென்மையான விரல்களை அவனது வலிமையான கரம் இறுகப் பற்றியிருந்தது. அவன் அவளது விரல்களைத் தன் விரல்களுடன் பிணைத்துக் கொண்டான்.

"ஹரிதா.." என்று மென்மையாக அழைத்தான்.

"ம்ம்..."

"என்னைப் பார்...?"

"எதற்காக..?"

"ஏன் பார்க்க மாட்டாயா?"

"நான் வீட்டிற்கு கிளம்புகிறேன்.."

"வா.. நான் வந்து விட்டு விட்டு வருகிறேன்..."

"நீங்களா.. வேண்டாம்.. வேண்டாம்.."

"என்ன வேண்டாம்..? நாளைக்கு என் வீட்டிலிருந்து உன்னைப் பெண் கேட்டு வரப்போகிறார்கள்.. அந்த தகவலை உன் பேரண்ட்ஸிடம் நான் வந்து சொல்ல வேண்டாமா? அதுதானே முறை.."



"என் ஸ்கூட்டி..?"

"இது ஒரு கவலை உனக்கென்று வந்து விடுகிறது.. நாளையில் இருந்து உன் ஸ்கூட்டி உன் வீட்டில்தான் இருக்க வேண்டும்.. என்னைப் பார்க்க வேண்டி இருக்கும்போது நானே உன்னை வந்து அழைத்துக் கொள்வேன்..."

"ஊஹூம்... இது ஒரேயடியாய் உங்களைச் சார்ந்திருப்பதாய் ஆகிவிடும்.. ஆணைச் சார்ந்து நிற்காமல் ஒரு பெண்ணால் வாழ முடியாதா?"

'போச்சுடா... இவள் பெண்ணுரிமையைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டாளா..' என்று இருந்தது வைகுந்திற்கு.

ஆனால்... அவளை இந்த அளவிற்கு படாத பாடுபட்டு கொண்டு வந்துவிட்டு.. இப்போது சினம் காட்டினால்... அவள் பின்வாங்கி விடுவாள் என்று தோன்றவும் அடக்கி வாசித்தான்.

"உன்னை யார் என்னை சார்ந்திருக்கச் சொன்னது? எனக்கே அது பிடிக்காதே... நாம் இருவரும் சந்தித்துக் கொள்ளும்போது ஒரே வண்டியில் போய் வர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்... அது காராக இருந்தால்... உன்னைப் பார்த்துக் கொண்டே காரை ஓட்ட எனக்கு வசதியாக இருக்கும்.. இல்லை.. உன் ஸ்கூட்டியில் நான் ஏறிக் கொள்ள வேண்டுமானாலும் சொல்... நான் ஏறிக் கொள்கிறேன்..."

'இவன் கொஞ்சம் கூட ஈகோ பார்க்காமல் இருக்கிறான்.. இவனிடம் நான் எப்படி ஈகோ பார்ப்பது...'

ஹரிதா 'வேண்டாம்..' என்ற பாவனையில் தலையை ஆட்டினாள்.

''நான் உங்களுடன் உங்கள் காரிலேயே வருகிறேன்.. ஆனால் என் ஸ்கூட்டி எப்படி என் வீட்டிற்கு வந்து சேரும்?''

''அதைப் பற்றிய கவலை உனக்கெதற்கு... என் டிரைவர் எடுத்துக் கொண்டு வருவான்.. உன் வண்டிச் சாவியைக் கொடு...''

வைகுந்த் எழுந்து கொண்டான்.. ஹரிதாவுடன் இணைந்து பேசிய வண்ணம் அவன் கம்பெனிக்குள் நடக்க... அங்கே வேலை செய்து கொண்டு இருந்தவர்கள்.. ஆச்சரியமாய் ஹரிதாவை பார்த்தார்கள்.. ஹரிதா மனதிற்குள் பெருமையாய் உணர்ந்தாள்.

தன் டிரைவரை அழைத்து.. ஹரிதாவின் வண்டிச் சாவியையும் பணத்தையும் கொடுத்து வண்டியை எடுத்துக் கொண்டு வரும்படி பணித்து விட்டு.. தன் கார் கதவை ஹரிதாவிற்காக திறந்து விட்டான் வைகுந்த்.

ஹரிதா ஏறி அமர்ந்ததும் கார் கிளம்பியது.. முதல் நாளும் அவனுடன் காரில் போனாலும்.. இன்று ஏனோ மிகவும் படபடப்பாய் உணர்ந்தாள் ஹரிதா.

'நேற்று வரை நீ யாரோ.. நான் யாரோ...

இன்று முதல் நீ வேறோ... நான் வேறோ..'

கண்ணதாசனின் பாடல் வரிகள் அவள் காதுகளில் ஒலித்தன. முதல்நாள் அவன் யாரோ.. அவள் யாரோ தானே.. இன்று அவனும் அவளும் ஒன்றாகிப் போனார்களே...

''ஹரிதா.. ஏன் பேசாமல் வருகிறாய்?'' அவன் வினவினான்.

என்ன பேசுவது... எப்படிப் பேசுவது.. காதல் என்று வந்துவிட்டால் மௌனம் அங்கே அழையாத விருந்தாளியாய் ஓடி வந்து விடுகிறதே.. சொல்ல நினைக்கும் வார்த்தைகள்.. இதழுக்கு வர தயங்குகையில் எதையும் சொல்லத் தேவையில்லாத மௌனம் அரசாட்சி செய்ய ஆரம்பித்து விடுகிறதே...



'மௌனமான நேரம்...'

எவ்வளவு அருமையான வார்த்தைப் பிரயோகம்... எது.. நேரம் மௌனிக்கும் போது.. அங்கே மௌனம் கோடி வார்த்தைகளைப் பேசுமே.. அது விளக்காத அர்த்தங்களையா வார்த்தைகள் எழுப்பும் சப்தம் விளக்கி விடப் போகிறது...?

ஹரிதா மௌனித்தாள்.. வைகுந்த்.. காரை சாலையோரமாய் இருந்த மரத்தடியில் நிறுத்தினான். ஆள் அரவமற்று அந்தச் சாலை அமைதியாக இருந்தது. அவன் அவள் பக்கமாய் திரும்பி அமர்ந்தான்.

''ஹரிதா..''

அவனது வார்த்தைகளில் இருந்த கிறக்கம் உணர்ந்தவளுக்கு பெண் உரிமை... ஆண் குலத்தின் ஆணாதிக்க மனப்பான்மை.. என்ற அனைத்தும் மறந்து விட்டன.

அவள் நினைவில் இருந்தது.. அவனின் அண்மை மட்டும்தான்.

வைகுந்த்.. அவளது கரம் பற்றி.. தன் இதழ்களை அதில் ஒற்றி எடுத்தான்.. ஹரிதா தன்னை மறந்தாள்.. தன் சுற்றுப்புறத்தை மறந்தாள்.. 'காதல்' என்பது கட்டுக்கதை... பெண்களை அடிமைப்படுத்த ஆண்கள் கையாளும் வழிமுறைகளில் ஒன்று இந்தக் காதல் என்ற தனது எண்ணத்தையும் மறந்தாள்.

வைகுந்தின் தோளில் தன் முகம் புதைத்துக் கொண்டாள்.

வைகுந்தினால் தன் வெற்றியை ஒரு கணம் நம்ப முடியவில்லை... இதோ வருடக் கணக்கில் அவன் காதலித்த காதலி... அவனது காதலை ஏற்றுக் கொண்டு அவன் தோள் சாய்ந்து விட்டாள்.

வைகுந்தின் கரம் அவளது தோளைச் சுற்றி விழுந்து தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டது.. அவனது மறு கரம் அவளது முகம் நிமிர்த்தியது.

கண் மூடி அவள் தலை நிமிர்ந்த கோலம்.. தாமரை மலரைப் போல இருந்தது.. அவளது குவிந்த இதழ்கள் அவனை அழைக்க அவன் தாகத்துடன் அவளது இதழ் தேடிக் குனிந்தான்.

'நில்லாமல் வீசிடும் பேரலை...'

எப்படி இதை வர்ணித்தாள் அந்தக் கவிஞை... ஓங்கி அடித்த அந்த அலையில் வைகுந்தும்.. ஹரிதாவும் அடித்துச் செல்லப்பட்டனர்.

ஹரிதாவின் கரம் வைகுந்தின் முதுகைத் தழுவ... வைகுந்த் ஆவேசத்துடன் அவளைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

விலக விரும்பாத இருவரும்.. காற்றுக் கூட ஊடே போக முடியாமல் இறுக்கமாய் பிணைத்துக் கொண்டனர்.

## 26

வைகுந்த் மெதுவாக ஹரிதாவை விடுவித்தான்.. கலைந்திருந்த அவளது தலைமுடியை சரி செய்து



கோதிவிட்டு.. அவளது நெற்றியில் மென்மையாக தன் இதழ் பதித்தான்.

ஹரிதாவின் முகம் சிவந்திருந்தது.. ஆசையுடன் அவளது கன்னம் வருடி முத்தமிட்டவன்.. அவளை விட்டு விலக மனமில்லாமல் விலகி அமர்ந்தான்.

ஹரிதா முகச்சிவப்புடன்.. சாலையை நோக்கித் தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்... வைகுந்த் உல்லாச மாய் நகைத்தான்.

''ஊஹூம்.... இது தாங்காது... சீக்கிரமே நம் கல்யாணம் நடந்தாக வேண்டும்..''

'எது தாங்காது..?' என்று ஹரிதா கேட்கவில்லை.

அவளும் அந்த இன்ப அவஸ்தையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாளே.. அதனால் எதுவும் பேசாமல் தன் கரங்களை கோர்த்து... கோர்த்து பிரித்தவாறு அமர்ந்திருந் தாள்.

''ஹரிதா..''

''ம்ம்..''

''என்னைப் பார்க்க மாட்டாயா?''

''எப்படிப் பார்ப்பது..?''

''ஏன்..என்னைப் பிடிக்கவில்லையா?''

''ரொம்பப் பிடித்திருக்கிறது...''

''அப்புறம் ஏன் பார்க்க மாட்டேன் என்கிறாய்...''

ஹரிதா தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவன் வம்புக்கு இழுப்பது புரிந்தது.. சற்று முன்.. இவன் பண்ணி வைத்த வேலைக்கு.. எப்படி இவள்.. நாணமில்லாமல் அவன் முகம் பார்ப்பது...

வைகுந்த் அவளைத் தோள் தொட்டு தன்புறம் திருப்ப முயல.. ஹரிதா.. தன் கைகளால் தன் முகத்தை மூடிக் கொண்டாள்.

''ப்ளீஸ்..''

அவள் குரல் இறைஞ்சலாய் வெளிவர... வைகுந்த் ஆனந்தத் திகைப்பில் ஆழ்ந்தான்.

இதுதான் இவள்... சிறு தொடுகையையும் தாங்க முடியாத நாணம் கொண்டவள்... பெண்களுக்கே உரித்தான மென்மையான குணங்களில் ஒன்றான நாணம் இவளை ஆக்ரமித்து இருக்கிறது.. இவளாக ஒரு வன்மையான பொய் முகமூடியைப் போட்டுக் கொண்டு இதுவரை நடமாடி வந்திருக்கிறாள்.

அவளது நாணத்தையும்... தவிப்பையும் மதித்தவன்.. அவளது தலை கோதி மென்மையாய் புன்முறுவல் செய்தான்... காரைக் கிளப்பினான். அவளது வீடு இருந்த தெரு முனையில் காரை ஓர் நிமிடம் நிறுத்தினான்.

ஹரிதா புரியாமல் அவனது முகம் பார்த்தாள். அவன் மென்மையாய் அவளிடம் கூறினான்.

''உன்னை இயல்பாக்கிக் கொள்... தடுமாற்றமில்லாமல் என்னோடு வா.. நாம் உன் பேரண்ட்ஸையும்.. தங்கையையும் மீட் பண்ண வேண்டும்..''

ஹரிதா ஆழ்ந்த மூச்சுக்களை விட்டு தன்னை அமைதிப் படுத்திக் கொண்டாள்.. பின் அவன் முகம் பார்த்தாள்.

''போகலாம்.. அதற்கு முன்னால் ஒரு விசயம்...''

''என்ன..?''

''நாளை நீங்கள் கண்ணனையும் அவரது குடும்பத்தாரையும் கூட அழைத்து வரலாமே..''



''அவர்கள் கட்டாயம் வருவார்கள் ஹரிதா.. நாங்கள் ஒரே குடும்பம்தான்.. அவர்கள் இல்லாமல் என் கல்யாணப் பேச்சு நடைபெறாது...''

''அப்போதே.. கண்ணன் குடும்பத்தார்.. சரிதாவையும் பெண் பார்த்து அவர்களது கல்யாணத்தையும் முடிவு பண்ணி விடட்டுமே..''

வைகுந்த் ஹரிதாவின் முகத்தையே பார்த்தான். அவள் கெஞ்சுதலாய் பதில் பார்வை பார்த்தாள்.

''ப்ளீஸ் வைகுந்த்.. நான் அவளுக்காகத்தான் உங்களிடம் பேச வந்தேன்.. இப்போது நம் கல்யாணத்தை முடிவு பண்ணிக் கொண்டு அவள் முன்னால் போய் நின்றால் அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்.. ஹரிதா தன் காரியத்தை நடத்திக் கொண்டு விட்டாள்.. நம் காரியத்தை விட்டு விட்டாள் என்று நினைக்க மாட்டாளா..?''

''ஓகே.. நீ என்ன சொன்னாலும் நான் தலையை ஆட்டப் போகிறேன்.. இதைச் செய்டா.. என்று சொன்னால் செய்து விட்டுப் போகிறேன்.. அதை விட்டுவிட்டு நீ ப்ளீஸ் போட வேண்டுமா?''

ஹரிதாவிற்கு வைகுந்தின் வார்த்தைகளைக் கேட்டு பெருமையாகவும்... நிம்மதியாகவும் இருந்தது.

அவர்களின் வீட்டின் முன்னால் கார் நிற்க.. இருவரும் காரை விட்டு இறங்கினார்கள்.. வாசலில் காய் வண்டியில் காய் வாங்கிக் கொண்டிருந்த கௌசல்யா.. அவர்களைக் கண்டதும் ஆச்சரியமாய் பார்த்தாள்... அவளது பார்வை வைகுந்தை எடை போட்டது.

'இவர்தான்.. ஹரிதாவிற்காக இத்தனை நாடகம் நடத்திய என் மூத்த மருமகனா...'

அவளது மனதைப் படித்தாற்போல் வைகுந்த் அவளைப் பார்த்து கரம் குவித்தான்.

''வணக்கம் அத்தை.. என் பெயர் வைகுந்த்...''

'இவரேதான்..' கௌசல்யா முகம் மலர்ந்து போனாள்.. அவசரமாய் பதிலுக்கு கரம் குவித்தவள்.

''வாங்க.. வாங்க..'' என்றபடி காயை வாங்காமலே வீட்டிற்கு பறந்து ஓடினாள்.

வைகுந்த் புன்னகையுடன்.. ஹரிதாவைத் தொடர்ந்து வீட்டுப்படி ஏறினான்.. அதற்குள் ஜெயராமன் வாசலுக்கு ஓடி வந்தார்.

''வாங்க.. வாங்க...''

'என்னடா இது... அப்பாவும்.. அம்மாவும்.. வைகுந்தை தெரிந்தவர்கள் போல் இத்தனை ஆர்வமாய் வாங்க.. வாங்க போடுகிறார்கள்..'

ஹரிதா ஆச்சரியத்துடன் வீட்டுக்குள் சென்றாள்.

''அப்பா... நீங்கள் இன்றைக்கு ஆபீஸ் போகவில்லையா..?''

''நீ ஆபீஸ் போகவில்லையா?''

''நான் லீவ் போட்டிருக்கிறேன்..''

''உனக்கு மட்டும்தான் உன் ஆபீஸில் லீவ் தருவார்களா? எனக்கும் தான் தருவார்கள். நானும் இன்றைக்கு லீவ் போட்டிருக்கிறேன்...''

சரிதா சொன்ன செய்திகளை கௌசல்யா முதல்நாள் இரவில் ஜெயராமனிடம் ஒப்பித்திருந்தாள்.

இன்று மகள் வைகுந்தை திரும்பவும் சந்திக்கச் செல்கிறாள் என்பதை அறிந்திருந்த ஜெயராமன்.. அன்று



அலுவலகம் செல்ல முடியாத ஆனந்தப் பரபரப்பான மனநிலையில் விடுப்பு எடுத்துக் கொண்டு விட்டார்.

இதை அறியாத ஹரிதா.. வைகுந்தை வீட்டிற்கு அழைத்து வந்திருப்பதை தன் பெற்றோர் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்ற தவிப்புடன் அவர்களைப் பார்த்தாள்.

ஆனால் அவர்கள் இருவரும் ஹரிதாவைக் கவனித்ததாகவே தெரியவில்லை.. வைகுந்தை விழுந்து.. விழுந்து உபசரித்துக் கொண்டு இருந்தனர்.. ஜெயராமன் சோபாவைத் தட்டி விட்டு வைகுந்தை அமரச் சொல்லிக் கொண்டிருந்த போது கௌசல்யா... பழச்சாறுடன் விரைந்து வந்து அவனிடம் அதை நீட்டினாள்.

## 27

மருமகனின் வரவிற்காக தனது பெற்றோர் இந்த அளவுக்கு ஏங்கியிருந்தார்களா... என்று தோன்றியது ஹரிதாவிற்கு.

ஜெயராமன் அப்படி ஒரு வாத்சல்யத்துடன் வைகுந்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.. கௌசல்யாவோ கொள்ளைப் பிரியத்துடன் வைகுந்திற்கு என்ன பிடிக்கும்.. என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

''ஒன்றும் வேண்டாம் அத்தை.. ஜூஸ் சாப்பிட்டதே போதும்..''

''அப்படிச் சொன்னால் எப்படி... நொடியில் நான் சமைத்து விடுவேன்.. நீங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும்...''

வைகுந்தினால் அவளது பாசத்தை தட்ட முடிய வில்லை... தனக்குப் பிடித்ததைச் சொன்னான்.... கௌசல்யா அவசரமாய் சமையலறைக்குள் போனாள்... சேலையை இழுத்துச் செருகிக் கொண்டு ஹரிதாவும் பின் தொடர்ந்தாள்.

''நீ எங்கேடி ஆட்டுக்குட்டி போல பின்னாலேயே வருகிறாய்?''

''என்ன செய்ய வேண்டும்ன்னு சொல்லுங்கம்மா.. நான் சமைக்கிறேன்..''

ஹரிதாவை கௌசல்யா ஆச்சரியத்துடன் பார்த்தாள்... 'சமையலறை என்பது பெண்களின் சிறைக்கூடம்' என்று முழக்கமிடும் மகளா இன்று சமையல் செய்கிறேன் என்கிறாள்..?

''என்னடி இது அதிசயமாக இருக்கிறது....?''

''ஏம்மா.. நான் சமையல் செய்யக் கூடாதா..?''

''ஏன் செய்யக் கூடாது? தாராளமாகச் செய்யலாம்... ஆனால் அந்தப் பரிசோதனை முயற்சிகளையெல்லாம் இன்று வைத்துக் கொள்ளாதே... வீட்டிற்கு முதன் முத லாய் வந்திருக்கும் விருந்தாளி.. உன் சமையலைச் சாப் பிட்டு விட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடி விடக்கூடாது...''

இழுத்துச் செருகியிருந்த புடவையை அவசரமாய் சரி செய்து கொண்டாள் ஹரிதா.

''இப்போது என் சமையலைக் கெடுக்காமல் சமர்த் தாய் வெளியே போகிறாயா? எனக்கு வேலை நிறைய இருக்கிறது... சரிதா... சரிதா...''

''அவளை மட்டும் உதவிக்கு கூப்பிட்டுக் கொள்கிறீர் களே...''



''அவள் உன்னைப் போல் இன்றைக்குத்தான் புதிதாக சமையலறையை அடையாளம் பார்க்க வரவில்லை... விவரம் தெரிந்த நாள் முதலாய் எனக்கு உதவி செய்து கொண்டிருக்கிறாள்.. நீ எது.. எதிலோ எக்ஸ்பர்ட்டாய் இருக்கலாம்... ஆனால்.. அவள் சமையலில் எக்ஸ்பர்ட்..''

''அப்படியானால்.. அவள்தான் இன்றைக்கு சமைப்பாளா?''

''அப்படி மொத்தமாய் சொல்லி விட முடியாது.. ஒன்றிரண்டு அயிட்டங்கள் அவளுக்கு நன்றாக சமைக்க வரும்.. அதைச் செய்வாள்..''

''அதெல்லாம் முடியாது.. நீங்களே சமையல் செய் யுங்கள்...''

''நேரம் ஆகுமேடி...''

''முடிந்த வரை செய்யுங்கள்...''

ஹரிதாவின் மனக் கண்ணில்... வைகுந்த் நன்றாக நொட்டை விட்டுக் கொண்டு சாப்பிட்டு விட்டு.. சரிதாவை பாராட்டும் காட்சி தோன்றி மறைந்தது.

மகளின் முகத்திலேயே அவளின் மனப்போக்கை உணர்ந்து கொண்ட கௌசல்யாவிற்கு சிரிப்பு வந்து விட்டது.

''ஏன் சிரிக்கிறீர்கள்..''

''நீயும் உன் பயமும்...''

தான் மனதில் நினைத்தது அன்னைக்கு தெரிந்து விட்டதோ என்ற பயத்துடன் ஹரிதா அவசரமாய் சமா ளித்தாள்.

''பயமா.. எனக்கா.. நான் யார் தெரியுமா?''

''எல்லாம் தெரியும்டி.. சிரிப்பைக் கிளப்பாமல் வெளியே போ...''

''சரிதா..?''

''அவளையும் கூப்பிட்டுக் கொண்டு போய்.. அப்பாவுடன் உட்கார்.. பாவம்.. வந்திருப்பவரிடம் பேசியே போரடிப்பார்...''

கௌசல்யாவின் கணிப்பு மிகச் சரியாக இருந்தது... ஹரிதா.. சரிதாவின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு ஹாலுக்குப் போன போது.. ஜெயராமன் விலைவாசி ஏற்றத்தை வன்மையாக கண்டித்து வைகுந்திடம் பேசிக் கொண்டிருந்தார்.. முகத்தில் எந்தவித மாற்றமும் இல்லாமல் வருங்கால மாமனார் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

''ராமன் ஆண்டாலும் சரி.. ராவணன் ஆண்டாலும் சரி..மக்களுக்கு எப்போதுமே விடிவு காலம் இல்லை தம்பி...''

''ஓஹோ..''

''பெட்ரோல் விலையும்.. கேஸ் விலையும் இப்படி ஏறிக் கொண்டே போனால் எப்படி ஜனங்கள் வாழ முடியும்?''

''கஷ்டம்தான்..''

''காலையில் எழுந்ததும் காய்கறி வாங்க மார்க்கெட் பக்கம் போய் பாருங்கள்..''

'உங்கள் மகளைக் கட்டிய பின் போய் பார்க்கிறேன்..' என்று மனதில் நினைத்துக் கொண்டே வைகுந்த் அதற்கு தலையை ஆட்டினான்.

''எதையாவது ஈஸியாக சொல்ல வேண்டுமானால்.. இது என்ன கத்தரிக்காய்ன்னு நினைத்தாயான்னு முதலில் எல்லாம் கேட்பார்கள்..''

''அப்படியா.. எனக்குத் தெரியாதே...''



''பாவம் உங்களுக்கு எங்கே நாட்டுப் பழக்கமெல்லாம் தெரிந்திருக்க போகிறது.. அந்தக் கத்தரிக்காய் இப்போது என்ன விலை விற்கிறதுன்னு தெரியுமா? விலை கொடுத்து வாங்க முடியலைங்கிறேன்...''

''ஈஸிட்...?''

''ஆமாம்கிறேன்.. யாரையாவது திட்டணும்னா.. போடா வெங்காயம்ன்னு சொல்வோம்.. அந்த வெங்காயத்தை விலை கொடுத்து வாங்க முடியுதா?''

''ஏன் மாமா.. வாங்க முடியலையா?''

''பட்டம் பறப்பதை விட உயரத்தில்.. எட்ட முடியாத தொலைவில் விலைவாசி பறக்குதுங்கிறேன்..''

ஹரிதா பல்லைக் கடித்துக் கொண்டு தங்கையைப் பார்த்தாள். அவளுக்கும் அதே நிலைமைதான் போல.. அவள் முகத்தில் எள்ளும்... கொள்ளும் வெடித்தது.

''ஹரிதா.. பிளேடு போடுவதில் அப்பாவுக்கு நிகர் அப்பாதான்..'' என்றாள் அவள்.

''ஆமாம்... உச்சி வெயிலில் வீட்டுக்கு வந்த மனிதரிடம் விலைவாசி ஏற்றத்தைப் பற்றி இப்படிப் பேசுகிறாரே.. இதை பொதுக் கூட்டத்தில் பேசினால்.. போக வேண்டிய காதுகளுக்குப் போய் சேரும்.. இவரிடம் பேசி என்ன ஆகப் போகிறது?''

''உன் புத்தி உன்னை விட்டு எங்கே போகும்? பொதுக் கூட்டத்தில் மைக் பிடித்துப் பேசுவதிலேயே இரு..''

''பழக்கதோசம்டி.. கோபித்துக் கொள்ளாதே...''

இருவரும் ஹாலுக்குள் பிரவேசித்ததும்.. ஓர் விடு தலை உணர்வு வரப் பெற்றவனாய் வைகுந்த் அவர்கள்

இருவரையும் பார்த்தான். அவர்கள் இருவரும் ஜெய ராமனின் அருகே போய் அமர.. ஜெயராமன்.. பெரிய மகளின் முன் வாயைத் திறக்க முடியாது என்பதை உணர்ந்தவராய் வாயை மூடிக் கொண்டார்.

# 28

வைகுந்த் தன் முன் வந்து அமர்ந்த ஹரிதாவை பார்த்தான். அவளது பார்வை அவனது பார்வையோடு கலந்து பின் தாழ்ந்தது.. சரிதாவிடம் ஏதோ வினவிய வண்ணம் வைகுந்த் ஹரிதாவையே பார்க்க.. சரிதா அதை உணர்ந்தவளாய் நகைத்தாள்.

ஜெயராமனின் முன்னால் அவளிடம் எதுவும் கேட்க இயலாமல் வைகுந்த் அமைதி காத்தான்... கௌசல்யா அழைக்கும் குரல் கேட்டு அவர் எழுந்து போகவும்.. சரிதாவைப் பார்த்து.

''எதுக்கு சிரித்தாய்..?'' என்று கேட்டான்.

''கேள்வி கேட்பது என்னிடம்.. பார்வை அங்கேயா...''

''ஊம்.. இதற்கு விளக்கம் நான் சொல்ல மாட்டேன்..''

''வேறு யார் சொல்வதாம்..?''

''கண்ணனை அனுப்பி வைக்கிறேன்... அவன் வந்து கதை சொல்வான்...''

சரிதாவின் முகம் சிவந்து.. வாய் மூடிக் கொண்டது..



வைகுந்த் மீண்டும் ஹரிதாவை பார்வையிட ஆரம்பித்த போது கௌசல்யா வந்து சாப்பிட அழைத்துச் சென்றாள்.

''சாப்பாடு பிடித்திருக்கிறதா...''

''டேஸ்ட் பிரமாதம்.. உங்கள் பெரிய பெண்ணும் இப்படியே சமைப்பாளா..?''

''அவள்தானே.. சமைத்து வைத்தால் நன்றாகச் சாப்பிடுவாள்...''

சாப்பிட்டு முடித்தவுடன் ஹாலில் சென்று அமர்ந்தார் கள்.. வைகுந்த் பேச்சை ஆரம்பித்தான்.. அதற்காக காத்திருந்த ஜெயராமனும்.. கௌசல்யாவும் பரபரப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல் நிமிர்ந்து உட்கார்ந் தார்கள்.

''மாமா.. உங்கள் மகள் ஹரிதாவை நான் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்.. உங்கள் சின்ன மகள் சரிதாவை என் சித்தப்பா மகன் கண்ணன் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான்.. எங்கள் இருவருக் காகவும்.. உங்களின் இரண்டு மகள்களையும் பெண் கேட்டு நாளைக்கு என் வீட்டிலிருந்தும்.. என் சித்தப்பா வீட்டிலிருந்தும் வருகிறார்கள்.. பெண் கொடுக்க உங்களுக்கு சம்மதமா...''

ஜெயராமன் இளைய மகளின் திருமணமும் சேர்ந்தே வரும் என்பதை எதிர்பார்க்கவில்லை.

கௌசல்யாவும்.. சரிதாவும்.. ஹரிதாவின் திருமணம் முடிந்து சில மாதங்கள் கழித்துத்தான் சரிதாவின் திரு மணம் முடிவாகும் என்ற நினைவோடு இருந்தார்கள்... அவர்களும் இதை எதிர்பார்க்கவில்லை.

'என்ன பதில் சொல்வது..?' என்று தடுமாறிப் போனார்கள் ஜெயராமனும்.. கௌசல்யாவும்.

''என்ன அத்தை.. எங்களுக்கு பெண் கொடுக்க மாட்டீர்களா?'' வைகுந்த் கௌசல்யாவைப் பார்த்து விளையாட்டாய் வினவவும்... அவள் பதறிப் போனாள்.

''அதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண் டுமே மாப்பிள்ளை...''

தன்னையறியாமல் கௌசல்யா.. வைகுந்தை 'மாப் பிள்ளை' என்று அழைத்து விட மேலே பேச வேண்டிய தேவையே இல்லாமல் அங்கே ஹரிதாவின் திருமணம் முடிவாகிவிட்டது.

வைகுந்த் கிளம்பிச் செல்லும் போது வாசல் வரை கூடச் சென்று அனைவரும் வழி அனுப்பி வைத்தார்கள்.

வீட்டிற்குள் திரும்புகையில் சரிதா.. ஹரிதாவின் கை பிடித்து தன்னோடு நிறுத்திக் கொண்டாள்.

''என்னடி...''

''தேங்க்ஸ் ஹரிதா... இதை நான் எதிர்பார்க்கவில்லை..''

''எதை எதிர்பார்க்கவில்லை.... என் கல்யாணத் தையா..?''

ஹரிதா வினவவும்.. தான் நடித்துக் கொண்டிருந்த நாடகம் சரிதாவின் நினைவிற்கு வந்துவிட்டது.

''ஆமா.. ஆமாம்..''

''என்ன இப்படித் தடுமாறுகிறாய்?''

''ஒன்றுமில்லை ஹரிதா.. நீ எனக்கு மூத்தவள்... உனக்கு லைன் கிளியர் ஆனால்தானே எனக்குச் சீக்கிரம் கல்யாணம் ஆகும்... நீ உன் கல்யாணத்தையும் முடிவு



செய்து.. என் கல்யாணத்தையும் நடத்தி வைக்கிறாயே... அதற்குத்தான் நான் தேங்க்ஸ் சொன்னேன்...''

''ஆக்சுவலாய் சரிதா... நான் உனக்குத்தான் தேங்க்ஸ் சொல்ல வேண்டும்... உனக்காக அவரிடம் பேசப் போய்த் தான் நான் அவருடைய குண நலன்களை அறிந்து கொண்டேன்...''

வைகுந்த் தான் சொல்லிய விதத்தில் செயல் பட் டிருக்கிறான் என்ற உண்மையை ஹரிதாவிடம் இருந்து மறைத்த சரிதா... போலியாய் ஆச்சரியப்பட்டு...

''அப்படியா...'' என்றாள்.

மறுநாள் காலையில் வீடு விழாக் கோலம் பூண்டது... கௌசல்யா வாசலை அடைத்து செம்மண் கோலம் போட்டு வைத்தாள்.

சரிதா வீட்டில் உள்ள ஜன்னல்கள்.. வாயில்களுக்கு புதிய திரைச்சீலைகளை மாற்றினாள்.

ஜெயராமன் கௌசல்யா போட்டுக் கொடுத்த லிஸ்டின் படி காய்கறி மளிகை சாமான்கள் வாங்கி வந்து கொடுத்து விட்டு... சோபாக்களை ஒழுங்காக போட்டு வைத்தார்.

கௌசல்யா... சுவையான சிறு விருந்தொன்றை தயார் செய்தாள்.

ஹரிதா மட்டும்.. கட்டிலில் குப்புறப் படுத்து கால் களை ஆட்டிய வண்ணம்.. விழித்துக் கொண்டே பகல் கனவு கண்டு கொண்டிருந்தாள்.

மதிய வேளை தாண்டியதும்.. கௌசல்யா.. குளித்து உடைமாற்றி... சரிதாவை அழைத்தாள்.

சரிதா அழகான மயில் கழுத்து பட்டுப் புடவையில் அளவான ஒப்பனையுடன்.. தலை நிறைய மல்லிகைச் சரம் வைத்துக் கொண்டு பின்னலாட வந்து நின்றாள்.

இளைய மகளை திருப்தியுடன் பார்த்து புன்னகைத்த கௌசல்யா அவளுக்கு நகைகளை போட்டு விட்ட பின்...

''ஹரிதாவை கிளப்பி விடும்மா...'' என்றாள் கவலையுடன்.

''என்னை எங்கேம்மா கிளப்பி விடச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்ட வண்ணம் வந்து நின்ற ஹரிதாவைப் பார்த்ததும்.. கௌசல்யா... சரிதா இருவருமே 'ஆ'வென்று வாய் பிளந்தனர்.

அரக்குச் சிகப்பில் பட்டுப் புடவையணிந்து.. அதன் மஸ்டார்டு கலர் பார்டருக்கேற்றார் போல் மஸ்டார்டு கலர் ஜாக்கெட் அணிந்து... பின்னலிட்டு வந்து நின்றாள் ஹரிதா.

ஏற்கனவே அழகானவள்.. தன்னை அழகுபடுத்திக் கொண்ட விதத்தில் பேரழகியாய் தோன்ற கௌசல்யா பூரித்துப் போனாள்.

''சரிதா.. எனக்கு பூ எங்கே..''

''திரும்பி நில் வைத்து விடுகிறேன்..''

சரிதா பூ வைத்து விடவும்.. கௌசல்யா பெரிய மகளுக்கும் நகைகளை போட்டுவிட்டாள்.

மறுப்புச் சொல்லாமல் நகைகளைப் போட்டுக் கொண்ட ஹரிதாவை பார்த்தும்.. முதலிரண்டு பெண் பார்க்கும் வைபவங்களும் சரிதாவிற்கு நினைவுக்கு வந்தன.

'பெண் மனம் தான்.. மனம் கவர்ந்த ஆடவனைக் கண்டதும் எப்படியெல்லாம் மாறிவிடுகிறது..'

சரிதா தனக்குள் வியந்து கொண்டாள்.. வாசலில் வரிசையாய் கார்கள் வந்து நின்றன... கௌசல்யாவும்..



ஜெயராமனும் வாசல் பக்கம் விரைய.. ஹரிதாவும்.. சரிதாவும்.. அறைக்குள் சென்று விட்டனர்.

## 29

வைகுந்தனின் அப்பா ராமலிங்கமும்.. அவருடைய தம்பி சொக்கலிங்கமும் அண்ணன் தம்பி ஒற்றுமைக்கு பெயர் போனவர்கள்.. அவர்களுக்கு வாய்த்த மனைவிகளும்.. அண்ணன் தம்பிகளின் ஒற்றுமையை முறிக்காமல் பேணி வளர்த்தனர்.

ராமலிங்கத்தின் மனைவி சீதாவும்.. சொக்கலிங்கத்தின் மனைவி துர்காவும்.. உடன்பிறந்த அக்காள்.. தங்கையை விடப் பாசமானவர்கள்.. அவர்கள் பெற்ற பிள்ளைகளும்.. ஒரே குடும்பத்தில் பிறந்த உடன் பிறந்தவர்கள் போல் ஒருவர் மேல் ஒருவர் பாசமாக இருந்தனர்.

வைகுந்தனும்.. கண்ணனும் ஒரே வீட்டில் பிறந்த அக்காள் தங்கையை திருமணம் செய்து கொள்வதில் இரு வீட்டாருக்கும் பரம சந்தோசம்.

''வாங்க.. வாங்க...'' என்று ஜெயராமனும்.. கௌசல்யாவும் வரவேற்க.. இரு வீட்டாரும் சிரித்த முகத்துடன் வந்து உள்ளே அமர்ந்தனர்.

கௌசல்யா எல்லோருக்கும் குடிக்கத் தண்ணீர் கொடுத்தாள்... ராமலிங்கம் அனைவரையும் ஜெயராமனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

''இது என் மனைவி சீதா.. மகள் மீனா... இவள்தான் உங்கள் இரண்டாவது பெண்ணுடன் படித்தவள்... என் மகன் வைகுந்த் தான் உங்களின் பெரிய மாப்பிள்ளை... இவன் என் தம்பி சொக்கலிங்கம்.. இது தம்பியின் மனைவி துர்கா.. இவன் தம்பியின் பெரிய மகன் கண்ணன்.. இவன் தான் உங்களின் இரண்டாவது மாப்பிள்ளை.. இவனுக்கு நேர் இளையவன் மோகன்.. பாரினில் படித்துக் கொண்டிருக்கிறான். இவள் என் தம்பியின் மகள் வித்யா...''

பரஸ்பர பேச்சு வார்த்தைக்குப் பின்..

''பெண்களை பார்த்து விடலாமே... எங்கள் வீட்டுப் பெண்கள் வரப்போகும் மருமகளைப் பார்க்க ஆவலாய் இருக்கிறார்கள்..'' என்றார் ராமலிங்கம்.

ஹரிதாவும்.. சரிதாவும் ஹாலுக்கு வந்து விரிக்கப்பட்டிருந்த புது ஜமுக்காளத்தில் அமர்ந்தனர்.

இதற்கு முன் நடந்த பெண் பார்க்கும் படலங்களில் ஹரிதா முன் கூட்டியே சோபாவில் அமர்ந்து இடம் பிடித்துக் கொண்ட நிகழ்ச்சிகள் சரிதாவின் நினைவிற்கு வந்தன.

'காதல்தான்... ஒரு பெண்ணின் ஈகோவை எப்படியெல்லாம் மறையச் செய்து விடுகிறது...'

தமக்கையைப் பற்றி பரிவுடன் நினைத்துக் கொண்டாள்.. சரிதா.

இரண்டு பெண்களையும் பார்த்த சீதா.. துர்கா... இருவரின் முகத்திலும்.. திருப்தி நிலவியது.

கண்ணனின் தங்கை வித்யா மட்டும் குறும்பாக... தன் அண்ணன்களைப் பார்த்து...



''அண்ணிகளுக்குப் பாடத் தெரியுமா அண்ணா...'' என்று கேட்டாள்.

பழைய நினைவில் எங்கே.. ஹரிதா.. 'அட்ரா.. அட்ரா.. நாக்கு மூக்கு...' என்று பாடி விடுவாளோ.. என்று பயந்தே போனாள் சரிதா.

ஆனால் ஹரிதா மெல்லிய புன்முறுவல் ஒன்றை வித்யாவின் பக்கம் வீசிவிட்டு.. சரிதாவின் காதோரம்...

''குன்றின் மீது... பாடலைப் பாடுவோமா?'' என்று வினவினாள்.

சரிதா சம்மதம் என்ற பாவனையில் தலையை ஆட்ட.. சகோதரிகள் இருவரும் பாட ஆரம்பித்தனர்.

''குன்றின் மீதொரு சேவல் கூவுதம்மா...

குமரன் அழகைத் தினமும் பாடவென்றே...

கொக்கரக்கோ... கோ.. கோ வென... அனுதினமும்...

குன்றின் மீதொரு சேவல் கூவுதம்மா...''

சீதாவும் துர்காவும் வருங்கால மருமகள்களின் குரலினிமையிலும்.... பாடலிலும் மகிழ்ந்தே போய் விட்டனர்.

வைகுந்த்.. கண்ணன் இருவரின் விழிகளிலும் பாராட்டுத் தெரிந்தது. ஹரிதா.. சரிதா.. இருவரின் மனங்களும் காதலர்களின் பார்வை கண்டு குளிர்ந்தன.

''பெண்களை நல்ல முறையில் வளர்த்திருக்கிறீர்கள்...'' என்று சீதா மெச்சிக் கொண்டாள்.

'அதுசரி... என் பெரிய மகளின் மறியல் போராட்டக் கதைகளைக் கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்களோ..' என்று ஜெயராமன் மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

அந்த வார இறுதியில் நிச்சயதார்த்தம் நடத்தி விடுவது என்றும்.. அந்த மாத இறுதியில் திருமணங்களை நடத்தி விடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

''ஒரே மேடையில் இரு திருமணங்களை நடத்தக் கூடாதே..'' என்று கௌசல்யா தயங்கிய போது...

''நாங்களும் அதையேதான் நினைத்தோம்.. முதல் நாள் வைகுந்திற்கும்... அடுத்த நாள் கண்ணனுக்கும் திருமணம் நடத்துவதாகத் தான் ஏற்பாடு பண்ணியிருந்தோம்.. மாதக் கடைசியில்.. அடுத்தடுத்த தினங்களில் இரண்டு முகூர்த்த நாள்கள் வருவது நினைவு இருக்கிறதல்லவா...'' என்று ராமலிங்கம் தன்மையாய் பேசினார்.

குறித்த நாளில் நிச்சயதார்த்தம் நடந்து.. முதலில் ஹரிதா-வைகுந்தின் திருமணம் நடைபெற்றது.

எதற்கும் தலை வணங்காத ஹரிதாவின் தலை நாணத்தால் குனிய வைகுந்த்.. அவளின் கழுத்தில் தாலி கட்டினான்... மாலையில் ரிசப்சன் முடியவும்.. விடிந்தால் கண்ணன்-சரிதாவின் திருமணம் என்ற நிலையில்... வைகுந்த்-ஹரிதாவின் முதலிரவு.. மறுநாளுக்கு என்று தள்ளி வைக்கப்பட்டது.

கழுத்தில் தாலியோடு.. தங்கைக்கு துணையாய் படுத்திருந்த போது... ஹரிதாவின் மனதில் வைகுந்தின் நினைவே நிறைந்திருந்தது.

'இந்த நேரம்.. அந்த நெஞ்சில்..

என்ன நினைவோ..?'

மனம் ஏக்கத்துடன் பாடியது.



தூக்கம் வராமல் திருமண மண்டபத்தின் மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்த வைகுந்தின் நிலையும் அதுவாகவே இருக்க அவன் ஏக்கப் பெருமூச்சுவிட்டான்.


ஆயிரம் வேலைகள் செய்து கை பிடித்தும்... அவள் கை தொட முடியாமல் இருக்கிறதே என்ற தவிப்பு அவனுள் எழுந்தது.

மாடியிலிருந்து இறங்கி வந்தான்... வித்யா அவளுடைய தோழிகளுடன் கலகலத்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

வைகுந்த்.. சுற்று முற்றும் பார்த்தான்.. எல்லோரும் அவரவர் வேலைகளில் கவனமாய் இருக்க அவனை யாரும் கவனிக்கவில்லை. வைகுந்த் வித்யாவை கையசைத்து அழைத்தான்.



## 30



''என்ன அண்ணா...'' என்றபடி வித்யா எழுந்து அவனருகே வந்தாள்.

''வித்யா... உன் அண்ணியிடம் ஒன்று கேட்க வேண்டும்... கொஞ்சம் மொட்டை மாடிக்கு வரச் சொல்கிறாயா?''

வித்யாவின் கண்களில் சிரிப்பு வந்தது.

''ஊம்.. அப்படி என்ன கேட்க வேண்டும்..''

''அதை அவளிடம் தானே கேட்க வேண்டும்..''

''ஊம்.. நடத்துங்கள்.. நடத்துங்கள்..''

வித்யா... சரிதாவின் அறையை நோக்கிப் போனாள்.. அறைக் கதவைத் தட்டினாள்.. ஹரிதா எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

''என்ன வித்யா..''

''பெரிய அண்ணனுக்கு ஏதோ சந்தேகமாம்.. உங்களிடம் விளக்கம் கேட்க வேண்டுமாம்.. மொட்டை மாடிக்கு வரச் சொன்னார்... போகிறீர்களா...''

வித்யா பொங்கிச் சிரித்தாள்... ஹரிதாவின் உடலில் மின்சார அலை பரவியது... எதிர்பார்ப்புடன் கூடிய தாகம் ஒன்று அவளது உடலில் உற்பத்தி ஆகியது.. திரும்பி சரிதாவைப் பார்த்தாள்.

''ம்ம்.. போய் வா...'' என்றாள் அவள்.

''நான் வரும்வரை உன் அண்ணியுடன் பேசிக் கொண்டிருக்கிறாயா வித்யா...'' என்று ஹரிதா கூறவும்...

''ஓ.கே..'' என்றபடி அந்த அறைக்குள் நுழைந்து அமர்ந்து கொண்டாள் வித்யா.

ஹரிதா வருவதைக் கண்டதும்.. வைகுந்த் மாடிப்படி ஏறினான்... மொட்டைமாடியின் இருள் போர்வைக்குள் மறைந்து நின்று கொண்டான்.

அவனுக்குப் பின்னால் மெல்லிய கொலுசின் ஒலி கேட்டது.. பூவாசம் அவனது நாசியை வருடியது.. கொலுசின் ஒலி சமீபித்தது.. திரும்பாமல் நின்றான்.

''என்ன வேண்டும்..'' என்று மெல்லிய குரலில் ஹரிதா வினவியதும் திரும்பினான்.

அந்த மெல்லிய வெளிச்சத்தில் அவளது உருவம்.. ஓர் தேவதையின் அழகோடு பரிமளித்தது... வைகுந்தின் உடலில் உணர்வுகள் பொங்கி எழுந்தன.



''நீதான் வேண்டும்...'' அவன் எல்லையில்லாத தாபத்துடன் கூறினான்.

ஹரிதாவின் மூச்சுத் திணறியது... அவள் மௌனமாய் அவனுக்கு என்ன பதில் தருவதென்று தெரியாமல்... நின்றாள்.

வைகுந்தின் கை... அவளுடைய கையைப் பற்றி அருகே இழுத்தது.. அவள் அவனது மார்பினில் விழுந்தாள்... அவனது கரங்கள் ஆக்டோபஸ் போல அவளை வளைத்துக் கொண்டன.

ஆவேசத் தழுவலுடன் அவளது முகம் நோக்கிக் குனிந்தான் அவன். ஹரிதா அவனது வேகத்தில் கரைந்து போனாள்.. அவன் அவளது எலும்புகள் நொறுங்கும் அளவிற்கு இறுக்கி அணைத்தான்.. அவனது கரங்கள் எல்லை மீறின.

ஹரிதா.. பலவீனமாக அவனைத் தடுத்தாள்.

''ஏன்...'' அவன் அவளது காதோரம் கோபமாய் கேட்டான்.

''இன்றைக்கு வேண்டாமே..''

''அதுதான் ஏன்.. என்று கேட்கிறேன்..''

''பெரியவர்கள் அப்படித்தானே முடிவு பண்ணியிருக்கிறார்கள்..''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது.. விடிந்தால் கண்ணனின் கல்யாணம் என்பது மட்டும் இல்லையென்றால்.. நாம் இப்போது என்ன செய்து கொண்டிருப்போம்..? நான் அதை மட்டும்தான் நினைப்பேன்...''

அவன் அவளை விலக விடாமல் தனக்குள் புதைத்துக் கொண்டான். ஹரிதா பேச்சிழந்து போனாள்...

வைகுந்த்.. மெதுவே சரிந்து அமர்ந்து.. தன் மடியில் அவளை சரித்துக் கொண்டான்.

கட்டிக் கொண்டிருப்பவன் கணவன்.. எப்படி விலகிச் செல்வது..? ஹரிதாவின் உணர்வுகளும் விழித்துக் கொள்ளத் துவங்க...அவள் அவனது கழுத்தினில் தன் கைகளை மாலையாக்கிக் கொண்டாள்.

வைகுந்த் அவளது கரத்தினில் முத்தமிட்டு... அவள் மேல் சரிந்து படர்ந்தான்.. ஹரிதாவின் கரங்கள் அவனது முதுகின் மேல் பரவின.. மெல்லிய நிலவொளியில்... அவர்கள் ஒருவரிடம் ஒருவர் தங்களை இழந்து கொண்டிருந்த போது.. மாடிப்படியில் யாரோ வரும் ஓசை கேட்டது.

ஹரிதா அவசரமாய் அவனை விலக்கி எழுந்தாள்... சத்தமில்லாமல் இருளில் அமர்ந்து விட்டாள்.. மனதில் வெட்கம் சூழ்ந்தது.

'இந்த நிலையில் யாராவது அவளைப் பார்த்து விட்டால் என்ன நினைத்துக் கொள்வார்கள்...'

அவளது சங்கடம் புரிய வைகுந்த்.. அவளை மறைத்தாற் போல் நின்று வருவது யார் என்று பார்த்தான்.

கண்ணன் வந்து கொண்டிருந்தான்... வைகுந்த் அவசரமாய் அவனை அணுகி.. மாடிப்படியின் அருகிலேயே அவனை எதிர் கொண்டான்.

''என்ன அண்ணா... இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' கண்ணன் வியப்புடன் கேட்டான்.

''முதலில் நீ எதற்கு இங்கு வந்தாய்.. அதைச் சொல்லு'' என்றான் வைகுந்த்.



தடைபட்ட சந்தோசத்தின் எரிச்சல் அவனது வார்த்தைகளில் தெரிந்தது.

''நான் தம்மடிக்க வந்தேன்...''

''அதைக் கீழேயே செய்வதுதானே..''

''அப்பா... பெரியப்பாவின் முன்னாலா..?''

கண்ணன் சிகரெட்டை எடுத்து வாயில் வைத்துக் கொள்ள முனைய வைகுந்த் அவசரமாய் அதைப் பறித்தான்.

'இவன் ஒருத்தன்...நேரம் கெட்ட நேரத்தில் வந்து தொல்லை கொடுக்கிறான்.. இவன் சிகரெட் பற்ற வைக்க முனைந்தால் அந்த விளக்கு வெளிச்சம் ஹரிதாவைக் காட்டிக் கொடுத்து விடாதா..?'

''ஏன் அண்ணா..''

''இன்றைக்கு என்னவோ எனக்கு சிகரெட் ஸ்மெல் பிடிக்கவில்லை...''

''அது சரி... உங்கள் மனம் தேடும் வாசனையே வேறு ஆயிற்றே... அண்ணியின் பூவாசனையைத் தேடுகிறீர்களாக்கும்...''

'போடா மடையா.. நான் தேடவில்லை... அவளது தலையில் சூடியிருந்த பூவாசனையைத்தான் முகர்ந்து கொண்டிருந்தேன்.. நீ வந்து கெடுத்து விட்டாய்...'

வைகுந்த் பல்லைக் கடித்துக் கொண்டான்.

''ஆமாம்டா... என் கல்யாணம் முடிந்த மறுநாளே யார் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொன்னது. ஒரு வாரம் பொறுத்துப் பண்ணிக் கொள்ளக் கூடாதா? இப்போது பார்.... விடிந்தால் உனக்கு கல்யாணம் என்று..

நான் கல்யாணம் முடிந்தும் பிரம்மச்சாரியாய் நிற்கிறேன்...''

வைகுந்த் இருக்க மாட்டால் பொறும... கண்ணன் சிரித்துக் கொண்டே சொன்ன பதில்... வைகுந்தின் வாழ்க்கையை புரட்டிப் போட்டுவிட்டது.

# 31

''ஏன் சொல்ல மாட்டீர்கள்..? உங்கள் காதல் நிறைவேற நானும் சரிதாவும் ஆடிய நாடகத்தை மறந்து விட்டீர்களா? நாங்கள் மட்டும் நடிக்காமல் இருந்திருந்தால்.. வருடக் கணக்காய் காதலித்த அண்ணியின் கழுத்தில் நீங்கள் மூன்று முடிச்சு போட்டிருக்க முடியுமா...?''

வைகுந்த்... தடுக்க முனைவதற்குள் கண்ணன் அவன் பாட்டிற்கு மடை திறந்த வெள்ளம் போல் பேச ஆரம்பிக்க.. வைகுந்த் பதறிப் போனான்.

கண்ணனின் வரவினால் சங்கடப்பட்டு.. இருளின் மூலையில் ஒடுங்கி அமர்ந்து விட்ட ஹரிதா அப்படியே உறைந்து போனாள்.

'கண்ணனும்.. சரிதாவும் நாடகம் ஆடினார்களா... நடித்தார்களா.. வைகுந்திற்கு அவளை ஏற்கனவே தெரியுமா? தெரிந்திருந்தும் தெரியாதது போல் பாவனை செய்தானா... ஏன்..? அவளைக் காதலித்தால் நேரே வந்து தன் காதலைச் சொல்வதை விட்டுவிட்டு.. அவளுடைய தங்கையின் வாழ்க்கைக்காக என்று ஏன் அவளைத் தன்னிடத்தில் வந்து பேச வைத்தான்...'



கண்ணனோ... வைகுந்தின் சைகைகளைக் கவனிக்காமல் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

''சரிதா மட்டும்.. அண்ணியின் குண இயல்புகளை உங்களிடம் பிட்டுப் பிட்டு வைக்காமல் இருந்திருந்தால்.. நீங்கள் அண்ணியின் மனதில் இடம் பிடித்திருக்க முடியுமா... அண்ணிக்கு பாரதியைப் பிடிக்கும் என்பதை சொல்லியவளே என் சரிதா தானே.. அவள் சொன்னதால்தானே.. நீங்கள் பாரதியை பின்பற்றுபவர் போல் நடித்து அண்ணியை ஜெயித்தீர்கள்.. இப்போது உங்கள் காரியம் முடிந்தவுடன்.. எங்களைக் குறைவாய் பேசுகிறீர்களே... இது நியாயமா..?''

ஹரிதாவின் முகம் இருண்டுவிட்டது.. அவளது கனவுகள் தகர்ந்து சரிந்து கொண்டிருந்தன.

'எவ்வளவு எளிதாய் ஏமாற்றிவிட்டான். யாரிடமும் ஏமாறாத என்னை இவன் ஏமாற்றி விட்டானே... பாரதியின் புதுமைப் பெண்ணை இவன் தேடவில்லை... என் அழகை ரசித்து இருக்கிறான்... என்னை வேட்டையாட விரும்பி.. ஏமாற்றி ஜெயித்து விட்டான்...'

கண்ணன் இனி பேச்சை நிறுத்தி ஆகப் போவது என்ன என்ற விரக்தியுடன் வைகுந்த் ஹரிதா இருந்த இருள் மூலையைப் பார்த்தான். சற்று நேரத்திற்கு முன்... 'சகலமும் நீயே...' என்று அவனது கைகளில் தன்னை ஒப்படைத்திருந்தவள்... இனி அவனது விரல் தொட விழைவாளா? அவளது விரலைத் தொடத்தான் விடுவாளா..?

''அண்ணி... என்னைத் தேடி வந்த போது.. என்னவோ... நான் நீங்கள் கிழித்த கோட்டைத் தாண்டாத தங்கக் கம்பி போல் வேடம் போட்டதால் தானே...

அண்ணி உங்களைத் தேடி வந்தாங்க... இவ்வளவு காரியம் நாங்கள் செய்திருக்கிறோம்.. எங்களுக்காக நீங்கள்.. உங்கள் பர்ஸ்ட் நைட்டை ஒரு நாள் தள்ளி வைக்கக் கூடாதா...''

'ஒரு நாளா... இனி வாழ்நாளில் அந்தத் திருநாள் வருமா என்று தெரியவில்லையேடா தம்பி.. அவள் கோபக்காரி.. ரோசக்காரி.. ஏமாற்றினேன் என்ற துடிப்பில் இனி என்ன செய்து வைப்பாளோ..'

''என்ன அண்ணா.. எதுவும் பேச மாட்டேன் என்கிறீர் கள்..''

''எனக்கும் சேர்த்துத்தான்... நீ ஆசை தீர நிறைய பேசி விட்டாயே...''

''இப்போது சொல்லுங்கள்.. நான் சொல்வது சரி தானே...''

''உனக்கு எல்லாமே சரியாகவே நடந்துவிட்டது...''

''ஏன் உங்களுக்கும்தான் சரியாக நடந்துவிட்டது...''

''அது உனக்கு எப்படிடா தெரியும்? நீ போ...''

''நீங்கள்...?''

''கொஞ்ச நேரம் உலவி விட்டு வருகிறேன்..''

கண்ணன் தோள் குலுக்கி கேலியாகச் சிரித்தபடி.

''அண்ணியின் நினைவா...'' என்றான்.

''ஆமாம் அவளின் நினைவு தான்...''

''இன்று ஒரு நாள்தானே அண்ணா... பொறுத்துக் கொள்ளுங்கள். நாளையில் இருந்து அண்ணி உங்கள் அருகில்தானே இருப்பார்கள். என்ன அண்ணா நான் சொல்வது சரிதானே...?''



'ம்ஹூம்... அவள் என் அருகினில் இருப்பாள். அவளது மனம் மட்டும்.. என்னை விட்டுத் தொலைவில் இருக்கும்...'

வைகுந்த் விட்ட பெருமூச்சு காற்றில் கலந்தது.. கண்ணன் இறங்கிப் போய் விட்டான்.. வைகுந்த்.. ஹரிதா இருந்த இடத்திற்கு சென்று நின்றான்... அவள் எழுந்து கொண்டாள்.

''ஹரிதா..'' அவளது தோள் தொட முனைந்தான் வைகுந்த்.

''தொடாதீர்கள்..'' அவனது கையைத் தட்டிவிட்டாள் அவள்.

''கொஞ்சம் பொறுமையாய் நான் சொல்வதைக் கேள்...''

''இன்னும் என்ன பொய்யைச் சொல்லப் போகிறீர் கள்.. பாரதி எங்கே... நீங்கள் எங்கே... அச்சம் தவிர்... ஆண்மை தவறேல்... என்றார் அவர்.. நீங்கள் தவறி விட்டீர்களே.. உங்களையே நம்பி வந்த பெண்ணை ஏமாற்றி விட்டீர்களே... இதுதான் உங்கள் நேர்மையா.. இதுதான் உங்கள் ஆண்மையா..''

''உண்மை என்னவென்று நான் சொல்கிறேன்..''

''உண்மையா.. அது உங்களிடம் இருக்கிறதா..? உங்கள் தம்பி தான் உண்மை என்னவென்பதை பிட் டுப்பிட்டு வைத்தாரே... நான் என் இரு காதாலும் கேட் டுக் கொண்டிருந்தேனே...''

''ஹரிதா.. கண்ணால் காண்பதும் பொய்.. காதல் கேட்பதும் பொய்.. தீர விசாரித்து அறிவதே மெய்...''

''ஆமாம்... நான் கண்ணால் கண்ட உங்களின் கம்பீர மான தோற்றம் பொய்யாகிப் போனது. காதால் கேட்ட..

பாரதியின் புதுமைப் பெண்ணைப் பற்றிய பேச்சு பொய்யாகிப் போனது.. தீர விசாரித்து அறியாமல் போனேன்..''

''ஏய்.. நான் உன்னைக் காதலித்தேண்டி.. உன்னைக் கை பிடிக்க எனக்கு வேறு வழி தெரியவில்லை..''

''அதனால் என்னை ஏமாற்றினீர்கள்.. ஏமாற்றுக்காரரான உங்களுக்கு காதலைப் பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது?''

''ஹரிதா...''

''என் பெயரைச் சொல்லக் கூட உங்களுக்கு இனி உரிமையில்லை... நீங்கள் யாரோ.. இனி நான் யாரோ..''

அவள் கீழே செல்ல முயல.. அவளை இழுத்து நிறுத்திய வைகுந்த்.. ஓங்கி அவளது கன்னத்தில் ஓர் அறை விட்டான்.

## 32

''நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்க்கிறேன்.. விட்டால் நீ ரொம்ப ஓவராகப் பேசிக் கொண்டே போகிறாயே... காலையில் என் தாலியைக் கழுத்தில் வாங்கிக் கொண்டு... கொஞ்ச நேரத்திற்கு முன்னால்.. என்னோடு கட்டிக் கொண்டிருந்து விட்டு.. இப்போது நீ யாரோ.. நான் யாரோ என்று வசனம் பேசுகிறாயா? பல்லைக் கழட்டி விடுவேன் ராஸ்கல்...''

கோபத்தில் தன் வசமிழந்து அவளை அடித்ததோடு இல்லாமல் மேலும் முரட்டுத்தனமாய் வைகுந்த்



வார்த்தைகளை விடவும்.. ஹரிதா கன்னத்தைப் பிடித்துக் கொண்டு சிலையாக நின்று விட்டாள்.

அவள் மனதில் இருந்த கற்பனைக் கணவனின் பிம்பம் உதிர்ந்து விழுந்தது. வைகுந்தின் முகமூடி இல்லாத தோற்றத்தை அவள் தரிசிப்பதாய் அவள் நினைத்து விட்டாள்.

கடைசியில் அவளுக்கும் ஒரு ராட்சஸன்தான் கணவனாக வாய்த்து விட்டானா... பெண்ணை சக மனித ஜீவனாகப் பார்க்காமல் உடல் பலத்தை பிரயோகித்து அவளை அடக்கும் காட்டு மிராண்டிகளில் ஒருவன் தான் அவளது கணவனா... ஊருக்கு ஒருத்தியிடம் பொய் சொல்லித் தாலிகட்டும் ஏமாற்றுக்காரனுக்கும்.. இவனுக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கிறது?... இவனும் ஏமாற்றுக்காரன்தானே.. பொய் சொல்லி அவள் கழுத்தில் தாலியைக் கட்டியவன்தானே.

பாரதி.. பாரதியென்று அடித்துக் கொண்டாளே.. பாரதி பெண்ணிடம் கை நீட்டுவானா.. பெண்ணை அவமதிப்பாய் பேசுவானா.. பெண்மையை மிரட்டுவானா.. பெண்ணை ஏமாற்றி தாலி கட்டுவானா..

'இல்லை.. இவன் பாரதியின் பிம்பம் இல்லை.. இவன் கொடியவன்.. ஏமாற்றுக்காரன்.. பெண் பித்தன். என் அழகின் மீதும் உடலின் மீதும் ஆசை கொண்டு என்னிடம் நடித்தவன்.'

'போயும்.. போயும்.. இவனிடம் ஏமாந்தேனே... இவனைக் கண்டு பரவசப்பட்டேனே.. இவனிடம் என் மனதைப் பறி கொடுத்தேனே.. இவன் பார்த்தால் சிறகில்லாமல் பறந்தேனே... இவன் தொட்டவுடன் அனலில் பட்ட மெழுகாய் உருகிக் கரைந்தேனே...'

அசையாமல் நின்ற ஹரிதாவைப் பார்த்து வைகுந்த் பயந்து விட்டான்.

''ஹரிதா..''

''.........''

''ஹரிதா..''

''...........''

''பேசு ஹரிதா.. எதையாவது பேசு.. என்னைத் திட்ட வேண்டுமென்றால் திட்டி விடு. இல்லை அடிக்க வேண்டுமென்று நினைத்தால் அடித்துவிடு. மௌன மாக மட்டும் இருக்காதே...''

''இனி நமக்குள் பேச என்ன இருக்கிறது?''

''இப்படி விட்டேற்றியாய் பேசாதே.. நடந்தவை களுக்கு நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள் கிறேன். ஆயிரம்தான் இருந்தாலும் நாம் இருவரும் கணவன்.. மனைவி.. அப்படியிருக்க... நீ.. நாம் இரு வரும் யார்.. யாரோ என்பதுபோல் பேசலாமா? அதனால் தான் கோபப்பட்டு கை நீட்டி விட்டேன்.. என்னை மன்னித்து விடு...''

''மன்னிப்பதா.. உங்களையா..? உங்களை மன்னித் தால் மன்னிப்பு என்ற வார்த்தைக்கே அர்த்தம் இல்லா மல் போய்விடும்.''

''நான் உன் கணவன் ஹரிதா.''

''ஒரு தாலிக் கயிற்றை என் விருப்பமில்லாமல் என் கழுத்தில் கட்டி விட்டால்.. நான் உங்கள் மனைவியாகி விடுவேனா... நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட் டாலும்.. நான் பாரதி கண்ட புதுமைப் பெண்தான்... எந்நாளும் நீங்கள் என் கணவனாகி விட முடியாது...''



மீண்டும் வைகுந்த் வெகுண்டான்.

''ஏய்.. நிறுத்துடி... விட்டால் மணிக் கணக்காய் பேசிக் கொண்டே போவாயே... நான் உன் கணவன் இல்லையென்றால் சற்று முன் வேறு யாருடைய அணைப்பில் நீ இருந்தாய்...?''

ஹரிதாவிற்கு சீற்றம் வந்து விட்டது...

''ஸ்டாப் இட் மிஸ்டர்... வாய் இருக்கிறது என்பதற் காக நினைத்ததை எல்லாம் மிகவும் கீழ்த்தரமாகப் பேசாதீர்கள்.''

''வாய் இருக்கிறது என்பதற்காக பேசுவது நானா.. இல்லை நீயா..? நினைத்ததை ஒன்றும் பேசவில்லைடி.. நடந்ததைப் பேசுகிறேன்.''

''ஐ ஸே எகெய்ன்... ஸ்டாப் திஸ் நான்சென்ஸ்...''

''ஏய்.. நீ மட்டும் பேசலாம். நான் பேசக்கூடாதா..? கொஞ்ச நேரத்துக்கு முன்னால் என்னோடு கொஞ்சிக் குழாவிக் கொண்டு இருந்தாயே.. என்னை யாரென்று நினைத்துக் கொஞ்சிக் கொண்டு இருந்தாய்...?''

ஹரிதாவின் முகம் சிவந்து விட்டது. அவள் கீழே இறங்குவதற்காக அவசரமாய் மாடிப் பக்கம் போனாள்.. வைகுந்த் கை நீட்டி அவளைத் தடுத்தான். அத்தோடும் நில்லாமல் மாடிப் படியின் கதவை இழுத்து வெளிப் பக்கமாய் தாழ் போட்டு விட்டான்.

''வழியை விடுங்கள்.''

''முதலில் நான் கேட்டதற்கு பதில் சொல்லி விட்டுப் போ.''

''உங்களுடைய அநாகரிகமான கேள்விகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்ல முடியாது...''

''அந்த அநாகரிகத்தை ரசித்து.. அதில் பங்கேற்றவள் தானே நீ.''

''வைகுந்த்.. ஸ்டாப் இட்.''

''நீ நிறுத்துன்னா நிறுத்த நான் என்ன உன் வேலைக்காரனா..? உன் புருசன்டி.. உனக்குத்தான் தாலியின் மதிப்புத் தெரியாதே... நீ சட்டம் படித்தவளாயிற்றே... உன் சட்ட ரீதியான புருசன்.''

''இனி இந்த உறவு நமக்குள் இல்லை...''

''சாகும்வரை இந்த உறவு நமக்குள் இருக்கும்.''

''நீங்கள் இருக்கும் இடத்தில் ஓர் வினாடி கூட நான் நிற்க மாட்டேன்.''

''என் நிழலை விட்டுக்கூட உன்னால் நகர முடியாது. நான் விட மாட்டேன்...''

''என்னைக் கட்டுப்படுத்துவது காற்றைக் கட்டுப்படுத்துவது போல... காற்றுக்கு வேலி போட முடியாது..''

''நீ காற்று இல்லை. என் வீட்டில் இருக்கும் எனக்கு சொந்தமான என் மனைவி... உன்னை என் காவலில் தான் நான் வைப்பேன்.. என் வேலியைத் தாண்ட உன்னால் முடியாது.''

''பார்ப்போமா..''

''பார்ப்போம்.''

ஹரிதா கோபத்துடன் கதவை நோக்கிப் போகையில் தடுத்த வைகுந்த் அவளை இழுத்து முரட்டுத்தனமாய் தன்னோடு அணைத்துக் கொண்டான். ஹரிதா விடுபடப் போராடினாள். வைகுந்த் தன் முழு பலத்தையும் பிரயோகித்துக் கொண்டிருந்தான். மெல்லிய கொடியுடல் கொண்ட ஹரிதாவால் அவனிடமிருந்து விடுபட இயலவில்லை. அவள் மெல்ல.. மெல்ல.. தோற்றுப் போனாள். வைகுந்த் அவளை மிக எளிதாக வெற்றி கொண்டான்.



கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு சொந்தக்காரன் ஆன அவன் அந்த திருமண மண்டபத்தின் மொட்டை மாடியில்... கட்டாந் தரையில் தன் மனைவியை தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான்.

# 33

மிகப் பெரிய கிரானைட் தொழிற்சாலைக்கு சொந்தக்காரன்.. தன் வீட்டை கிரானைட்டால் இழைத்து.. வழுவழுவென்ற தரையுடன் கட்டி இருப்பவன்.. ஒரு விரிப்புக்கூட இல்லாத.. மொட்டை மாடியின் வெறும் தரையில் ஹரிதாவோடு பள்ளி கொண்டான்.

தன் வேகம் தணிந்த வைகுந்த் விலகி எழுந்தபோது.. ஹரிதா சோர்ந்துபோய் சுருண்டு விட்டாள்.

அவளது நிலை கண்ட வைகுந்தின் மனம் வலித்தது. இந்த நாளை எண்ணி அவன் எத்தனை கற்பனைக் கோட்டைகளைக் கட்டினான். அவை அனைத்தும் தவிடு பொடியாகி விட்டதே என்ற துக்கம் அவனது தொண்டையை அடைத்தது.

வேட்டையாடப்பட்ட மானாக வீழ்ந்து கிடந்தவளின்.. கூந்தலை சரி செய்து.. அவளது முகத்தை தன்

கைக்குட்டையால் துடைத்து விட்டான். உணர்வு வரப் பெற்ற ஹரிதா தன் முகத்தை விலக்கிக் கொண்டு எழுந்தாள்.

நடந்து முடிந்து விட்ட நிகழ்வின் கனம் தாங்காதவளாய் அப்படியே மொட்டை மாடியின் கைப்பிடி சுவரில் சாய்ந்து கால்களை குத்துக் காலிட்டு அமர்ந்து விட்டாள்.

அவளது அருகினில் அமர்ந்த வைகுந்த் அவளது தலையை வருடினான். அவளது தலை கோபமாய் சிலும்பி தன் எதிர்ப்பைக் காட்டியது.

அவன் கைகளை இழுத்துக் கொண்டான். அவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குள் ஏதோ பொங்கியது.

அவனது மாளிகையில் மகாராணி போல்... அவனது படுக்கையறையில்... இதமான ஏஸியின் குளிரில். கட்டிலின் மெத்தை தரும் மென்மையில் அவனோடு கலக்க வேண்டியவள்.. இப்படி ஒரு சூழ்நிலையில் அவனோடு கலந்திருக்கிறாள்.

''ஹரிதா.. வா.. கீழே போகலாம்.''

''நான் வரமாட்டேன்.''

''இங்கேயிருந்து என்ன செய்யப் போகிறாய்?''

''இனி நான் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றி யோசிக்கப் போகிறேன்...''

''நீ தனியாக எதையும் செய்யப் போவதில்லை. தனிமையில் இருந்தால் மனதில் பலவித பைத்தியக்கார எண்ணங்கள் தோன்றும்.. வேண்டாம்.. வா கீழே போகலாம்.''

''தனிமையில் இருந்தால் என்ன செய்து விடுவேன் என்று நினைக்கிறீர்கள்.. தற்கொலை செய்து கொண்டு விடுவேனா.. நெவர்.. நான் வாழ்ந்து காட்டுவேன்.''



''தட்ஸ் குட்.''

''என் முடிவைப் பாராட்ட நீங்கள் யார்?''

இந்த நிலையிலும்.. மனம் பூராவும் வைகுந்தின் மேல் வெறுப்பைச் சுமந்து கொண்டிருந்த போதும்.. அவள் வைகுந்தை ஒருமையில் அழைக்காததை அவன் கவனத்தில் கொண்டான்.

'இதுதான் நீ.. ஏண்டி இதை விட்டுவிட்டு.. முரட்டு முக மூடியை எடுத்து உனக்கு நீயே போட்டுக் கொள்கிறாய்.'

''ஹரிதா.. வேண்டாம்.. நீங்கள் யார் என்று கேட்டுத் தான் இந்த இடத்தில் முதலிரவைக் கொண்டாட வைத்திருக்கிறாய்.. இனியும் எனக்கு வெறியேற்றாதே...''

''வெளியேறித்தான்.. வேட்டையாடி முடித்து விட்டீர்களே.. இன்னும் என்ன பாக்கியிருக்கிறது?''

''வேட்டையாடினேனா.. போ.. போய் இந்த மண்டபத்தில் வந்து கூடியிருக்கும் அத்தனை பேரிடமும் உன் நியாயத்தை சொல்லிப் பார். கட்டியவன் தொட்டதற்கு என்னவோ கண்டவன் தொட்டு விட்டது போல் சீன் போடுகிறாயே.''

''என்னைப் பொறுத்தவரை நீங்கள் யாரோதான்.''

''அப்போ எழுந்திரு... அட எழுந்திருடி. போய் போலீஸ் ஸ்டேசனில் நான் உன்னை ரேப் பண்ணி விட்டேன் என்று புகார் கொடு.. போ...''

''நீங்கள் செய்தது அதுதான்.''

''போடின்னு தான் நான் சொல்கிறேனில்லை. போ.''

''போகத்தான் போகிறேன். என்னை நீங்கள் ஏமாற்றிக் கல்யாணம் பண்ணிக் கொண்டீர்கள் என்று கம்ப்ளெயின்ட் பண்ணத்தான் போகிறேன்.''

''என்னவென்று கம்ப்ளெயின்ட் கொடுப்பாய்.. நான் வரதட்சணை கேட்டேன் என்றா..? எதை ஏமாற்றி கொள்ளை அடித்தேன் என்று சொல்வாய்? உன் பணத்தையும்.. நகைகளையுமா?''

ஹரிதா உதடு கடித்தாள். அவனது வார்த்தைகளில் இருந்த உண்மை அவளைச் சுட்டது. அவள் இதுவரை பார்த்த.. கேட்ட.. பெண் கொடுமை எல்லாம் இவை தானே...

ஒரு பைசா வரதட்சணை வாங்காமல்.. வைரத்தால் தங்கள் வீட்டிற்கு வரப் போகும் மருமகளை அலங் கரித்து... திருமணம் செய்து கொள்ளும் இவர்களைப் பற்றி அவள் என்னவென்று புகார் கொடுப்பது...

அவள் பதில் பேச திகைப்பது கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்.. அவளுக்குள் அவனுக்கு ஏதேனும் பதில் சொல்லிவிட வேண்டுமென்ற துடிப்பு பொங்கியது.

''ஏன்... என்னை நல்லவன் போல் நடித்து நீங்கள் ஏமாற்றவில்லையா?''

''நான் கெட்டவன் என்பதற்கு என் ஒரு செயலையாவது நீ சொல்லிவிடு. நான் யாருக்குக் கெடுதல் செய்தேன்?''

''எனக்குச் செய்யவில்லையா?''

''என்ன செய்தேன்..?''

''என்ன மாதிரியான கேள்வி இது.. என் விருப்பமில் லாமல் என்னை நீங்கள் தொடவில்லையா?''

''அதற்கு முன்னால் உன் விருப்பத்தோடு நான் உன்னைத் தொடவில்லையா..? இல்லை.. நீ விரும் பித்தான் என்னைத் தொடவில்லையா... நான் தெரி யாமல்தான் கேட்கிறேன். இந்த மொட்டை மாடிக்கு நீ



எப்படி வந்தாய்? நீயாகத்தானே வந்தாய்..? நான் ஒன்றும் உன்னைத் தூக்கிக் கொண்டு வரவில்லையே.''

''நீங்கள் வரச் சொன்னதால்தானே வந்தேன்.''

''உனக்கு விருப்பமில்லையென்றால் வர முடியாது என்று சொல்லி விட்டிருக்கலாமே... ஏன் வந்தாய்?''

''அது... அது... வந்து.''

''என்ன வந்து.. போயென்று.. ராகம் இழுக்கிறாய்.. உனக்குப் பிடித்திருந்தால் நான் கூப்பிட்டவுடன் வரு வாய். நான் தொட்டவுடன் என்னைக் கட்டிக் கொண்டு இழைவாய்.. அதே உனக்கு விருப்பம் இல்லையென் றாகி விட்டால்.. நான் உன்னைத் தொட்டது தவறென்று கூப்பாடு போடுவாய்.. எந்த ஊர் நியாயம்டி இது..? நானும் பார்த்தாலும் பார்த்தேன். உன்னைப் போன்ற பிளேட்டை மாற்றிப் போடுகிறவளைப் பார்த்ததே இல்லை...''

வைகுந்த் தேர்ந்த தொழிலதிபன்.. எந்த இடத்தில் எப்படிப் பேசினால்... எதிராளியை சமாளிக்க முடியும் என்ற வித்தை தெரிந்தவன்.. ஹரிதாவை அவன் தன் சொல்லால் அடித்தான்.

# 34

ஹரிதா எளிதில் உணர்ச்சி வசப்படும் தன்மையுடை யவள்.. மனதில் எது இருந்தாலும் கொட்டி கவிழ்த்து விடும் இயல்புடையவள். வைகுந்தின் வார்த்தைகள்

அவளை நாணப்பட வைத்தன. அவனது வார்த்தை வீச்சிற்கு எதிர் பேச்சு பேச அவளால் முடியவில்லை.

''சொல்லுடி... என்னவோ எண்ணெயில் போட்ட அப்பம் போல் துள்ளிக் குதித்தாய்.. இப்போது பேசாமல் இருக்கிறாய்.. பேசு.. நீதான் பேச சான்ஸ் கிடைத்தால் மைக் இல்லாமலே பேசித் தீர்ப்பாயே.. இப்போது ஏன் ஊமையாகி விட்டாய்..?''

''உங்களைப் போன்ற மனிதர் பேசும் பேச்சுக்கெல் லாம் என்னால் பதில் சொல்ல முடியாது.''

''ஏன் முடியாது.. பேச்சு என்றால் வாய்கிழிய பேசு பவள்தானே இப்போது என்ன வந்தது? ஹரிதா.. நான் உன்னைக் காதலித்தேன்.. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள விரும்பி.. உன் வீட்டிற்குப் பெண் கேட்டு விட்டேன்.''

''பொய்.''

''நான் எது சொன்னாலும் உனக்கு இப்போது பொய் யாகத்தான் தோன்றும்.. போ.. போய் உன் அம்மாவிடம் கேள்.. அவர்கள் சொல்வார்கள்... எது பொய்.. எது மெய் என்று.''

''பெண் கேட்டு விட்டவர் என்னிடம் நேரடியாய் பேசி இருக்கலாமே.. ஏன் நாடகமாட வேண்டும்?''

''என்னத்தைச் சொல்ல.. எல்லாம் என் விதி.. அரண் மனை போல் வீட்டை வைத்துக் கொண்டு.. கல்யாண மண்டபத்தின் மொட்டை மாடியில் முதலிரவைக் கொண் டாடும் விதியைப் பெற்றவன் வேறு என்ன செய்ய முடியும்.''



ஹரிதா பேச்சின்றி உதடு கடித்துக் கொண்டாள். சற்று முன் நிகழ்ந்த நிகழ்வு அவளது மனத்திரைக்கு வந்தது.

அதை உணர்ந்து கொண்ட வைகுந்தின் முகம் மென்மையானது. அந்த மென்மையை குரலில் ஏற்றிக் கொண்டவன் கனிவுடன் அவளைப் பார்த்துக் கூறினான்.

''என்னை நம்புடி. நான் பெண் கேட்டு விட்டால்.. உன் அப்பா நான் கோடீஸ்வரன் என்று பயந்து விலகு வார் என்று நான் கனவா கண்டேன். ஊரில் இருக்கிறவன் எல்லாம் வந்து உன்னைப் பெண் பார்த்து விட்டுப் போயிருக்கிறார்கள்.. செய்தி அறிந்ததும் எனக்கு ரத்தம் கொதித்து விட்டது.. உன் தங்கையைக் கூப்பிட்டு விவரம் கேட்டால்.. நீ பாரதியைப் போல் மாப்பிள்ளை வேண்டும் என்று கேட்டாயாம். நான் பணக்காரன் என்பதால் பாரதியைப் போல் இருக்க மாட்டேன் என்று உன் அப்பாவாய் ஒரு முடிவுக்கு வந்து விட்டாராம். அது தான்.. அன்றே உன் தங்கையிடம் நியாயம் கேட்டேன். பாரதியை ரசிப்பவன் ஏழையாகத்தான் இருக்க வேண் டும் என்ற சட்டம் எதுவும் இருக்கிறதா.. கோடீஸ்வரன் யாரும் பாரதியை ரசிக்கக் கூடாதா என்று.. அவள் உன் தங்கை ஆயிற்றே.. உன்னைப் போல் பதிலே சொல் லாமல் நின்றாள்.''

''நன்றாக கதை சொல்கிறீர்கள்..''

''போ.. போய் உன் வீட்டாரிடம் கேள் என்று தானே நானும் சொல்கிறேன்.. விதண்டாவாதம் பிடித்தவளிடம் வீண் பேச்சுப் பேசி என் தொண்டைத் தண்ணீர்தான் வற்றிப் போகிறது.''

''அதற்காக நீங்கள் நாடகம் போட்டு என்னை ஏமாற்று வீர்களா?''

''சும்மா ஏமாற்றினேன்.. என்று சொன்னால் எனக்கு கெட்ட கோபம் வரும். நான் என்ன காதலித்து உன்னைக் கைவிட்டு ஏமாற்றினேனா.. காதலித்தவளையே கைபிடிக்க வேண்டும் என்றுதானே முயற்சி செய்தேன்.''

''சும்மா.. காதல்.. காதல் என்று வார்த்தை ஜாலம் விடாதீர்கள்.. நீங்கள் காதலித்த லட்சணத்தைத்தான் சற்று முன் பார்த்தேனே...''

''அதுவும் காதல்தானேடி...''

வைகுந்த் குறும்பாகக் கூற ஹரிதா எரிச்சலுடன் சூள் கொட்டினாள்.

''இப்போது ஏன் அலுத்துக் கொள்கிறாய்..''

''வெறும் உடலழகைப் பார்த்து மயங்கி விட்டு.. அதைச் சொந்தமாக்கிக் கொள்ள காதல் என்று நாடகமாடி இருக்கிறீர்கள்.''

''ஆமாண்டி. நீ பேரழகி.. உன்னைப் பார்த்து நான் மயங்கி விட்டேன்தான்.. ஏன்.. நீ என்னைப் பார்த்து மயங்கவில்லையா.. உன் மனதைத் தொட்டுச் சொல்லு.''

'இல்லையென்று எப்படிச் சொல்வது?' பொய் சொல்லி அறியாத ஹரிதா பேச்சின் திசையை மாற்றி னாள்.

''அதுதான் எனக்கு நல்லதொரு பாடம் கிடைத்து விட்டதே.. வெளித்தோற்றத்தைப் பார்த்து மயங்கிய தற்கு எனக்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் தண் டனை கிடைத்து விட்டதே...''



''அது தண்டனையா..?''

''பின்னே இல்லையா...''

''ஹரிதா.. என் கோபத்தைக் கிளறாதே..''

''ஏன் திரும்பவும் தண்டிக்கப் போகிறீர்களா?''

''தண்டனையை விரும்புகிறவள் போல் ஆர்வம் காட்டுகிறாயே... தண்டித்து விட்டால் போகிறது.''

வைகுந்த் ஹரிதாவை நெருங்கி அமர்ந்தான். அவசரமாய் அவள் நகர்ந்து கொண்டாள்.

''ஏண்டி... நீதானே கேட்டாய்..''

''எல்லாவற்றையும் என் தலையில் தூக்கிப் போடு கிறீர்கள். கிரேட் பிஸினெஸ் மேன் இல்லையா. அப் படித்தான் இருப்பீர்கள்.''

''நான் எப்படி இருக்க வேண்டும் என்று நீ சொல் கிறாயோ அப்படியே இருக்கிறேன். நீ கட்டளை இடு.''

''நான் யார் உங்களுக்குக் கட்டளை இட?''

''என் மனைவி...''

''என்னை ஏமாற்றி தாலி கட்டிவிட்டு.. என் விருப்ப மில்லாமல் என்னைத் தொட்டு விட்டு சொந்தம் கொண்டாடுகிறீர்களா?''

''நீ திரும்பவும் ஆரம்பித்த இடத்திற்கே வருகிறாய்.. ஹரிதா.. நான் உன் மேல் ஆசைப்பட்டேன். உண்மை தான்.. நீயும் என் மேல் ஆசைப்பட்டாய்தானே.. என்னை விருப்பத்துடன் காதலித்தாய்தானே.. இந்தக் கல் யாணத்தை என்னைப் போல் நீயும் ஆவலுடன் எதிர்பார்த்தாய்தானே.. அப்புறம் ஏமாற்று வேலை என்று

ஏன் சொல்கிறாய்? என்னுடன் வாழ்ந்து விட்டாய்.. இதை நினைவில் வைத்துக் கொள்...''

''இல்லாவிட்டால்... என்ன செய்வீர்கள்?''

வைகுந்த்.. அவன் என்ன செய்வான் என்பதைச் சொன்னான். ஹரிதா வெளியேற வழியின்றி அவனிடம் சிறைப்பட்டாள். சிட்டுக் குருவியாய் சிறகடித்துப் பறந்தவள் கூண்டுக் கிளியாய் அவனுடன் வாழ்வில் பிணைந்தாள்.

# 35

'என்ன செய்வீர்கள்..' என்று ஹரிதா திமிறிக் கொள்ளவும் வைகுந்த் நிதானமாய் அவளுக்குப் பதில் கூறினான்.

''ஒன்றும் செய்ய மாட்டேன். கீழே இறங்கிப் போய்.. நடக்க இருக்கும் திருமணத்தை நிறுத்துவேன்.. என் வாழ்க்கை பாதிக்கப்பட்டால் கண்ணன் உன் தங்கையோடு வாழ மாட்டான். உன் தங்கை உன்னைப் போல் தைரியசாலி இல்லை.. அவள் கண்ணனை உயிருக்குயிராய் காதலிக்கிறாள். அவன் கை விட்டு விட்டால் உண்மையிலேயே அவள் செத்து விடுவாள். அது உனக்குத் தெரியும்தானே...''

ஹரிதாவின் முகம் வெளுத்தது. அந்த இருளிலும் வைகுந்திற்குத் தெரிந்தது. அவன் இரக்கம் காட்டாமல் தொடர்ந்து பேசினான்.



''ஒரு வேளை... அவர்களின் கல்யாணம் முடிந்தவுடன் நீ உன் சுயரூபத்தைக் காட்ட நினைத்தாலும் இதே கதை அப்போதும் தொடரும்.. குழந்தை.. குட்டியென்று ஆகியிருந்தாலும் கண்ணன் சரிதாவை உன் அப்பா அம்மாவிடம் அனுப்பி வைத்து விடுவான்.. சேர்ந்து வாழ மாட்டான்.. எனக்காக நாடகமாடியவன் அவன்.. அதை மறந்து விடாதே... நாடகத்தை உண்மையாக்க எனக்கு ஒரு நொடி போதும்.''

''நாங்கள் கோர்ட்டுக்கு போவோம்.''

''போய்ப் பார்.. உன் அப்பாவும்.. அம்மாவும் இரண்டு பெண்களும் வாழா வெட்டியாய் வீட்டிற்குத் திரும்பி விட்டதை நினைத்து உயிரை விட்டு விடுவார்கள். சரிதா உன்னைப் போல் போராட்ட குணம் படைத்தவள் அல்ல.. கண்ணன் தன்னை வெறுத்த மறுகணம் உயிரை விட்டு விடுவாள். பெற்றவர்களையும்.. கூடப் பிறந்தவர்களையும் கொன்று விட்டு.. நீ கோர்ட்டுக்குப் போய் என்ன சாதிக்கப் போகிறாய்..''

''அரக்கத்தனமாய் பேசாதீர்கள்..''

''நீ என்னை அரக்கனாக மாற்றாதே...''

''நீங்களெல்லாம் ஓர் மனிதனா...''

''என்ன செய்வது.. உன்னைப் போன்ற ஒரு பிறவியை கல்யாணம் செய்து தொலைத்து விட்டேனே.. நான் இப்படிப்பட்ட பட்டத்தை சுமந்துதான் ஆக வேண்டும்.''

''வைகுந்த்.. நான் ஒரு நாளும் உங்களுடன் மனம் விரும்பி வாழ மாட்டேன்.. பிடிக்காத வாழ்வைத்தான் வாழ்வேன்.''

"அதைப் பற்றி எனக்கொன்றும் கவலை இல்லை.. நீ அமைதியாய் என்னுடன் குடும்பம் நடத்தினால்.. உன் பிறந்த வீடும் அமைதியாக இருக்கும்.. இல்லை.. கலாட்டா பண்ண வேண்டுமென்று நினைத்தால்.. உன் பிறந்த வீட்டில் தான் கலவரம் வெடிக்கும்."

வைகுந்த்.. எழுந்து கொண்டான்... ஹரிதா அசையாமல் அமர்ந்திருக்க.. "வா.." என்று ஒற்றைச் சொல்லில் அழைத்தான்.

"எனக்கு வருவதற்கு வழி தெரியும்."

"உன்னை இந்த மொட்டை மாடியின் இருட்டிற்கு வரவழைத்தவன் நான்தான்.. இங்கே என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.. சற்று முன் நடந்ததை நினைத்துப் பார்.. அதனால் நீ எழுந்து என்னுடன் வருவதாக இருந்தால் நான் கீழே போகிறேன்.. இல்லையென்றால் இங்கேயே படுத்து விடுகிறேன்.. எப்படி வசதி..? நான் படுத்தால் தூக்கம் வந்து தொலைக்காது.. திரும்பவும் உன்னை தொல்லை பண்ணத் தோன்றும் பரவாயில்லையா..?"

ஹரிதா சட்டென்று எழுந்து கொண்டாள். மொட்டை மாடிக் கதவைத் திறந்து விட்ட வைகுந்த். அவளை முன்னே விட்டு.. தான் பின்னால் சென்றான்.

அவர்கள் மாடியில் முதல் தளத்தை அடைந்த போது.. கௌசல்யா சென்று கொண்டிருந்தாள். வைகுந்த் அவளை அழைத்தான்.

"அத்தை.."

"என்னங்க மாப்பிள்ளை.."

"நானும் ஹரிதாவும் மொட்டை மாடியில் காற்றாட நின்று கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம்..



இப்போது நான் தூங்கப் போகிறேன். நீங்கள் ஹரிதாவைப் பார்த்துக் கொள்ளுங்கள்."

இளம் வயதைக் கடந்து வந்தவள்தானே கௌசல்யா.. அவளுக்கு அவர்கள் மொட்டை மாடிக்கு காற்று வாங்கப் போனார்களா.. இல்லை... கனவை வாங்கப் போனார்களா என்று தெரியாதா...

அவள் தனது சிரிப்பை மறைத்துக் கொண்டு மகளைப் பார்த்தாள்.. அவள் தன் முகத்தைத் தாய் பார்த்து விடாமலிருக்கும் பொருட்டு முகம் திருப்பிக் கொண்டாள்.

'பாவம்... காலையில் கல்யாணம் முடிந்த சின்னஞ் சிறுசுகளை இப்படிப் பிரித்து வைத்தால் அவர்கள் வேறு என்ன செய்வார்கள்?' என்ற எண்ணம் அவள் மனதில் எழுந்தது.

அவள் தன் மகளை அழைத்துக் கொண்டு சரிதா இருந்த அறைக்குப் போனாள் அங்கே தனியாக இருந்த சரிதா...

"ஏன் ஹரிதா.. ஒரு நொடியில் வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனவள்.. விடியப் போகும் சமயத்தில் திரும்பி வருகிறாயே.." என்று கேலியாக வினவினாள்.

"வித்யா உன் துணைக்கு இருந்தாளே."

"அவள் அப்போதே ஓடி விட்டாள்."

"ஓ..."

ஹரிதா மௌனமாய்.. அங்கே கிடந்த இன்னொரு கட்டிலில் ஏறிப் படுக்க.. கௌசல்யா சின்ன மகளை அதட்டினாள்.

"சரி சரி விடு. அவள் தூங்கட்டும். அவளுக்கு இன்றைக்கு காலையில் தான் கல்யாணம் முடிந்தது மறந்து விடாதே..."

விளக்கை அணைத்து விட்டு அவர்கள் படுத்த பின்னும் ஹரிதா மட்டும் உறங்கவில்லை. கண்களில் தளும்பப் பார்த்தக் கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

'ஊஹூம்.. நான் கோழையல்ல.. அழக்கூடாது.'

மறுநாள் காலையில் கண்ணன் சரிதாவின் கழுத்தில் தாலி கட்டினான். விருந்து.. மாலை ரிசப்சன் முடிந்து.. புதுமணத் தம்பதிகள் இருவரும்.. அவரவர் வீட்டிற்குச் சென்றனர்.

பெண்கள் பார்த்துக் கொள்வார்கள் என்ற தைரியத்துடன் ஜெயராமனும் கௌசல்யாவும்.. மறுநாள்.. இரண்டு மகள்களையும் மறு வீட்டிற்கு அழைத்து வர வருவதாகக் கூறிவிட்டு.. தங்களது வீட்டிற்குச் சென்று விட்டார்கள்.

அமைதியாக இருந்த வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற கௌசல்யாவை.. தனிமை உணர்வு தாக்கியது. அவள் பொங்கி அழுதாள்.

"ஏண்டி.. அழுகிற...?"

"பெண்கள் இருவரும் இருந்தபோது வீடே நிறைந்திருந்தது. இப்போது வெறிச்சென்று ஆகிவிட்டது பார்த்தீர்களா?"

"அதனால் என்ன.. உனக்கு நான்.. எனக்கு நீ.. நம் கூடவே அவர்கள் இருந்தால்.. அவர்கள் வாழ்க்கையை அவர்கள் வாழ வேண்டாமா? பைத்தியம்.. எழுந்திரு.. எனக்கொரு காபி போட்டுக் கொடு..."



மனைவியைக் கடிந்து கொண்ட ஜெயராமன்.. குரல் தழுதழுக்க.. தன் கண்ணாடியைக் கழற்றி.. தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

## 36

மீனா தன் புது அண்ணியின் கையை ஆசையுடன் பிடித்துக் கொண்டாள். சீதா மங்கல ஆரத்தி எடுத்து தன் மருமகளை வீட்டிற்குள் அழைத்துக் கொண்டாள்.

"வலது காலை எடுத்து வைத்து உள்ளே வாம்மா."

வைகுந்த் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்ததால் ஒழுங்காக தன் வலது காலை எடுத்து உள்ளே வைத்து வீட்டினுள் பிரவேசித்தாள் ஹரிதா.

பிரம்மாண்டமான வரவேற்பறையும்... அங்கே கிடந்த விலை உயர்ந்த சோபாக்களும்.. சுற்றியிருந்த கலைப் பொருள்களும் வைகுந்தின் பணச் செழுமையை பறை சாற்றியது.. ஹரிதா அதில் கவரப் படாதவளாய் வெறுமையாய் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சீதா.. தன் மருமகளை பூஜையறைக்கு அழைத்துக் கொண்டு சென்றாள். கடவுள்களின் படங்களுக்கு முன்னால் இருந்த குத்து விளக்கைக் காட்டி...

"விளக்கை ஏற்றும்மா.." என்று கனிவுடன் கூறினாள்.

ஹரிதா தடுமாறினாள். அவளுக்கு விளக்கேற்றத் தெரியாது. வைகுந்த் இயல்பாய் அவள் அருகில்

வந்தான். குத்து விளக்கின் திரியை கூர்மையாய் திருகிவிட்டு.. தீப்பெட்டியை எடுத்து குச்சியை உரசி.. அவள் கையில் கொடுத்தான்.

''ம்ம்.. இப்போது விளக்கேற்று...''

அவள் அவசரமாய் திரியில் தீக்குச்சியின் ஜ்வாலையை வைத்தாள். குத்து விளக்கு ஒளிர் விட ஆரம்பித்தது.

சீதா புன்னகையுடன் மருமகளைப் பார்த்து...

''பரவாயில்லை.. நான் புது மருமகளாக இந்த வீட்டிற்கு வந்தபோது.. நான்கைந்து குச்சிகளை காலி பண்ணி விட்டேன். உன் புருசன் உன்னை ஒரே தீக்குச்சியில் விளக்கேற்ற வைத்து விட்டானே...''

ஹரிதா எதுவும் பேசாமல் நின்றாள். வைகுந்த் அங்கிருந்து அகன்றான்.

''வாம்மா.. வந்து உட்கார்.''

இரவு உணவு முடிந்தவுடன்... சீதா மருமகளை அழைத்து தலை வாரிப் பின்னலிட்டு.. லேசான ஒப்பனையுடன் அலங்கரித்து விட்டாள். பின்னர் அவளை மாடிக்கு அழைத்துச் சென்றாள்.

''போம்மா.. இதுதான் இனி உன் ரூம்.''

ஹரிதா எரிச்சலுடன் அந்த அறைக்குள் சென்றாள். முன்னால் பெரிய வரவேற்பு ஹாலுடன்.. பக்கவாட்டில் உடை மாற்றும் அறையுடன் இருந்தது அந்த படுக்கையறை... உடை மாற்றும் அறையிலிருந்தும்... படுக்கையறையிலிருந்தும் உள்ளே செல்வதற்கு வசதியாக பாத்ரூம் கட்டப்பட்டிருந்தது.



ஹரிதா முன்னறையின் சோபாவில் அமர்ந்து விட்டாள். படுக்கையறையிலிருந்து வெளியே வந்த வைகுந்த்.. அறைக்கதவைத் தாழிட்டான். குனிந்து அவளைத் தூக்கி.. தன் கைகளில் ஏந்திக் கொண்டான்.

அதை எதிர்பார்க்காத ஹரிதா விலகி இறங்கப் போனாள். வைகுந்தின் பிடியோ உடும்புப் பிடியாய் இருந்தது.

''டோன்ட் டிஸ்டர்ப் மி வைகுந்த்.''

''உளராதே...''

''எனக்கு விருப்பமில்லை...''

''அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.''

வைகுந்த் அவளை வலுக்கட்டாயமாய் தன்னுடன் இழுத்து அணைத்து அவளுடன் ஒன்றிப் போனான்.

மறுநாள் மறு வீட்டு விருந்திற்காக ஜெயராமனும்... கௌசல்யாவும் அழைக்க வந்துவிட... அவர்கள் மறு வீட்டு விருந்திற்கு என்று சென்றனர்.

கண்ணனும் சரிதாவும் வந்திருந்தனர். சரிதாவின் முகத்தில் தெரிந்த பொழிவைக் கண்டு ஹரிதாவிற்கு பொறாமையாக இருந்தது.

'மனதுக்குப் பிடித்த கணவன்.. மனதுக்குப் பிடித்த வாழ்க்கை. இவள் சந்தோசமாக இருப்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது. என் விதிதான் இப்படி ஆகி விட்டதே...'

ஹரிதாவின் பார்வை சரிதாவின் மேல் ஓடுவதையும் தொடர்ந்து அவள் பெருமூச்சு விடுவதையும் கவனித்த வைகுந்த் புருவம் சுளித்தான்.

''அவர்களை ஏன் அப்படிப் பார்க்கிறாய்..?''

''அதற்கெல்லாம் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.''

''ஹரிதா.. நீயென்ன குழந்தையா?''

''வாட் டு யு மீன்..?''

''குழந்தைகளுக்குத்தான் தன்னிடம் இருக்கும் பொருளின் மதிப்புத் தெரியாது. அடுத்தவரின் பொம்மையை ஆவலாய்ப் பார்க்கும்.''

''உளராதீர்கள்.''

''நான் உளருகிறேனா.''

''பின்னே இல்லையா..''

''உன் உள்ளத்தில் இருக்கும் உண்மையைச் சொன்னேன்.''

''பெரிய உண்மையை கண்டு விட்டீர்கள்.''

''உன் பார்வைதான் உன் மனதை அப்படியே சொல்கிறதே...''

''நான் உங்கள் அடிமையில்லை. என் பார்வையைக் கூட ஆராய்ச்சி பண்ணிக் கொண்டு கேள்வி கேட்கும் வேலையை இனி விட்டு விடுங்கள்.''

ஹரிதா வெடுக்கென்று பேசிவிட்டு எழுந்து உள்ளே சென்று விட்டாள். சற்று நேரத்தில் சரிதா அவளை அழைக்கும் குரல் கேட்க அறையை விட்டு வெளியே வந்தாள்.

''என்னடி..''

''அத்தான் எங்களோடு உட்கார்ந்திருக்கிறார். நீ ரூமுக்குள் அடைந்து கொண்டு என்ன செய்கிறாய்..?''



''உனக்கு இப்போது என்ன வேண்டும்..?''

''நாம் சினிமாவுக்குப் போகிறோம்.. கிளம்பு...''

''நான் வரவில்லை.. எனக்குத் தலையை வலிக்கிறது.''

''ஹரிதா.. இருந்திருந்து முதன் முதலாய் கண்ணனுடன் வெளியே கிளம்புகிறேன். நீ அதை கலைக்கப் பார்க்கிறாயே. காதலித்தோம் என்றுதான் பெயர். சும்மா உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கவே ஆயிரம் யோசனை யோசிப்போம். இப்போது நீ வரமாட்டேன் என்றால் அத்தானும் வரமாட்டார். அண்ணன் வரவில்லையென்று அவரும் புரோக்ராமை கேன்ஸல் செய்து விடுவார். உனக்காக இல்லாவிட்டாலும் எனக்காக கிளம்பி வா ஹரிதா.. ப்ளீஸ்...''

சரிதாவின் முகத்தில் இருந்த எதிர்பார்ப்பு ஹரிதாவை மாற்றியது. அவள் வேண்டா வெறுப்பாக தயாராகி வெளியே வந்தாள்.

## 37

வெளிர் நீல சுடிதாரில்.. அலட்சியமாய் சிறு பின்னல் போட்டு வந்து நின்ற ஹரிதா.. விழுந்து விழுந்து அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்த சரிதாவை விட அழகாக இருந்தாள்.

வைகுந்திற்குள்.. 'இவள் என் மனைவி..' என்ற கர்வம் வந்தது. அவன் புன் முறுவலுடன் எழுந்து அவளுடன் இணைந்து நடந்தான்.

ஹரிதாவினால் அவனிடமிருந்து விலகி நடக்க இயலவில்லை... சரிதாவுடன் பேசிக் கொண்டு வரலாமென்றால்.. அவள் கண்ணனின் காதோரமாய் ரகசியம் பேசிச் சிரித்துக் கொண்டு வந்தாள். சில சமயங்களில் கண்ணன் அவளது காதில் ஏதோ கூற முகம் சிவந்தாள். ஒரு முறை ஹரிதா பார்த்த பொழுது கண்ணனை அவள் கிள்ள வேறு செய்தாள்.. ஹரிதா அதன் பின் அவள் பக்கம் பார்வையைத் திருப்பவே இல்லை.

வைகுந்திற்கு மனைவியைப் பார்க்கும்போது சிரிப்பு வந்தது. அவன் ஹரிதாவின் காதோரம் சரிந்து..

''அவர்களும் நம்மைப் போல் நேற்றுத்தான் கல்யாணம் ஆனவர்கள்..'' என்றான்.

''காதலித்து கல்யாணம் பண்ணிக் கொண்டவர்கள் அவர்கள்.''

''நாமும் காதல் கல்யாணம் பண்ணிக் கொண்டவர்கள்தான்.''

''நாம் காதலித்த லட்சணத்தை வெளியில் சொல்லி விடாதீர்கள்.''

''அதை எப்படி வெளியில் சொல்வேன். நாம் திருமணத்தை பற்றிப் பேச உன் வீட்டிற்குப் போன போது... காரில் நீ என்னுடன் பிணைந்த கதையை நினைத்துத் தானே மகிழ முடியும். இதைப் போய் யாராவது வெளியில் சொல்வார்களா.''

ஹரிதாவின் முகம் சிவந்து விட்டது. அவள் பல் கடித்தாள். இதற்கு எப்படி பதில் சொல்வது. அவன் சொல்வது மறுக்க முடியாத உண்மை ஆயிற்றே...



அவர்கள் வைகுந்தின் இன்னொவா காரில் சேர்ந்து சென்று கொண்டிருந்தனர். அவரவர் மனைவியுடன் சேர்ந்து அமர்ந்து பேசிக் கொண்டு செல்ல வசதியாக.. டிரைவரை வரச் சொல்லியிருந்தான் வைகுந்த்.

''என்னடி பேசாமல் வருகிறாய்.. அன்றைக்குக் காரில் நீ கொடுத்த முத்தத்திற்கு இணையாகுமா.. உன் தங்கை கண்ணனைக் கொஞ்சுவது.. ம்ம்.. அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.''

ஹரிதாவின் பார்வை தன்னையுமறியாமல் தங்கையின் பக்கம் பார்க்க.. கண்ணன் தன் கையை சரிதாவின் தோளைச் சுற்றிப் போட்டிருப்பது தெரிந்தது. சரிதா நன்றாகச் சரிந்து.. கணவனின் தோள் மீது சாய்ந்த வண்ணம் அவனோடு பேசிக் கொண்டு வந்தாள்.

'அப்படி என்னதான் பேசுவாளோ.. வாய்தான் வலிக்காதா..'

எரிச்சல் பட்ட ஹரிதா அதை உணர்ந்தாள். வைகுந்தின் கரம் அவளது தோளைச் சுற்றி வளைத்திருந்தது.

ஏதோ ஓர் வகையில் ஹரிதாவுக்குள் ஓர் இதம் பரவியது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவள் முகத்தை லேசாய் சுளித்தாள். அவனது புருவம் உயர்ந்தது.

''என்ன..?''

''நான் அன்கம்பர்டபிளாய் பீல் பண்ணுகிறேன்.''

''நான் கம்பர்டபிளாக பீல் பண்ணுகிறேன்.''

அவன் சரிந்து அமர்ந்து.. அவளது தோளில் தலை சாய்த்துக் கொண்டான். ஹரிதாவின் மனதில் இருந்த எரிச்சல் மறைந்து ஓர் குளுமை பரவியது.

தியேட்டருக்குள் போனார்கள். நடுவில் இரண்டு பெண்களையும் அமர வைத்து.. தங்கள் மனைவிகளுக்கு அருகில் வைகுந்தும் கண்ணனும் அமர்ந்து கொண் டனர்.

அந்தச் செயல் கண்ட ஹரிதா மிக பாதுகாப்பாக மன திற்குள் உணர்ந்தாள்...

அவள் பேசிய பெண்ணுரிமை கருத்துக்கள் போன இடம் தெரியவில்லை...

படம் ஆரம்பித்தது. மெல்லிய இருளில் அருகில் அமர்ந்திருந்த சரிதா.. கண்ணனின் கை விரல்களோடு தன் விரல்களை பிணைத்துக் கொள்வதைக் கண்டாள் ஹரிதா. அவளுக்குள் ஓர் ஏக்கம் பரவியது.

சற்று நேரத்தில்.. வைகுந்தின் கைவிரல்கள் அவள் விரல்களோடு பிணைந்தன. ஹரிதாவின் மனதில் குதூ கலம் பரவியது. அவள் விரலை உறுவிக் கொள்ளாமல் வைகுந்தின் விரல்களுக்குள் தன் விரல்களை விட்டு விட்டு நிம்மதியாய் படம் பார்க்க ஆரம்பித்தாள்.

ஹரிதாவிடம் ஓர் பழக்கம் உண்டு. படம் பார்த்தால் அந்தப் படத்தைப் பற்றி அவளுக்குப் பேச வேண்டும். டைட்டில் காட்சிகளில் இருந்து பேச ஆரம்பித்து விடுவாள்.

அவர்கள் பார்த்த படம் ஒரு பீரியட் பிலிம். 'மதராஸ பட்டினம்..' இயக்குநர் விஜய் மிக அழகான காதல் கதையை சுதந்திரப் போராட்ட காலத்தில் நிகழ்வதாக எடுத்திருந்தார்.

வெள்ளையர் இனப் பெண் ஒருத்தி.. இந்திய இளை ஞனைக் காதலிப்பதாய் அமைந்த அற்புதமான காதல் கவிதை திரையில் ஓட ஆரம்பித்தது.



''வாவ்.. தமிழில் வந்திருக்கும் டைட்டானிக் படம் இது..'' ஹரிதா.. சரிதாவிடம் கூற.. அவளிடமிருந்து பதில் வரவில்லை. மாறாக...

''யெஸ்.. டைட்டானிக் படத்தை இந்தப் படம் நினைவு படுத்துகிறது..'' என்றான் வைகுந்த்.

கொஞ்ச நேரம் பேசாமல் இருந்த ஹரிதாவினால் படத்தின் அழகைக் கண்டு பேசாமல் இருக்க முடிய வில்லை.

''சுஜாதாவின் நாவல் போலவும் இருக்கிறது..'' என் றாள்.

''ஆமாம் நான்கூட நினைத்தேன்..'' என்றான் வைகுந்த்.

''சென்னையில் அந்தக் காலத்தில் அழகான நதியில் படகுகள் ஓடும் என்று படித்திருக்கிறேன். அது எந்த நதி என்றபோது கூவத்தைக் காட்டினார்கள். மூக்கைப் பிடித்துக் கொண்டு வந்து விட்டேன். இந்தப் படத்தில் கூவம் நதியை எவ்வளவு சுத்தமான தெளிவான நதி யாகக் காட்டுகிறார்கள். படகுகள் ஓடுகின்றன. அந்த மேம் பாலம் கூட அந்தக் கால வடிவில் அப்படியே இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.''

''யெஸ்... விஜய் மிக அழகான... அற்புதமான படத்தை உருவாக்கி இருக்கிறார். ஒவ்வொரு பிரேமும் ஓர் ஓவியம் போல் இருக்கிறது.''

வைகுந்த் பாராட்டுதலாய் கூற... ஹரிதா.. திரைப் படத்தின் கதையம்சத்தில்.. காட்சியமைப்பில்... ஒளிப் பதிவில்.. பாடல்களில் கவரப்பட்டு.. தன்னையறியாமல் வைகுந்தின் தோள் சாய்ந்து பேச ஆரம்பித்தாள்.

# 38

வைகுந்த் அதை உணர்ந்தான். அவன் தோள் சாய்ந்து ரசனைகளைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்திருந்தாள் அவன் மனைவி. அவன் மனதிற்குள் அந்தப் படத்தின் இயக்குநருக்கு நன்றி சொல்லிக் கொண்டான்.

இப்படியொரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய படத்தைப் பார்க்க ஹரிதாவை அழைத்து வந்திருக்கும் சூழ்நிலையை சந்தோசமாக நினைத்துக் கொண்டான் அவன்.

''அந்த ஹீரோயினைப் பாருங்களேன். நான் ஒரு கதையில் படித்தபோது.. 'அவளது ஒவ்வொரு அசைவிலும் மென்மை தெரிந்தது..' என்று எழுதியிருந்தார்கள். அப்படி ஒரு பெண் இருக்க முடியுமான்னு நினைத்தேன். இந்தப் பெண் அப்படியே இருக்கிறது. என்ன ஒரு மென்மையான அழகிய முகம்.''

'உன்னை விடவா..' என்று எண்ணிக் கொண்டான் வைகுந்த்.

திரையில் ஹீரோவான ஆர்யா சத்தமாகப் பேச.. அந்தப் பெண்ணின் உடல் தூக்கிப் போட்டது.

''வாவ்...'' என்றாள் ஹரிதா.

படத்தின் கடைசி நிமிடங்களில்.. வைகுந்தின் கரத்தில் தன் விரல்களை விட்டு வைத்திருந்தவள். அவனது விரல்களை இறுகப் பற்றிக் கொண்டு பரபரப்புடன் பார்த்தாள்.



படம் முடிந்து வெளியே வரும்போது அவளுக்கு கண்கள் கலங்கியிருந்தன.

சரிதாவோ.. முகம் மலர்ந்து கணவனிடம் சிரித்துப் பேசியவாறு வெளியே வந்தாள். அவர்கள் இருவருக்கும், கூட இருந்த ஹரிதாவின் நினைவும்.. வைகுந்தின் நினைவும் இருப்பதாகவே தெரியவில்லை.

''எப்படித்தான் இப்படி இருக்கிறாளோ..'' ஹரிதா வாய்விட்டு முணுமுணுத்தாள்.

வைகுந்த் பலமாகச் சிரித்தான். கனவுலகில் இருந்து மீண்ட கண்ணனும்.. சரிதாவும் அவனைத் திரும்பிப் பார்த்தனர்.

''என்ன அண்ணா..''

''ஒன்றுமில்லைடா..''

''ஒன்றுமில்லாததற்கா இப்படிச் சிரித்தாய்.''

''உன் அண்ணி ஜோக்கடித்தாள். நீ.. நடத்து..''

சரிதா முகம் சிவந்தாள். கண்ணன் சிரித்துக் கொண்டே மனைவியின் பக்கம் திரும்பி பேச்சைத் தொடர்ந்தான்.

''நான் ஜோக்கடித்தேனா..'' ஹரிதா முறைத்தாள்.

''ஆமாம்..''

''எப்போது...?''

''இப்போது..''

''என்ன சொன்னேன்..?''

''உன் தங்கையைப் பார்த்து எப்படித்தான் இப்படி இருக்கிறாளோ என்று அப்நார்மல் கேஸைப் பார்த்துச் சொல்வது போல் சொன்னாயே...''

''ஆமாம்.. அதற்கென்ன இப்போது..''

''உன் தங்கை நார்மல்தான்.''

''அப்போ... நான் அப்நார்மலா.''

''பின்னே இல்லையா.. புதிதாய் கல்யாணம் ஆனவர்கள் இப்படித்தான் இருப்பார்கள். நீயும் இருக்கிறாயே...''

வைகுந்த்.. கெட்டிக்காரத்தனமாய் மனைவியின் மேல் குற்றச்சாட்டை திருப்பி விட்டு விட்டான்...

அன்று இரவு வைகுந்த் ஹரிதாவை நெருங்கியபோது முதல் நாளைய போராட்டம் அவனுக்குத் தேவைப்படவில்லை.

திரைப்படம் போய் வந்தபோது ஏற்பட்டிருந்த ஓர் இணக்கத்தின் காரணமாகவோ.. சரிதாவின் கொஞ்சல்கள் ஹரிதாவுக்குள் ஏற்படுத்திய கிளர்ச்சி காரணமாகவோ.. ஹரிதா எதிர்ப்பைக் காட்டவில்லை.

வைகுந்த்.. காதலுடன் மனைவியை அணுகினான். அவள் இணக்கம் காட்டாவிட்டாலும் எதிர்ப்பு காட்டாமல் இருந்ததே அவனுக்கு போதுமானதாக இருந்தது. அவன் திருப்தியுடன் ஹரிதாவின் மேல் படர்ந்தான்.

கண்ணன் வைகுந்தை தேடி வந்தபோது அவன் பால்கனியில் அமர்ந்து கொண்டு பேப்பரைக் கையில் வைத்திருந்தான். பேப்பர் படிப்பதெல்லாம் வெறும் பாவனை. அவன் தன்னை சைட் அடிக்கத்தான் அங்கு வந்து அமர்ந்திருக்கிறான் என்பதை அறிந்திருந்த ஹரிதா.. அதை உணராதவள் போல் ஈரக் கூந்தலை விரிய விட்டவாறு.. அங்கிருந்த மர ஊஞ்சலில் அமர்ந்து லேசாக ஆடிக் கொண்டிருந்தாள்.



''அண்ணா..''

''என்னடா...''

''நாங்கள் நாளைக்கு நெதர்லாந்த் கிளம்புகிறோம்.''

''ஹனிமூனா..?''

''ஆமாம்..''

''ஜமாய்..''

''அதனால் இப்போதே நாங்கள் வீட்டிற்குப் போகிறோம்.''

''ஓகே...''

கண்ணன் போய் விட்டான். ஹரிதாவின் மனதில் மீண்டும் எரிச்சல் எழுந்தது. இனம் விளங்காத அந்த எரிச்சலினால் பாதிக்கப்பட்டவளின் முகம் சிடுசிடு வென்று ஆனது.. சரிதா அவளிடம் சொல்லிக் கொண்டு போக வந்தாள்.

''ஹரிதா..''

''ம்ம்..''

''நாங்கள் கிளம்புகிறோம்.''

''எல்லாம் தெரியும்.''

ஹரிதா வெடுக்கென்று பேசிவிட்டு எழுந்து சென்று விட அவளது குண இயல்பை அறிந்திருந்த சரிதா முகம் மாறாமல் வைகுந்தைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''அவளுக்கு திடீர்.. திடீர்ன்னு கோபம் வந்துவிடும்.''

''அதுவும் ஓர் அழகுதானே...''

''அத்தான்.. ஆனாலும் நீங்கள் இந்த அளவிற்கு ஹரிதாவின் மேல் காதலை வைக்கக்கூடாது.''

சரிதா சிரித்துக் கொண்டே போய் விட.. வைகுந்த் ஹரிதாவிடம் சென்றான்.

## 39

வைகுந்த் ஹரிதாவிடம் போன போது.. அவள் கட்டிலில் குப்புறப் படுத்திருந்தாள். அவன் அருகில் அமர்ந்து அவள் முதுகைத் தொட்டான்.

"என்ன...?"

"வா.. நாமும் போய் கண்ணனை அனுப்பிவிட்டு வரலாம்."

"நான் வரவில்லை."

"வா என்று சொல்கிறேனில்லை."

வைகுந்த் அதட்டலாய் அழைக்கவும்.. ஹரிதா எழுந்து.. அவன் பின்னே சென்றாள்.

ஹாலில் கண்ணன் சரிதாவுடன் செல்ல வேண்டிய பலகாரப் பாத்திரங்கள் வரிசையாக இருந்தன...

"நாங்களும் சரிதாவின் வீடு வரைக்கும் போய் விட்டு விட்டு வந்து விடுகிறோம் மாப்பிள்ளை.. போன வேகத்தில் வந்து விடுவோம்" என்றார் ஜெயராமன்.

"சீக்கிரம் வந்து விடுங்கள் மாமா.. நாங்களும் கிளம்ப வேண்டும்" என்றான் வைகுந்த்.

"ஏன் மாப்பிள்ளை..."



"நாங்களும் நாளைக்கு சுவிட்சர்லாந்திற்கு ஹனிமூன் போகிறோம் மாமா.. இன்றைக்கு எங்கள் வீட்டினருடன் இருக்க வேண்டுமே..."

வைகுந்தின் பார்வை ஹரிதாவின் முகத்தின் மீதே படிந்திருந்தது.. கண நேரத்தில் அவள் முகத்தில் ஒளி பரவியது. அவள் தோற்றத்தில் ஓர் நிமிர்வு வந்தது.. சரிதாவை அன்புடன் பார்த்தாள் அவள்.

"சுவிட்சர்லாந்தா.. இவர் நெதர்லாந்திற்கு கூப்பிட்டுக் கொண்டு போகிறாராம் அத்தான்.. சுவிஸ் எவ்வளவு அருமையான பிளேஸ் தெரியுமா?"

சரிதா செல்லமாய் சிணுங்கவும்.. ஹரிதாவின் முகத்தில் பெருமிதம் வந்தது.

மனைவியைப் பார்த்துக் கொண்டு நின்ற வைகுந்தின் மனதில் திருப்தி பரவியது.

சரிதாவின் மேல் அவள் காட்டும் பொறாமை... அவள் மனதிலிருக்கும் அடிப்படையான ஏக்கத்தின் வெளிப் பாடு அல்லவா? அந்த ஏக்கம் எதனால் வருகின்றது.

அவனுடன் இசைந்து வாழ முடியவில்லை என்பதால் தானே. வைகுந்திற்கு அது போதுமானதாக இருந்தது. ஹரிதாவின் மனதில் என்றேனும் ஓர் நாள் அவன் மீது காதல் ஏற்பட்டு விடும் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

கண்ணன்.. சரிதாவை அனுப்பிவிட்டு அவன் மாடி யேறியபோது.. ஹரிதா மின்னல் வேகத்தில் பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தாள்.

அவளைப் பின்னால் இருந்து கட்டிக் கொண்ட வைகுந்த்.. அவளது பின்னங் கழுத்தில் முத்தமிட்டு..

''சாயங்காலம் நாம் ஷாப்பிங் போகலாம்'' என்றான்.

''எதற்கு..?''

''சுவிஸ் போகிறோமே.. இன்னும் கொஞ்சம் டிரஸ் நகைகள் வாங்கிக் கொள்.''

''டிரஸ்.. நகைகளுக்கு என்னை அடிமையாக்கப் பார்க்கிறீர்களா? ஹரிதா.. அவற்றுக்கு அடிமை ஆக மாட்டாள்.''

''சரிதாவுக்கு கண்ணன் வாங்கிக் கொடுக்கிறானாம்.''

வைகுந்த் அசட்டையாய் கூற... பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த ஹரிதாவின் கரம் நின்றது.

''போகலாம்.''

அரை மனதோடு கூறுவது போல் அவள் கூற வைகுந்த் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

ஜெயராமனும்.. கௌசல்யாவும் திரும்பி வந்தவுடன் ஹரிதா வைகுந்துடன் புகுந்த வீட்டிற்குச் சென்றாள். பெரிய மகளை விட்டுக் கிளம்பிய கௌசல்யா.. மகளின் அருகே வந்து முடிகோதி.. அறிவுரைகள் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டாள்.

ஹரிதாவும்.. வைகுந்தும்.. மாலையில் ஷாப்பிங் சென்றனர். தான் விருப்பப்பட்டதையெல்லாம் வாங்கிக் குவித்தான் வைகுந்த். பிடித்த நகைகளை உடனே வாங்கி விட்டான்.

''இதெல்லாம் எதற்காக.''

''என் மனைவிக்காக..''

''நேற்று இரவு.. என் மௌனத்திற்காகவா..''

வைகுந்த் அவளை உறுத்து விழித்தான். பின் முகத்தில் கடுமை பரவ.



''அதற்காகவும் தான் என்றே வைத்துக் கொள்.'' என்றான்.

''ஹரிதா அவ்வளவு ஈஸியில்லை. நகைகளையும் டிரஸ்களையும் பார்த்தால் மயங்கிப் போவதற்கு.''

''நீ ஈஸியென்று யார் சொன்னது.''

''நீங்கள்தான் வேறு யார்?''

''இதோ பார்.. என் பெண்டாட்டிக்கு நான் டிரஸ் வாங்கித் தருகிறேன். நகை வாங்கித் தருகிறேன். இதில் காதல்தானே இருக்கிறது. ஈகோ எங்கிருந்து வந்தது.''

''நீங்கள் பணக்காரர். உங்கள் பணத்தைக் காட்டி என் மனதை வாங்க முடியாது.''

''அருமையான டயலாக்.. ஆனால் எனக்குத்தான் கேட்க சகிக்கவில்லை.''

''இதே சென்னையில்.. சரியான சாப்பாடு கூட இல்லாமல் எத்தனை பேர் கஷ்டப்படுகிறார்கள் தெரியுமா?

''நீங்கள் என்னடா என்றால் உங்கள் பணப் பெருமையைக் காட்ட நகைகளை வாங்கிக் குவிக்கிறீர்கள்.''

''ஏண்டி.. இப்போது இங்கே என்னதான் நடந்து விட்டது.''

''உங்களுடைய முதலாளித்துவ கோட்பாடுகளைக் கொண்டு போய் உடைப்பில் போடுங்கள்.''

''அடித்தே விடுவேன். இது புருசன் பெண்டாட்டி விவகாரம்... நீயென்ன சிகப்பு சித்தாந்தங்களைக் குடும்பத்திற்குள் கொண்டு வருகிறாய்..?''

இருவரும் மோதிக் கொண்டிருந்தபோது...

''ஹாய் அத்தான்..'' என்ற குரல் கேட்டது.

சரிதாவும் கண்ணனும் வந்து கொண்டிருந்தனர். ஹரிதா உடனே முகத்தைச் சிரித்தது போல் வைத்துக் கொண்டாள்.

'நடிக்கத் தெரியாது.. என்று சொல்லிக் கொண்டே என்னமாய் நடிக்கிறாள் இவள்.'

வைகுந்த்.. கண்ணனைப் பார்த்துச் சிரித்தான்.

"ஷாப்பிங் வந்தோம். நாளைக்கு ஹனிமூன் போகப் போகிறோம் இல்லையா. வாவ்.. இத்தனை நகைகளும் ஹரிதாவிற்கா.. கண்ணன், அத்தானைப் பார்த்தீர்களா? கணக்கே பார்க்காமல் அவருடைய பெண்டாட்டிக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார். நீங்களும் அதுபோல் வாங்கிக் குடுக்கவில்லையென்றால்.. நான் ஹனிமூனிற்கே உங்களுடன் வரமாட்டேன்."

"எப்படி பிளாக்மெயில் பண்ணுகிறாள் பாருங்கள் அண்ணா."

அவர்கள் இருவரும் கடைக்குள் போனவுடன் வைகுந்த் ஹரிதாவைப் பார்த்தான்.

அவனது விழிகளில் இருந்த கேள்வியை உணர்ந்தவள் வாயை மூடிக் கொண்டு.. அவன் வாங்கி வைத்திருந்தவைகளை எடுத்துக் கொண்டு நகர்ந்தாள்.

"ஹரிதா.. இதுதான் உலகம்.. மனைவிக்கு வேண்டியதை வாங்கித் தருவதில் ஓர் ஆணுக்கு அதிக சந்தோசம் உண்டு.. அதனால்தான்.. என் சந்தோசத்திற்காகத்தான்.. நான் எனக்குப் பிடித்தவற்றை உனக்கு வாங்கிக் கொடுத்தேன். என்னிடம் பணம் அதிகம் இருப்பதால் விலை உயர்ந்தவைகளை வாங்கினேன். இது ஒரு தவறா?"

ஹரிதா உதட்டைக் கடித்துக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டாள்.



"வேண்டாத புருசனின் கைபட்டாலும் குற்றம்.. கால் பட்டாலும் உனக்குக் குற்றம்தாண்டி."

"ஆமாம்.. நான் குற்றம் கண்டு பிடிக்கிறேன் என்பதால்.. என் மேல் கையும்.. காலும் படாமல் இருக்கிறதா... என்ன?"

ஹரிதா பட்டென்று சொல்லிவிட வைகுந்தின் முகத்தில் இருந்த கோபம் பறந்தது. அவன் கடகடவென்று வாய் விட்டுச் சிரித்தான்.

அவனது சிரிப்புச் சத்தம் கேட்டு அவனைத் திரும்பிப் பார்த்த ஹரிதாவிற்கு பிரமிப்பு தட்டியது.

'இவன்தான் சிரிக்கும்போது எவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறான்..?'

சிரித்தவாறே மனைவியைத் திரும்பிப் பார்த்த வைகுந்த்.. அவளது பார்வையைக் கவனித்து விட்டான்.. இன்னும் சிரித்தான்.

அவள் அவசரமாய் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். காரை சாலையோரமாய் நிறுத்தியவன் அவளருகே நெருங்கினான்.

முன்பு ஒரு முறை இதே போல் அவன் நெருங்கிய நிமிடங்கள் நினைவிற்கு வர.. ஹரிதா பேச்சிழந்தாள்.

வைகுந்தின் கரம் அவள் மேல் விழுந்தது. மறு கரத்தால் அவள் முகத்தைத் திருப்பியவன்.. அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

ஹரிதாவின் மனதில் இருந்த இறுக்கம் மெல்ல தளர்ந்தது.

'இவன் ஏன் அப்படியொரு நாடகம் ஆடித் தொலைத்தான்' அவளது மனம் தவித்தது.

"எனக்கு வேறு வழி இல்லைடி."

அவளது மனதை படித்தது போல் அவன் பதில் சொன்னான்.

''உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு என் காதலைப் புரிய வைக்க நினைத்தேன். உன்னைப் பெண் பார்க்க என்று வேறு மனிதர்கள் உன் வீடு வருவதை நான் விரும்பவில்லை.''

ஹரிதாவின் கண்களில் நீர் துளிர்த்தது.

''உன்னை ஏமாற்ற நான் நினைக்கவில்லை கண்ணம்மா. பாரதி.. பாரதி என்கிறாயே.. பாரதி பாடிய ஓர் பாடலை நான் சொல்கிறேன் கேள்.

தீர்த்தக் கரையினிலே...

தெற்கு மூலையில் செண்பகத் தோட்டத்திலே...

காத்திருந்தால் வருவேன்..

வெந்நிலாவினில்...

பாங்கியோடு என்று சொன்னாய்..

வார்த்தை தவறி விட்டாய்...

அடி கண்ணம்மா...

மார்பு துடிக்குதடி...

பார்த்த இடத்திலெல்லாம் – நின்னைப்போல்

பாவை தெரியுதடி...

இது பாரதி பாடிய பாடல்தான். இதில் அவர் கூறும் தவிப்பைத்தான் நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன் ஹரிதா.. எனக்கு உன்னைத் தெரியும். உன் மேல் எனக்கு ஏன் காதல் வந்தது? உன்னை விட அழகான பெண்கள் பலரை நான் சந்தித்து இருக்கிறேன். ஆனால் அவர்களில் எவரும் உன்னைப் போல் எளிமையான தோற்றத்துடன் வீதியில் இறங்கி.. மற்றவருக்காக போராடவில்லை... நீ அதைச் செய்தாய்.. என் மனம் உன் பின்னால் வந்து விட்டது.



நான் ஒருவன் மட்டிலும்...

பிரிவெனும்..

நரகத்தில் உழலுவதோ...

என்று பாரதி பாடினானே. அதைப் போன்ற நரகத்தை எனக்குத் தந்து விடாதே.''

வைகுந்த் அவளது நெற்றியில் முத்தமிட்டு விலகி அமர்ந்தான். காரை எடுத்தான்.

ஹரிதாவினுள் எதுவோ நிகழ்ந்து கொண்டிருந்தது. அவளுடைய ஆதர்ச கவிஞனின் கவிதை வரிகளை அவன் மனனம் செய்து சொன்னது போல் அவளுக்குத் தெரியவில்லை.

ஹரிதா பாரதியை படித்தவள்.. வைகுந்த் அந்தக் கவிதை வரிகளை உணர்ந்து கூறினான். ஹரிதாவின் மனதிற்குள் எதுவோ விதைக்கப்பட்டது.

அது காதலா.. இல்லை கானலா.. என்ற சிந்தனையுடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் வைகுந்த்.

## 40

ஹரிதா முதன் முறையாக விமானத்தில் பயணம் செய்கிறாள். அவள் விழிகள் சுற்றிலும் இருந்தவரை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தன.

வைகுந்த் அவளது காதோரம் குனிந்து கூறினான்.

''உன்னைவிட யாரும் அழகாக இங்கு இல்லை.''

''நான் அதற்காக ஒன்றும் பார்க்கவில்லை.''

''நீ எதற்காகப் பார்த்தாய் என்று எனக்குத் தெரியும். நிமிர்ந்து உட்கார்.. சீட் பெல்ட்டைப் போட்டுக் கொள்.''

ஹரிதாவிற்கு அதைக் கட்டிக் கொள்ளத் தெரிய வில்லை. வைகுந்த் உதவி செய்தான்.

ஜன்னலோரத்தில் அமர்ந்திருந்த ஹரிதாவிடம் வெளியே தெரிந்த காட்சிகளை காட்டி வைகுந்த் அவளது பயத்தைத் தெளிய வைக்க முயன்று கொண்டிருந்தான்.

விமானம் கிளம்பியது. ஹரிதாவின் அடிவயிற்றில் குடல் சுருண்டது. தன்னையும் அறியாமல் வைகுந்தின் கையை இறுகப் பற்றிக் கொண்டு.. அவனது கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''பயமா..?''

''ம்ம்...''

''உனக்கா...?''

''ஏன்.. எனக்குப் பயம் வரக்கூடாதா.. நானும் சாதாரண மனுஷிதானே..?''

வைகுந்த் சட்டென்று அவளைப் பார்த்த பார்வையில் எதுவோ இருந்தது.

''என்ன...?''

''ஒன்றுமில்லை..''

''ஒன்றுமில்லாததற்கு இந்தப் பார்வை பார்ப்பவர் நீங்கள் இல்லை...''

''என்னைப் பற்றி ரொம்பத் தெரிந்தவள் போல் பேசு கிறாயே...''

''தெரிய வைத்திருக்கிறீர்களே.''



ஹரிதா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'இவள் முகத்தைத் திருப்பிக் கொண்டால்.. இவளது முகச் சிகப்பு எனக்குத் தெரியாதா.'

வைகுந்த் அவளை ரசனையாகப் பார்த்தான்.

''என்ன பார்வை வேண்டிக் கிடக்கு.''

''எனக்கு வேண்டியிருக்கிறதே...''

''இந்தப் பேச்சில் ஒன்றும் குறைச்சல் இல்லை.''

''ஏன்... வேறு எதுவும் மனக் குறை உனக்கு இருக்கிறதா?''

''எதற்கு அப்போது அப்படிப் பார்த்தீர்கள்?''

''நானும் ஒரு மனுஷிதானே.. எனக்குப் பயம் இருக் காதா என்று கேட்டாயே...''

''ஏன் அதற்கு என்ன...''

''மற்ற மனுஷிகளைப் போல் பயம் இருக்கும் உனக்கு.. அவர்களுக்கு இருக்கும் மற்ற உணர்வுகள் ஏன் இல்லை...''

'நீ அங்கே சுற்றி.. இங்கே சுற்றி.. இதற்குத்தானே வருவாய்..' அவளது முகம் மீண்டும் சிவந்தது.

''ஏன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாய்..''

''என் முகம்.. நான் திருப்பிக் கொள்கிறேன்.''

''அப்படியா.. நான் அடிக்கடி உன் முகம் திருப்பி முத்தமிடும்போது இந்த டயலாக்கை நீ சொல்ல மாட் டேன் என்கிறாயே...''

''பிளேனில் பிளேடு போட்டால் வெளியே குதிக்க முடியாது என்ற தைரியம்தானே உங்களுக்கு...''

''அடிப்பாவி... கடைசியில் என்னை பிக்பாக்கெட் ரேன் ஜிற்கு தள்ளி விட்டாயே.. எனக்கு இது தேவைதான்.''

ஹரிதா பதில் சொல்லாமல் ஜன்னல் வழியே தெரியும் மேகங்களை வேடிக்கைப் பார்த்தாள்.

''வானக் கூட்டத்தில் மேகங்களோடு நாமும் பறப்பது இனிமையான அனுபவம் இல்லையா.''

தன் மனதிலிருப்பதை எப்படி இவன் அப்படியே சொல்கிறான் என்ற திகைப்புடன் அவனைப் பார்த்தாள் ஹரிதா.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்.. ரசனை எல்லோருக்கும் பொதுவானதுதான். உன் மனதிலிருக்கும் நினைவு.. என் மனதில் வரக்கூடாதா? பாரதி என்ன உனக்கு மட்டும் சொந்தமா? எனக்கு சொந்தமில்லையா.. நான் படித்தால் பாரதியார் கவிதை வரமாட்டேன் என்று சொல்லி விடுமா?''

''இப்போது ஏன் பாரதியை இழுக்கிறீர்கள்?''

''எனக்கும் அதில் விருப்பமில்லைதான். ஆனால் நீதான் பாரதியை அறியாதவன் என்று என்னைத் தள்ளி வைத்து இருக்கிறாயே..''

''அடேங்கப்பா.. இவர் தள்ளியிருப்பதைத் தான் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே.''

ஹரிதா கூறிய வார்த்தைகளைக் கேட்ட வைகுந்த் உல்லாசமாய் நகைத்தான். அவர்களைக் கடந்து சென்ற விமானப் பணிப் பெண் ஒருத்தி.. வைகுந்தின் புன்னகையை ஆவலுடன் பார்த்தபடி செல்ல ஹரிதா கடுப்பானாள்.

''இப்போது ஏன் அவளுக்கு கொக்கி போடுகிறீர்கள்.'' ஹரிதா கோபத்துடன் வைகுந்தை முறைத்தாள்.

## 41

''கொக்கியா.. அப்படியென்றால்?''



வைகுந்திற்கு உண்மையாகவே ஹரிதா கேட்ட கேள்வி புரியவில்லை.

''நீங்கள் பப்பா.. உங்களுக்குப் புரியாது.''

''நிஜமாகவே புரியவில்லைடி...''

''நீங்கள்தான் நடிப்பதில் மன்னன் ஆயிற்றே...''

''இப்போது என்ன நடித்தேன்.''

''போகிறவர்கள்.. வருகிறவர்களைப் பார்த்து சிரிப்பு என்ன வேண்டிக் கிடக்கிறது..?''

''ஏன்டி.. என்னவோ.. நான் தெருவில் நின்று சிரிப்பது போல் என்னைத் திட்டுகிறாயே.. இது பிளேன். இதில் உட்கார்ந்து சிரித்தால்.. அது கூடத் தப்பா.''

''அடேங்கப்பா.. உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. நீங்கள் அறியாப் பிள்ளைதான்.''

''அப்படி நான் சொன்னேனா.. கல்யாணம் பண்ணி... மொட்டை மாடியில் முதலிரவை முடித்து... இப்போது சுவிட்சர்லாந்தில் ஹனிமூனைக் கொண்டாடப் போய் இருக்கிறேன். நானா அறியாப் பிள்ளை?''

''ச்சு.. இப்படியே பேசி வையுங்கள்.''

ஹரிதா எரிச்சலுடன் திரும்பிக் கொண்டாள்... வைகுந்தின் சிரிப்பில் மயங்கிய அந்த விமானப் பணிப் பெண்.. வைகுந்தின் அருகே வந்து குனிந்து வினவினாள். அருகில் ஒரு ஆள் வந்து நிற்பதை உணர்ந்து திரும்பிப் பார்த்த ஹரிதாவிற்கு தூக்கி வாரிப் போட்டது.

'இவளா.. இவள் ஏன் இங்கு வந்தாள்..'

அந்தப் பெண் குனிந்து.. அழகிய ஆங்கிலத்தில் ''வாட் டு யு வான்ட்?'' என்று வினவினாள்.

''உனக்கு என்ன வேண்டும் ஹரிதா..'' என்று வைகுந்த் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே அவள்

''காபி.. ஆர்.. டீ.. ஆர் எனி அதர் டிரிங்க்..?'' என்று கொஞ்சலாக வினவினாள்.

வைகுந்த் வேண்டியதைச் சொல்லவும் அவள் போய் விட்டாள்.

வைகுந்த் தனக்குள் எதையோ நினைத்துக் கொண்டவனாய் சிரித்துக் கொண்டான்.

''என்ன..''

''ஒன்றுமில்லை..''

''ஒன்றுமில்லையென்று நீங்கள் சொன்னால் அதில் ஆயிரம் இருக்கும் என்று அறிந்து அனுபவப் பட்டவள் நான்.. என்னன்னு சொல்லுங்க.''

''இல்லை.. ஏர்ஹோஸ்டஸ் பற்றிய பழைய ஜோக் ஒன்று உண்டு.''

''என்ன ஜோக்..''

''இப்போது இந்தப் பெண் கேட்டதே.. காபி ஆர் டீ என்று.. அதற்கு.. காபி.. ஆர் டீ.. ஆர் மி? என்று அவள் கேட்பதாக என் அப்பா காலத்து ஜோக் ஒன்றை அவர் அடிக்கடி சொல்லுவார்.''

'ஓஹோ.. உன் மனதில் இப்படி ஓர் நினைவு வருகிறதா..'

ஹரிதா பல்லைக் கடித்தபடி அனல் பார்வை ஒன்றைப் பார்க்கவும்.. வைகுந்த் திகைத்தான்.

''ஜோக்தானே ஹரிதா.''

''ஜோக்..? வெரிகுட்.. மனதில் இருப்பதுதானே நினைவில் வரும்.. பெண்டாஸ்டிக்.''

''ஏண்டி நீ எல்லாவற்றிற்கும் டென்சன் ஆகிறாய்..?''

''பெண்கள் என்றால் உங்களுக்கு அவ்வளவு ஈஸியா? அந்தப் பெண்ணின் வேலையை அந்தப் பெண் செய்தால்.. நீங்கள் அசிங்கமாக கமெண்ட் அடிப்பீர்களா? இது நாகரிகம் இல்லை வைகுந்த்.''



''ஓ.கே. ஓகே.. லீவ் இட்.. இனிமேல் இப்படிப் பேச மாட்டேன்.''

வைகுந்த் சமாதானத்திற்கு வந்தான். அந்த நேரம் பார்த்து அவன் அருகே வந்து ஜூஸ் பாட்டில்களைக் கொடுத்த அந்தப் பெண் புன்முறுவலுடன்,

''யு ஆர் வெரி ஹேன்ட்சம்..'' என்று கௌதமிடம் சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

''இப்போது இந்தப் பெண் சொல்லியதற்கு நீ என்ன சொல்கிறாய்?''

''அதுதான் அவளைப் பார்த்து அப்படிச் சிரித்தீர்களே.. அப்புறம் அவள் உங்களிடம் வந்து வழிய மாட்டாளா..?''

''ஓஹோ.. இவளைப் பார்த்து சிரிப்பதாக நினைத்துத் தான்.. நீ டென்சன் ஆனாயா?''

அவன் கண்டுபிடித்து விட்டான்.. என்ற நினைவில் ஹரிதா உதடு கடித்தாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனின் மனதில் தென்றல் அடித்தது.

'இவளுக்குத்தான் என்னை யாரும் ரசித்தால் எவ்வளவு கோபம் வருகிறது...'

ஹனிமூன் இனிமையாகக் கழிந்தது. அறியாத தேசத்தில் ஹரிதா அவனுடன் அதிகம் சண்டை போடாமல் அடக்கியே வாசித்தாள்.

சுவிட்சர்லாந்தின் ஒவ்வொரு திக்கும்.. அழகு பரந்து விரிந்து கிடக்க.. ஹரிதா மன வேற்றுமையை ஒதுக்கி வைத்துவிட்டு.. அவனோடு ஊர் சுற்றினாள்.

வெளிநாட்டின் அத்தனை செயல்பாடுகளையும் ரசித்தாள். பகலில் ஊர் சுற்றி விட்டு.. இரவில் அறைக்குள் அடைந்தபோது.. அந்த நாட்டின் குளிர் காரணமாகவோ.. இல்லை.. அவனுடன் மட்டுமே நாள் முழு

வதும் பழக நேர்வது காரணமாகவோ.. ஹரிதா அவன் இழுத்த இழுப்பிற்கு வளைந்து கொடுத்து... அவனது அணைப்பில் அடங்கினாள்.

வைகுந்த் அதை எதிர்பார்க்கவில்லை.. ஹரிதாவின் மனதிலிருந்த வேற்றுமை முற்றிலும் மறைந்து விடவில்லை என்பதை அவன் அறிந்தே வைத்திருந்தான்.

ஆனாலும்.. இப்போது அவள் காட்டும் இணக்கம் அவனுக்கு மிகவும் தேவையாக இருந்தது... அதன் விளைவாக.. பதினைந்து நாட்களில் திரும்பி வர இருந்தவன்.. ஒரு மாதம் கழித்தே தாய் நாடு திரும்பினான்.

தேனிலவு போய் வந்த பின்னால் ஹரிதாவின் நிலையில் பெரிய மாற்றம் இல்லாவிட்டாலும் அவள் வைகுந்த் தொட்டபோது விலகாமல் இணங்கி நின்றாள்.

## 42

அவனுக்கு அதுவே போதுமானதாக இருந்தது. வைகுந்த்.. நாள் முழுவதும் கடுமையாக உழைத்தான். மாலை வேளையில் திரும்பி வந்தவுடன் மனைவியின் மடியில் தஞ்சம் புகுந்தான்.

ஹரிதா அவனை அன்பாக அரவணைத்துக் கொள்ளவில்லை.. அதே சமயம் அவனது அணைப்பினில் அடங்க மறுக்கவும் இல்லை.

வைகுந்திற்கு இந்த வாழ்வே மிகவும் இனித்தது... அந்த இனிப்பை அதிகப்படுத்தியது.. ஹரிதா தாய்மை அடைந்திருந்த செய்தி...



அவன் அவளைத் தரையில் நடக்க விடாமல் தாங்கினான். சரிதாவிற்கு முன்னாலேயே.. ஹரிதா தாய்மை அடைந்ததில் சீதாவிற்குக் கொள்ளை மகிழ்ச்சி.

''அக்காவுக்கும் தங்கைக்கும் அடுத்தடுத்த நாட்களிலேயே கல்யாணம்... எங்கே இவளுக்கு முந்தி சரிதா உண்டாகி விடுவாளோன்னு பயந்தேன்.. நல்லவேளை என் மருமகள்.. எனக்கு சந்தோசத்தைக் கொடுத்து விட்டாள்.''

வைகுந்த் மூத்தவன்... அவனுக்கு முன்னால் கண்ணன் தகப்பன் ஆகி விட்டால்... அது ஒரு குறைவு என்று அந்தத் தாயின் மனம் நினைத்திருந்தது புரிய வைகுந்த் மனைவியை ஆசையுடன் பார்த்தான்.

அவளோ முகத்தைக் கல் போல் கடினமாக வைத்துக் கொண்டாள்.

'அவள் சிரித்தால் என்ன.. சிரிக்காவிட்டால் என்ன.. என்னுடன் இசைந்து வாழ்கிறாளே.. இதுவே எனக்கு போதும்.'

ஹரிதா ஆறு மாத கர்ப்பிணியாக இருந்தபோது விருந்து ஒன்றில் கலந்து கொள்ள மனைவியுடன் சென்றிருந்தான் வைகுந்த்.

''ஹலோ மிஸஸ் வைகுந்த்.. நீங்களும் உங்கள் கணவர் போல் பாரதியின் கவிதைகளை ரசிப்பவராமே..''

விருந்து கொடுத்தவர் உபசாரமாய் கூறவும் ஹரிதா புருவம் உயர்த்தினாள்.

''இதுவரை இது உங்களுக்குத் தெரியாதா.. இன்றைக்கு விருந்தில் அவர் பாடும் பாடலைக் கேட்டுப் பாருங்கள்.''

'இவன் பாடுவானா.'

''எங்கள் பிஸினெஸ் வட்டாரத்தில் நடக்கும் விருந்துகளில் தவறாமல் ஒரு பாரதியின் பாட்டைப் பாடுவார் மிஸ்டர் வைகுந்த்.''

அந்த விருந்தின் இறுதியில் வைகுந்த் மைக்கைப் பிடித்துக் கொண்டு பாடினான். அவனது விழிகள் மனைவியின் முகத்தையே மொய்த்தன.

"காற்று வெளியிடை கண்ணம்மா

நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்."

ஹரிதாவின் மனதில் தென்றல் அடித்தது... எவ்வளவு அற்புதமான பாடல் இது..

"அமுதூற்றினை ஒத்த இதழ்களும்...

நிலவூறித் ததும்பும் விழிகளும்...

பத்து மாற்றுப் பொன்னொத்த நின் மேனியும்

இந்த வையத்துள் யானுள்ள மட்டிலும்..

எனை வேற்று நினைவின்றித் தேற்றியே

இங்கோர் விண்ணவனாகப் புரியுமே..."

அவன் தொட்ட மேனி இது என்று நினைக்கும் போதே... அவனது பார்வையும் அதையே கூறுவது ஹரிதாவிற்குப் புரிந்தது.

'இவனா பாரதியை அறியாதவன்?'

"நீ யெனதின்னுயிர் கண்ணம்மா

எந்த நேரமும் நின்றனைப் போற்றுவேன்..

துயர் போயின.. போயின.. துன்பங்கள்..

நினைப் பொன்னெனக் கண்ட பொழுதிலே...

என்றன் வாயினிலே அமுதூறுதே...

கண்ணம்மா.. வென்ற பேர்.. சொல்லும் போழ்திலே...

உயிர் தீயினிலே வளர் சோதியே...

என்றன் சிந்தனையே.. என்றன் சித்தமே.."



ஹரிதாவின் மனதில் இருந்த வேற்றுமை காற்றோடு பறந்தது. அவள் மனம் காற்றைப் போல் லேசானது.

பாடி முடித்து அவன் வந்தபோது.. அந்த விருந்தின் மத்தியிலேயே அவன் மார்பில் சாய்ந்தாள் ஹரிதா.

மனைவியின் மனதை தான் ஜெயித்து விட்டதைப் புரிந்து கொண்ட வைகுந்தின் மனம் நிறைந்து விட்டது. பெருமையுடன் மனைவியின் தோள் மீது கை போட்டுக் கொண்டு விருந்து நடக்கும் இடத்தை விட்டு வெளியில் வந்தான் அவன்.

அவர்கள் காரில் திரும்பிக் கொண்டிருந்த போதுதான் அது நடந்தது.

வைகுந்தின் கிரானைட் பாக்டரியில் வேலை பார்த்த தொழிலாளி ஒருவனை அவன் சமீபத்தில் அவனது ஒழுங்கீனம் காரணமாக வேலையை விட்டு நீக்கியிருந் தான். அந்தத் தொழிலாளி ஒரு பேட்டை ரவுடி. அவன் சில ஆள்களோடு வந்து.. வைகுந்த் வந்த காரை மறித்து அடித்து நொறுக்க ஆரம்பித்தார்கள்.

காரின் முன் பக்கக் கண்ணாடி உடைந்து சிதற அதிர்ச்சியுடன் பார்த்த மனைவியின் அச்சத்தை உணர்ந்த வைகுந்த்.

"என்ன நடந்தாலும் காரை விட்டு இறங்காதே..." என்று கூறிவிட்டு காரை விட்டு இறங்கினான்.

அவனைச் சூழ்ந்து நின்றது பத்துப் பேர். அச்சமே இல்லாமல் வைகுந்த் அவர்கள் அனைவரையும் எதிர்த்து நின்றான். அவன் அடித்த அடியில் அவர்கள் கண் மண் தெரியாமல் ஓட ஆரம்பித்தனர். ஓடும்போது ஒருவன்

கட்டையைத் தூக்கி வைகுந்தை அடிப்பதற்காக அவன் பின்னால் சென்றான்.

அவசரமாய்.. கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கிய ஹரிதா.. வேகமாய் வைகுந்தின் மேல் அடி விழாமல் ஊடே பாய்ந்து விட்டாள்.

அலறலுடன் மயங்கி விழுந்தவளைத் தூக்கிக் கொண்டு ஹாஸ்பிடலுக்கு ஓடினான் வைகுந்த்.

''சின்னக் காயம்தான். பயப்பட ஒன்றுமில்லை.'' டாக்டர் கூறிவிட மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான் வைகுந்த்.

பதறி விளக்கம் கேட்டவர்களுக்கு விளக்கம் அளித்து விட்டு மனைவியை அணைத்தவண்ணம் படுக்கையறையில் நுழைந்தான் வைகுந்த்.

கணவனின் கை பிடித்து நிறுத்திய ஹரிதா.. ''என்னை மன்னித்து விடுங்கள்.. உங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தால் நான் உயிரை விட்டிருப்பேன்'' என்றாள்.

அவளது வாய் மூடி தடுத்து அவளை மார்போடு அணைத்துக் கொண்டான் அவன்... கடலில் கலந்த நதியாய் அவனோடு கலந்து விட்டாள் ஹரிதா.

★